
# கனிச்சாறு



பாவலரேறு
பெருஞ்சித்திரனார்
பாடல்கள்

4

இளையதலைமுறை
பொதுமை
இயக்கம்

# பாவலரேறு
# பெருஞ்சித்திரனார்
# பாடல்கள்

(கனிச்சாறு)

**படையல்**

- எதிர்காலத் தமிழின மீட்பர்களுக்கும்
- தமிழீழ விடுதலைத் தலைவர்களுக்கும் மறவர்களுக்கும்
- அயல்நாடுகளில் வாழும் தமிழின மக்களின் முன்னேற்றத்திற்காக ஆங்காங்கு பாடுபடும் தமிழினத் தலைவர்களுக்கும்

**இந் நூற்றொகுதிகள் படையலாக்கப்படுகின்றன.**

– நான்காம் தொகுதி

முழுமையான முதற்பதிப்பு : தி.பி. 2043. துலை ( அத்தோபர் 2012 )

நூல் தலைப்பு : **பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்**
(கனிச்சாறு - நான்காம் தொகுதி)

ஆசிரியர் : *பாவலரேறு பெருஞ்சித்திரனார்*

வெளியீடு : *தென்மொழி பதிப்பகம்*
செந்தமிழ் அடுக்ககம்
(சி.கே. அடுக்ககம்)
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
மேடவாக்கம், சென்னை - 600 100
94444 40449

அச்சாக்கம் : *தென்மொழி அச்சகம்,*
சென்னை - 600 100

உரிமை : *தாமரை பெருஞ்சித்திரனார்*

பக்கங்கள் : 34+228

தாள் : படத்தாள் (மேப் லித்தோ 18.6)

அளவு : தெம்மி (1/8)

படிகள் : 1000

விலை : உரு. 200.00

# முன்னுரை

இயற்கை ஓர் ஒழுங்குடையது. நிலம் நெறியான ஓர் இயல்போட்டத்தை உடையது.கதிரவனும் விண்மீனும் ஓர் ஒழுங்கான அசைவை உடையன. புடவியும் பேரண்டமும் அவற்றுள் இயங்கும் பல்லாயிரங்கோடி இயற்கைக் கோளங்களும் சுடர்த் தொகுதிகளும் சிறிதே ஒழுங்கின்றி இயங்கத் தொடங்கினும் உடனே பேரழிவு நேரும்.

இவ்வியற்கை நிலையினைப்போல், இயற்கையுட்பட்ட அனைத்து நிலைகளிலும் அதனதற்குப் பொருந்திய ஓர் ஒழுங்கு கடைப்பிடிக்கப் பெறுதல் வேண்டும். இயற்கை அறிவிக்கும் இவ்வொழுங்கு சிதைவுறின், அச் சிதைவுக்கேற்ப, படிப்படியான அழிவுநிலைகளே நேரும் என்பதில் துளியும் ஐயமின்று.

உயிர்கள் அனைத்தினும் மேம்பட்டு விளங்கும் மாந்த இயக்கமும் அதன் பரும, நுண்ம நிலைகளுக்கு ஏற்ப, ஒழுங்குற இயங்குதல் வேண்டும் என்பதே இயற்கையின் உட்கோளாதல் வேண்டும். ஒழுங்கற்ற பரும இயக்கத்தால் உடல் சிதைவுறுதல்போல் ஒழுங்கற்ற உணர்வியக்கத்தால் உள்ளமும் சிதைவுறும். உள்ளச் சிதைவு மாந்தப் பேரழிவையே தோற்றுவிக்கும்.

உணர்வியக்கத்தின் தலைமைக்கூறு மொழி. மொழியின் படிநிலையுற்ற ஒழுங்கியக்கம் இலக்கணம். எனவே, இலக்கணச் சிதைவு மொழியைச் சிதைப்பதும், மொழிச் சிதைவு கருத்தைச் சிதைப்பதும், கருத்துச் சிதைவு உணர்வைச் சிதைப்பதும், உணர்வுச் சிதைவு உளத்தைச் சிதைப்பதும், உளச்சிதைவு உலகியலைச் சிதைப்பதும் ஒன்றினின்று ஒன்றெழும் தொடர் விளைவுகளாகும்.

மொழியின் மலர்ச்சியே பாட்டு. பாட்டுணர்வால்தான் மாந்தன் மீமிசை உயிருணர்வை எட்டுகின்றான். மற்ற உணர்வுகள் மாந்த உணர்வுகளிலேயே அவனைத் தேக்கி வைத்திருக்கையில், பாடல் உணர்வே புறவுணர்வுத் தளைகளைக் கட்டறுத்து, உலகியல் கூறுகளினின்றும் விடுவித்து, அவனை மீமிசை மாந்த நிலைக்கு உயர்த்து கிறது. பாட்டுணர்வு தாழ்ச்சியுறுதலால் அவன் உணர்வுயர்ச்சிக்குச் சறுக்கல் ஏற்படுகின்றது; உயிர்மைக்கு அயர்வு ஏற்படுகின்றது. இதனால் இயற்கைத் துய்ப்பு கெடுகிறது. உயிர்மை குன்றுகிறது; உலகியல் உணர்விருள் அவனைப் பற்றி

அலைக்கழிக்கின்றது. இவ் வியற்கைப் பொது நிலைகளை யொட்டி, ஒவ்வொருவரும் சில இன்றியமையாக் கலை, இலக்கியக் கூறுகளை உணர்ந்திருத்தல் வேண்டும். இவற்றுள் கலை புறமும் இலக்கியம் அகமும் ஆகும். இலக்கியத்தின் கொடுமுடி பாடல்! பிற அவற்றினின்று விரிந்து படரும் கொடிகளையும் கிளைகளையும் போன்றவை.

ஒழுங்கற்ற ஓசையைவிட ஒழுங்கான ஒலி உயிர்க்கவர்ச்சி உடையது. ஒலியொழுங்கோடு உணர்வும் சேருமாயின் உயிர்க் கவர்ச்சியுடன் உளக்கவர்ச்சியையும் அஃது உண்டாக்கி, அறிவுணர்வு உயர்ச்சியுடைய மாந்தனை அது தன்வயப்படுகிறது. இனி, உணர்வு சேர்ந்த ஒலியொழுங்குடன் ஏற்ற இறக்க அலைவொலிகள் அளவொத்து இணைதலும், பின் அவற்றுடன் ஏதாமொரு மொழி சேர்தலும், அவற்றைப் பண் என்றும் பாவென்றும் உயர்நிலைப்படுத்துவிக்கும். இப் பண்ணொடு தாளம் சேர்ந்து இசையென்றும், பாவொடு கருத்துச் சேர்ந்து பாடல் என்றும் தமிழில் வழங்கும். இனி, பண்ணும் பாடலும் சேர்ந்து நடக்கும் இசைத்தமிழ் என்னும் ஒரு மொழியியல் மரபையே பண்டைத் தமிழ்மொழி முனைவோர் உலகோர் உணர்ந்துய்ய உண்டாக்கித் தந்துள்ளனர். வேற்றுமொழிகளில் இம் மொழியியல் கூறு தோன்றியிருப்பினும் தமிழ்மொழியில் உள்ளதுபோல், அஃது அத்துணையளவு தனித்தோ, சிறந்தோ இயங்கவில்லை யென்பதை அறிவினார் உணர்வர்.

இனி, பாடல் என்பது **பா தழுவிய கருத்துமொழி** என்று பொதுவில் பொருள் தரினும், அதற்கெனப் பல தனிக்கூறுகள் உண்டு. பாடல் இயற்கையாக வெளிப்படுதல் வேண்டும். மனமும் அறிவும் வயப்பட, உணர்வும் எழுச்சியும் மேம்பட்டுப் புறநிலையழுத்தத்தால் பீறிக் கொண்டு வெளியேறும் பாடலிலேயே இயற்கைச் சாயல் படிந்திருக்கும். **மொத்தத்தில் அஃது ஒரு வெளிப்பாடாக இருத்தல் வேண்டுமேயன்றி, வெளிப்படுத்துதலாக இருத்தல் கூடாது**. அவ்வாறு உள்ள நிலையில் அது சிறவாது; நிலைத்து நிற்காது; அதுவன்றிக் காலத்தில் கரைந்து போகும் தன்மையுடையதாக அஃது இருக்கும்.

ஓர் உணர்வு சான்ற இயற்கைப்பாடல் உணர்வுள்ள உள்ளங்களை மட்டுமேயல்லாது, உணர்வற்ற உள்ளங்களையும் அவையளவில் தொடுதல் வேண்டும். அப்பொழுதுதான் அஃதால் உயிர்க்கூறு படிப்படியாக மலர்ச்சி எய்துதல் முடியும். பிற உள்ளங்களை

ஆட்கொள்ளும் நிலையில் அஃது ஒரு மண்வெட்டியைப்போல் பயன்படுதல் வேண்டும். மண்வெட்டி பள்ளம் மேடுகள் நிறைந்த நிலத்திற்கே மிகுதியும் பயன்படுவதாகும். சமமான தரையில் அதன் பயன்பாடு மிகவும் குறைவே. வெறும் சுவைக்காக மட்டுமே வெளிப்படும் பாடல்கள் மாந்த உள்ளுணர்வுகளை வளர்த்து வாழ்விக்காமல் அவற்றை மழுங்கடித்துவிடும்.

பாட்டுணர்வு இயற்கையேயாயினும், அதன் புறக்கூறுகள் உலகியல் சான்றனவே. அப் புறக்கூறுகள் அசை படிந்த சொற்களாலும், சொற்களமைந்த சீர்களாலும், சீர்கள் இணைந்தியங்கும் யாப்பாலும், யாப்புடன் கூடிய அணியாலும், அணிபெற்றியங்கும் கருத்தாலும் விளங்கித் தோன்றுனவாகும். அவையே பாடலுக்குரிய தகுதிகளும் ஆகும். அவை பதினான்கு இன்றியமையாக் கூறுகளைக் கொண்டவை. அவை இவை:

**அ. சொற்கள்**

1. கருத்தாழம் நிரம்பிய தேர்ந்த சொற்கள்.
2. சுற்றி வளைக்காத சொல்லாட்சி.
3. வளங்கொழுவிய பொருத்தமான சொற்கள்.
4. குறைவான இடைச் சொற்கள்.

**ஆ. சீர் அமைப்பு:**

1. ஒலிநயத்தால் இணைகின்ற சீர் அமைப்பு.
2. கருத்தின் உணர்வுக்கேற்ற சீர் நீளம்.
3. வகையுளி அல்லது சொற்பிரிப்பால் பாட்டின் ஓட்டத்தையும் அழகையும் குறைக்காமல், முழுச் சொல்லால் அல்லது சொற்களால் அமைந்த சீர்கள்.

**இ. யாப்பு**

1. பிழையற்ற யாப்பு.
2. கூறப்போகும் கருத்தின் உணர்வை மழுங்கடிக்காத யாப்பு வகை.
3. உணர்வுயர்ச்சிக்கும் கருத்தகலத்திற்கும் ஏற்பத் தெரிந்தெடுக்கப் பெற்ற யாப்பு.

**ஈ. அணிகள்**

1. எளிதே விளங்கிப் பாடற் கருத்துடன் உடனே பொருந்துமாறு இருக்கும் உவமைகளும் உருவகங்களும்.

2. பாட்டின் பெருமையைக் குறைக்கும் பிற ஆரவார அணிகள் பெரிதும் தவிர்க்கப் பெறுதல்.

**உ. கருத்து**

1. மயக்கம் தராது உடனே புலப்படும் தெளிவு நிறைந்த கருத்து.
2. பொது மனத்திற்குப் புலப்படாத உயர்ந்த கருத்து.

இனி, முன்னைக் காலத்து, இயற்கை உணர்வின் ஒலியொழுங்குக் கொத்த மரபு தழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பிய ஓரிளம் பெண் பெற்றெடுக்கும், நல்ல அழகிய அறிவறிந்த நிறைமாதக் குழந்தைகள் போன்றவை. சோம்பலாலும் அறிவுக் குறுக்கத்தாலும் மன இழிவாலும் பிதுக்கப்பெறும் இக்காலத்து மரபு நழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பாத பெண்ணுரு சான்ற ஒருத்தி, அரைகுறை முதிர்ச்சியோடு பெற்றெடுக்கும், உறுப்புகள் குறைவுற்று அழகும் அறிவும் குறைந்த, குறைமாதக் குழந்தைகள் போன்றவை. நன்கு வளர்ச்சியுறாத உறுப்பு நிலைகளும், உணர்வு நிலைகளும், அக் குழந்தைகளைக் கவர்ச்சியற்றனவாகவும் நீடிய காலத் தங்குதலற்றனவாகவும் ஆக்கிவிடுகின்றன.

ஒழுங்கற்ற ஓசை இசையாகாததுபோல், ஒழுங்கான கட்டுக் கோப்பற்ற கருத்து வெளிப்பாடும் பாடலாகாது.

பாடல் உள்ளத்தின் மலர்; உணர்வின் மணம்; உயிரின் ஒலி யொழுங்கு.

பாடல் மலரிலிருந்தே உரைநடையென்னும் காய் தோன்றிக் கதையாகக் கனிகிறது.

பாடல் உணர்வு சிதைவுறுமானால் உரைநடையாக அது தத்துகிறது. உரைநடையில் பாடல் உண்டு. பாடலில் உரைநடை இல்லை. பாடல் உரைநடையாவது, மலர் தன் மென்மையையும் மணத்தையும் இழந்து பருமையும் வெறுமையும் உறுவது போன்றதே. அத்தகைய பாடற்போலிகள் தேங்காய் மட்டையின் ஊறலின்று அடித்தெடுக்கும் நார் போன்றவை.

இனி, உண்மையான பாடலை வெளிப்படுத்துபவனே உயர்ந்த பாவலன். பாவலன் பிறக்கிறான்; பாடல் தோன்றுகிறது. பாவலன் படைப்பாளன். அவன் உண்டாக்கித் தரும் உணர்வுருவாய கற்பனை மாந்தர்களையே இயற்கை பருவுருவாக உலகுக்குப் படைத்துத் தருகிறது. எனவே உலகின் இயற்கைப் படைப்புக்கே அவன் உணர்வுக் கருவைத் தருபவனாகிறான்.

உயர்ந்த உண்மைப் பாவலனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் பத்து. அவை, நுண்ணோக்கு, இயற்கையீடுபாடு, சொல்வன்மை, பாத்திறன், யாப்பறிவு, மொழியறிவு, கற்பனையாற்றல், மனவியல், நடுவுநிலைமை, துணிவு என்பனவாகும். இவை ஒன்றின் ஒன்று சிறந்து விளங்கிப் பாவலன் ஆற்றலைப் படிப்படியாக மிகுவிக்கின்றன. இத் தகுதிகளின் பொருத்தத்திற்கேற்பவே ஒவ்வொருவனின் பாடலும் ஒளிர்ந்து சுடரும்; காலத்தை வெல்லும்; மக்கள் கருத்தினை ஆட்கொள்ளும்; அறிஞர் மதிப்பினைப் பெறும்.

**கனிச்சாறு** என்னும் இப்பாடல் தொகுதி பல நூறு கற்பனைத் தோற்றங்களை உங்கட்குக் காட்டுவதாகும். பல வாழ்வியல் கூறுகள் இதில் சொல்லப் பெறுகின்றன. அறிவுநிலை விளக்கங்கள்,உரிமை உணர்வுகள், மாந்தநிலை உயிரெழுச்சிக் கூறுகள், உள்ளுணர்வெழுப்பும் மெய்யறிவு நிலைகள், மொழியியல், இனவியல், நாட்டியல் புரட்சிக்கு வித்தூன்றும் அடிப்படை வரலாறுகள் முதலியன இப் பிழிவில் கலந்திருப்பதை நீங்கள் சுவைத்து உணரலாம்.

**கனியைப் பிழிந்திட்ட சாறு - எம்**
**கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு!**

என்றும்,

**கனிச்சாறு போல்பல நூலெல்லாம் கண்டு**
**காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு!**

என்றும், பாவேந்தர் பாரதிதாசன் தமிழையும் தமிழ்ப் பனுவலின் இனிமையையும் உணர்த்தக் கனிச்சாற்றை உவமை பேசுவார்.

எனவே தமிழும் தமிழுணர்வும் செறிந்து விளங்கும் இப்பாடல் தொகுதிக்குக் **கனிச்சாறு** என்று பெயர் தரப்பெற்றது. மிக அரும்பாடுபட்டு இத் தொகுதித் தொடர்கள் வெளியிடப் பெறுகின்றன.

தமிழினம் தன் நிலைப்பாட்டு மேன்மைக்கு இத் தொகுதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாக.

சென்னை - 5
14-4-1979

அன்பன்
**பெருஞ்சித்திரன்**

## முதல் பதிப்பு - பதிப்புரை

உலக வரலாற்றிலேயே தலைசிறந்தது மாந்த வரலாறாகும். அதனுள்ளும், நம் முதுபழங் குமரித் தமிழிய வரலாறோ, மூல முதன்மையும், உயர் மாந்தத் தனிச்சிறப்பும் வாய்ந்ததாகும்.

அத் தென்குமரித் தலைக்கழக(சங்க)க் காலத்து முத்தமிழ் மீமிசை மாந்த வாழ்வியலின் ஏந்திய பண்பு நலன்கள் யாவும், அடுத்து வந்த இடைக்கழகக் காலந்தொட்டே, (பிற்காலக் கீழை) வேத ஆரியத்தின் நுழைவால் தாக்குண்டு சீர்குலையத் தொடங்கின. அதுமுதலே, ஆரிய எதிர்ப்பியக்கங்களும், தொடர்ந்து, பரவல் சிதறலாகத் தமிழகத்தில் தோன்றி வரவே செய்தன. ஆனால், அவை எவற்றுக்கும் ஆரியத்தை அடிதுமித்துச் சாய்த்துத் தமிழ் மீட்பினை நிலைநாட்டித் தரும் மொய்ம்புரம் வாய்க்கவில்லை.

இறுதியாக, சென்ற நூற்றாண்டில், மேலைநாட்டு நல்லறிஞரால் விழிப்புறுத்தப் பெற்றும், **மறைமலையடிகளாரின்** தனித்தமிழ்த் தொண்டினாலும், **பெரியாரின்** இனமானத் தொண்டினாலும் இந் நூற்றாண்டில் புத்துரமூட்டப் பெற்றும், பல மறுமலர்ச்சி இயக்கங்கள் தமிழகத்தில் தோன்றலாயின. அவற்றின் ஒட்டுமொத்த முயற்சிகளின் மெய்வருத்தக் கூலியாக, இன்று **மொழிஞாயிறு பாவாணர்** அவர்களின் மொழிமுதற் புலத்தில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் உரன்வல அறிவாண்மைப் படை கொண்டு முனைந்துழுது, 'தென்மொழி' என்னும் இதழ்வாயிலாக, தேடரிய தெளிவியக்கம் ஒன்று புரட்சிக்கால் ஊன்றி, ஆள்வினையும் ஏற்றுள்ளது.

அத் 'தென்மொழி இயக்க'த்தின், வினை வேளாண்மைக்கென மொழி - இன - நாடு தழுவிய பல்வேறு துறைகளிலும், **பாவலரேறு** அவர்கள், முப்பது ஆண்டுகட்கும் மேலாக, பன்னூற்றுக் கணக்கில் பாடிக் குவித்துள்ள அரும்பாடற் கனிகளையே இங்ஙனம் தொகுத்து, '**கனிச்சாறு**' ஆகப் படைத்துள்ளோம். அவ்வமிழ்தச் சாற்றினை ஆரப் பருகும் எவரும், தமிழியக் குடிசெயலுக்கு வேண்டிய 'வீறெய்தி மாண்ட' வினைத் திட்பம் பெற்று, தொண்டாற்ற முன்வர வேண்டுதலே எமது பெருநோக்கம் ஆகும்.

இப் பாடற் களஞ்சிய வெளியீட்டுத் திட்டம், கோவை மாவட்டத் தமிழன்பர்களின் அருமுயற்சியால் இயல்வதாகி, தி.பி. 2006இல் அறிவிக்கப் பெற்று, தி.பி. 2008 முதல் செயலாக்கங்

கொண்டு, இக்கால் முழுமையாக்கப் பெற்றுள்ளது. இத்திட்டத்தை வினைப் படுத்திய **தென்மொழி ந. முத்துக்குமரனார்**, அவர் துணைவர் **தென்மொழி மறை. நித்தலின்பனார்**, ஊக்கப்படுத்திய **திரு.க. ஆகுன்றன்**, கொடை நல்கி வலந்தந்த புரவலன்மார் ஆகிய அனைவரும் தமிழின மீட்பு வரலாற்றில் என்றும் நீங்கா இடம்பெறும் சிறப்புடையர். வெல்க எம் தமிழும்! மலர்க நல்லுலகம்!

பணிவுடன்,

*14.4.1979* **'கனிச்சாறு வெளியீட்டுக் குழு'**

# வெளியீட்டுரை

கனிச்சாறு(பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்) தொகுதி முதற்பதிப்பு 1979இல் வெளிவந்தபின், 1995 இல் பாவலரேறு மறைவுவரை வெளிவந்த அனைத்துப் பாடல்களும் தொகுக்கப் பெற்று முழுமைபெற்ற முதற்பதிப்பாக இப்போது வெளிவருகிறது.

முதற்பதிப்பின் முத்தொகுதிகளும் தென்மொழியில் சுவடி : 14; ஓலை : 12 வரையிலும் மற்றுத் தமிழ்ச்சிட்டில் குரல் : 9; இசை: 12 வரையிலும் வெளிவந்த பாடல்கள் அளவிலேயே அமைந்தன. அதன்பின் தொடர்ந்து வந்த இதழ்களின் பாடல்கள் அனைத்தும் துறைவாரியாகப் பிரிக்கப்பெற்று எண்தொகுதிகளாக இப் பதிப்பு நிறைவு செய்யப்பெற்றுள்ளது. மேலும், ஐயா அவர்கள் தம் இளமைக் காலத்தில் எழுதியனவும் இதுகாறும் அச்சுக்கு வராதனவுமான பாடல்கள் சில, பழைய குறிப்புச் சுவடிகளினின்றும் எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன; அன்றியும் ஐயா அவர்கள் அன்பர்கள் பலருக்குப் பல்வேறு நிகழ்வுகளையொட்டி எழுதியனுப்பிய பாடல்கள் பல, அவ் அன்பர்களிடமிருந்து பெறப்பட்டும், சில ஐயா அவர்களின் சுவடிகளிலிருந்து எடுத்தும் இணைக்கப்பட்டுள்ளன. (பழைய பாடல்களில் ஒரோவழி இடம் பெற்றிருந்த அயன்மொழிச்சொற்கள் வரிவடிவில் வேறுபடுத்திக் காட்டப் பெற்றுள்ளன.)

மொத்தத்தில், ஐயா அவர்களின் தனி இலக்கியங்களான கொய்யாக்கனி, ஐயை, பாவியக்கொத்து, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, நூறாசிரியம், உலகியல் நூறு, கழுதை அழுத கதை, அறுபருவத் திருக்கூத்து ஆகியன அல்லாத பிற பாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பெற்றுப் ‘பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தனிப்பாடல்கள் _ அடங்கல்’ என்னுமாறு இப்பதிப்பு முழுமையான பதிப்பாக வெளிவருகிறது. அவ்வகையில் இதுவே முதற் பதிப்பு எனலாம்.

பாடல்கள் அனைத்திற்கும் முன்னைப் பதிப்பின் போக்கிலேயே தொடர்ந்து பாடல்கள் விளக்கக் குறிப்புகள் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளன.

இயற்றப்பெற்ற அல்லது வெளிவந்த காலத்தையொட்டி ஆண்டு, மாத முறைப்படி பாடல்கள் வரிசைப்படுத்தப்பட்டிருப்பது இப்பதிப்பின் தனிச்சிறப்பாகும்.

பழைய பாடல்கள் சில எழுதப்பெற்ற காலம் தெளிவாகத் தெரியாமையால், அப்பாடற்குரிய ஆண்டையொட்டி வினாக்குறி யிடப்பட்டுள்ளது.

இக் கனிச்சாறு தொகுதிகளில், தமிழ்,இந்தி யெதிர்ப்புப் பற்றிய பாடல்கள் முதல் தொகுதியாகவும், இன எழுச்சிப் பாடல்கள் இரண்டாந் தொகுதியாகவும் அமைந்துள்ளன; நாட்டுரிமை பற்றிய மூன்றாந் தொகுதியில் நாட்டுரிமை, தமிழீழம் என்னும் பிரிவுகளிலான பாடல்கள் இடம்பெற்றுள்ளன; இளைய தலைமுறை, பொதுமை, இயக்கம் ஆகியன பற்றிய பாடல்கள் நான்காந் தொகுதியாகவும், குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழி மாலை என்னுந் தலைப்புகளில் அமைந்த பாடல்கள் ஐந்தாந் தொகுதியாகவும் கொள்ளப்பெற்றுள்ளன; ஆறாந் தொகுதியாவது காதல், இயற்கை, இறைமை என்னும் பிரிவுகளைக் கொண்ட பாடல்கள்; தன்னிலை விளக்கம், பெருமக்கள் சிறப்பு, திருநாள் வாழ்த்து, திருமண வாழ்த்து, மதிப்புரைகள் முதலியனவாகிய பாடல்கள் ஏழாந் தொகுதியில் வைக்கப் பெற்றுள்ளன. பாட்டரங்கப் பாடல்கள் எட்டாந் தொகுதி.

2009இல் தமிழக அரசு, பாவலரேறு அவர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கிப் பெருமை கொண்டது. அதனால் அவர்தம் படைப்புகளைப் பலரும் வெளியிட வாய்ப்பு ஏற்பட்டது. எனினும் வெளிவராத பாடல்கள் பலவற்றையும் நாம் வெளியிட்டால் மட்டுமே மற்றவர்கள் வெளியிட வாய்ப்பு ஏற்படும் என்பதால் நாம் முழுமையாக வெளியிட வேண்டிய தேவை ஏற்பட்டது.

எட்டுத் தொகுதிகளையும் ஒரே நேரத்தில் வெளியிடுவதற்குப் பெரும் பொருள் தேவைப்பட்டதால், முன்வெளியீட்டுத் திட்டம் 'தென்மொழி' யில் அறிவிக்கப் பெற்றது.

தென்மொழி அன்பர்கள் பலரும் முனைந்து தொகை அனுப்பி வைத்திருந்தனராயினும், அத் தொகை, தேவையான எல்லைக்கு மிகவும் குறைவான அளவையே நிறைவு செய்தது. நாமும் அந்தக் காலக்கட்டத்திற்குள் வெளியிட இயலாமல் சற்று காத்திருக்கநேர்ந்தது.

அவ்வாறு காத்திருக்கும் காலத்திற்குள்ளும் எதிர்மம், அச்சுக்கூலி, தாள் இவற்றின் விலையேற்றம் அளவு கடந்து உயர்வும் பெற்றன. அவற்றையும் நெருக்கியே வெளியிட வேண்டியதாயிற்று.

இனி, தமிழ்மக்கள் தம் மொழிநலத்தையும் வாழ்வியற் சிறப்புகள் சீரழிவுகள் ஆகியவற்றையும் உணர்ந்து, அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்து, எழுச்சிபெற்று, இனநலம் பேணி, நாட்டுரிமை பெற்று வாழ்வாங்கு வாழ வகைசெய்யும் கருத்துத் தெளிவும் உணர்வுச் செழுமையும் வாய்ந்த பாடல் திரட்டான இக் கனிச்சாறு தொகுதிகளைத் தமிழ்கூறும் நல்லுலகம் வரவேற்றுப் பயன்கொண்டு சிறக்கும் என்று நம்புகின்றோம்.

– தென்மொழி பதிப்பகத்தினர்

# கனிச்சாறு நான்காம் தொகுதி

(இளைய தலைமுறை, பொதுமை, இயக்கம்)

## பொருளடக்கம்


| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| **இளையதலைமுறை** | | |
| 1. | கடவுள் நம்பிக்கை ! | 3 |
| 2. | சுருட்டும் பீடியும் ! | 4 |
| 3. | பெற்றவள் உவகை ! | 5 |
| 4. | கோழையின் தாய் ! | 6 |
| 5. | ஏன் பிறந்தாய் ? | 7 |
| 6. | வேண்டாத இந்தி ! | 9 |
| 7. | கல்வி யொழுங்கு ! | 10 |
| 8. | இளைஞர் எழுச்சி ! | 11 |
| 9. | தமிழர் படை ! | 12 |
| 10. | போலியர் வாழ்வு ! | 13 |
| 11. | தமிழ்க்கு மூவுடைமை ! | 14 |
| 12. | நொச்சிப் போர் ! | 15 |
| 13. | ஓ. மாணவச்செல்வரே! | 19 |
| 14. | தம்பி நீ புதிய தமிழன் ! | 23 |
| 15. | மாண்பிலார் என்றும் மாணவர் ஆகார் ! | 26 |
| 16. | தமிழத்தம்பியே! உலகைத் திருத்தடா! | 27 |
| 17. | தம்பி! நீதான் நாளைய தலைவன் ! | 31 |
| 18. | வாழ்க்கை பொது ! | 32 |
| 19. | விளம்பர உலகில் விலைபோகாதே ! | 33 |
| 20. | அயர்வைக் கொல்லடா! தோளை உயர்த்தடா ! | 35 |
| 21. | உனை அழிக்கும் எல்லை! | 36 |
| 22. | மக்கள் என்று திருந்துவரோ? | 37 |
| 23. | போலியரைக் கண்டுகொள் தம்பி ! | 39 |
| 24. | சிற்றூர் ! | 40 |
| 25. | பூத்த தாமரைப் புதுமுகம் ! | 41 |
| 26. | தொண்டன் நீ! | 42 |
| 27. | பாட்டெழுது ! | 43 |
| 28. | பழைய மனமே புதிய உலகம் ! | 45 |
| 29. | மனத்தில் அறிவில் ஒளி ஏற்றுவாய் ! | 47 |
| 30. | வாழ்க்கையில் பீடுசேர் ! | 48 |
| 31. | பள்ளியை மூடுங்கள் ! | 49 |
| 32. | நிறையக் கேள்! குறையப்பேசு ! | 50 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 33. | கணக்கும் எழுத்துமே கல்வி என்றாகுமோ? | 51 |
| 34. | நெஞ்சை அகலப்படுத்து! அறிவை ஆழப்படுத்து! தோளை உயரப்படுத்து! | 54 |
| 35. | உண்மை கடைப்பிடி! உழைப்பில் உறுதிகொள்! | 56 |
| 36. | அருமைச் சிறுவர்காள் ! | 57 |
| 37. | யாருக்காக, நீ? | 58 |
| 38. | குழந்தை...! | 59 |
| 39. | என்றன் பாட்டு ! | 60 |
| 40. | தமிழத்தம்பி நல்லதம்பி ! | 61 |
| 41. | எங்கும் எதிலும் ஒழுங்கு உண்டு ! | 62 |
| 42. | துணிந்துநில்! குனிந்து சாகாதே ! | 63 |
| 43. | அச்சுரை எல்லாம் அறிவுரையன்று ! | 64 |
| 44. | தோற்றம் வேறு, செயல் வேறு ! | 65 |
| 45. | நம்பிக்கை ! | 66 |
| 46. | மதப்பற்று ! | 69 |
| 47. | உன்னை நம்பிக்கிடக்குது நாடு! | 71 |
| 48. | குறைகளும் குணங்களும் ! | 72 |
| 49. | உயர்வும் தாழ்வும் ! | 73 |
| 50. | இளமை இழிவானால் வாழ்வு வீணாகும் ! | 74 |
| 51. | அழகும் அருவருப்பும் ! | 75 |
| 52 | பொருந்தா ஆசையைப் புதைத்து, உடன்விலகு ! | 76 |
| 53. | பதற்றம் கொள்ளாதே ! | 77 |
| 54. | எதிர்ப்புக்கு இளைக்காதே! | 78 |
| 55. | தனி நலத்தைத் தவிர் ! | 79 |
| 56. | வாழ்வியல் முப்பது! | 80 |
| 57. | வாழ்க்கைத் திரிபுகள் ! | 88 |
| 58. | உழைப்பே வாழ்க்கை ! | 89 |
| 59. | உயர்வைப் பின்பற்று ! | 90 |
| 60. | ஏற்பும் தவிர்ப்பும் ! | 91 |
| 61. | ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு நூலகம் ! | 92 |
| 62. | ஏமாறிப் போகாதீரே ! | 93 |
| 63. | இந்த உலகம் ! | 94 |
| 64. | பொய்யா வாழ்க்கை அறவாழ்க்கை ! | 95 |
| 65. | புன்மையும் நன்மையும் ! | 96 |
| 66. | மூட்டுக்கு வலிவு செய் ; முதுக்கு நிமிர்வு தா! | 97 |
| 67. | மக்களை உருவால் மயங்காதே! | 98 |
| 68. | எண்ணமும் செயலும் ! | 99 |
| 69. | உடல் நலத்தைக் காவாதான் உயிர்நலத்தைக் காவாதான் ! | 100 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 70. | தம்பி, உனக்கொன்று சொல்வேன்! | 101 |
| 71. | இடரும் உலகமிது! | 102 |
| 72. | இலகிடும் இன்பங்கள் எத்தனை? எத்தனை? | 103 |
| 73. | தொண்டுசெய்ய வருபவர்க்கு இயற்கை வைக்கும் தேர்வு! | 105 |
| 74. | மாணவர் எவர்? | 106 |
| 75. | பெண்டிர் பெருமை ! | 107 |
| 76. | பாட்டெழுதத் தெரிந்தால் போதாது தம்பி! | 108 |
| 77. | பாய்ந்தெழுவீர் இளமையோரே! | 109 |
| 78. | கல்வி நலன்கள் ! | 110 |
| 79. | எண்ணிப் பாருங்கள் இளந் தலைமுறையரே! | 112 |
| 80. | வாழ்க்கைப் புதிரை விளங்கிக்கொள்! | 114 |


## பொதுமை


| | | |
|---|---|---|
| 81. | உலக விளக்கம் ! | 117 |
| 82. | சாலையின் ஓரத்திலே! | 125 |
| 83. | வாழ்வும் தாழ்வும் ! | 127 |
| 84 | மதங்காப்பார் ! | 128 |
| 85. | பிறப்பொக்கும் ! | 130 |
| 86. | உள்ளத்தனைய துயர்வு ! | 131 |
| 87. | குச்சுக் குடிசையிலே ! | 133 |
| 88. | நாம் தமிழரல்லர் ! | 135 |
| 89. | நெறி காணீரே ! | 135 |
| 90. | இருள் உலகம் ! | 136 |
| 91. | அறுவடை செய்கிறார்கள் ! | 137 |
| 92. | பணப்பதுக்கல் பறிமுதல் செய்க ! | 139 |
| 93. | புதுமை இலக்கியம் புனைக இளைஞனே ! | 139 |
| 94 | படிக்கின்றோம்; பேசுகின்றோம்; செய்கின்றோமா? | 140 |
| 95. | மாந்த உருவமே ! | 142 |
| 96. | ஏழைக்கு ஏழை இரங்குவதுண்டா? | 144 |
| 97. | புரட்சிதான் எல்லை! | 146 |
| 98. | நாட்டை மலர்த்திட நடையிடு தம்பி! | 147 |
| 99. | பதவி எதற்கு? உதவி செய்யவா? ஊரை உறிஞ்சவா? | 148 |
| 100. | பொதுமை உலகம் புதுக்குக இளைஞனே! | 150 |
| 101. | பொதுமை உலகம்! | 152 |
| 102. | ஆர்ப்பாட்ட உலகம்! | 153 |
| 103. | தப்பித் தவறியே மாந்தனாய்ப் பிறந்தவன்! | 154 |
| 104. | கேட்கின்றான்; கொடு! | 156 |
| 105. | எதிர்காலந்தனைச் சமைப்பாய்! | 157 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 106. | பொதுமை உலகம் வரல் வேண்டும்! | 158 |
| 107. | தெய்வமும் உண்மைகொல்! | 159 |
| 108. | ஊரைத் திருத்து முன்...! | 161 |
| 109. | ஒரு வாய்ச்சொல் கேளீர்! | 163 |
| 110. | ஏழையின் நிலைமை மாறியதுண்டா? | 164 |
| 111. | ஒருநாள் வரத்தான் போகிறது! | 165 |
| 112. | அன்றைய நாள் வருமோ? | 167 |
| 113. | வாழ்நாள் சிறியது; வாழ்க்கையோ பெரியது! | 169 |
| 114. | ஏழையை உயர்த்திடப் பாடுவாய் ! | 170 |
| 115. | மறந்துவிடாதே! | 172 |
| 116. | வறுமை ஒழிந்ததா? செயலில் காட்டுவோம்! | 173 |
| 117. | உலகுக்கு உழைப்பவரே, என் உண்மைத் தெய்வம் ! | 175 |
| 118. | உழைப்பை அவமதிக்கும் செயல்! | 176 |
| 119. | பொதுமை வரட்டும்! | 177 |
| 120. | உலகம் வாழ் தொழிலாளர்கள் ஒன்றுபடும் நன்னாள்! | 178 |
| 121. | இன்றைய உலகம் புரட்சி உலகம்! | 180 |
| 122. | மக்களின் வெள்ளம் கடலெனத் திரள்கவே! | 181 |
| 123. | படித்தவர் யாருக்கும் வெட்கமில்லை! | 182 |
| 124 | புரட்சி செய்! தம்பி, கனல்போல ! | 184 |
| 125. | இயற்கை அன்னையின் ஈகை ! | 184 |
| 126. | ஆடுக ஊஞ்சல் ! | 185 |
| 127. | அறம் பொருள் இன்பம் ! | 186 |
| 128. | ஊர் மக்கள் நலம் கருது ! | 187 |
| 129. | கண்ணீர் வாழ்வில் கரையும் குழந்தைகள் ! | 188 |
| 130. | சுற்றுச்சூழலை வெற்றி கொள்வாய் ! | 189 |
| 131. | பொருளை விருப்பிப் புன்மை செய்யாதே ! | 189 |
| 132. | வாழ்க்கைக் கூறுகள் ! | 190 |
| 133. | பொலிந்திடும் பொதுமையே! | 191 |
| 134. | பொதுவுடைமை! | 192 |
| 135. | மக்களைச் சமம் எனச் செய்வோம்! | 193 |
| 136. | தம்பி! உனக்கொரு செய்தி சொல்வேன் ! | 194 |
| 137. | சிந்தித்துப் பார்ப்பீர்களே! | 195 |
| 138. | எல்லா நிலையிலும் உயர்வடை! | 195 |
| 139. | மடிவதோ இன்னமும்? உரிமை முழக்கடா! | 196 |
| 140. | விண்வரை புகழ்கொள்! | 197 |
| 141. | எவற்றினிலும் நேற்றைவிட இன்றுயர்தல் வாழ்க்கை! | 198 |
| 142. | நிலைஎன நிறுத்துவாய் உனை ! | 199 |
| 143. | நெருப்பு உழைப்பு அல்லவோ சிறப்புகள் நிகழ்த்தும் ! | 200 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 144. | தன்னலம் கருதாத தம்பி, நீ! | 201 |
| 145. | துணிவு, ஊக்கம், கடமைதாம் நிலைப்பன! | 201 |
| 146. | ஊக்கத்தைக் கைவிடாதே ! | 202 |
| 147. | கவர்ச்சிக் கலைகளால் நாடு வீழ்ந்திடும்! | 203 |
| 148. | வெற்றி எதிர்வருமே! | 204 |
| 149. | எதிர்பார்க்காதே! ஏமாற மாட்டாய் ! | 205 |
| 150. | வாழ்வுக்கு நோக்கம் தேவை! | 206 |
| 151. | எண்ணிப் பார்க்க வேண்டும்! தம்பி எதற்கும் துணிய வேண்டும்! | 207 |


## இயக்கம்


| | | |
|---|---|---|
| 152. | உலகத்தமிழினம் ஒன்றெனத் திரண்டது! | 211 |
| 153. | வலிய ஓர் இயக்கம் செய்வோம்—அதன் வளர்ச்சிக்குக் கைகொடுப்போம்! | 212 |
| 154. | இணைபவர்கள் இணையட்டும் ! | 213 |
| 155. | உலகத்தமிழினம் ஒன்றுபடுக்கும் கழக முன்னேற்றம் காண்குறுவோமே! | 215 |
| 156. | வந்து பொருந்துக! | 216 |
| 157. | உலகப் பேரியக்கம் இங்கே உருவாதல் காண்பீர்! | 217 |
| 158. | தமிழின ஒன்றிணைப்புப் பாடல்! | 218 |
| 159. | அதுதான் எனக்குத் திருநாள்! | 219 |
| 160. | மன்னிய கொள்கை ஏழும் மலர்க இத் தமிழ் ஞாலத்தே! | 220 |
| 161. | கொடி ஏற்றுவோம்! நிலை மாற்றுவோம்! | 221 |
| 162. | ஓங்கிப் பெருகுது உ.த.மு.க. | 222 |
| 163. | உ.த.மு.க. உண்மைக் கழகம். | 222 |
| 164. | உ.த.மு.கழகம் நிலைக்க! | 224 |
| 165. | தொண்டர்க்கு ஒன்றுரைப்பேன்! | 224 |
| 166. | தொண்டுக்கு இலக்கணம்! | 226 |

# கனிச்சாறு நான்காம் தொகுதி

(இளைய தலைமுறை, பொதுமை, இயக்கம்)

## பாடல் விளக்கக் குறிப்புகள்

### இளைய தலைமுறை

1. நம்முடைய அறியாமைக்குக் கடவுள்மேல் பழிபோடும் உணர்வுகளைக் கடிவது இது.
2. புகைபிடிப்பதில்தான் எத்துணைத் தீமைகள் வந்து சூழ்கின்றன?
3. வீரனைப் பெற்ற தாயின் மகிழ்ச்சி இது.
4. கோழையைப் பெற்ற தாயின் உள்ளக் குமுறல் இது.
5. ஏழைக்குப் பிறந்த பிள்ளையை ஏன் பிறந்தாய் என்று கேட்டு உள்ளம் கசிகின்றாள் ஒருத்தி.
6. அயன்மொழி, தமிழ் மணங் கமழும் வாயில் நஞ்சாகப் பாய்ச்சப் பெறுவதைக் கண்டிக்கிறது, இப்பாடல்.
7. உண்மையான கல்வி எது என்று விளக்குகிறது இப்பாட்டு.
8. 'தென்மொழி' யின் தொடக்கக் கால இதழில் வெளிவந்த இப்பாடலில் தமிழிளைஞர்கள் எழுச்சி எத்தகையதாய் அமைதல் வேண்டும் என அறிவுறுத்துகிறார் பாவலரேறு.
9. இப்பாடல் இதுவரை அச்சில் வராதது. ஐயா அவர்களின் பழஞ் சுவடியிலிருந்து எடுக்கப் பெற்றது. தமிழர் படை எழுந்தால் என்ன நிகழும் என விளக்கும் எழுச்சிப் பாடல் இது.
10. போலித்தனமான வாழ்க்கை என்பது எவ்வாறு இருக்கும் என்பது பற்றிய விளக்கம் இது.
11. செந்தமிழ்த்தாயிடம் ஒரு சூளுரைப்பு.
12. 1965-இல் எழுந்த இந்தி எதிர்ப்புப் போருக்கு இதுபோலும் பாவலரேறுவின் நூற்றுக்கணக்கான பாடல்கள் போர்முரசங்களாக உதவியிருக்கின்றன.
13. நாட்டின் புதிய வரலாற்றை எழுத மாணவர்களை அழைக்கிறது இப்பாடல்.
14. புதிய தமிழன் எவ்வாறு இருத்தல் வேண்டும் என விளக்குகிறார் பாவலரேறு. சாதிச் செருக்கை சகதியில் போடவும், ஏற நிகரமை எடுத்து முழக்கவும் தமிழிளைஞனைப் பயிற்றுவிக்கும் உயர் கருத்துப் பாடல் இது. தமிழ்ச்சிட்டு ஆசிரியவுரைப் பாடலாக வந்தது.
15. மாணவப் பருவமே மாண்புடைப் பருவம். கல்விதான் அப் பருவத்தை உயர்த்துவது - என்பதை மாணவர்மீது கவலை கொண்டு விளக்குகிறார் பாவலரேறு அவர்கள். இப் பாடலும் தமிழ்ச்சிட்டு ஆசிரியவுரைப் பாடலாக வெளிவந்தது.

16. ஏற்றத்தாழ்வு வாழ்வின் இழிநிலை விளக்கி இருள் உலகிதனை இடித்துத் தள்ளவும் நாறும் மாந்தக் குலத்தைக் கழுவவும் தமிழத் தம்பியை வீறு கொண்டெழ அழைக்கிறார் பாவலரேறு. இப்பாடலும் தமிழ்ச்சிட்டு ஆசிரியவுரைப் பாடலே.

17. கற்கவும், கற்க வேண்டுவன எவை என்பதையும் ஆழமாய் விளக்குகிறது இப்பாடல். அக் கல்வியை 'ஓயாது தேடு! மேம்படு உலகில் செம்புது வெள்ளமாய் உலகினில் பாய்வையேல் தம்பி நீதான் நாளைய தலைவன்!' - என்று வழிகாட்டுகிறார் பாவலரேறு. இதுவும் தமிழ்ச்சிட்டு ஆசிரியவுரைப்பாடல்.

18. பொதுமை உணர்வை மிக எளிமையாய்த் தம்பிக்கு ஊட்டுகிற வகையே இப் பாடலின் அழகு.

19. பளபளப்பான பாலியல் இதழ்கள், திக்குமுக்காட வைக்கும் திரைப்படப்பாட்டுகள், காதுகளைக் குடைந்திடும் வானொலியிசைகள் இவற்றினின்று இளைஞர்கள் எப்படித் தப்ப முடியும்? எச்சரிக்கைக் காட்டி அவர்களை வழி நடத்துகிறது இப்பாடல்.

20. விழுந்த உள்ளத்தைத் தூக்கி நிறுத்து; சாய்ந்த உடலை மேலும் வருத்து. இனிய ஊக்கக் கருத்துகள்.

21. வளர்ந்திருக்கிற அனைத்தும் 'நாகரிகப்'பேயாய் உள்ளத்தைப் பிறழ வைக்கின்றன. மிகவுயர்ந்த கட்டிடமும், விளக்குத் தோரணங்களும் அகவுயர்ச்சி இல்லை; அவை உனை அழிக்கும் எல்லை - என்று தம்பிக்கு எச்சரிக்கிறார் பாவலரேறு.

22. பொத்தகம் அச்சிடுவதில் ஒரு வரைதுறை வேண்டாமா; எந்தப் பொருளைப் பற்றியும் இந்தக் காலத்தில் பொத்தகங்கள் அச்சாகிக் குவிந்து விடுகின்றன. இதனைப் பகடி செய்கிறது இப்பாடல்.

23. நல்லார் போலவே நடித்திடும் தீயவரின் போக்குகளை முழுமையாய் விளக்கி தம்பியை எச்சரிக்கைப் படுத்துகிறார் பாவலரேறு.

24. சிற்றூரின் அழகிய படப்பிடிப்பு.

25. குழந்தையைப் பற்றித் தாயின் உள்ளம் எப்படியெல்லாம் கனவு காண்கிறது! ஆசையலைகள். உள்ளத்தை மோதும் இசை வரிகள்.

26. 'உண்மையான தொண்டன் யார்?' என்று விளக்குகிறது.

27. 'தமிழ்ச் சிட்டு'களைப் பாட்டெழுதச் சொல்லுகிற அதேபோது அப்பாடலின் பொருள், நிலவை எழுதவும், நீரை எழுதவும், காற்றை எழுதவும், காதலை எழுதவும் என்றில்லாமல் நாட்டை எழுதவும், நாட்டில் வாழும் மக்களின் துயரை மாற்றவும் இருத்தல் வேண்டும் என்கிறார் ஆசிரியர்.

28. மக்கள் வாழ்க்கையை மலரச் செய்வதே தேவை. அதுவே புதுமை உலகம் என்கிறார் பாவலரேறு.

29. உயிர்வாழ்க்கை ஒரு நிலையிலேயே நின்று நுகர்ச்சி பெறுவதற்காக அன்று. துன்ப இன்பங்கள், மேடு பள்ளங்கள், இனிப்புக் கசப்புகள் போன்ற பல நிலைகளையும் உயிர் நுகர்ந்திடுதல் வேண்டும். இளைஞர்களுக்கு மிகத் தேவையான பாடல்.

30. எதையும் உயர்வாக நினை; தாழ நினைக்காதே. அரிய முயற்சிகளில் உன் உள்ளத்தைச் செலுத்து. விசும்பையளாவு. விண்ணையளந்திடு. நெஞ்சத்திற்குப் பீடு சேர்க்கிறது இப்பாட்டு.

31. பண்பாடில்லாத கல்வி பயன் தராது. விரிவடையாத செயல் யாருக்கும் உதவுவதில்லை. அறிவியல் முன்னேற்றம் மனத்தை எவ்வளவு கீழிறக்கிவிட்டது! கொஞ்ச காலத்திற்குக் கல்விச் சாலைகள் மூடியிருந்தால் என்ன?

32. இளைஞர்கள் சூழல்களை வென்று பழகுதல் வேண்டும். புறத்தேயிருந்து அவர்கள் பெற வேண்டிய அறிவு மிகுதி.

33. கல்வியென்றால் என்ன, இக்காலத்து எவ்வாறு போலிக் கல்வியே கற்பிக்கப் பெற்று வருகிறது என்பது பற்றிய ஆழ்ந்த அறிவு விளக்கப் பாடல் இது. அன்பும் அறிவும் பண்பும் வளராத கல்வியால் மக்கட்கு ஒரு பயனும் இல்லை என்னும் கருத்து நன்கு வலியுறுத்தப் பெறுகின்றது இதில்.

34. 'இயற்கையுள் நீ, உன்னுள் இயற்கை, உன் இயக்கம் இயற்கையோடு தொடர்புடையது. இயற்கையின் இயக்கம் உன்னுடன் தொடர்புடையது; உன்னை நீ உயர்த்திக்கொள்; உலகம் உயரும் அல்லது உலகத்தை உயர்த்தி நீ உயர்வாய்' என்னும் அரிய கருத்துகளமைந்த இனிய பாடல்.

35. புலனடக்கப் பாட்டு.

36. 'ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு வினைசெய். கடமைக்காகவே வாழ்' என்பது இப்பாட்டு.

37. உலகத்திற்காக நீ வாழ்வதாக எண்ணிப் பெருமைப்படாதே. முதலில் உனக்காக நீ வாழத் தெரிந்து கொள்ளல் வேண்டும். உன் உள்ளத்தை மலர்த்துவதே உன் வாழ்க்கை என்று உணர்த்துகிறது இப்பாடல்.

38. குழந்தையைப் பற்றிய உயர்ந்த வரிகள்.

39. 'என்றன் பாட்டு' என்றும் அழியாத பாடல்.

40. தமிழ்த்தம்பிகள் தமிழ் படிக்காமலிருக்கலாமா? தமிழ் படித்த தம்பிகள் தமிழை வளர்க்க விடும் வேண்டுகோள்.

41. ஒழுக்கம் நாம் நடக்கின்ற நடைகளில் மட்டும் இல்லை. உண்ணுவதில், உறங்குவதில், உடுப்பதில், அமருவதில், நெளிவதில், குனிவதில், நடப்பதில், படிப்பதில் முதலிய அனைத்து நிலைகளிலும் ஒழுங்கு உண்டு. நீங்கள் எண்ணிப் பார்த்ததுண்டா? படித்துப் பாருங்கள்.

42. துன்ப உலகம் இது. இன்ப நினைவுகள் எண்ணாயிரங் கோடி. எல்லாரும் இன்பத்தையே நாடுகின்றனர். துன்பம் வரும் போது துவண்டு போகின்றனர். துன்பமின்றி இன்பம் எப்படிச் சுவைக்கும்? துன்பத்தை நாடுபவர்க்கு இன்பம் ஓடிவரும். உள்ளத்தைத் துணிவுகொள்ளும்படி இப்பாடல் ஊக்கப்படுத்துகிறது.

43. அச்சு ஏந்துகள் வந்த பின்னால் குப்பை கூளங்களும் அச்சாகி நூல்கள் எனும் பெயரில் உலாவருகின்றன. உண்மை ஒடுங்கிக் கிடக்கின்றபொழுது பொய் தலைவிரித்தாடுகிறது. காலம் செய்யும் கோலங்களில் ஏமாறிப் போகவேண்டா என இளைஞர்களை எச்சரிக்கிறது இப்பாட்டு.

44. தோற்றம் ஒன்று, செயல் ஒன்றாகக் கிடக்கும் இவ்வுலகத்தை விளக்குகிறது.

45. கணியக் குறிப்பினை நம்பும் மூடத்தனத்தை எளிய கதைவடியில் விளக்குகிறது இப்பாடல். இப்பாடல் 'மிசா'க் கொடுஞ் சிறையில் பாவலரேறு இருக்கையில் 28.4.76 இல் எழுதியது.

46. சிவனிய, திருமால் மதப்பற்று பற்றிக் கூறப்பெறும் கதையை நகைப்புடன் சொல்லுகிறது இப்பாடல். அறிவியல் அல்லாமல் மூட நம்பிக்கையில் ஆட்படும் இக் குமுகப்படப் பிடிப்பு இக்கதை.

இப்பாடலும் பாவலரேறு அவர்கள் 'மிசா'க் கொடுஞ்சிறையில் இருக்கையில் 30.4.76இல் எழுதியது.

47. இளைஞர் ஒவ்வொருவரையும் இந்த நாடு நம்பிக்கிடக்கின்றது என்று வலியுறுத்துகிறார் பாவலரேறு.

48. குறைகள் எல்லாரிடமும் உள்ளன. ஆனால் அவை உள்ளவரிடம் நன்மை ஏதோ ஒன்றிரண்டு இருக்கலாமன்றோ? அவற்றிற்காக அவரைப் பாராட்டும் பழக்கத்தைக் கொண்டுவிட்டால் புன்மைகள் தாமே அழிந்து போகும்.

49. புற அழகுகளை மிகுத்துக் கொண்டுள்ளோம். அகம் அழகற்றுக் கிடக்கின்றது. அகவொளி பெற்றாலன்றோ புறமும் ஒளிர்ந்து தோன்றும்? அகம் இருண்டால் புறத்தும் இருளே.

50. இளமையில் நேராக நடப்பவன் முதுமையில் குனிந்து நடக்க வேண்டுவதில்லை. இளமை காத்துக் கொள்ளப்பட வேண்டும். இழிவான நடைமுறை நாகரிகமாகாது.

51. 'சுற்றியிருக்கும் சூழல்களுக்கு மனமும் அறிவும் உணர்வும் நெகிழாமல் உறுதியைக் கடைப்பிடி' என்பது இப்பாடல். அழகு செய்வதிலும் ஓர் ஒழுங்குண்டு. அது தவறினால் அருவருப்பாகிவிடும்.

52. உனக்குப் பொருந்தாத ஆசைகளில் ஈடுபட்டு உன் வாழ்வைக் கனவாக்கிக் கொள்ளாதே. பொருந்தியதை எண்ணு. பொருந்தியதைச் செய் என்று புகல்கிறது.

53. 'எட்டாத ஒன்றில் மனம் எம்பிப் பாயும்; கிட்ட இருப்பதை விளங்கிக் கொள்; வினைபடு.' எனப் புகல்கிறது இப்பாடல்.

54. எந்த எழுச்சிக்கும் எதிர்த்தாக்குதலுண்டு. அதற்காக இடிந்து போகலாமா? கூடாது என்று உள்ளத்தை ஊக்குகிறது.

55. நம் காலத்திற்குத் தேவையான உண்மைத் தொண்டை இளைஞர்கட்கு விளக்குகிறது இப்பாட்டு.

56. வலிமையான வாழ்வியல் கருத்துக் கூறுகளை இளைய தலைமுறையினர்க்கு மிக எளிமையாய் எடுத்துரைக்கிறார் பாவலரேறு.

57. மாந்தப்பற்றில்லா ஆளுமையர்க்கான அறிவின் பெருக்கால் வாழ்வின் போலிமைத் தனங்கள் எவ்வாறு பெருகி விடுகின்றன என்று விளக்குகிறது இப்பாடல்.

58. உழைப்பவரே பெரியோர். உழைக்காதவர் சிறியோர் என்று உழைப்பை - உழைப்பின் சிறப்பை விளக்குகிறார் பாவலரேறு.

59. வினை செய்தலே உயர்வு - அவ் உயர்வைப் பின்பற்றவும், தாழ்வு உணர்வை அகற்றவும் தம்பிக்கு உணர்த்துகிறார் பாவலரேறு ஐயா அவர்கள்.

60. வாழ்வின் நல்லுணர்வுகள் ஒவ்வொன்றையும் நாம் ஏற்கையில் அது எவ்வாறு இன்னொரு தன்மையினதாய் இருந்திடக் கூடாது - என்பதை விளக்குகிறது இப்பாடல்.

61. அறிவினைத்தூண்டிடும் தூய்மை வாழ்வின் கால்களே நூல்கள் தாம் என்றும், அவற்றைக் கொண்ட நூலகம் ஒவ்வொரு வீட்டிலும் தேவை என்பதையும் விளக்குகிறது இப்பாடல்.

62. தமிழினத்தைக் காப்பதாகக் கயமையாக நடக்கும் தலைவர்களின் போக்குகளைக் கண்டு ஏமாறிப் போய்விட வேண்டாம் என இளைஞர்களை எச்சரிக்கிறார் பாவலரேறு.

63. இயற்கையான இவ் உலகப் போக்கு இன்றைக்கு எவ்வாறு செயற்கையாகவும், சூழ்ச்சியாகவும் போய்விட்டது என்று கூறி விளக்குகிறது இப்பாடல்.

64. விலங்குகள்போல் உண்பது உறங்குவது என்றில்லாமல் நல்லுயர் கல்வியொடும், நன்னெறி வாழ்வொடும் பொதுவுணர் வாழ்க்கையாக நாம் வாழும் வாழ்க்கையே பொய்யா அறவாழ்க்கை என்கிறார் பாவலரேறு.

65. பகட்டாலும் கவர்ச்சியாலும் மயங்காமல், நல்லறிவைப் போற்றிக்காத்து வளர்த்தல் வேண்டும் அதுவே நன்மைதரும் என்று அறிவுறுத்துகிறார் பாவலரேறு.

66. “வேட்டை நாய்களாய்த் தம் நலங் காப்போரை மறுத்து, கேட்டுக்கு முன்நிற்க வேண்டுமெனில் தம்பி - நீ ஏட்டுக்குள் புதைந்திடாமல் மூட்டுக்கு வலிவு செய்” - என்று இளைஞரை அழைக்கிறார் பாவலரேறு.

67. நன்னிலை உணர்வுகள் நசிகையில், நலிவைக் கண்டு அஞ்சாமலும் எதுவரினும் கொடுமையை எதிர்க்கத் தயங்காமலும் இருக்க அறிவுறுத்துகிறது இப்பாடல்.

68. எண்ணியவற்றுள் எழுதவும், எழுதியவற்றுள் பரப்பவும், பரப்பியவற்றுள் தேரவும், தேர்ந்தவற்றுள் செயல்படவும் வினைபடவும் செய்கையில் எதிர்ப்புக்குத் தயங்காதே என்கிறார் பாவலரேறு.

69. குன்றென அறிவு சேர்த்தாலும் - உடல்நலம் கெட்டால் அனைத்தும் முடமாகிப் போகுமே என்று வருந்தி உடல் நலம் பேண அறிவுறுத்துகிறது இப்பாடல்.

70. நம் மொழி, இனம், நாட்டின் தாழ்ந்த நிலை மீட்டு நற்றமிழ்க் கொற்றத்தை நாட்ட தன்னையே தர ஆயிரம் பேர் வேண்டுமென தம்பிக்குச் சொல்லி உணர்த்துகிறார் பாவலரேறு.

71. புறத்தே கவர்ச்சியிருப்பினும் அகத்தே நேர்மாறாய் இருக்கும் இடரும் உலகமிது! இதை எண்ணத் துலங்குவதும் ஏற்றம் விளங்குவதும் எளிதில்லை என்கிறார் பாவலரேறு.

72. கண்களாலும், செவியாலும், மூக்காலும் உணரும் இயற்கை இன்பங்கள் எத்தனை எத்தனை. அத்தனையையும் நுகரமாட்டாமல் பித்தனாய் ஒதுங்கி நிற்காதே.- என்று எடுத்துரைக்கின்றார் பாவலரேறு.

73. தொண்டு செய்ய வருபவர்க்கே துன்பங்கள் பெரிதும் சூழ்கின்றன. அவை இயற்கை அவர்க்கு வைக்கும் தேர்வு என்கிறார் ஆசிரியர்.

74. மடமையாய் ஊர்சுற்றுவதும், மண்டுத்தனமாய்ப் பெண்டிரைச் சுற்றுவதும், குரைப்புநாயாய்ப் பொறுப்பற்றிருப்பதும் மாணவத்தன்மையல்ல. கருத்தொடு கற்றுத் திருத்தமாய் நடப்பவரே மாணவராவார் என்று இடித்துரைக்கிறார் பாவலரேறு.

75. உழுவோரும் உழைப்போரும் ஒன்றிணைந்து பழுதடையும் தமிழகத்தைப் புதுப்பிக்கப் பாய்ந்தெழுவீர் இளமையோரே - எனத் தட்டியெழுப்புகிறார் பாவலரேறு.

76. ஆக்கவும், அளிக்கவும், அழிக்கவும் அருந்திறம் மூன்றினையுமே கொண்ட அன்னைக் குலத்திற்குத் தீங்கு செய்தலாகாது என்று பெண்டிர் பெருமையை விளக்குகிறது பாடல்.

77. பாட்டெழுதத் தெரிந்தால் போதாது - பாட்டின் பொருள் பழங்கதை பேசுவதாயன்றி, இனத்தை மீட்க வேட்டெழுப்பும் எழுத்தாக, விலங்கொடிக்கும் பாட்டாக ஓர் கோடி வேண்டும் என்றுரைக்கிறார் பாவலரேறு.

78. கல்வியின் நலன்களையும், சிறப்பையும் விரித்துரைக்கிறார் பாவலரேறு அவர்கள்.

79. இறப்பு என்பது உறுதி என்றிருக்கும் போது செருக்கும் தருக்குமே நம்மைச் சிதைக்கின்றன. நம் சிறப்பு வாழ்வே இறப்பை வென்றிடும் என்றுணர்ந்து செயல்படுவீர் இளந் தலைமுறையரே! - என்று எச்சரிக்கிறார் பாவலரேறு.

80. தனித்தனி உயிர் இயக்கங்களின் இணையைப் போற்றிக் கொள்வது போல், பொருந்தா நிலைகளைத் தூற்றாமல் வாழ்க்கைப் புதிரை விளங்கிக் கொள்ளச் சொல்லுகிற பாடல்.

## பொதுமை

81. 1952-இல் அன்பர் ஒருவர் 'உலக நிலைகளை விளக்கிச் சுருக்கமாக ஒரு பாடல் தந்திடுக' என்று விடுத்த வேண்டுகோளுக்கிணங்க எழுதப்பெற்றவை இம் முப்பத்தொரு பாடல்களும்.

82. உறுப்புக் குறைந்த இரவலன் ஒருவன் தெருவில் உருண்டு கிடப்பதைக் கண்டுங் காணாமலுஞ் சென்ற மாந்தர் கூட்டத்தை எள்ளிப் பாடியது. பாவலர் கண்ணதாசனின் 'முல்லை'யில் வெளியிடப் பெற்றது.

83. மக்கள் மனச்சீர்மை பெற்றாலொழிய அறிவியல் முன்னேற்றங்களால் பயனில்லை என்ற கருத்தை உணர்த்துவது.

84. மதத்தலைவர்களின் போலி வாழ்க்கையை இகழ்ந்தது. 'வானம்பாடி' யில் வெளிவந்தது.

85. அன்பர் ஒருவருக்கு மருத்துவமனையில் பிறந்த குழந்தைப் பிறப்பைப் பதிந்து கொள்வதற்காகச் சாதிவிளக்கம் கேட்கப்பட்டதைக் கண்டு உள்ளம் நொந்து எழுதியது. பாவேந்தரின் 'குயிலில்' வெளிவந்தது.

86. பாவலரேறு தாம் பயின்ற சேலம் நகராட்சி உயர்நிலைப் பள்ளி ஆண்டு மலருக்காக எழுதி விடுத்தபாடல்.

87. எவர் தாலாட்டுப் பாடினாலும் பெரும்பாலும் குழந்தையின் குடும்பநிலையை உயர்த்திப் பாடுவதையே வழக்கமாகப் பார்க்கிறோம். இப்பாடல் குழந்தையின் ஏழ்மைக் குடும்பநிலையை உண்மையாகச் சுட்டுகிறது.

88. தம்மைத் தமிழர் என்று சொல்லிக் கொள்ளாமல் சாதிப் பெயரைக் கூறிப் பெருமைப்படுகின்றவர்களை இழித்து எழுதியது.

89. மக்களின் ஒரு பகுதியினரைத் தாழ்த்தி மதப் பெருமை கூறுவோரைக் கடிந்தது.

90. ஆசிரியர் பொதுமை வாழ்வில் பட்ட துயரங்களையும் தொல்லைகளையும் ஏமாற்றங்களையும், எதிர்ந்த போலி மாந்தர்களையும், போலியுணர்வுகளையும் நினைந்து தம் நெஞ்சு அழன்று எழுதியது. 'சனநாயகம்' என்னுமிதழில் வந்தது.

91. ஏழைகளுக்காகவும், உழைப்பாளர்களுக்காகவும் உழைப்பதாக எல்லா அரசியல் கட்சியாளர்களும் சொல்கிறார்கள்? ஆனால் உண்மையாக அவர்களுக்கு உதவுபவர்கள் யார் இருக்கிறார்கள்! அதுவன்றி அவர்களிடமிருந்து நலம் பெறவே விரும்புகிறார்கள்.

92. பணம் தேங்கியிருக்கின்ற இடத்திலிருந்து பறிமுதல் செய்தால் என்ன? ஏழைகள் எல்லாருக்கும் பங்கிடலாமன்றோ? அது பற்றிய ஏக்கம் இப்பாட்டில் தெரிகிறது.

93. பழைய தொன்மக் குப்பைகளையும் பொய்ம்மைக் கதைகளையும் தவிர்த்து இளைஞர்களை மக்கள் நலங்காக்கும் புதுமையிலக்கியம் செய்ய விடுக்கும் அழைப்பு.

94. போலிச் சீர்திருத்தக்காரர்கள், பொய்ம்மை மதத் தலைவர்கள், ஆகியோரைக் கண்டு நொந்து பாடியது.

95. அழுக்கு உடையில், நாற்றமெடுத்த உடலொடு அலையும் ஒருவனும் மாந்தனே என மாந்தநேய உணர்வூட்டும் பாடல்.

96. ஏழைக்குச் செல்வர்கள் உதவுவது இருக்கட்டும்; ஏழைக்கு ஏழை உதவுதல் உண்டா என்று கேட்பது இது.

97. பொதுமை மலர்ச்சிக்குப் புரட்சி தவிர வேறு வழியில்லை என்பது இப்பாடல்.

98. இழிதொழில்கள் இன்னும் இருக்கலாமா? நாட்டை மலர்த்திட நடையிடு தம்பி - என்கிறது இப்பாடல்

99. படிக்கின்றோம், பதவி பெறுகின்றோம். அந்தப் பதவியால் நாமே நலம் பெறுவதல்லால் ஊருக்கு உழைக்கின்றோமா? என்று கேட்கிறது இந்தப் பாட்டு.

100. கடந்த காலங்களில் சாதிகள் பெயராலும் சமயங்களின் பெயராலும் எத்துணை இழிவுகள் இங்கு வந்து புகுந்தன! அவற்றைப் போக்கிப் பொதுமை உலகத்தைப் புலரச் செய்ய வேண்டாவா இளைஞர்கள்? அவர்களுக்கு விடுத்த அழைப்பு இது.

101. உழைப்பவர்கள் உழைப்பின் பயனைப் பெறுகிறார்களா? இல்லையே! உழைப்பின் பயனைத் திருடுபவர்கள் உழைக்கின்றார்களா? அதுவுமில்லையே! இவ்விரு தரத்தாரும் எப்பொழுது பொதுநிலைகளை உருவாக்குவார்களோ! அதைப் பற்றிய முன்னுரை இப்பாடல்.

102. ஆரவார உலகத்தைப் பற்றிய படப்பிடிப்பு.

103. ஏழைகளும் மாந்தர்களே என்னும் பொதுமை உணர்வை ஊட்டியது.

104. ‘இரவலர்களுக்கு ஈவதால் இரவலர் பெருகுவர்’ என்ற உணர்வால் பலர் ஒரு காசும் ஈவதேயில்லை என்பதை மறுத்து எந்த அளவாகிலும் ஈயவேண்டும் என்ற உணர்வை எழுப்புவது..

105. பொதுத்தொண்டு செய்வார்க்குச் சில பொன்னுரைகள். கட்டாயம் கவனத்தில் வைக்க வேண்டியவை இவை.

106. ஒவ்வொருவரும் தம்தம் நலங்கள் பற்றியே பெருமளவில் எண்ணுகிறார்கள். பொதுமை உணர்வு பெற்றால் இவ்வுலகம் எல்லார்க்கும் எவ்வளவு இன்பமாகத் திகழும்? அது பற்றிய ஏக்கம் இது.

107. 1971-இல் கிழக்கு வங்கத்தில் பாகித்தான் முதலமைச்சர் யாகியாகான் செய்த கொடுமைகள் பற்றி மனம் நொந்து பாடியது.

108. பொதுத்தொண்டு செய்யப் புறப்படுவோர் முதலில் தம்மைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்னுங் கருத்தை வலியுறுத்துவது.

109. அமெரிக்கர்களும், உருசியர்களும் வானியல் ஆய்வின் பொருட்டு ஏராளமான பொருட்செலவு செய்வதைக் கண்டு உலக உருண்டையில் வாழும் மக்கள் நலங் கருத வேண்டும் என்று கவன்று கூறியது ‘தேனமுதம்’ ஆண்டுமலரில் வந்தது.

110. “அரசுகள் மாறிப் பயன் என்ன? இருந்தபடியே இருக்கும் ஏழ்மைநிலை தொலைவது எப்போது?” என்று கேட்பது.

111. மாடமாளிகையில் எத்துணை ஏந்துகளோடு வாழ்கிறார்கள் அங்கே! ஏழைகள் வாழ்வை எண்ணிப் பார்க்கவும் முடிவதில்லை. நிலைமை இப்படியாகவேவா இருந்துவிடப் போகிறது? அந்த மாளிகைகளுக்குள் ஏழைகள் வலிந்து புகுகின்ற ஒருநாள் வரத்தான் போகிறது என்ற எண்ணம்.

112. பெரிய மாந்தர்கள் நடுவில் வெளிப்படையாக இத்துணை இழிவான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன! இந்த நிலைகள் எல்லாம் தீருகின்ற நாளொன்று வருமா என்று ஏங்குகிறது உள்ளம்.

113. நிலையாமையை எளிய முறையில் உணர்த்துகின்றன இப்பாடலின் அடிகள்!

114. பாவலர்கள் அழகை, இயற்கையைப் பாடுவதைவிட ஏழ்மையைப் போக்கப் பாடவேண்டும் என்று விடுத்த வேண்டுகோள். வெங்காலூர்த் தமிழ்ச் சங்க ஆண்டு மலரில் வந்தது.

115. உனக்குமட்டும் நீ உழைத்தால் உலகம் உன்னை நினைப்பதில்லை என்னும் அழுத்தமான பொதுக் கருத்தை வலியுறுத்திப் பேசுகிறது.

116. அறிவியல் புதுமைகள் பல தோன்றியுள்ளன. ஆனால் வாழ்க்கை நிலைகள் இருந்தபடிதாமே இருக்கின்றன! உண்மைநிலைகளை எண்ணிப் பார்த்து உரைத்தது இப்பாடல்.

117. தம்மை மறந்து உலக மக்களுக்கு உழைப்பவரையே தெய்வம் என்கிறது இப்பாட்டு.

118. 1975-இல் தமிழகத்தில் மழை கரந்து வறட்சி மிகுந்த காலத்துப் பொதுத் தொண்டர்களும் மதத் தலைவர்களும் ஆங்காங்கே மக்களைத் திரட்டி மழை வேண்டல்கள் நிகழ்த்தியதைக் கண்டு மனம்நொந்து வருந்திப் பாடியது.

119. மேலுமில்லை கீழுமில்லை என்கிற பொதுமை வரத் திரளட்டும் மக்கள் குலம் என அழைக்கிறது இப்பாடல்.

120. மே நாள் தொழிலாளர் ஒன்றுபடும் நன்னாள். அத்தொழிலாளர் எழுச்சியில் நிலமெலாம் புரட்சியால் பொங்கிடும், மேல், கீழ் எனும் வேற்றுமைகள் அகன்றிடும் என்று தொழிலாளர் எழுச்சியின் மேன்மை குறித்து விளக்குகிறார் பாவலரேறு. இப்பாடல் 'தமிழ்நிலம்' இதழில் வெளிவந்தது.

121. தேசிய விடுதலை எழுச்சிகள் பரவலாக முகிழ்த்த சூழலில் எழுந்ததிப்பாடல். பொங்கும் வளமை! பொலிக பொதுமை! பூக்கும் உரிமை விரைவிலே என்று உறுதியுடன் கூறுகிறார் பாவலரேறு.

122. உழைக்கும் மக்களும், உழவரும் தொழிலரும் ஒன்றிணைந்து மழைக்கும் வெயிலுக்கும் மலைத்திடாது விடுதலைக்கு ஆர்ப்பரித்து எழுந்திடல் வேண்டும் என அழைக்கிறார் பாவலரேறு.

123. ஆறறிவு இனம் மக்களினம் என்கிறோம். ஏற்றத்தாழ்வெனும் இழிநிலை இதில்தான் உள்ளது. படித்தவர் எவரும் இதுகுறித்து வெட்கப்படவில்லை. ஏட்டில் எழுதுவோர் எழுந்து போராடினால் இருநிலை மாய்ந்திடும் என்ற இடித்துரைக்கிறார் பாவலரேறு.

124. இன்னலாய் வாழும் ஏழையர்க் கெல்லாம் விடிவு வாய்க்க புரட்சி செய் தம்பி கனல்போல! - என்று ஊற்றம் தருகிறார் பாவலரேறு.

125. இயற்கை அன்னை தந்த பெரிய அறிதல் ஆற்றலைக் கோணல் மாணலாய் வீணாய்ப் பண்ணியே வீழ்வது சரியா? எண்ணிப்பார் - என்று வினா எழுப்புகிறார் பாவலரேறு.

126. இவ்வுலகில் வந்துயிர்த்து வாழும் பெருமை எண்ணியும் அப் பெருமைக்கான பெருஞ்செயல் செய்ய எண்ணியும் பேரண்ட வீதியில் ஆடுக ஊஞ்சல் - என்று விரிந்த உணர்வை ஊட்டுகிறார் பாவலரேறு. (இத் தலைப்பின் கீழ் - ஏற்கனவே பாடல்கள் 'குஞ்சுகளுக்கு'ப் பகுதியிலும் சிறுவர்களுக்குப் பகுதியிலும் வந்துள்ளது. அவை இப்பாடலுக்கு முன்பு எழுதப் பெற்றவை)

127. உடலையும், உள்ளத்தையும் முறையாய்ப் பேணுவதும், பயிற்றுவிப்பதுமே அறம் பொருள் இன்பம் எனப் போற்றுவோம் - என்கிறார் பாவலரேறு.

128. ஊர்மக்கள் நலன் கருதி எந்தத் தவறுகளையும் தட்டிக்கேட்கப் பழகிடவும், தம் கருத்தை எந்த இடர்வரினும் உரைத்திடவும் தம்பியைப் பழக்குகிறார் பாவலரேறு.

129. பெண்ணாய்ப் பிறந்தால் குழந்தை முதலேயே பெருஞ்சுமை தாங்கிடும் அவல நிலையை விளக்குகிறார் பாவலரேறு.

130. சுற்றுச் சூழலை வெற்றி கொள்வாய்! சுற்றுச் சூழலுக்கு அடிமைப்படாது வெற்றி கொள்ளுதலே கடமை - அதுவே அறிவூக்கம் என்றுரைக்கிறார் பாவலரேறு.

131. இருளினை விரும்பி ஒளியினை வெறுப்பவருண்டா? பொருளினை விரும்பாதே. அது பொய்மையாகும். என்று அறிவுறுத்துகிறார் பாவலரேறு.

132. ஒளியறிவும், நற்பண்புமே வாழ்க்கை என்று அவ் வாழ்வின் கூறுகளைக் குறிப்பிடுகிறது இப்பாடல்.

133. வையம் புதுமைசெய்! வருந்தடைகள் உடை! பொய்யைத் தகர்த்தெறி! பொலிந்திடும் பொதுமையே! தமிழ்ச் சிட்டுகளுக்குப் பொதுமை உணர்வூட்டுகிறது பாடல்.

134. உழைப்பில்லாமல் உணவில்லாமல் ஒருவரும் இருத்தல் கூடாது! பிழைப்பெல்லார்க்கும் பொது என இருந்தால் பிழையே எதனிலும் நேராது! சிறுவர்க்கு எளிமையாய் உணர்த்துகிறது இப்பாடல்.

135. சாதியும், மதமும், பொருளியலும் மக்களைக் கூறுபடுத்துவது சரியோ? மக்களைச் சமம் எனச்செய்வோம் எனத் தமிழ்ச்சிட்டுத் தம்பிகளை அழைக்கிறார் பாவலரேறு.

136. "இந்திக்கும் ஆங்கிலத்துக்கும் மதிப்பளித்துத் தமிழைப் புறக்கணிக்கும் நிலையில் தமிழ்த்தாய் வாடுகிறாள் - என்கிற செய்தியை தம்பிக்குக்கூறி தமிழை வாழ்விக்க அழைக்கிறார் பாவலரேறு.

137. எந்த ஒரு செயலையும் முன்னவர் சொன்னார் என்பதற்காகவோ, இன்னவர் புகழ்ந்திட்டார் என்பதற்காகவோ ஏற்காமல் சிந்தித்துப் பார்த்தே செயல்படுவீர் என அறிவுறுத்துகிறது இப்பாடல்.

138. "இன்றைய உலகம் பொய்ம்மையும் புரட்டும் இருக்கும் உலகம், எனினும் சோர்வடையாதே உயர்வானவை எண்ணி, உயர்வடை!" -என்கிறது இப்பாடல்.

139. அடிமையில் உழன்று விடிவை எண்ணாமல் மடிவதோ இன்னமும்! தம்பி - உரிமை முழக்கடா - என்று உரமேற்றுகிறார் பாவலரேறு.

140. மொழிக்கு நீ உழை, உன் இனத்துக்கு உலகுக்கு நீ வாழ் - விலையிலை உனக்கு. விண்வரை புகழ் கொள்! - என்கிறார் பாவலரேறு.

141. அன்பு செய்தல், அறிவுபெறல், பிறர் நலத்துக் குழைத்தல்போல், நேற்றிலிருந்து இன்றுயர்தலே வாழ்க்கை - என்று விளக்குகிறார் பாவலரேறு.

142. உன்னை வயப்படவைக்கவும், உன் வாழ்வழிக்கவும் நிறைய இழிவுகள் உள. விலைமதிப்பற்ற உன் வாழ்வை - நிலை நெடுந்தொண்டால் நிலை நிறுத்துவாய் - என தம்பிக்கு அறிவுறுத்துகிறது இப்பாடல்.

143. இருப்பதில் குறைகூறிக் கொண்டிராமல் உருப்படியான நெருப்புழைப்பாலே சிறப்புகள் நிகழ்த்த இயலும் - என்கிறார் பாவலரேறு.

144. உன்னுடையது என்று ஒன்றில்லாமல் அனைத்தையும் பொது என்று எண்ணுவதோடு உன்னுடைய உரை தகுதிசேர் உரையென நடையிடு எனத் தம்பிக்கு உணர்த்துகிறார் பாவலரேறு.

145. தொய்வில்லாமல், துவளாமல் துணிவோடும் ஊக்கத்தோடும் கடமையாற்றினால் அதுவே நிலைக்கும் என்கிறார் பாவலரேறு.

146. உழைத்திட உடன்வராமல் உழைப்பின் ஈட்டத்தில் பங்கு கொள்ளக் கூசாமல் வருவோரை எண்ணி வருந்தாதே - தம்பி ஒவ்வாதவரை ஒதுக்கிச் செய்; ஊக்கத்தைக் கைவிடாதே - என ஊக்கப்படுத்துகிறார் பாவலரேறு.

147. திரைப்படக் கவர்ச்சியால் குழந்தைகளும், இளைஞர்களும், பாவையரும் நெறிதவறுகிற நிலைக்கு வருந்தி நெருக்கி அவற்றை வீழ்த்திடாவிடில் வீழ்ந்திடும் பண்புகள் பெருமைகள் கொண்ட நம் நாடு - எனக் கவலுறுகிறார் பாவலரேறு.

148. கவர்ச்சிக்கு மயங்காமலும், தோல்விக்கும், தூற்றலுக்கும் துவண்டிடாமலும் மனத்தில் திண்மை யோடும் நேர்மையோடும் செயல்படின் வெற்றி எதிர்வருமே! என்று அறிவுறுத்துகிறார் பாவலரேறு.

149. இருளிலும் விழித்திடு! கொள்கை நிலைத்திடு! - என இளைஞர்கள் மனங்கொள வேண்டிய அறவுரைகள்.

150. நோக்கம் இலாத வாழ்வு எவ்வகையில் வீணாகும் என்று விளக்குவதோடு, பொதுநல உணர்வே நோக்கம். அதுவே புதுப்புது விளைவுகளுக்கும் ஊக்கம் என்றுணர்த்துகிறார் பாவலரேறு.

151. மொழியைப் பேணவும், இழிவைப் போக்கவும், பொதுமை மலர்த்தவும், எண்ணிப்பார்க்க வேண்டும் எனத் தம்பியை எண்ணத் தூண்டுகிறார் பாவலரேறு.

## -இயக்கம்-

152. உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க நிகழ்ச்சிக்கு (1981) முன்பான தென்மொழியில் வெளிவந்த பாடல் இது. உலகத் தமிழினம் ஒன்றெனத் திரண்டு, உரமிகு கொள்கை அமைத்து எழுந்துள்ளதாக உ.த.மு.க. இயக்கத்தைச் சுட்டி மகிழ்கிறார் பாவலரேறு.

153 வலிமையானதோர் இயக்கம் செய்வதற்காகத் தமிழர்களை, அறிஞர்களை, தோழர்களை, இளைஞர்களை, தாய்க்குலத்தோரை, கலைஞர்களை, நண்பர்களை அழைக்கிறார் பாவலரேறு.

154. மொழி, இன, நாட்டினை மீட்காமல் பேசுபவர்கள் பேசட்டும், தூங்குபவர் தூங்கட்டும், நமை ஏசியவர் எல்லாரும் ஏசிக்கொண்டிருக்கட்டும் - நாம் அவரை யெல்லாம் நினைத்தல் வேண்டாம். நடுங்காத நாவினராய் மொழி, இன நாட்டை காக்க இணைபவர்கள் இணைவோம் என்று இயக்கம் நோக்கி அழைக்கிறார் பாவலரேறு.

155. பாவலரேறு அவர்கள் முதல்வராய் இருந்து தொடங்கிய உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் ஏழு கொள்கைகளான -

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்,
2) சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்
3) இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்,
4) தமிழ்த்தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்,
5) மனம், அறிவு, வாழ்க்கை - இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி,
6) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.
7) பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.

இவற்றை விளக்கி அதைச் செயற்படுத்துவதில் உலகத் தமிழினம் ஒன்றுபட்டுக் கழக முன்னேற்றம் காண்குறுவோம் என்றழைக்கிறார் பாவலரேறு.

156. தமிழ் காக்கவும், தமிழினம் மீட்கவும், செந்தமிழ் நாட்டினைச் சீருறப் பேணவும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தில் வந்து பொருந்துக - என்று அனைவரையும் அழைக்கிறது இப்பாடல்.

157. தனித்தனி இயங்கங்களாய் நின்று முடங்கிப் போனோம் - பழஞ்சிறப்பு நம் உழைப்பு - வீரம் அனைத்தும் பொய்யெனில் ஓரமாய் நில்லுங்கள் - நாளை உலகப் பேரியக்கம் உருவாதல் காண்பீர் என எடுத்துரைக்கிறார் பாவலரேறு.

158. உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டின் இறுதியில் தென்மொழி அன்பர்கள் ஒருங்கிணைந்து பாடியபாடல். உ.த.மு.க. நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றின் இறுதியிலும் இதனைப் பாடுவதை அன்பர்கள் வழக்கமாகக் கொள்ள வேண்டுமென்கிறார் பாவலரேறு.

159. உ.த.மு.க. தொடக்க மாநாட்டு மலராக வெளிவந்த 'தென்மொழி'யில் வந்த பாடலிது. பாவலரேறு ஐயா அவர்கள் உ.த.மு.க. கொள்கையை அடியொற்றி இக் குமுகம் எவ்வாறெல்லாம் மாற வேண்டும் எனத் தாம் எண்ணினார்களோ அவ்வாறு மாறுவதே தமக்குத் திருநாள் என்றும், அதுவன்றிப் பிறயாவும் மனம்நோகும் வெறுநாள் என்றும் குறிப்பிடுகின்றார்.

160. உ.த.மு.க. வின் ஏழு கொள்கைகளும் மலர்க இத் தமிழ் ஞாலத்தே என்று அறிவிக்கிறார் - பாவலரேறு.

161. ஓரணி சேர்ந்து நமை அழித்தவை தூர்ப்போம் - என அனைவரையும் அழைக்கும் உ.த.மு.க.வின் கொடி ஏற்றுவோம் வினையாற்றுவோம் அடிமைநிலை மாற்றுவோம் என்கிறார் பாவலரேறு.

162. கிளை பல நூறாகி ஓங்கிப் பெருக வேண்டும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் - என்றுரைக்கிறார் ஆசிரியர்.

163. உ.த.மு.க. உண்மைக் கழகம். இதில் உறுப்பினராய்ச் சேருங்கள் என்று அதன் கொள்கை நிலைகள் - நோக்கங்கள் எவையென்றும் விளக்குகிறார் பாவலரேறு.

இப்பாடல் உ.த.மு.க.வின் இதழான 'தமிழ் நிலம்' - முதல் இதழில் (7.11.1982) வெளிவந்தது.

164. ஏழு கொள்கைகளும் இவை எனக் கொண்ட உ.த.மு.க. நிலைக்க வேண்டுமாய் அறிவிக்கிறார் பாவலரேறு.

165. பொதுத்தொண்டு செய்ய வருவார் எத்தகைய நிலையினராய் இருத்தல் வேண்டும் என்று விளக்குகிறார் பாவலரேறு.

166. அறிவின்பன் - எனும் 'விவேகானந்தர்' குறிப்பிட்ட செய்தியைச் சுட்டுகிறது 'தமிழ்ச்சிட்டில்' வெளியான இப்பாடல்.தொண்டு செய்ய வருவோர் பிற பொதுவினரால் தொடக்கத்தில் ஏளனப்படுத்தப் பெறுவர், பின்னர் இழிவுபடுத்தப்பெறுவர், அதன் பின்னர் எதிர்க்கப்பெறுவர் இறுதியில் ஏற்றுக் கொள்ளப்பெறுவர் - என்கிற வகையினை விளக்குகிறார் பாவலரேறு.

# கனிச்சாறு நான்காம் தொகுதி

(இளைய தலைமுறை, பொதுமை, இயக்கம்)

## பாடல் முதல்குறிப்பு அகரவரிசை


| பாடல் முதற் குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| அடக்கமாயிரு; முடங்கி | 60 |
| அடிக்கின்ற கொள்ளையரை | 92 |
| அதுதான் எனக்குத் | 159 |
| அரசியல் தெரிந்துகொள் | 26 |
| அருமைச் சிறுவர்காள் | 36 |
| அலுவலகப் பணிகளுக்கே | 73 |
| அழகாய் உடுப்பதை | 51 |
| அறிவின் பெருக்கால் | 57 |
| அறிவின்பன் எனும் | 166 |
| அறிவும் ஆற்றலும் | 76 |
| அறிவுறு நலன்களும் | 139 |
| அறுவடை செய்கிறார்கள்! | 91 |
| அன்னை இயற்கை | 125 |
| அன்பர்கள் இருவர் | 46 |
| அன்றைய வாழ்வில் | 100 |
| அன்னைத் தமிழ்மொழி | 155 |
| ஆங்கே ஓர் அழுகல் | 65 |
| ஆரவார அரசியல் | 138 |
| ஆராரோ ஆராரிரோ, | 87 |
| ஆர்ப்பாட்ட உலகமடா | 102 |
| இந்த உலகம் | 63 |
| இருப்பதில் குறைசொல்ல | 143 |
| இலக்கியஞ் செய்க! | 93 |
| இவனைப் பெற்றுக் காத்ததற்கு | 4 |
| இன்றை உலகம் | 121 |
| இன்பத்தை யே, நாடி | 30 |
| உடல்நலத்தைக் காவாதான், | 69 |
| உடுக்கும் உலவும் உறுங்களைப் | 10 |
| உடைஉடுப் பதுவும் | 74 |
| உண்மை உணர்வது கல்வி | 78 |
| உண்ணும் போதிலே | 79 |
| உண்ணும் வகையிலும் | 41 |
| உண்பதும் உடுப்பதும் | 64 |

| பாடல் முதற் குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| உண்மையர் நேர்மையர் | 156 |
| உண்மையுஞ் சொல்வார்; | 43 |
| உயர்ந்தபணி தொடங்கிடுவோம்! | 157 |
| உயர்வும் தாழ்வும் | 59 |
| உரிமைகள் எழுந்தன! | 152 |
| உலகம் எப்படி இருந்தாலும் | 80 |
| உலகத் தமிழின முன்னேற்றம் என | 161 |
| உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் | 162 |
| உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் உண்மை | 163 |
| உலகம் வாழ் தொழிலாளர் | 120 |
| உலகும் பொறுக்குமோ! | 107 |
| உழுபவரும் உழைப்பவரும் | 75 |
| உழைப்பதிகம் காண்கின்ற | 118 |
| உழைப்பே அறிவு! | 58 |
| உள்ளத்திலே உண்மைஒளி | 55 |
| உள்ளம் விழுந்ததா? | 20 |
| உனக்கும்,உன் | 52 |
| உன்றன் குடும்பம், | 115 |
| உன்னைச் சுற்றிலும் | 35 |
| ஊருக்காகவோ, உலகுக்காகவோ | 37 |
| ஊரைத் திருத்துமுன் | 108 |
| ஊர்மக்கள் நலன்கருதி | 128 |
| எங்குமே எதிலுமே | 144 |
| எண்ணங்கள் வலியன! | 68 |
| எண்ணருங் கோடிப் புதுமைகள் | 116 |
| எண்ணறக் கற்பார் | 7 |
| எண்ணிப் பார்க்க | 151 |
| எதிர் பார்க் காதே! | 149 |
| எதிர்ப்பா ளர்கள் | 54 |
| எத்தனைப் பெரிய உலகம் | 28 |
| எல்லா நலன்களும் | 48 |
| என்ன எழுதினும் | 97 |
| என்றன் பாட்டு | 39 |
| என்றும் நினைத்திரு; | 113 |
| ஏடெடுக் கின்றாய்; | 114 |
| ஏன் தம்பி நீ | 6 |
| ஏறெடுத்த தோளும் | 12 |

| பாடல் முதற் குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| ஒருதாய் நிலம்! | 101 |
| ஒருதுணை யின்றி, | 117 |
| ஒவ்வொரு நொடியும் | 127 |
| ஒற்றுமை என்பதோ | 134 |
| ஒன்றிணைக! ஒன்றிணைக! | 158 |
| 'ஒன்றே குலம்' – என | 94 |
| ஓங்கட்டும் கைகள்; | 119 |
| ஓங்கிக் கட்டிய உயர்ந்த | 111 |
| ஓங்கிய செல்வரின் | 123 |
| ஓடம் விடுகிறாய்! | 96 |
| ஓடுநடை, பரபரப்பு, | 141 |
| ஓ! மாணவச் செல்வரே! | 13 |
| ஓய்வு வேளையில் | 61 |
| கசப்பும் இனிப்பும் | 44 |
| கடலில் மிதந்தோம்; | 49 |
| கடுகென முளைத்துக் | 81 |
| கடைகள் பலவிருக்கும்; | 71 |
| கணியன் ஒருவன் | 45 |
| கண்ணை விழித்தேன்; | 72 |
| கல்லாலும் செம்பாலும் | 89 |
| கல்விக் கழகத்துக் கணக்காயர்க் | 33 |
| கவர்ச்சிக் கலைகளில் | 147 |
| கன்னங் கரிய முடி! | 38 |
| காடும் கறம்பும் | 42 |
| காட்டுப் புலியடி | 3 |
| காற்றுலவாக் குடியிருப்பால் | 1 |
| குறை சொல்ல ஆயிரம் | 146 |
| கேட்டுக்கொள், தம்பி! | 66 |
| சாதியை விட்டொழி; | 133 |
| சாலையின் ஓரத்திலே | 82 |
| சிந்தித்துப் பார்ப்பீர்களே! | 137 |
| சுருட்டும் பீடியும் | 2 |
| சுற்றுச் சூழலை வெற்றி | 130 |
| செந்தமிழ் வயலில் | 8 |
| தப்பித் தவறியே | 103 |
| தமிழத்தம்பி நல்லதம்பி | 40 |
| தம்பி! இதுகேள்! | 16 |

| பாடல் முதற்குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| தம்பி! உனக்கொரு | 136 |
| தம்பி, உனக்கொன்று சொல்வேன் | 70 |
| தம்பி! நீதான் நாளைய தலைவன் | 17 |
| தம்பி! நீதான் புதிய தமிழன் | 14 |
| தனிநலத்தில் நாட்டமுற்றுத் | 62 |
| தூய்தமிழ் ஓங்குக! | 164 |
| தெருத்தெரு வாக, | 95 |
| தொண்டுசெய்ய முன்வந்த | 165 |
| தொலைவில் இருக்கையில் | 53 |
| நடைமுறை உலகம் | 131 |
| நட்ட நடுத்தெருவில்–தம்பி | 112 |
| நம்பிக் கிடக்குது | 47 |
| நல்லவனோ, இல்லை | 104 |
| நன்னிலை உணர்வுகள் | 67 |
| நிறையக் கேள்; குறையப் பேசி | 32 |
| நின்ற இடத்திலேயே | 29 |
| நீயே,செந்தமிழ்த் தாயே | 11 |
| நீலப் பெரு வானம் | 34 |
| நீ, விரும் பாமல், உன் | 140 |
| நெருக்கம் குறைந்த குடில்கள் | 24 |
| ‘நோக்கம்’எனஒன்(று) | 150 |
| படித்து, அறிவு பெற்றால் என்ன | 21 |
| படித்துத் தேறிப் | 99 |
| படிப்பை நிறுத்துங்கள்! | 31 |
| பரட்டைத் தலையும் | 50 |
| பரிதி நடந்துசெலும் | 86 |
| பள்ளென்போம்; பறையென்போம் | 88 |
| பாட்டெழுதத் தெரிந்தால்,போ | 77 |
| பாட்டெழுது! தமிழ்ப் | 27 |
| பித்தனென் பார் சிலர்; | 105 |
| பிள்ளை பிறந்தது; | 85 |
| பிறப்பினால் மக்களை | 135 |
| புகழ்ச்சியின்மயக்கறு | 56 |
| புதிய புதிய அரசுகள் | 110 |
| பூத்த தாமரைப் புதுமுகம் | 25 |
| பெண்ணாய்ப் பிறந்தால், | 129 |
| பேசியவர் எல்லாரும் | 154 |

| பாடல் முதற்குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| பொங்குது பொங்குது நாடு | 9 |
| பொய்யர்கள் புளுகர்கள் | 122 |
| பொய்யான செயல்கள், | 145 |
| பொருளியலால் முன்னேறப் | 132 |
| பொறியிலார் புல்லுரைக் | 90 |
| பொன்னன் எனும்சிறு | 22 |
| போலிகள் வாழ்கின்ற காலமிது | 23 |
| மதம் ஒரு புறம்உனைப் | 142 |
| மயக்கு கின்ற | 148 |
| மலர்க்கூடை தூக்கிப் | 98 |
| மாடெனக் கொழுத்து | 84 |
| மாணவப் பருவம் | 15 |
| மின்னலாய் மின்னு! | 124 |
| மின்னிய தமிழும், சாதி | 160 |
| மெச்சுந் தமிழ்க்குலமே | 5 |
| "யார்தான் எப்படிப் | 106 |
| வண்ண ஓவியம் மின்னும் | 19 |
| வான முழுதும் அளக்கச் | 109 |
| வாருங்கள் தமிழர்களே! | 153 |
| வானமென்னும் கூரையின்கீழ் | 18 |
| வானவெளிப் பரப்பினிலே | 126 |
| விண்ணை அளந்திடும் | 83 |

இளைய
தலைமுறை

## 1 கடவுள் நம்பிக்கை!

காற்றுலவாக் குடியிருப்பால் கண்கள் காணாக்
குற்றுயிரின் பெருவிளைவால் குருதி பீய்ச்சும்
ஊற்றியங்கா வகையாலோ வந்த நோய்க்கே,
ஒட்டாத கடவுள்மேல் கோள்கள் தம்மேல்,
ஏற்றுகின்றார் காரணத்தை அறியாதார்கள்;
ஈதொன்றும் வியப்பில்லை! மருந்து நூற்கள்,
தேற்றமுடன் கற்றார்அறி வியலைக் கற்றார்,
தெய்வத்தைக் காட்டுகின்றார் வெட்கம்! வெட்கம்!!

அருந்துகின்ற உணவுகளின் வகையால், தீமை
ஆக்குகின்ற குடிவகையால், ஒழுங்கின் மையால்,
வருந்துகின்ற நோக்காட்டைப் போக்கு தற்கு
வகைவகையாய்த் தெய்வங்கள், வணங்கு கின்றார்
தெரிந்துணரா மக்கள்; இதில் வியப்பொன் றில்லை!
தேர்ந்தநூல் பலகற்றும், உயிர்நூல் கற்றும்,
மருந்தறிந்த பெரியோரும் படையல் பூசை
மனமாரச் செய்கின்றார் வெட்கம்! வெட்கம்!!

கருக்கொள்ளா மகளிர்க்குக் குற்றஞ் சாற்றிக்
கல்நின்ற பிள்ளையார் அரசு சுற்றி,
எருக்கிலையால், எட்டியினால் தீத்தெய் வங்கள்
ஏற்றத்தை உடுக்கைதட்டி இறங்கச் செய்து,
தெருக்கடையில் ஓட்டிவிடும் மடமைப் போக்கைத்
தெரியாதார் செய்கின்றார் வியப்பொன்றில்லை!
பெருக்குநூல் பலகற்றும் உடல்நூல், பால்நூல்
படித்துணர்ந்தும் செய்கின்றார் வெட்கம்! வெட்கம்!!

பெயரளவை, கோட்பொருத்தம், நாட்பொருத்தம்,
பெண்ணுக்கும் ஆணுக்கும் பார்த்துத் தீர்த்து
மயிரளவும் குறைகாணா வகையிற் செய்த
மணம் நடந்தே ஓராண்டில் கணவன் மாய்ந்தால்,
உயிரளவும் பெண்சுமக்கும் பேச்சும் ஏச்சும்
ஒன்றிரண்டா நாள்வைத்த குருவுக் கென்ன?
மயர்வின்றிக் கற்றுணர்ந்த பெரியோர் செய்தால்,
மடமையெல்லாம் அறிவாமோ? தீமை நன்றோ?

-1951

## 2 சுருட்டும் பீடியும் !

சுருட்டும் பீடியும் இளமையைச் சுருட்டும் அன்பு
சூடிய மனைவி நெருங்கையில் மருட்டும்
(சுருட்டும்)

இருட்டு வேளையில் இதழால் அவ் விதழில்
இனித்திட இனித்திடத் தேனுண்ணப் போகும்
குருட்டு மாந்தர்க்கு யானொன்று சொல்வேன்
குடலோடு வாய்நாறும்! நற்காதல் சாகும்!
(சுருட்டும்)

திருட்டுத் தனமாகக் குடிகெட்டுப் போகும்
தென்னம் பிள்ளைக்குப் புகையாதா மீசை!
வறட்டு நெஞ்சோடு வாய்நாறும் கணவன்
வரும்போதே பெண்ணுக்குக் குறையாதா ஆசை!
(சுருட்டும்)

செந்தமிழ் பேசிடும் நாவும் மரக்கச்
செக்கச் சிவந்த செவ்விதழ் கருக,
தந்தம்போல் இருந்தபல் உறுதியும் தளரத்,
தளிர்மேனி சுருங்கிட உயிரை உலர்த்தும்
(சுருட்டும்)

பழத்தின் கதுப்பைப் போல்ஒளி செய்து
பருமை ஒட்டி உலராதா கன்னம்!
கிழத்தின் சாயல் வந்துன்னை அணைக்கக்
கிளிவாயைக் கோணிப் போகாதா அன்னம்!
(சுருட்டும்)

-1954

## 3 பெற்றவள் உவகை !

### எடுப்பு

காட்டுப் புலியடி என்மகன் - தமிழ்
நாட்டுக்குப் பழியொன்று வாய்ந்திடிற் பாய்ந்தெழும்
(காட்டுப்)

### தொடுப்பு

கூட்டுக்குள் இருப்பது போலென் சொல் - கட்டுப்
பாட்டுக்குள் இருப்பினும் பைந்தமிழ் நைந்திடில்
(காட்டுப்)

### முடிப்பு

வீட்டுக்குள் என்னிடம் அஞ்சினும் - இரா
வேளையில் அவளிடம் கொஞ்சினும், - பண்புக்
கோட்டுக்குள் நின்றவன் வாழினும் - தமிழ்க்
கேட்டினுக் கவன்பொறான் யார்வந்து சூழினும்
(காட்டுப்)

ஏட்டுப் படிப்பினில் மன்னவன் - தமிழ்க்
கேகும் படையினில் முன்னவன் - தனை
மாட்டுஞ் சிறைக்கவன் பின்னிடான் - அவன்
மனைவியைக் குழந்தையை என்னையும் எண்ணிடான்
(காட்டுப்)

வாட்டும் வறுமையைப் பார்த்திடான் - பிறன்
வன்சொலைக் கேட்டவன் வேர்த்திடான் - உடற்
கூட்டுக்குள் உயிருள்ள வரையினில் - தமிழ்க்
காதலில் எந்நாளுங் கங்கு கரையிலன்
(காட்டுப்)

-1954

## 4 கோழையின் தாய் !

(நகை)

(உரைப்பா நடை)

இவனைப் பெற்றுக் காத்ததற்கு ஏதோவொரு
குவளையைப் பெற்றிருந் தாலும் குடிக்க உதவும்!

பிள்ளையென்றிவனைப் பெற்றேன்! பெரிதும் மகிழ்ந்தேன்.
நொள்ளையோ நொண்டியோ என்றிலா துவந்தேன்.

அட,அட இப்படி ஆவான் என்றிருந்தால்,
குடர் சரிந்து வயிறுவீங்கிக் குந்தி யிருந்தானே...

அப்போதே விட்டிருப்பேன், அழுதகண் ணீரோடும்
முப்போதும் மூக்கைச் சிந்திப் போட்ட கையோடும்.

வாய்த்தது இப்படியா வாய்க்க வேண்டும்!
காய்த்தது என்றிருக்கக் கசப்பையா காத்தேன்?

இவன்மேல் குற்றம் எதுவும் இல்லை.
அவனை வளர்த்த அப்பனே பொறுப்பு!

எலிவந்தால் என்னைவந் தெழுப்பிப் பூனைக்குக்
'கிலி'பிடித்து, நாய்க்குக் காதம் ஓடி,
மாடு கொம்பசைத்தால் மரமேறி விழுகும்
கூடு, வெறுங்கூடு, எனக்குவந்த கோமகன்!

இவனைச் சொல்லி என்னபயன்? நேற்று;
தவலைக்குள் புகுந்த எலியைப் பூனைவிரட்டத்
திருடன் திருடன் என்று தகப்பன் கூச்சலிடக்
குருடன் போல, விளக்கிலாக் கும்மிருட்டில்
மூலையில் பதுங்கிய முக்காட்டை நீக்கி
ஆளைப் பார்க்கையில் அழகே உருவாகி,
எனக்குப் பிறந்த எருக்கம் பிள்ளை
"எனக்கென்ன அம்மா" என்றான்! சீ! சீ! சீ!
என்போல் இவனுக்கெவள் வாய்ப்பட்டுக் கோழையின்
துன்பக் குடியைத் தோற்றுவிப் பாளோ!

-1955

## 5 ஏன் பிறந்தாய் ?

மெச்சுந் தமிழ்க்குலமே மேலென்று கண்டோ, என்
அச்சு மலரே! அடிவயிற்றில் நீ மலர்ந்தாய்!

பச்சைத் தமிழே! பழங்கதையைக் கேட்டோ, என்
அச்சுப் படிவமே இங்கே அடியெடுத்தாய்!

இன்றைக் கிருக்கும் இழிநிலையை எண்ணாமல்
அன்றைக் கதைகேட்டோ ஆணழகே நீ பிறந்தாய்!

தில்லி யமைச்சன், திருத்தமிழன் வாயெடுத்துச்
சொல்லி முடிக்குமுன் சொல்லாதே என்பதையும்,

வேல்தூக்கிப் புண்பட்ட வேந்தர் வழிவந்தோர்
கால்தூக்கி வாழ்வதையும், காற்காசுக் கென்றாலும்

சென்னை அமைச்சன் சிறகுகட்டிப் போயங்கே
தென்னை மரமாக நிற்கும் திருக்கூத்தும்,

கேட்டால் விரும்புவையோ? கீழ்மைத் தமிழகத்தை!
பாட்டன் கதையைப் படித்துவிட்டோ நீ பிறந்தாய்!

செந்தமிழை மாற்றார் சிதைப்பதையும் வல்வடவர்
இந்திவந்தே நம்மொழியை ஏறி மிதிப்பதையும்,

நம்மவனே நம்மை நலமிழக்கச் செய்வதையும்,
இம்மென் றவன்சொன்னால் எந்தமிழன் ஓடுவதும்,

என்னவென்று சொல்வேன்?
இவற்றையெல்லாம் எண்ணாமல்
இன்னதமிழ் நாட்டில்வந் தேன்பிறந்தாய் செந்தமிழே!

கட்டிக் குடியிருக்கக் காணா வருவாயும்,
ஒட்டுக் குடியில் ஒருகோடிப் பேர்வாழும்

பாழ்த்த நிலையும், பசியடங்கா வெற்றுணவும்,
ஆழ்த்தும் வறுமையும் அல்லால் தமிழ்நாட்டில்

பேச்சென்ன உண்டு? பிறவாமல் நீயிருந்தால்
மூச்சிறுக்கிச் சாவேனே! முன்வந்தோர் போலின்றிச்

சாதிச் செருக்கும் சமயப் பழியுரையும்
மோதிப் புரள்கின்ற மக்களிடை யேன்பிறந்தாய்?

நாடு சிதைந்ததடா! நம்பெருமை தாழ்ந்ததடா!
"பூடற்றுப் போனார் பழந்தமிழர்!" என்னுஞ்சொல்

கேட்கத்தான் வந்தாயோ? கீழ்மைத் திறமகற்றி
மீட்கத்தான் வந்தாயோ? மீனவனே ஏன்பிறந்தாய்?

-1956

## 6 வேண்டாத இந்தி !

ஏன் தம்பி நீ அழுகின்றாய் - நின்று
ஏன் தம்பி நீ அழுகின்றாய்?

வான்விழும் நீர்போல வழிகின்ற கண்ணீரை
வளருமுன் பூங்கையால் துடைத்துத் துடைத்தபடி (ஏன்)

"தேன்தமிழ் மணக்கின்ற வாயில் - நாத்
திரும்பாத 'இந்தி'எனும் நச்சுப் பாம்பைக்
கூன்கொள்கை யாளர் விட்டாரே" - என்று
குறைகூறிக் குறைகூறி ஓலமிட் டலைபோல (ஏன்)

பொங்கிவரும் ஆற்று நீரைக் - கரை
போட்டுத் தடுத்து நிறுத்துதல் போல,
தங்கிவரும் இந்தித் தீமேல் - மண்ணைத்
தூவி யழிக்காமல் தேம்பித் தேம்பி இன்னும் (ஏன்)

சோற்றினில் நச்சைக் கலப்பார் - மொழி
சோர்ந்திடப் பிறிதொரு மொழியினைச் சேர்ப்பார்,
காற்றினில் நச்சைக் கலப்பார் - யாவும்
கயவர்கள் செயல்களாம்; நீயிதை மாய்க்காமல் (ஏன்)

நெஞ்சினை இரும்பாக ஆக்கு; - கூர்
நெடுவேலை உன்பெருந் தோளினில் தூக்கு!
வெஞ்சினம் கொண்டுநீ தாக்கு! - அந்த
வேண்டாத இந்திக்குக் காட்டு வடநோக்கு! (ஏன்)

**-1957**

## 7 கல்வி யொழுங்கு !

எண்ணறக் கற்பார்; எழுத்தறப் படிப்பார்;
இழிசெயல் பற்பல செய்வார்!
விண்ணியல் அறிவார்; விரிகலை உணர்வார்;
வீணுரை பற்பல உரைப்பார்!
மண்ணியல் ஆய்வார்; மருத்துவம் தெளிவார்;
மக்களுக் கிடர்பல இழைப்பார்!
உண்ணுவர்; உடுப்பார்! உறங்குவர் இவரால்
ஒருபயன் இலையெனக் காண்பீர்!

கற்பவை கற்றல், கல்வியென் றறிக!
கற்பவை வழிப்பட முயல்க!
அற்பநூ லுரைகள் ஆயிரங் கற்றும்
ஆவதொன் றிலையென உணர்க!
பொற்பெனப் படுவது பிழைபடா வொழுங்கு!
புகழ்தரு வதும்அது வென்க!
நிற்பவை எல்லாம் நிலையில! புகழே
நிலைபெறும் ஒன்றெனத் தெளிக!

ஒழுங்கிலான் கல்வி, உப்பிலாப் பண்டம்!
ஒப்பிலா தாயினுங் குப்பை!
ஒழுங்கிலான் நல்லுடல் உயிரிலாப் பிண்டம்!
உறுபயன் தருவது மில்லை!
ஒழுங்கிலான் கல்வி, உரமிலாக் கழனி!
ஊர்பெறும் விளைவுகள் தோன்றா!
ஒழுங்கிலான் சொற்கள், ஒழுகுகள் வாயான்
உளறலைப் போற்பயன் உணர்த்தா!

நெஞ்சினில் நேர்மை; நிகழ்ச்சியில் நேர்மை;
நெடிதுயிர் வாழ்க்கையில் நேர்மை!
அஞ்சுவ தஞ்சல், அடங்குவ தடங்கல்
அடுத்தவர் கெடுதலைத் தடுத்தல்,
நஞ்செனத் தீமையை நடுங்குதல் எனவாம்
நல்வழி ஒழுங்கென அறிக!
விஞ்சிடும் புகழால் வாழ்பவ ரெல்லாம்
வேண்டாத் தீமைகொன் றோரே!

விற்பன வெல்லாம் நூல்களென் றாகா;
விளைவினில் பதரில தாமோ?
கற்பன வெல்லாம் கல்வியென் றாகா;
காண்பவை புரையில தாமோ?
நிற்பன வெல்லாம் புகழென் றாகா;
நிறத்தால் எட்டி, இன் கனியோ?
பற்பல புதுமை பாரிலுண் டெனினும்
பண்புடைக் கல்வியே புகழாம்!

1960

## 8 இளைஞர் எழுச்சி !

செந்தமிழ் வயலில், செந்தமிழ்ப் பயிரில்
சேரும் களைகள் எல்லாம்,
இந்தியென் றொன்றாம்; வடமொழி ஒன்றாம்!
இவைநம் நெஞ்சின் முள்ளாம்!

தமிழர் வாழ்வைத், தமிழர் வனப்பைத்
தாவிக் கடித்திடும் நாயாம்!
தமிழர் நாட்டில் அவற்றின் வளர்ச்சி
தணிப்பறி யாப்பெருந் தீயாம்!

இவற்றை எண்ணுக; ஏற்றவை செய்க!
எந்தமிழ் இளைஞரின் உள்ளம்!
கவின்செயப் புகுந்தால் நம்மவர் படைகள்
கரையுடைப் பெடுத்த வெள்ளம்!

தனித்தமிழ் ஆக்கம், தமிழ்நெஞ் சூக்கம்
தமிழர்க் கிக்கால் வேண்டும்
முனித்தெழ மக்களை, இளைஞர் எல்லாம்
தூண்டுக தூண்டுக யாண்டும்!

புதுமை எழுதுக; புதுமை பேசுக;
புன்மைச் செயல்களைப் போக்க!
கதைகள் நிறுத்துக; கனன்றுளம் பொங்குக!
கனித்தமிழ் மொழியினைக் காக்க.

-1960

## 9 தமிழர் படை !

பொங்குது பொங்குது நாடு!
பொங்கி வருந்தமிழ்க் கூட்டத்தின் முன்யாரும்
பிடுங்கி எறிந்திடும் பூடு!

தங்குது தங்குது நேர்மை!
தாங்கி வருந்தமிழ்க் கூட்டத்தின் முன்யாரும்
தணலில் எரிந்திட்ட நீர்மை!

சாடுது சாடுது கூட்டம்!
சாடும் மறத்தமிழ்க் கூட்டத்தின் முன்யாரும்
சடுதி யெடுப்பாரே ஓட்டம்!

ஓடுது ஓடுது தாழ்மை!
ஓடிய பின்தமிழ் நாட்டினில் எங்கணும்
ஒழியுதே ஒழியுதே ஏழ்மை!

வேகுது வேகுது நெஞ்சம்!
வேகும் பண்டைத்தமிழ்க் கூட்டத்தின் முன்யாரும்
வேண்டுவர் வேண்டுவர் தஞ்சம்!

ஏகுதே ஏகுதே பகை!
ஏகிய கொல்படைக் கூட்டத்தின் பின்னிங்கு
யாவர்க்கும் தோன்றுது நகை!

போகுது போகுது வீழ்வு!
போயின பின்னரிச் செந்தமிழ் நாட்டிடைப்
பூக்குது பூக்குது வாழ்வு!

-1960

## 10 போலியர் வாழ்வு !

உடுக்கும் உலவும் உறுங்களைப் பேக உணவு பல
மடுக்கும் முடங்கும் மயலுற வேபல மங்கையர்பால்
படுக்கும் அழிக்கும் பயனொன் றறியாப் பல்பிறவி
எடுக்கும் புழுக்களை என்பெயர் இட்டிங் கிழிப்பதுவே? 1

தத்தும் மகவாய் அறிவினில் தாழ்ந்துந் தருக்குவதும்
பித்தும் இடக்கும் பிழைமலிந் தேசொல் பிதற்றுவதும்
செத்தும் பிழைத்தும் நொடிநொடித்
தாழ்ந்தே சிறுசெயலால்
எத்தும் புரட்டரை என்பெயர் இட்டிங் கிழிப்பதுவே? 2

வாய்க்கும் குடற்கும் வழிதுறை யின்றி வலிந்தருத்தித்
தாய்க்கும் மனைக்கும் தகுபிரி வெண்ணா தணைந்துபல
நோய்க்குன் றெனத்தாம் நுடங்கிடும்
போதும் நொடிந்தவரை
ஏய்க்குங் கொடியரை என்பெயர் இட்டிங் கிழிப்பதுவே? 3

-1961

## 11 தமிழ்க்கு மூவுடைமை !

எடுப்பு

நீயே,செந்தமிழ்த் தாயே!,நான்
நினையறிந் தவன்; ஒரு சேயே! - முன்
நிலைகெட மிகவும்நொந் தாயே; - என்
நெஞ்சினில் எழுந்தது; எழுந்தது தீயே! (நீயே)

தொடுப்பு

ஓயேன்; இனியுன்றன் உழைப்பினில் சாயேன்!
உடல் பொருள் ஆவியும் ஈவேன்! ஈவேன்! (நீயே)

முடிப்பு

காயே விழைவார்; கனிச்சுவை அறியார்!
கண்விழிப்பார்; உளம் விழியார்; - தமிழ்த்
தாயே! நின்னறம் நின்பொருள் பேணார்!
தம்செயல் அறிவுக்கு நாணார்! நாணார்! (நீயே)

அயல்மொழி பயில்வார், அதனடி துயில்வார்!
அரும்பொருள் அயில்வார்; நினையார்; - மதி
மயலுறப் பிறன்கைச் சிறுபொருள் ஆனார்!
மற்றிவர் செயலுக்குக் கூனார்! கூனார்! (நீயே)

பால்கறந் தேபிற கன்றினுக் கூட்டியே,
வால்கறப் பார்கழி மூடர்!, - அது
போல்சிறந் தாயுனைப் பிறர்கொளத் தந்தார்!
புன்மொழி அறிந்துளம் நொந்தார்! நொந்தார்! (நீயே)

-1962

## 12 நொச்சிப் போர் !

ஏறெடுத்த தோளும் இளமைக் கனல்மூள
வீறெடுத்த நெஞ்சும், விளைவெடுத்த நற்றுடிப்பும்
பொங்குகடல் போலப் புடைத்தெழூஉம் ஒற்றுமையும்,
கங்குகரை யற்ற கனவு நினைவுகளும்,
வாய்த்த தொருபருவம் கல்வி வளர்பருவம்!
காய்த்துக் கனிகின்ற கற்பனைகள் வாழ்பருவம்!
சீறிவரும் பாம்பைச் சிதைக்கின்ற வல்பருவம்!
ஏறிவரும் வெள்ளத்தில் எம்பிப்பாய் நல்பருவம்!
காற்றைக் குடித்துக் கடும்பசியைக் உள்ளடக்கிக்
கூற்றை எதிர்க்கும் குலையாத செம்பருவம்!
குத்திட்ட வேலைக் குடைந்தெறிந்து முன்புண்ணோ
டொத்திட்டுப் பார்க்கும் உரஞ்சான்ற வான்பருவம்!
அப்பருவம் தன்னில் அடியெடுத்து வைத்திருக்கும்
ஒப்பரிய மாணவர்தம் உள்ளத்திற் கொன்றுரைப்பேன்!

"இற்றைத் தமிழர்க் கிருக்கும் முதலெல்லாம்
அற்றைத் தமிழே!" அதுதவிர மற்றவரின்
மானம், தனிப்பெருமை, மங்காத நல்லஉரம்,
வானைச் சிறிதாக்கும் வள்ளன்மை, வாய்மை, அறம்
நஞ்சுண் டமையும் நனிநா கரிகமெனும்
எஞ்சும் நலன்கள் இருந்த சுவடுமிலை!
இத்தமிழர்க் குள்ளே எழுச்சியுள்ள செந்தமிழர்
செத்தழிந்து போகாமல் ஆங்காங்கே சிற்றளவில்
வாழ்கின்ற காரணத்தால் செந்தமிழும் வாழ்ந்திருக்கும்!
வீழ்கின்ற வாழ்க்கை விடிவற் றிருக்கையிலே,
கோடிக் குலம்படைப்பார்; பல்சமயக் கூறமைப்பார்;
ஓடிப் பொருள்திரட்டி உண்டுடுத்தி வாழ்வதுவே
மெத்தச் சிறப்பென்பார்; மேலான வாழ்வென்பார்;
பத்துப் பொருளிருக்கும் பன்னூறு நூலிருந்தும்,
ஒன்றும் உணர்ந்தறியார்; ஒண்பெருமை தாமுணரார்;
குன்றும் பொருளுக்குக் குன்றளவு வீண்முயல்வார்;

ஈதல் அறியார்; இளகு முளமறியார்;
காதல் அறியார்; கருத்தைத் தெளிந்தறியார்;
பேசும் மொழியறியார்; பேராண்மை பெற்றறியார்;
வீசுகின்ற காசுக்குக் காதம் விரைந்துருள்வார்.
உண்ணும் பொருளும் உணர்ந்துண்ணார்; ஓர்நொடியும்

எண்ணும் திறனில்லார்; எண்ணியுரை செய்வார்தம்
மெய்ப்பொருளும் தேரார்! மிடிபட்டுங் கண்டுணரார்;
பொய்ப்பொருளே வாழ்வென்று
போலிக் குடும்பமமைப்பார்!
முற்றாத காயுண்பார்; மூழ்கிக் குளித்தெழூஉம்
வற்றாத ஆற்றின் கரையில்நீர் வார்த்தெழுவார்!
ஆளும் அரசறியார்; ஆள்வார்தம் கால்பிடிப்பார்;
நாளுந் துயர்ப்படுவார்; நாயடிமை செய்திடுவார்;
பெண்மைச் சிறப்புணரார்; ஆண்மைப் பெருமையிலார்;
எண்மைப் பொருளா எடுத்து விளக்கிடினும்,
தன்னுணர்வு மூண்டுவரார்;
தாழ்வெண்ணம் மாற்றுகிலார்;
என்ன அவர்க்குரைப்பேன் ஏதவர்க்கு விண்டிடுவேன்?
என்றிவ்வா றெண்ணி இடர்ப்படுக்கும் வேளையிலே
ஒன்றென் உளம்படுக்கும் வாழ்க்கைக் குரம்விளைக்கும்!

மாணவரை எண்ணியே உள்ளம் மலர்ந்துய்வேன்!
'தூணவரே செந்தமிழ்க்கு' நம்மின் துயர்போக்கும்,
மாமருந்தாம்! நந்தமிழர் வாழ்வின் ஒளிவிளக்காம்!
பூ, மரு, வேர் கட்டிப் புனைந்ததொரு பூக்கதம்பம்!
முத்தமிழில் பாட்டாவார்; மூவரசில் பாண்டியராம்!
புத்துணர்வும் வல்லறிவும் ஒன்றும் புறக்கூத்து!
மாணவரின் கைகளெழின் மாமலையைத் தூளாக்கும்!
மாணவர்தம் உள்ளாற்றல் மாகடலைத் தூருவிக்கும்!
சோற்றுக்குக் கல்வியெனில் தூதூ அதைவிரும்பார்!
மாற்றவர்க்கு வல்லடிமை செய்ய மனமேவார்!
அன்னவரின் ஆற்றல் அழிவழிக்கும் பேராற்றல்!
என்ன வரினும் எதிர்க்கும் தனியாற்றல்
அவ்வாற்றல் யானறிவேன், ஆதலினால் ஈதுரைப்பேன்!
செவ்வி இளமையொடு நல்லறிவு சேர்ந்துவிடில்
எவ்வினையும் எள்முனையாம்; என்பதனால் அன்னவரை
ஒவ்வி மனம்வைக்க வேண்டி உளமுரைப்பேன்;

இவ்வுலகம் கூறும் 'பொதுமை' எனுங்கருத்தோ
செவ்வகையாய் அன்றே தமிழர் செறித்ததுதான்;
அற்றைத் தமிழ்நூல் அறியார் புதிதென்பார்!
இற்றைக் குலகரசே ஏற்றதெனச் சொன்னாலும்
அன்ன நிலையை உலகம் அடைதற்கு
முன்னருயர் தன்மை முளைக்கும் நிலைவேண்டும்!

அந்நிலைக்கோ உள்ளம் அறிவோ டிணைந்துயர்ந்து,
செந்நிலையைப் பற்றிச் செருக்குநிலை தாமழிந்து,
பற்றற்று நின்று பரந்துயரப் பாரின்கண்
உற்ற உயிரெல்லாம் ஒன்றென் றுணர்வுபெறல்
வேண்டும்! அதற்கிந்த நீணிலத்தின் சான்றோர்கள்
தூண்டும் வழியில் துவளா தெழல்வேண்டும்.

அந்த நிலைக்கே அடிநிலையிங் கேதென்றால்
சொந்த நிலத்தடிமை முன்னர் தொலைப்பதுவே!
சொந்தநிலம் என்ப தெதுவென்னில் சொல்பவற்றை
அந்த மொழியில் அறிவார்முன் வாழ்ந்தநிலம்!
இங்ஙன் மொழிவழியே இவ்வுலகம் நின்றிடிலோ
எங்ஙன் 'உலகரசென்' றிங்கியம்பல் சாலுமெனின்,
தம்நலத்தைக் காப்பார் பிறர்நலமும் தாங்காப்பார்!
தம்நலத்தைக் காவார் பிறர்நலத்தைக் காப்பமென்றல்
கண்ணறையன் கண்ணறைக்குக் காட்டுவது போலாகும்!
பெண்ணையோர் பெண்ணுக்குப்
பேசிமணஞ் செய்வதொக்கும்!
தன்னைத்தான் பேணிப்பின் தற்கொண்டார்ப் பேணி, யதன்
பின்னைத்தான் தேயம் அதன்பின்இப் பேருலகம்
என்ற படிமுறையில் அல்லால் இருநொடிக்குள்
மன்ற உலகரசு மன்னிவிடல் சாலாது!
தம்நிலத்தைக் காப்பார் பிறர்நிலமும் காவாரோ?
தம்நிலத்தைக் காப்பதென்னின்
தாய்மொழியைக் காத்திடுக!
நந்தாய் மொழிநலத்தை நாமெடுத்துக் கூறலென்னின்
இந்தவுரை போதா(து); எழுதுந்தாள் காணாதே!
ஒன்றென்று தோன்றி இரண்டாய் உயர்ந்தோங்கி
மன்றிருந்து மூன்றாக மூவர் மடியிருந்து
நாலறமா விண்டுயர்ந்தே ஐந்தாய்த் திணைவிரிந்தே
ஆலகலம் பல்கிப்பா வாறாகி ஏழிசையாய்
எட்டுச் சுவைவிரித்தே, ஒன்பான் தனித்தன்மை[1]
பெற்றுப் பெறுவார்க்குப் [2]பத்துப் பயன்நல்கும்
எந்தமிழைக் காவார் எவரோ அவர் தமிழ்த்தாய்
தந்தையர்க்கே தாம்பிறவார்; ஆக, தவறிழைப்பார்!

1. ஒன்பான் தனித்தன்மை: தாய்மை, தூய்மை, கன்னிமை, முன்மை, நுண்மை, திண்மை, ஒண்மை, அகன்மை, செம்மை,
2. பத்துப் பயன்: அறிவு, அறம், அன்பு, அடக்கம், ஒழுக்கம், நட்பு, செல்வம், மெய்யுணர்வு, இன்பம், புகழ்.

ஆகையினால் மாணவர்காள்! அன்னை மொழிபயில்வீர்!
சாகையிலும் செந்தமிழ்க்குச் சாதல் பெருமைதரும்!

முன்னை வடமொழியால் மூண்ட அழிவுபல!
பின்னைப் பலமொழியும் பிற்காலத் தாங்கிலமும்,
தண்டமிழின் மேன்மை, தனித்தன்மை தாங்குலைக்கக்
கண்டும் அமர்ந்திருந்தோம்; இப்பொழுதும் கல்லானோம்!
ஈண்டோ தமிழ்குலைக்க இந்திமொழி வந்ததுகாண்!
வேண்டாத் தமிழ்படிக்க யாரும் விரும்புகிலார்!
என்னே இழிவிங்(கு)! எதன்பொருட்டோ மெய்யடிமை?
பன்னூறு வல்லாண்டாய்ப் பட்டதுயர் போதாவோ?

மானம் உளதோ? மறமுளதோ? மாற்றார்பால்
கூனற் பிழைப்பும் குடிப்பிறப்போ? ஊறிவரும்
செங்குருதி தோய்ந்ததோ? செந்தமிழர் மாய்ந்தனரோ?
பொங்குணர்வுத் தீயும் பொறிப்பொறியாய்ச் சாம்பினதோ?
‘வந்த படைநோனாள்; வாயின் முலைபறித்து
வெந்திறல் எஃகம் இறைக்கொளீஇ முந்தை
முதல்வர்கள் தான்காட்டி மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றான் போருக்’கென் றேபடித்த
போர்மறவப் பாட்டும் புறப்பாட்டாய்ப் போனதுவோ?
சீர்மறந்து போனீரோ செந்தமிழீர்! இற்றைக்கே
நொச்சிப்பூச் சூடுவீர்! நும்மொழியைக் காத்திடுவீர்!
எச்சிலிலை என்றும் இனிப்பதிலை! எஃகுளத்தீர்!
வீச்சொன்றே வேண்டும்! இலையேல் விழல்வேண்டும்!
மூச்சு பெரிதோ? முழுவுரிமைப் போர்பெரிதோ?

இந்தி நுழைந்தால் எழிற்றமிழும் தான்குலையும்!
பிந்தித் தமிழர் இனங்குலையும்! இஃதுறுதி!
மாணவரீர்! செந்தமிழ்ச்சீர் வாய்ந்த மறக்குலத்தீர்!
வீணவர்நீர் என்னும் விழல்மொழிக்கா ளாகாதீர்!
கன்னித் தமிழ்நிலத்தில் கால்வைப்பார் தம்தலையைத்
துன்னித் துனித்திடுவீர்! தோய்ந்த துயரறுப்பீர்!
குன்றே யனையீர்! குடிகாக்க **நொச்சிப்போர்**
இன்றே புரிக எழுந்து!

**-1964**

## 13 ஓ ! மாணவச் செல்வரே !

ஓ!
மாணவச் செல்வரே! மாணவச் செல்வரே!
ஊணும் உறக்கமும் உயிர்ப்பும் தமிழ்க்கென
நாளும் எண்ணி எண்ணி நலிகையில்
நீளப் படர்ந்தஎன் நினைவுத் திரையினில்
முன்னுறத் தோன்றி, முகிழ்த்தபுன் னகையோடு
தோளும் உணர்வும் தூக்கித் துவளுறா
ஆண்மை தெறிக்க ஆர்க்கும் குரலினால்
"நாளைத் தமிழகம் நம்முடைத் தமிழகம்"
என்றுரை சாற்றிடும் இளைத்திடா உணர்வுசேர்
மாணவச் செல்வரே! மாணவச் செல்வரே!

இருள்நிறைந் திருக்கும் இற்றைத் தமிழகம்
அருள்நிறைந் திலங்கிய அன்றைய நிலம்போல்
ஒளிபெற விளங்கிட விரும்பும் உணர்வினால்
ஆயிரம் கோடிப் பணிகள் ஆற்றிடப்
பாயிரம் எழுதிப் படைத்திடு வோரே!
பொங்கும் உணர்வொடும் பூரித்த அன்பொடும்
உங்களுக் காக ஒன்றிரண் டுரைப்பேன்!

நீட்டிய செவிகளில் நிறுத்துக இவ்வுரை!
பூட்டிய நெஞ்சினிப் புலர்ந்தது காண்!
அயர்வுற்ற தோளினி உயர்வுற்ற தெங்க!
மயர்விலா அறிவும் மனமும் திறக்க!
எங்கணும் நல்லுணர் வேற்றம் பெறுக!
தங்கிய இருளெலாம் தகர்க்கப் படுக!

கற்ற கல்வியும் ஒழுங்கும் கால்கொள
நற்றவப் பயனால் நாட்டாண்மை செய்க!
தோளாண்மை பூண்டு குமுகாயத் தொண்டெனும்
வேளாண்மை செய்திட விரைந்திவண் வருக!
எத்தனை எத்தனை ஏற்றத் தாழ்வுகள்!
எத்தனை எத்தனை இழிசேர் குப்பைகள்!
செத்துக் கொண்டுள தமிழகச் சீர்மைகள்!
புத்துருக் கொண்(டு) அவை புதுக்கிடப் புகுக!
செந்தமிழ்ப் படையினை வடபடை வென்றது!

இந்த நொடியினில் ஏற்றம் பெறாதினி
எந்தக் காலத்து எழுவதோ? ஓர்மின்!
தமிழுக் குற்றது தமக்குற்ற தென்னும்
இமிழாக் கொள்கை எழுந்ததிங் கென்றால்,
அடிமை விலங்குகள் அறுக்கப் படாவா?
விடியாத் தமிழ்நிலம் விடிவுற் றெழாதா?
மடியினும் துயிலினும் மாண்டுகொண் டுள்ள
துடியாத் தமிழர்க்கு உணர்வுதோன் றாதா?

வானுற நின்று தோள்களை உயர்த்தி
வீணாம் நினைவுகள் விட்டு விலகி
உலகினைக் காண்பின்! மாணவர் உலகமே!
பலகலைக் கல்வி, பலதொழில், அறிவியல்,-
கலகல வெனப்பிறர் கற்பன காண்மின்!
தமிழகம் நாட்குநாள் தாழ்கின்ற தில்லையா?
உமிழத் தகும்படி உயர்வற் றோம்! காண்!
எழுதல் இயலுமா? எழுந்(து)அவர் போலும்
விழாமல் நடந்து வெற்றி பெறுவமா?
எண்ணத் தோன்றிட வில்லையா உமக்கே!
எண்ணி எண்ணி இளைப்புற வில்லையா?

இத்தகு நிலையில் என்செய் கின்றோம்!
மெத்தப் பழம்புகழ் மிகைபடப் பேசிக்
கத்தலும் அரற்றலும் கனைத்தலும் அல்லால்
இத்தரை நம்மால் எள்ளள வேனும்
விளைவுற்ற தென்றே விள்ள முடியுமா?
களைகளை அகற்றிடக் கருதி னோமா?

மாணவர் உலகமே! மதிதகு உலகமே!
பூணுக உறுதி! பூணுக எழுச்சி!
ஆட்டமும் கூத்தும் அறவே நீக்குக!
ஓட்டமும் நடையுமா ஓய்வற் றிலங்குக!
ஆரவா ரங்கள் அடிச்சிதைத் திடுக!
தீர நினைக்க! நினைத்துத் தேறுக!
போலித் தனங்களால், பொய்ம்மை நினைவினால்
வாலைப் பருவமும் வரட்சி யுறுவதோ?
உடுக்கையும் உண்கையும் ஊருலா வருகையும்
மிடுக்கையும் புனைவையும் மேனி மினுக்கையும்
கொண்டதே மாணவர் உலகெனக் கொடியவர்

கண்டதே போலும் காண்பதே போலும்
அலர்உரை செய்யும் அந்தப் படிக்கு,யாம்
இலம்இலம் என்றே எழுந்துரை செய்ம்மின்!

செய்திடக் கோடிக் கோடித் தொண்டுகள்!
எய்திடக் கோடிக் கோடி ஏற்றங்கள்!
வானை அளாவி நிற்பன காண்மின்!
மானங் கருதிடும் வினைகளை நோக்குமின்!
தமிழக மக்கட்குத் தக்கன செய்ம்மின்!
தமிழ்மொழிக் கின்னும் தகுவன புரிமின்!
'சாதிப்' பேய்களைத் தகர்த்துத் தள்ளுமின்!
சமயப் பூசலைத் தூவென இகழுமின்!
மன்பதைக் கள்ளரை மறித்து நொறுக்குமின்!
முன்புதை வுண்ட முத்தமிழ் புதுக்குமின்!
சாலா தனவெலாம் சகதியி லிட்டுத்
தோலா வெற்றியைத் தோள்களில் தாங்குமின்!

கல்லூரிக் கூடம் கலைவிளை கூடம்!
பல்வேறு உணர்வினைப் பயிற்றிடும் நறுங்களம்!

சொல்திறன், வினைத்திறன், மனத்திறன் எனும்படி
பல்திறன் விளைந்திடும் பல்கலைக் கழகம்!

தாழ்விலா வாழ்க்கைக்குத் தகவோர் ஆக்கிடும்
வீழ்விலாக் கல்வி வேளாண்மைக் கழனி!

நயனுறு உலகம் நல்லொளி பெறவே
பயனுறு மாந்தப் பயிர்விளை பழனம்!

எண்ணலும் இயற்றலும் இளையோர்க்குப் பயிற்றி
மண்ணுல குய்க்கும் மனம்விளை நல்வயல்!

கூனலும் கோழையும் குறுவுடல் நிமிரவே
மானமும் மறமும் வளர்புகு மறக்களம்!
நேர்மையும் தூய்மையும் நிறைவிற லாண்மையும்
சீர்மையும் பரிசுறச் செய்யும் அறக்களம்!

ஒழுக்கமும் விழுப்பமும் உயர்வுறு புலமையும்
அழுக்கா றின்றி ஆளும் அரசவை!

பொய்யும் புனைவும் புன்மையும் தீமையும்
உய்யும் உளம்புகாக் கொய்யும் கொல்களம்!

எனைத்துயிர்க் கெல்லாம் இம்மண் ணுருண்டையில்
தினைத்துணை உரிமையுண் டெனும்நெறி மன்றம்!

பிணைந்தும் பின்னியும் இணைந்தும் உயிர்க்குலம்
அணைந்தும் வாழ்ந்திடப் பயின்றிடும் அன்பகம்!

கயமையும் கொலைமையும் களவும் புகுமன
மயக்குநோ யகற்றி மருந்திடு மருந்தகம்!

நாட்டுப் பற்றையும் நம்மொழிப் பற்றையும்
பாட்டுத் திறத்தினால் பயிற்றும் பாசறை!

தீமையை வெல்லவும் திறம்பட உழைக்கவும்
ஏமக் கருவிகள் இயற்றும் பட்டடை!

உயிர்பெறு ஊதியம், இழப்பு,என் பவற்றை
மயர்வற நிறுத்திடு வாணிக ஆவணம்!

- அத்தகு பெருமையும் ஆன்றவிந் தடங்கிய
வித்தக ஏற்றமும் விளங்கிடு கழகத்துப்
பொத்தகத் துணைபெறு புதுமைசால் மாணவீர்!
எத்தகு திறத்தினை இத்தரைக் கீகுவீர்?
செத்தழிந் திடவோ உடலுயிர் செறித்தீர்?

இனியே ஆயினும் ஏற்றம் பெறுகுதிர்!
தனியே ஆயினும் தளர்வுறல் வேண்டா!
கல்விக் காலத்துக் கற்பன கற்க!
வல்வினைக் காலத்து வல்லாண்மை பெறுக!
இற்றைத் தமிழகம் மாணவர் தம்மையே
ஒற்றைத் துணையாக் கொண்டதை உணர்க!
புன்மை வினைகளைப் புறத்தே தள்ளுக!
மின்குழாம் அன்ன திரைப்பட மினுக்கிகள்
தம்மேல் எண்ணம் படர்வதைத் தகர்க்க!
பிடிப்புடை, விரைமா பூசிய முகங்கள்
துடிப்புளம், வெற்றுரை, பழிசெய் நூற்கள்
- என்னும் இவைதாம் மாணவர் உலகெனும்
இழிவுரை நீக்கி ஏறுபோல் எழுந்து
முத்தமிழ் பேணுக! மாணவ மணிகளே!
புத்துல கெய்துக! புதுக்கலை புதுக்குக!
நாட்டின் விடுதலை நண்ணுக!
ஏட்டின் வரலாறு எழுதுக இன்றே!

-1968

## 14 தம்பி ! நீ, புதிய தமிழன் !

தம்பி! நீதான் புதிய தமிழன்!
இம்மியும் கீழ்மை உன்னிடம் இல்லை.
சாதிச் செருக்கைச் சகதியில் போடு!
ஓதிய கல்வியும் ஒழுங்கும் கடைப்பிடி!
உலகை உயர்த்துதல் உன்றன் கடமை!
கலகம் செய்வோரைக் காறித் துப்பு!

உயர்ந்த கொள்கையும் உரங்கொள் நெஞ்சும்
அயர்வில் லாத அரும்பே ராற்றலும்
கொண்டு விளங்கு; தீமையைக் கொல்வாய்!
பண்டைச் சிறப்பையும் புதுமைப் பயனையும்
ஒன்றாய்க் கலந்து ஓர் உண்மைக் கொள்கையை
நன்றாய் வகுத்து நாடெலாம் பரப்பு!

மக்களை ஒன்றென மதித்து நடப்பாய்!
இக்கால் உலகம் இழிந்து செல்வதைத்
தடுத்து நிறுத்தடா புதுமைத் தம்பியே!
எடுத்த கொள்கையில் வெற்றியை ஏந்து!
செயல்செயப் புறப்படு! சீர்செய்! உலகத்தை!
தயக்கம் இன்றிக் கீழ்மையைத் தாக்கு!
மேல் பிறப் பென்றும் கீழ்ப்பிறப் பென்றும்
நால்வகை யாக நம்மவர் நாட்டிய
குலப்பிரி வுகளைக் குப்பையில் கிடத்து!

நிலமெலாம் ஒன்று! நிலத்துள மக்களும்
சரிநிகர் என்று சாற்றுவாய் தம்பி!
புரியும் தொழில்களால் பிரிவிலை என்பாய்!
உள்ளம் ஒன்றே மக்களை உணர்த்தும்!
குள்ள மாந்தரின் கூற்றைத் தகர்ப்பாய்!

எல்லா ஊரும் ஊரென ஏற்பாய்!
எல்லா நலமும் எல்லார்க்கும் என்பாய்!
ஊரை ஏய்க்கும் உலுத்தரை வீழ்த்து!
போரைக் கொண்டு, இவ்வுலகைப் பொசுக்கிடும்
தீய நினைவைத் தீயுனுள் தள்ளு!
ஏற நிகரமை எடுத்து முழக்கு!

காற்றும் நீரும் கதிரவன் ஒளியும்
நேற்றும் இன்றும் நாளையும் நிலத்தின்
எல்லா உயிர்க்கும் சரிநிகர், என்று
சொல்லால் செயலால் விளக்கிடு கண்ணே!

நிலமும் வளமும் நிகரென்று கூறுவாய்!
'இலம்'என் றிருப்பார் தமைக்கண்டு இரங்கு!
உண்ணச் சோறிலாது ஒருவன் வாடவும்
எண்ணிலா நலன்கள் ஒருவன் எய்தவும்
இருக்கின்ற நிலைமை எப்படி வந்தது?

கருக்கின்ற வெயிலில் ஒருவன் காயவும்
நிழலில் ஒருவன் நீட்டிப் படுக்கவும்
பழமை உலகம் ஏன்பார்த் திருந்தது?

கட்ட ஒருமுழக் கந்தலும் இன்றிக்
கொட்டும் மழையிலும் குளிரிலும் ஒருவன்
வாடிக் கிடப்பதும் மாடியில் ஒருவன்
ஆடிக் களிப்பதும் எப்படி ஆனது?

உழைத்துழைத் தொருவன் ஓடாய்ப் போவதும்
உழைப்பிலா தொருவன் உண்டே உருள்வதும்
எப்படிச் சரியென ஏற்பது தம்பி!

அப்படி இருந்திடும் அமைப்பை மாற்றுவாய்!
பிறந்தவர் யாவரும் மாந்தப் பிறப்பே!
சிறந்தவர் என்பார் செயலால் உயர்ந்தவர்!

உலக நலன்கள் யாவர்க்கும் ஒன்றே!
சிலர்நலம் எய்தவும் பலர்துயர் எய்தவும்
வழிசெய் உலகினை மாற்றி வகுப்பாய்!
பழிசெய் வோரைக் களையெனப் பறித்தெறி!

ஆங்கொரு பேயன் அளவிலாப் பொருள்மேல்
தூங்குவான் ஆயின் அவனைத் துரத்து!
பறித்தவன் பொருளை யாவர்க்கும் பங்கிடு!
குறித்துவை இதனை உன்றன் நாட் குறிப்பில்!

இனிவரும் உலகம் எல்லார்க் கும்பொது!
தனியொரு மாந்த உடைமை தவறு!

பொதுநல உலகம் பூத்தது தம்பி!
புதுமைத் தமிழன் நீயடா தம்பி!

தமிழ்மொழி உன்னைத் தமிழன்ஆக் கட்டும்!
இமிழ்கடல் உலகில் பொதுமை என்பது
தமிழன் கண்ட தலைமைக் கொள்கை!
அமிழாக் கொள்கை அரிமாக் கொள்கை!
சிமிழ்க்காது இதனை உலகோர்க்குச் சொல்லு!
தமிழால் உலகத் தலைமை தாங்கு!

செயலால் உயர்ந்தது மேனாடு என்றால்
வயங்கிடும் உளத்தால் உயர்ந்ததுன் நாடு!

அவர்மொழி கண்டதோ அறிவியல் என்றால்
தமிழ்மொழி கண்டது மெய்யறி வென்றுரை!

அறிவியல் உடல்எனின் மெய்யறிவு உள்ளம்!
குறித்துவை இதனையும்! யாவர்க்கும் கூறிடு!

உயிர்களுக்கு உடலின் வளர்ச்சி போதாது!
உயிர்களை உயர்த்துதல் உள்ளம் தம்பி!

உள்ளம் தாழ்ந்த உண்மையால் அன்றோ
கள்ளமும், கவடும், கயமையும் பிறந்தன.
ஏழ்மையும் கீழ்மையும் மக்களுள் தோன்றின!
தாழ்மையும் சேர்ந்தது! மாந்தரும் தாழ்ந்தனர்.

எனவே தம்பி! இதனைக் கேள்நீ:
கனவே அன்று; கற்பனை அன்று!
தமிழக் கொள்கையைத் தரையெலாம் ஊன்று!
அமிழும் உலகைக் காப்பதும் அதுதான்!
புதுமையும் அதுதான் பொதுமையும் அதுதான்!
பதியவை நெஞ்சில்! உணர்வில்! உயிரிலே!

-1968

## 15 மாண்பிலார் என்றும் மாணவர் ஆகார் !

மாணவப் பருவம் மாண்புடைப் பருவம்!
மாண்பிலார் என்றும் மாணவர் ஆகார்.
காண்பன எல்லாம் கலைநா கரிகம்!
மாண்பெனப் படுவது மனநா கரிகம்!
அடையும் மாற்றம் அனைத்தும் ஒப்பலாம்!
உடையும் நடையும் மாறலாம்; ஆனால்
உள்ளமும் ஒழுங்கும் உயர்ந்தே இருப்பன.
பள்ளி என்பதோ ஒழுக்கம் பயிலிடம்!
துள்ளும் இளமையின் துடுக்கை அடக்கி
விள்ளும் அறிவெலாம் விளங்கக் கற்றிடும்
கல்விக் கூடம் கலைபயில் கழகம்!

செல்வச் செழுமையின் கல்வியே செழுமை.
விலங்கி னின்று வெளியே றியவன்
விலங்கினும் உயர்ந்து விளங்கியோன், மாந்தன்!
விலங்கி னின்று விலகியோன் என்றால்
“விலங்கினும் உள்ளம் விளங்கப் பெற்றவன்;
விலங்கினும் அறிவு விளங்கப் பெற்றவன்;
விலங்கினும் ஒழுக்கம் விளங்கப் பெற்றவன்”
- என்பதே பொருளாம்!
எனவே உளத்தால், அறிவினால், ஒழுங்கால்
இழிந்த ஒருவனை விலங்கே எனலாம்!
இழிந்த ஒருவனை வள்ளுவ ஏந்தல்
“மயிரனை யான்”- என மதிக்கிலா துரைப்பார்.

தலைமயிர்ப் பெருமை தலையொடு வரையே!
தலையினின் றிழியின் தாழச்சியுற் றிழிபடும்!
உயர்ந்துளான் பெருமையும் ஒழுங்குள வரையே!
ஒழுங்கிலான் ஒருவனை விலங்கே என்க!
குறள்மறை அவனைப் ‘பிணம்’- எனக் கூறும்!

‘மாந்தன்’ என்னும் முழுவடி வத்தின்
ஏந்தும் இளமையே எழில்மிகு பருவம்!
இளமை அழியும்; வாழ்க்கையுந் தாழும்!

இளமைக் கழகே கல்வியை ஏந்தல்!
கல்விக் கழகு கடமையும் ஒழுங்கும்!
ஒழுங்கிலாக் கல்வி உப்பிலாப் பண்டம்!

எண்ணறப் படித்தும் எழுத்தறக் கற்றும்
கண்ணெனும் ஒழுங்கும் கடமையுங் கல்லான்
மக்களில் தாழ்ந்தவன் எனவே மதிக்க!

தக்கவை இவற்றை உளத்து வை தம்பி!
மாணவப் பருவம் மாண்புடைப் பருவம்!
மாண்பிலார் என்றும் மாணவர் ஆகார்.

-1968

## 16 தமிழ்த் தம்பியே ! உலகைத் திருத்தடா !

தம்பி! இதுகேள்! தங்கையே, இதுகேள்!
செம்பொன் மணிபோல் சிலஉரை சொல்வேன்!

உருண்டுகொண் டிருக்கும்இவ் வுலக உருண்டையில்
இருண்ட பகுதியும் ஒளிசேர் பகுதியும்
அரை அரை இல்லையா? அருமைத் தம்பியே!
இருள்ஒளி யாவதும் ஒளி இருள் ஆவதும்
மாறி மாறி வருஞ்செயல் இல்லையா?
கூறுதற் கரிய, இவ் வானப் பரப்பினுள்
எண்ணுதற் கரிய விண்மீன் கூட்டமும்
நுண்ணொளி வீசிடும் பால்வழித் திரட்சியும்
ஆயிரம் ஆயிரங் கோடி அளவின!

நீயும் நானும் நில்லாது எண்ணினும்
மாயும் வரைக்கும் எண்ணி மாளாது!
அத்துணைப் பெரியதிவ் வகன்ற விண்வெளி!
இத்துணைப் பெரிய இவ்விண் வெளியிலே
நுண்ணிய துகள்போல், நுண்ணிய அணுப்போல்
மண்ணுல குருண்டை மனத்தில்வை தம்பி!

இம்மண் உருண்டையுள் இருக்கின்ற நாமோ
அந்நுண் அணுவினும் அணுவாம் என உணர்!
இத்துணை அணுப்போல் இருந்து கொண்டுதான்
எத்தனைச் செருக்காய் இருக்கின்றோம், தெரியுமோ?

நமக்குள அறிவே பெரிதென் கின்றோம்!
நமக்குத் தெரிந்ததே சிறந்ததென் கின்றோம்!
நாம் உரைப் பதையே நல்லுரை என்று
வீம்புரை பேசி வீணரா கின்றோம்!
நம்கண் காண்பதே காட்சி என்றும்
நம்செவி கேட்பதே கேள்வி என்றும்
பித்துரை பேசிப் பிதற்றித் திரிகின்றோம்!
செத்துத் தொலையுமுன் செய்ததும் சொன்னதும்
கூட்டிப் பெருக்கிக் கழித்துப் பார்த்தால்
ஈட்டம் என்பதோ இழிவும் பொய்யும்
கள்ளமும் குள்ளமும் கயமையும் அன்றிக்
கொள்ளச் சிறந்தது கோழி முட்டையே!
என்ன, தம்பி! விழிக்கின் றாய், நீ!
சொன்ன யாவும் உண்மையா, இல்லையா?

தம்பி! நம்மிடம் மாந்தத் தன்மை
இம்மி அளவே னும்இருக்கின்றதா?
அண்டையில் உள்ளவன் அயலில் வாழ்பவன்
உண்டானா? குடித்தானா? உடுத்தானா? என்று
கவலைப் படுகின் றோமா? இல்லையே!
(கவலை இலானைக் கயவன் என்று
வள்ளுவப் பெருந்தகை வாய்விட்டு உரைத்தார்)

ஒருவரைப் போலவே யாவரும் பிறப்பவர்!
ஒருவரைப் போலவே யாவரும் இறப்பவர்!

இருப்பினும் இந்த மக்களுக் கிடையில்
பெருமைப் படும்படி பேசஒன் றுண்டா?

யாவரும் ஓரினம் எனும்நினை விருந்ததா?
யாவரும் மாந்தரே எனநினைந் தனரா?

ஒருவர் பசித்திட ஒருவர் உண்கிறோம்!
ஒருவர் அம்மணம்! ஒருவர்க்குப் பட்டுடை!

கூரை பிய்ந்த குடிசை ஒருபுறம்!
காரை பூசிய கட்டிடம் ஒருபுறம்!

வீங்கிடும் வெற்றுக் கால்களோர் பக்கம்!
தூங்கிடச் செய்யும் ஊர்திஓர் பக்கம்!

மலக்கூடை ஒருத்தி மண்டையில் சுமப்பாள்!
மலர்க்கடை ஒருத்தி கொண்டையில் சுமப்பாள்!

பாலுக் கேங்கும் பசித்தொரு குழந்தை!
பாலைக் குமட்டிடும் பசியிலா தொன்று!

காயும் வெயிலில் கருகுவான் ஒருவன்;
ஓய்வெனக் குற்றாலம் ஓடுவான் ஒருவன்!

மருந்திலா ஏழ்மையில் இறப்பான் ஒருவன்!
விருந்து செரித்திட மருந்துண்பான் ஒருவன்!
மேல்பிறப் பென்றொரு மடையன் உளறுவான்;
கீழ்ப்பிறப் பென்றே ஒருவனைக் காட்டுடிவான்!

இன்னும் எத்தனை ஏற்றத் தாழ்வுகள்!
சொன்னால் நம்பவும் மறுப்பாய் தம்பி!
அடடா! தம்பி! ஆரெடுத் துரைப்பார்?

அன்பும் அறிவும் அகன்ற உள்ளமும்
இன்றைய வாழ்வில் யாருக்கு வேண்டும்...?
திருக்குறள் அறிவு செருப்புக் காகுமா?
இருக்கும் நூல்களை எவன்படிக் கின்றான்?

காசு பணங்களே கனவிலும் நனவிலும்
பேச்சிலும் செயலிலும் பெருமைப் படும்பொருள்!
பொன்னும் மண்ணும் என்றும் இருக்கும்!

இன்னும் இன்னும் என்கிற நாம்தாம்
மடிந்து மட்கி மண்ணாய்ப் போவோம்!
விடிந்தது முதலா இருள்வது வரைக்கும்
பணம்பணம் என்றே பேயாய் அலைகிறோம்!
மனத்தை எந்த மடையன் நினைத்தான்?
பொருள் தேவைதான்! பொருளே தேவையா?
இருள்உல கிதனை இடித்துத் தள்ளடா!
எத்துணைப் பெரிய உலகம் என்கிறோம்!
எத்துணைச் சிறியது மக்களின் உள்ளம்!

தம்பி! ஒன்று கேள் :
நாறும் மாந்தக் குலத்தைக் கழுவடா!
ஏறும் உணர்வால் அறிவொளி ஏற்றடா!
குள்ளக் கொள்கையைக் குப்பையில் போடு!
உள்ளச் செழுமைக்கு உரமிட்டு வா, நீ!
தூசு தும்புகள் உடனே துடைத்தெறி!
மாசினை அகற்று; மனத்தைத் தூய்மைசெய்!
காசைப் பெரிதெனக் கருதி விடாதே!
மூசைப் பொன்னும் மண்ணும் ஒன்றே!
வாழ்வு பெரிதிலை; வளமையே பெரிது!
தாழ்வைத் தூள்செய்! தயக்கம் கொளாதே!

கற்ற கல்வியால் கவின்செய் உலகை!
உற்ற இழிவுகள் ஊதித் தள்ளு!
மடமையை வீழ்த்து! மக்களை ஒன்றுசேர்!
கடமையை உணர்த்து! கன்னித் தமிழினால்
கமழக் கமழ உரைசெய்! வினைசெய்!
தமிழத் தம்பியே! தமிழத் தம்பியே!
உலகைத் திருத்தடா, தமிழத் தம்பியே!

-1968

## 17 தம்பி ! நீதான் நாளைய தலைவன் !

தம்பி! நீதான் நாளைய தலைவன்!
வெம்பிய கனிபோல் வீணா காதே!
நம்பிக்கை வை, நீ! நாட்டை நடத்துவாய்!
நல்லன நினைப்பாய்; நல்லன பேசுவாய்!
நல்லன செய்வாய்; நல்லன பெறுவாய்!
சோம்பலை அகற்று; சுறுசுறுப் பாயிரு!
ஓம்புக ஒழுக்கம்! கல்வியால் உயர்வாய்!

கதிரவன் எழுமுன் காலையில் எழுவாய்!
புதிய நூல்படி! பழையன நினைவுகொள்!
அறிவியல் நூல்கள், அறிஞரின் கதைகள்,
நெறிமுறை நூல்கள், நல்லிசைப் பாக்கள்,
எனப்பல நூல்படி; இழிந்த நூல்தவிர்!

அச்சில் வருவன எலாம்நூல் ஆகா,
எச்சில் இலையினில் மீந்தன வற்றை
நாய்உணல் ஆகும்; நாம் உணல் ஆகா!
நோயால் புழுத்தவன் உடலைநல் உடையால்
மூடி வருதல்போல் அறிவிலா மூடர்
எழுதத் தகாதன எழுதி,யந் நூலை
அழகிய அட்டையால் வழவழப்பாக
அச்சிட்டு விற்பர்; அவற்றை விலக்கு!
"கற்க கசடற; கற்பன வற்றை"
என்றார் வள்ளுவர் இதன்பொருட் டன்றோ!

நாளும் செய்தித்தாள் நன்கு படித்துவா!
தாளெலாம் செய்தித் தாள்கள் ஆகா!
பொய்ப்பன, புளுகைப் புனைவன உண்டு!
உய்ப்பன மக்கட்கு உதவு வன,சில!
திரைப்பட நடிகர் நடிகையர் கதைகளை
உரைப்பன சில! அவர் உருவப் படங்களை
அச்சிட்டு உளத்தை அழிப்பன பலப்பல!
நச்சென அவற்றை நெருங்கவும் நடுங்கு!
"ஒழுங்கிலாக் கல்வி உப்பிலாப் பண்டம்".
ஒழுக்கம் உயிரெனும் குறளுரை உணர்வாய்!

பள்ளிப் படிப்பினில் மனத்தைப் பதியவை!
அள்ளி அள்ளிஉண்; ஆர்வ மொடு, கல்!
கல்வி தருபவர் கல்வித் தந்தை!
செல்வம் என்பது கல்விச் செல்வமே!
பொருள் நலம் புல்லியர் கைகளில் இருக்கும்!
தேயாப் பொருளே கல்விச் செழும்பொருள்!
ஓயாது தேடு! மேம்படு உலகில்!
செம்புது வெள்ளமாய் உலகினில் பாய் நீ!
நம்புவாய் தம்பி, நீ நாளைய தலைவன்!

-1968

## 18 வாழ்க்கை பொது !

வானமென்னும் கூரையின்கீழ்
வந்துருளும் மண்ணுலகம்!
வந்துருளும் மண்ணுலகில்
தம்பியே தம்பி - நாம்
வாழுகின்ற மக்களடா
தம்பியே தம்பி!

மக்களெனும் பேரினத்தில்
மகிழ்ந்திருப்பார் சிற்சிலபேர்!
மகிழ்ந்திருக்கும் அவரடிக்கீழ்
தம்பியே தம்பி - பலர்
மாளுவதும் கொடுமையன்றோ
தம்பியே தம்பி!

மழைபொழிந்து பயிராகும்!
மலைபோலும் நெல்விளையும்!
மழையும் பயிர்விளைவும்
தம்பியே தம்பி - எல்லா
மக்களுக்கும் பொதுவன்றோ
தம்பியே தம்பி!

உலகிருக்கும் மக்களெலாம்
உழைத்துணத்தான் வேண்டுமெனில்
உழைப்பறியார் வாழுவதோ
தம்பியே தம்பி - பலர்
உடல்வருந்தித் தாழுவதோ
தம்பியே தம்பி!

மாந்தருக்குள் வேற்றுமைகள்!
மனம்வளரா நாகரிகம்!
மனம்வளரா நிலையில்அது
தம்பியே தம்பி - வெறும்
மணல்மேடு போன்றதடா
தம்பியே தம்பி!

**-1969**

## 19 விளம்பர உலகில் விலைபோகாதே !

வண்ண ஓவியம் மின்னும் முகப்புகள்!
எண்ணிக் கொள்வாய் தம்பி! இவையெலாம்
உன்னை மூழ்க்கின்ற ஓட்டைப் படகுகள்!
உன்னை வீழ்த்திடும் ஓங்காரப் பள்ளம்!
விளம்பர உலகில் விலைபோ காதே!
குளம்பொலி இசையெனக் குழம்பி டாதே!

மீசை முளையா இளைஞர் யாவரும்
காசைத் திரட்டக் கதைகள் எழுதி
அரையாடை யோடும் அம்மணத் தோடும்
உரையாட லோடே ஒளிப்படம் நிரப்பி
இதழ்நடத்து கின்றார்! இவற்றை யெல்லாம்
புதுமை விரும்பும் புன்மைத் தம்பிகள்,
எதுதம் தேவை என்றுண ராமல்,
கோமாளித் தனத்துக்கு ஏமாறுந் தங்கைகள்
ஈமொய்ப் பதுபோல் ஏறிட்டு வாங்கி
அணுஅணு வாகத்தம் அறிவை இழந்து,

உணர்வைத் தாழ்த்தி உள்ளத்தைப் புதைத்தே
உடலுறுப் புகளைப் படிப்படி யாகக்
கெடலுறச் செய்யும் கீழ்மை,என் னென்போம்?

தேனொலி செய்ய வேண்டிய, வீட்டின்
வானொலிப் பெட்டியின் வாயைத் திறந்தால்
கழுதைக் கனைப்பிலும் காக்கைக் குரலிலும்
இழுஇழு வென்றே குரலினை இழுக்கும்
பச்சைச் சொற்களில் வெள்ளை யான
கொச்சைப் பாடல்கள்! கோமாளிக் கூத்துகள்!
பள்ளியில் மாணவர் பயில்கின்ற கல்விக்குக்
கொள்ளிவைப் பதுபோல் கும்மாள வாழ்க்கை!

படித்த மடயர் பாழ்செய்யும் உலகம்!
வடித்த கயவரே வலம்வரும் உலகம்!
வீணர் நிறைந்த விளம்பர உலகம்!
நாண மற்றவர் நடிக்கின்ற உலகம்!

கலையெனும் பெயரால் காமத்தைப் பாய்ச்சும்
புலையர் புகுந்த புழுக்கறை உலகம்!
தூக்கில் இடத்தகும் துடுக்கரும் கொடியரும்
பாக்கள் இயற்றிப் பாழ்செயும் உலகம்!
கழுவேற்றத் தக்க களியரும் காமரும்
வழுவுறக் கதைகள் வடிக்கும் உலகம்!
ஒழுங்கிலாக் கயவர் ஒழுங்கைப் பயிற்றும்
மழுங்கல் உலகம்! மானமில் உலகம்!
கொள்கை யில்லாக் கூனர்கள் எல்லாம்
ஏழைகள் வயிற்றுத் தீனியைத் திருடும்
கோழையர் கொடிகட்டி வாழ்கின்ற உலகம்!
இவ்வுல கத்துள் இறங்கினாய் தம்பி!
ஒவ்வாத உலகில் உன்துணை உள்ளமே!
எஞ்சிய வாழ்க்கை இனிதாய் நடக்க,உன்
நெஞ்சை ஒருநொடி நிறுத்திக் கேள் நீ!
ஆக்கம் வேண்டுமா? அறிவு வேண்டுமா?
ஊக்கங் கொள், அஃது உணர்த்தும் வழியிலே!

-1969

## 20 அயர்வைக் கொல்லடா ! தோளை உயர்த்தடா !

*உள்ளம் விழுந்ததா? தூக்கி நிறுத்தடா!*
*உடலம் சோர்ந்ததா? மேலும் வருத்தடா!*
*கள்ள மாந்தராம் கயவர் நடுவிலே,*
*கடுமை உழைப்படா; மகிழ்ச்சி முடிவிலே! 1*

*உறவு பகைத்ததா? உதறித் தள்ளடா!*
*ஊரும் வெறுத்ததா? எதிர்த்து நில்லடா!*
*துறவுப் போக்கிலே, தூயர் துணையிலே*
*துணிவைக் காட்டடா, கொள்கைப் புணையிலே! 2*

*வறுமை உற்றதா? பசியைக் கொல்லடா!*
*வாழ்க்கை கசந்ததா? துயரை வெல்லடா!*
*பொறுமை கொள்ளடா, புல்லர் உரையிலே!*
*பூட்கை சாற்றடா வெற்றிக் கரையிலே! 3*

*சூழ்ச்சி மிகுந்ததா? உரையில் விழுத்தடா!*
*சூடு பறக்கநின் உணர்வில் கொளுத்தடா!*
*தாழ்ச்சி செய்யுமுன் பகைவர்க் கிடையிலே,*
*தமிழை நினையடா, வேங்கை நடையிலே! 4*

*பொய்மை நிறைந்ததா, வெடித்துச் சிரியடா!*
*பூண்ட வெற்றிகள் சரிக்குச் சரியடா!*
*மெய்மை ஒளிர்வதே பொய்ம்மை இருளிலே!*
*மேட்டைக் காண்பதே பள்ளச் சரிவிலே! 5*

*புகழ்ச்சி மொழிகளோ தூசென் றெண்ணடா!*
*புனைவுச் சொற்களோ புழுதி மண்ணடா!*
*இகழ்ச்சி நெரித்ததா? சோர்வைப் புதையடா!*
*ஏசு புத்தரும் உணர்ந்த கதையடா! 6*

*வினைக்குத் தனியனோ? வெற்றி நினக்கடா!*
*விரகு, சூழ்ச்சிகள் துண்டு துணுக்கடா!*
*நனைக்கும் பனி, மழை, நறுக்கும் வெப்பமோ,*
*நலிவைத் தருமெனில் தொண்டுக் கொப்புமோ? 7*

*ஒற்றை உழவிலும் கற்றை விளைவடா!*
*உண்மைப் பயிரிலும் ஊழ்க்கும் களையடா!*
*அற்றைப் புகழெலாம் இற்றை உயிர்ப்படா!*
*அயர்வைக் கொல்லடா! தோளை உயர்த்தடா! 8*

**-1969**

## 21 உனை அழிக்கும் எல்லை !

படித்து, அறிவு பெற்றாலென்ன?
பளபளப்பாய் வாழ்ந்தாலென்ன?
பிடித்ததடா 'நாகரிகப்' பேய்தான் - உள்ளம்
பிறழ்ந்ததடா இனிமேல் குட்டிச் சுவர்தான்!

உடுத்தும்எழில் கண்டாலென்ன?
உண்டுறக்கம் கொண்டாலென்ன?
அடுத்ததடா சீரழிவு பார்க்கே - வழி
ஆனதடா அனைத்துலகப் போர்க்கே!

அறிவியலால் என்னபயன்?
அரசியலால் ஏதுநலன்?
செறிவிழந்து போனதடா வாழ்வில் - உளம்
சீர்குலைந்து வீழ்ந்ததடா தாழ்வில்!

கலைவளர்ச்சி என்னாகும்?
காட்சிநலன் என்னதரும்?
புலைவளர்ச்சி மிகுந்ததடா தம்பி - நெஞ்சு
புண்ணாகிப் போனதடா வெம்பி!

மயிர்ப்புனைவால் யார்க்குப்பயன்?
மழமழப்பால் யார்க்குநலன்?
உயிர்ப்புனைவும் சாம்பிற்றடா தம்பி - நாடு
உடற்புனைவை ஓம்பிற்றடா நம்பி!

நூலுணர்வால் கண்டதென்ன?
நோட்டமிட்டுப் பெற்றதென்ன?
பாலுணர்வில் தோய்ந்ததடா நெஞ்சம் - இனிப்
பாரினிலே மாந்தர்க்கெது மிஞ்சும்!

எட்டுத்திக்கும் ஆண்டாலென்ன?
எழுநிலமும் வென்றாலென்ன?
தட்டுக்கெட்டுப் போயிற்றடா வாழ்க்கை! - நல்ல
தரமிழந்து வீழ்ந்தனை, நீ பூழ்க்கை!

கொம்பின் நுனி நீண்டாலென்ன?
கொத்துமலர் பூத்தாலென்ன?
வெம்பினைநீ பச்சைப்படு பிஞ்சில் - இனி
விளைந்திடுமோ அமைதியுன்றன் நெஞ்சில்!

பகுத்தறிவும் வாய்ந்தாலென்ன?
பல்பொருளும் ஆய்ந்தாலென்ன?
வகுத்தறியும் அறிவிழந்து நின்றாய், இருள்
வாழ்க்கையிலே உனைமறந்து சென்றாய்!

மிகவுயர்ந்த கட்டிடங்கள்!
மின்விளக்குத் தோரணங்கள்!
அகவுயர்ச்சி எனில், அடடா இல்லை! - அவை
அத்தனையும் உனையழிக்கும் எல்லை! -1969

## 22 மக்கள் என்று திருந்துவாரோ ?

பொன்னன் எனும்சிறு பையன் - நகர்ப்
பொத்தகக் கடைநோக்கிப் போயினன் ஓர்நாள்!
மின்னும் எழில்வண்ணத் தோடு - அட்டை
மேனி பளபளக் கும்கதை நூல்கள்,

கண்ணைப் பறித்திடு மாறு - பல
காட்சி தருகின்ற கன்னியர் தோற்றம்
விண்ணைப் பழித்திடும் போக்கில் - தம்
வெற்றுடல் காட்டிடுந் தாளிகைக் கூட்டம்.

கொட்டை எழுத்தினில் சூடாய் - செய்தி
கொடுத்திடும் இழிநடை நாட்கம்பித் தாள்கள்
அட்டை பெருத்திடும் நூல்கள் - துப்
பறிகின்ற புதினங்கள், பாலியல் நூல்கள்.

சட்டையின் பையளவுள்ள - பல
சாய்க்கடைக் குப்பைகள், பேய்க்கதை நூல்கள்,
அட்டைகள் போலக் கயிற்றில் - சுவர்
ஆணியில்,எங்கும் தொங்கின; மீதி,

கொட்டிக் கிடந்தன அங்கே! - அந்தக்
குவியலைப் பொன்னன் பலமுறை நன்றாய்த்
தட்டிக்கொட் டிப்பதம் பார்த்தான் - பின்
தலையசைத்தான்; எழுந்தான்; நடை யிட்டான்!

சென்றவ னைக்கடைக் காரன் - "தம்பி
செல்வதேன்? உனக்கென்ன வேண்டுவ" தென்றான்;
"ஒன்றுமில்லை; எங்கள் வீட்டில் - உள்ள
ஓர்எரு மை,கன்று போட்டுள்ள தந்தக்

கன்றுக் கொருபெயர் வேண்டும் - இந்தக்
கடையினில் அதற்கொரு பொத்தகம் உண்டா?
என்றுநான் பார்த்திட வந்தேன் - இங்
கில்லாமை யால்போகின் றேன்" என்று போனான்.

மெய்யாக வே,கடைக் காரன் - அந்த
மேலான(!) நூலில்லாத் தன்மைக்கு நாணிப்
பொய்யாய் ஓர் அஞ்சல் வரைந்தே - அன்றே
போட்டனன் சென்னைக்குக் கீழ்வரு மாறு;

**"பொத்தகம் அச்சிடுவோரே! இங்குப்**
**புதுமுறை யாய்ஒரு பொத்தகம் தன்னை**
**எத்தனையோ மக்கள் கேட்டார் – நூல்**
**இல்லைஎன் றுரைப்பது நம்குறை யன்றோ?**

**ஆகவே நாலைந்து நாளில் – ஓர்**
**அணிற்பிள்ளை முதலாகப் புலிக்குட்டி வரைக்கும்**
**நாகரி கப்பெயர் சூட்ட – ஒரு**
**நானூறு பக்கத்தில் பொத்தகம் வேண்டும்!"**

என்று பறந்ததே அஞ்சல்!,சென்ற
இரண்டொரு நாளில்பல் லாயிரம் நூற்கள்
குன்றாய்க் குவிந்தன! மக்கள்,பெருங்
கூட்டமாய்ச் சென்றதை வாங்கிச் சுவைத்தார்!

நன்று; நன்று; நாக ரிகம்! - மக்கள்
நாட்டங்கள் வாட்டங்கள் மிகமிக நன்று!
என்றைக்கு மக்கள் எல்லாரும் - உயர்
வெண்ணித் திருந்துவ ரோ? உயர் வாரோ?

-1970

## 23 போலியரைக் கண்டுகொள் தம்பி !

போலிகள் வாழ்கின்ற காலமிது - தம்பி
புன்மை செறிந்துள்ள காலமிது!
பாலிலும் பாகிலும் வெண்ணெயிலும் - சரி
பாதிக் கலப்புள்ள காலமிது!

திருடரே நல்லவர் போல்நடிப்பார்! - கொடுந்
தீயவர் ஊமையர் போன்றிருப்பார்!
உருவிலும் பேச்சிலும் அன்னவரைக் - கண்டே
உள்ளந் தெளிதல் மிகக்கடினம்!

பார்க்கத் துறவியைப் போலிருப்பார் - உள்ளப்
பான்மையில் கீழ்மையின் காலிருப்பார்;
யாருக்கும் மேல்எனப் பேசிடுவார் - ஆனால்
யாவர்க்கும் முன்வரக் கூசிடுவார்.

உள்ளம் பரந்து, விரிந்ததென்பார் - சிறு
ஓட்டை கண் டாலதைக் கோட்டையென்பார்!
கள்ள நினைவினர்! நல்விளைவை - என்றும்
கண்டு பொறாத மனத்தினரே!

திருக்குறட் பாக்கள் முழக்கிடுவார் - நன்மை
தீமைகள் ஆய்ந்து வழக்கிடுவார்!
செருக்குற யாங்களே மெய்யர் என்பார் - பொருள்
சேர்ப்பதி லேவிழிப் பாயிருப்பார்!

பொன்மணி பகட்டுடை தாமணிவார் - ஒரு
பூழ்க்கையும் பிறர்க்கிட வேட்கை கொளார்!
மின்மினி போன்ற ஒளியுடையார் - உயர்
மெய்யறி வேமெனும் வெளிறுடையார்!

கடமையில் தாழோம்யாம் என்றுரைப்பார் - நடுக்
கடலில் மிதக்கையில் கைநெரிப்பார்!
உடைமை யெலாம்பொது வேண்டுமென்பார் - ஓர்
ஓட்டைப் பொருளையும் வீட்டடைப்பார்!
வாய்மையர் யாமென நம்பவைப்பார் - பல
வாழ்க்கை நிகழ்ச்சிகள் தாமறைப்பார்!
தூய்மையர் போலப் பிதற்றிடுவார் - அவர்
தோதுகள் கண்டுளந் தெளிக தம்பி!

-1970

## 24 சிற்றூர் !

நெருக்கம் குறைந்த குடில்கள், மனைகள்,
நீண்ட மரங்கள் நிறைந்த ஊர்!
தெருக்கள் குறைவு; இரைச்சல் இல்லை;
தென்றல் தவழும் சிறிய ஊர்!

சாலை தோறும் அடர்ந்த மரங்கள்
சந்த னத்தின் நிழல்தரும்!
ஓலைக் குடில்கள் வெப்பந் தாங்கி
உள்ளங் குளிரச் செய்திடும்!

காற்றும் மலையும், வயல்கள் எங்கும்
கண் குளிர்ந்த பசுமையும்,
ஏற்றப் பாட்டும் எருதின் ஒலியும்
எங்கும் மகிழ்வைப் பொசிந்திடும்!

ஏரி, குளங்கள், வயல்கள் எங்கும்
இனிய நன்னீர் தேங்குமாம்!
கார் முகில்கள் குன்று தோறும்
கவிந்து படுத்துத் தூங்குமாம்!

கழனி எங்கும் கரும்புத் தோட்டம்;
கதிர் விளைந்து சாயுமாம்!
உழவர் பாடல் காற்றில் மிதந்தே
ஊர்க்குள் வந்து பாயுமாம்!

மடைகள் தோறும் மீன்கள் துள்ளும்;
மண்டும் நாரைக் கூட்டங்கள்!
அடைகள் போலும் தேனீக் கூடு!
ஆல விழுதின் ஊஞ்சல்கள்!

புத்தம் புதிய கறிகள், காய்கள்!
பூ மணக்கும் சோலைகள்!
கத்துங் குயில்கள்; கிளிகள் நிறைந்து
கனிகள் கோதுங் காட்சிகள்!

தூய்மைக் காற்று! தூய்மைச் சூழல்!
தொத்து நோய்கள் இலாத ஊர்!
வாய்மை நெஞ்சம் சார்ந்த மக்கள்!
வாழ்க்கை மணக்கும் சிறிய ஊர்!

-1970

## 25 பூத்த தாமரைப் புதுமுகம்!

பூத்த தாமரைப் புதுமுகம்,உன்னைப்
பார்த்திடப் பார்த்திடக் குளிருதென் அகம்,நீ (பூத்த)

கோத்திட்ட முல்லைச் சரத்தினைப் போல
குமிழ்நகை சிந்திடும் பற்களி னாலே
வார்த்த எழில்மிகு ஒளிநிறை வெள்ளம்
வந்திங்குப் பாய்ந்ததால் செழித்ததென் இல்லம்! (பூத்த)

ஆடி அசைந்திடும் செம்பொன்னின் தேர், நீ!
அன்னைக்கும் தந்தைக்கும் பெரும்புகழ் சேர், நீ!
ஓடிக் குதித்திடும் இளமானின் கன்றே,
ஓதுதல் மறவாதே! என்செல்வக் குன்றே! (பூத்த)

குத்திட்டு வீழ்ந்திடும் நுரைபொங்கும் நீரில்
குதித்துப் புரண்டிடும் விழிக்கெண்டைச் சீரில்,
ஒத்திட்டுப் பாய்ந்த தடி, என்றன் ஆவி;
ஓடிடும் பின்வந்த தே, மனம் தாவி! (பூத்த)

அப்பாவுக் கோ, செல்லப் பிள்ளை, நீ கிளியே!
அம்மாவுக் கென்றும், நீ ஒளிநல்கும் விழியே!
தப்பாமல் பள்ளிக்கு நாள்தோறும் செல்வாய்;
தவறாமல் ஒவ்வொரு தேர்விலும் வெல்வாய்! (பூத்த)

பாவாடை விரித்தாடும் பசும்பச்சை மயில்,நீ!
பண்ணோடு தமிழ் பாடி மயலேற்றுங் குயில்,நீ!
பூவோடு நெய்நாறுங் கருங்குழல் பின்னிப்
பொலிகின்றாய்! மகிழ்கின்றேன் வருநாளை எண்ணி (பூத்த)

தண்டை குலுங்கிட நீபோகும் போதில்,
தாலாட்டுப் பாடிய நாள்விழும் காதில்!
கொண்டை குலுங்கிட நீவளர்ந் தந்தாள்
கொம்பொன்றைப் பற்றுவாய் எனக்கது பொன்னாள்!
(பூத்த)

-1970

## 26 தொண்டன் நீ !

அரசியல் தெரிந்துகொள்;
அறமும் தெரிந்துகொள்;
வரிசையாய் நேர்மையும்
வாய்மையும் கடைப்பிடி;
முரசின் முழக்குப்போல்
முறுக்கேற்று குரலில்;
உரைக்கத் திறன் பெறு;
ஊர்க்கு உழை; தொண்டன், நீ!

கொடிபிடித் திடுவதும்
கூச்சல் இடுவதும்
அடிபிடி வேலை;
அரசியல் அன்று!
மடிபிடித் தென்றும்
மாங்காய் பறியாதே!
குடிகள் நலம் பெறக்
கொடு,உனை; தொண்டன், நீ!

கரையற்ற வேட்கை,
கடமையின் எழுச்சி
தரையெலாம் பாயும்
தணல்கின்ற எண்ணம்,
புரையிலா அன்பு,
பூக்கட்டும் நெஞ்சில்!
விரையும் பொருட்குனை
விற்காதே; தொண்டன், நீ!

வழக்கிடும் பதவிக்கு
வால்பிடிக் காதே!
பழக்கமும் நெகிழ்ச்சியும்
பாழ்செய்யும் உன்னை!
ஒழுக்கமே உடலூரம்!
உழைப்பதே இன்பம்!
மழுகில்லா முயற்சி கொள்;
மருளாதே; தொண்டன், நீ!

உள்ளத்தால் பேசிடு;
உரைக்குச் செவிகொடு;
கள்ளத்திற் கஞ்சு;
கனிவுக்குக் கனிவு செய்;
பள்ளங்கள் நயத்திலும்
பணிவிலும் இருக்கலாம்;
எள்ளலை எடுத்தெறி!
எழு,நட! தொண்டன், நீ!

-1970

## 27 பாட்டெழுது !

பாட்டெழுது! தமிழ்ப்
பாட்டெழுது! - இந்தப்
பாரினில் உள்ளவர் பாட்டெழுது!
கூட்டில் உயிரினில்
யாவரும் ஒன்றெனை
எடுத்துரைக் கும்ஒரு
பாட்டெழுது! - புதுப் - பாட்டெழுது!

ஏட்டை எடு; ஒரு
தூவலெடு!, நன்றாய்
எண்ணிய பின்ஒரு பாட்டெழுது!
நாட்டைத் திருத்திட
நலிவை ஒழித்திட
நாளும் விளங்கிடும்
பாட்டெழுது - தம்பி - பாட்டெழுது!

நிலவெழுதி, ஆற்று
நீரெழுதி - பலர்
நீண்ட பொழுதினைத் தாண்டிவிட்டார்!
மலரினைப் பாடினார்;
மலையினைப் பாடினார்;
மக்களைப் பற்றி, நீ
பாட்டெழுது! - உயர் - பாட்டெழுது!

காதலினால், துன்ப
மோதலினால் - தென்றற்
காற்றையும் ஊற்றையும் பாடிவிட்டார்!
சாதலைப் பாடினார்;
ஈதலைப் பாடினார்,
சழக்கரைப் பற்றி, நீ
பாட்டெழுது! - வெற்றிப் - பாட்டெழுது!

புல்லினைப் பார்; ஒரு
புழுவினைப் பார் - குப்பைப்
புழுதியில் உழன்றிடும் மக்களைப்பார்!
தொல்லையைப் பார்; அவர்
துயரினைப் பார்; அதைத்
தோண்டிப் புதைத்திடும்
பாட்டெழுது - மறப் - பாட்டெழுது!

-1970

## 28 பழைய மனமே புதிய உலகம் !

எத்தனைப் பெரிய உலகம்! இதில்தான்
எத்தனை மக்கள்; எத்தனை இனங்கள்!
எத்தனை நாடுகள்! எத்தனை அரசுகள்!
எத்தனை மொழிகள்! எத்தனைத் தோற்றம்!
அத்தனை மக்களின் அமைப்பிலும் உள்ள
வாழ்க்கை நிலைகள் எத்தனை, தெரியுமா?
தாழ்ச்சி என்பதோ ஒருவனுக்கு உயர்ச்சி!
இன்னா தென்பது ஒருவனுக் கினியது!
நல்ல தென்பது தீதுஒரு வனுக்கே!
ஒருபுடை இருளும் ஒருபுடை ஒளியும்
மாறி மாறி இயங்குமண் ணுலகம்!

ஒருநாட்டில் ஒன்று பழைய தென்றால்
பிறநாட்டில் அதுவே புதியதென் கின்றான்!
நம்நாட்டில் ஒருவர் அறிஞர் என்றால்
பிறநாட்டில் அவரே மாணவர் ஆகிறார்;
நம்நா கரிகம் பிறநாட்டில் பழையது!
நமக்குப் பழமை பிறர்க்குப் புதுமையே!

பழக்கமும் உடையுமே பண்பா டாகுமா?
வழக்கம் ஒன்றே ஒழுக்கமாய் விடுமா?
நன்றாய் உடுத்துதல், நன்றாய் உண்ணுதல்
என்பதே ‘வாழ்க்கை’ என்றாகி விடுமா?

அழகிய தலைமயிர், அழகிய உறுப்புகள்,
பழுதிலா உருவம்,இத்தனை இருந்தும்
உழுதிடா உள்ளம் உவர்நிலம் அன்றோ?
‘நாகரிகம்’ என்பது நல்ல உடைகளா?
‘நாகரிகம்’ என்பது நன்றாய் உண்பதா?
உள்ளம் என்பதே உரைகல் தம்பி!
உள்ளமே வாழ்க்கை! உள்ளமே ஒழுக்கம்!
ஒருவன் பசித்திட ஒருவன் உண்பதா?
ஒருவன் மாடியில், ஒருவன் தெருவிலா?

எத்தனை அறிவியல் ஏற்றங் காணினும்,
எத்தனைக் கருவிகள் வாழ்க்கையைத் துலக்கினும்
ஒருவனை வீழ்த்தி, ஒருவன் உயர்வதால்
இருநிலம் உயர்ந்தது என்பது சரியா?
மக்களைத் தாழ்த்துதல் மனத்தை அழிப்பதே!
மனத்தை அழிப்பது மக்களை அழிப்பதே!
வலியவன் ஒருவனே வாழத் தக்கவன்;
மெலியவன் என்பவன் வீழத் தக்கவன்;
என்பதே உலகின் இயற்கை என்றால்,
கருவிகள் செய்வதே உலகக் கல்வியாம்!
அறிவியல் எதற்கு? ஆகும் பயனென்?
அன்பும், அருளும் அழிவுக் குழிகளா?
மென்மை யாவையும் அழிப்பதா வாழ்க்கை?
மலர்கள், பெண்கள், வானப் பறவைகள்,
கிளர்வுறும் பூச்சிகள், விலங்குகள் யாவுமே
அழிக்கத் தக்கன ஆகுமேல் உலகம்
வழிவழி யாக வாழ்ந்துகொண் டிருக்குமோ?
எனவே தம்பி; ஏற்றம் என்பது
புனைவும் பெருக்கமும் அன்று
மனமும் வாழ்க்கையும் மலரச் செய்வதே!

**-1970**

## 29 மனத்தில், அறிவில் ஒளி ஏற்றுவாய் !

நின்ற இடத்திலேயே
நின்றுகொண் டிராதே!
நெடிய உலகத்தைச்
சென்றுபார்! - உன்
குடியை யமர்த்தியங்கு
வாழ்ந்து பார்! - பல
குன்றுண்டு; மலையுண்டு;
காடுண்டு; கடலுண்டு;
குனிந்து, நிமிர்ந்து, நடந்
தோடுவாய்! - உயிர்க்
குலங்கள் வாழ்கவெனப்
பாடுவாய்!

சென்ற தடத்திலேயே
சென்றுகொண் டிராதே!
சேற்றில் சகதியினில்
நடந்துபார்! - முள்
சிரிக்கும் கரும்புதருள்
நுழைந்துபார்! - பெருஞ்
சிறப்புண்டு; இழிவுண்டு;
சிதைவுண்டு; புதைவுண்டு;
சிரித்தும் அழுதும், உயிர்
தேம்புவாய்! - துயர்
சுவைத்திவ் வுலகநலம்
ஓம்புவாய்!

தின்ற பொருள்களையே
தின்றுகொண் டிராதே!
தெவிட்டும் பொருள்களையும்
உண்டுபார்! - உன்
தீனிப் பைக்கும், கசப்
பீந்துபார்! - இலை
தழையுண்டு; பிஞ்சுண்டு;
காயுண்டு; கனியுண்டு!
திளைத்துச் சுவைத்து, உனைத்
தேற்றுவாய்! - மனந்
தெளிய அறிவில், ஒளி
ஏற்றுவாய்!

-1971

## 30 வாழ்க்கையில் பீடுசேர் !

இன்பத்தை யே, நாடி
ஏற்றத்தை யே, தேடி
ஏங்கிக் கலங்காதே பாரில்! - அக்கால்
இயற்கை விளங்காது நேரில்! - பெருந்
துன்பத்தையும் நாடு!
துயரத்தையும் தேடு!
தொல்லையை யும்சுவை பார்ப்பாய்! - வருந்
துன்பமும் இன்பமென் றார்ப்பாய்!

குன்றுக்கு மேலேயே
கொண்டையத் துச்சிக்கே
சென்று வரல் ஒரு நேரம் - மலை
சேருவ தே, அன்று வீரம்! - நீ
நின்ற நிலத்துக்கு
நேராக, கீழாக
நெட்டை நெடுங்குழி தோண்டு - உள்
நெருப்புக் குழம் பையுந் தாண்டு!

உண்ணும் உணவுக்கும்
உறங்கும் உறக்கத்தும்
ஓயா தலைவதோ வாழ்க்கை? - ஓர்
எறும்புக்கும் உண்டந்தப் பூழ்க்கை! - நின்
எண்ணுந் திறனுக்கும்
ஏற்ற வலிமைக்கும்
என்னதான் உண்டுகொல் பீடு? - உயிர்
ஏகின பின்சுடு காடு!

விசும்பை அளாவிடு!
விண்ணை அளந்திடு!
வெட்ட வெளியினில் கால்வை - கை
வீசி நடத்திடு வாழ்வை! - ஒரு
பசும்புல்லின் வேருக்குள்
பறவையின் இறக் கைக்குள்
பார்வையை, எண்ணத்தை நீ, வை - பெரும்
பாட்டில் நனைத்திடு நாவை!

-1971

## 31 பள்ளியை மூடுங்கள் !

*படிப்பை நிறுத்துங்கள்!*
*பள்ளியை மூடுங்கள்!*
*பண்பாட்டிற் குயிர் ஊட்டுங்கள்! - வெறும்*
*நடிப்பெதற்கு? - போலி*
*நடையெதற்கு? - ஆடும்*
*நாடகத் திரை மாற்றுங்கள்!*

*அறிவை அடக்குங்கள்;*
*ஆய்வை ஒடுக்குங்கள்;*
*அகத்தினில் ஒளியேற்றுங்கள்! - பணச்*
*செறிவெதற்கு? - பொய்ம்மைச்*
*சிறப்பெதற்கு? - கொண்ட*
*செயலுக்குத் தெளிவூட்டுங்கள்!*

*நிலவைப் பிடித்தென்ன?*
*நிலத்தில் இருந்தென்ன?*
*நிறைவான வாழ்வில்லையே! - அற*
*நெறிகளெங்கே? - மன*
*நேர்மை யெங்கே? - தீய*
*நிகழ்ச்சிக்கு வீழ்வில்லையே!*

*எழில்கூட்டும் நகரங்கள்!*
*எண்ணற்ற ஊர்திகள்!*
*ஏழ்மைக்கு விடிவில்லையே! - கல்வி*
*ஏற்றமெங்கே? - மெய்ம்மை*
*இன்பமெங்கே? - புன்மை*
*இழிவுக்கு முடிவில்லையே!*

*செயலுக்குக் குறைவில்லை;*
*சீருக்குத் தாழ்வில்லை;*
*செலவுக்கு வரவில்லையே! - நல்ல*
*வயல்களுண்டு; - நீர்க்கால்*
*வாய்களுண்டு! - வீணர்*
*வாய்க்கொரு பூட்டில்லையே!*

-1971

## 32 நிறையக் கேள்; குறையப் பேசு !

நிறையக் கேள்;
குறையப் பேசு;
நீள நினை;
தாழ நட, என்றும் - துன்பம்
நேர்வ தில்லை;
தொல்லைகளும் குன்றும்!

நிறையப் படி
குறைத் தெழுது;
நெஞ்சில் அன்பு
கொஞ்ச உறவாடு! - துயர்
நேரு மெனில்
செந்தமிழால் பாடு!

நாக்கில் ஒரு
கோடித் துன்பம்
நடையில் ஒரு
கோடித் துன்பம், ஒன்றாய் - வந்து
தாக்கும்; அவை
தவிர்க்கில் உனை வென்றாய்!

உன்ற னுக்கு
முன்னும் பின்னும்
உலக முண்டாம்
என்ப தெண்ணி வாழ்வாய் - செய்யும்
நன்றிருக்கும்!
தீது செய்யின் தாழ்வாய்!

வன்மை உடல்,
மென்மை நெஞ்சம்,
வாய்மை உரை,
தூய்மை நடை வேண்டும் - தம்பி
நன்மை வரும்;
நலமும் வரும், யாண்டும்!

-1971

## 33 கணக்கும் எழுத்துமே கல்வியென் றாகுமா ?

கல்விக் கழகத்துக் கணக்காயர்க் கெல்லாம்
சொல்லிக் கொள்ளுவேன் சொலல்வல் லவரே!
இற்றைக் காலத்துத் தளிர்விடும் இளையரைப்
பிற்கா லத்துப் பெருங்குடி மக்களாய்ச்
செய்ய வல்ல சீரிய பணியில்
மெய்யாய் உழைக்கும் மேன்மை யோரே!

பெற்றோர் யாவரும் பிள்ளைக ளைத்தம்
உற்றார் எனநினைத் தும்மிடம் விடுத்தே
அவர்தம் கல்வியும் அறிவும் உள்ளமும்
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு படியாய்
வளர்ந்து வருமென வைத்த நம்பிக்கை
தளர்ந்து விடாமல் காக்குந் தகைமையீர்!

மக்களும் நாடும் மற்றிவ் வுலகமும்
தக்கவா றியங்கிடத் தவங்கிடந் துழலும்
வாய்மை நெஞ்சினேன் உங்களை வணங்கித்
தூய்மை விளைவு தொடங்கிடக் கூறுவேன்!

குணக்குன் றனையீர்! நீவிர் கொளத்தரும்
கணக்கும் எழுத்துமே கல்வியென் றாகுமோ?

அறிவியல் நுட்பமும் ஆய்வியல் முடிபும்
செறிவுறுங் கல்விச் சிறப்பெனில் ஒப்புமோ?

மண்ணியல் வளப்பமும் மாற்றமும் பருவமும்
விண்ணியல் விளக்கமும் வெளிக்கோள் உலாக்களும்
இற்றை மாணவர்க் கேற்ற கல்வியென்
றுற்ற முடிபாய் உரைத்திடல் தக்கதோ?

கற்றுணர்ந் தடங்கிய சொற்றவச் சான்றீர்!
உற்ற கல்வியின் உட்பொருள் கேண்மினோ;

மாந்தனை மாந்தனாய் மலர்த்துதல் கல்வி!
நீந்துயிர், நெளியுயிர், நெடுவான் மிதக்குயிர்,
முகன்வால் நீண்டு முதுகுகிடை யாக
உகலும் விலங்குயிர் யாவினும் ஓங்கிப்
படிப்படி யாகப் பண்பினும் அன்பினும்
வடிப்புற வளர்ந்து வான்வரை நிமிரும்
துடிப்பே கல்வியின் தொடக்கமென் றறிக!
முடிப்பில் லாதது கல்வியின் முதிர்ச்சி!

செப்பமாய்க் கல்விக்கு ஒப்புமை யாக
எப்புறக் கோட்டமும் ஏற்புற அமைந்தவோர்
மும்முனைக் கோணத்தை முடிபெனக் கூறலாம்!
அன்பும் பண்பும் அறிவும் மும்முனை!
எப்புற வளர்ச்சியும் இருமுனை வளர்ச்சிக்கு
ஒப்புர வொழுகலே உயர்வெனக் கொள்க!
அறிவு வளர்ந்துமற் றன்பும் பண்பும்
குறுகிப் போவதால் கொடுமையே மிகுந்திடும்!
பண்பிலாக் கல்வி பதர்மிகு விளைவு!
மன்பதை யழித்திடும் மண்மாரி யென்க!

அன்பும் பண்பும் அறிவின் எழுச்சிக்கு
முன்னும் பின்னும் முட்டுக் கால்கள்!

பண்பிலா அறிவுக்குப் பாக்கித் தானின்
அண்மைக் கால அழிசெயல் பொருத்துக!

அமெரிக்காவின் பண்பாட் டிழிவை
நம்மா ணவர்க்கு நன்கு விளக்குக!

எத்துறை யறிவும் பண்பா டிலாமையால்
இத்தரை யழிவுக் கேற்றிய தீயாய்ப்
பயன்பட் டிருப்பதும் பயன்படப் போவதும்
நலம்பெற மாணவர்க் குரைத்து நாட்டுக!

பண்பிலா அறிவு பயனிலை என்றே
துணுக்குறும் நெஞ்சொடு தொடுத்துக் கூறுக.
தொடுத்துக் கூறுவ தோடமை யாமல்,ஓர்
எடுத்துக் காட்டாய் நீவிரும் இலங்குக!

உடையினில், உரையினில், ஒழுக்கம் மிக்குயர்
நடையினில், பாணியில், நாகரி கத்தினில்.
எவையெவை மாணவர்க் கேற்றமென் பீரோ
அவையா வற்றிலும் அவருமைக் கண்டு
பின்பற் றிடுமொரு பண்புடை யாளராய்
அன்புறக் காணுமா றாட்சி செலுத்துக!

அறிவையும் பண்பையும் அன்பினால் வளர்க்க!
அறிவையும் அன்பையும் பண்பினால் ஆக்குக!
அன்பையும் பண்பையும் அறிவினால் விளக்குக!
என்பும் நெகிழும் இனிய உரையினால்
எதிர்வரும் உலகை ஏற்று நடத்த,அப்
புதுத்தலை முறையினர் பூட்கை கொளும்படி
மலர்தல் செய்குவிர் மாண்பரீர்!
உலர்தலும் வளர்தலும் உலகத்து விருப்பே!

**-1971**

## 34 நெஞ்சை அகலப்படுத்து; அறிவை ஆழப்படுத்து தோளை உயரப்படுத்து!

நீலப் பெரு வானம்!, அதில்
நீந்தி உலாவரும் கதிரவன் பார்! - முகிற்
கோலச் சிதறல்களாம்,பல
கோடி விண் மீன்களின் கூட்டங்களாம்! - தம்பி
காலப் பெருவெளி பார்!, வீசுங்
காற்றினைப் பார்! ஒளி ஊற்றினைப் பார்! - மிகு
சாலப் பரப்புக் கண்டாய்! - உயிர்ச்
சாற்றிலும் அத்தகு ஆற்றல் உண்டாம்! - பார்
நீலப் பெருவானம்!

நெஞ்சு சிலிர்த்தது பார்!,கதிர்
நெற்றினைப் போல் உயிர் முற்றிடல் பார்!தூய
பஞ்சு பறந்தது போல்,உளம்
பறந்ததடா! உயிர் நிறைந்ததடா!,தம்பி
கொஞ்சமோ மிஞ்சும் இன்பம்!,உயிர்க்
கொப்பரை நிரம்பி வழியுதடா! - காற்றை
விஞ்சிடும் ஆற்றல் கண்டாய்!வான
வெளியினைப் போல் நெஞ்சம் விரிந்ததடா!அட
நெஞ்சு சிலிர்த்தது பார்!

நீலக் கடல்வெளி பார்!,அதில்
நீண்டு சுருண்டு விழும் அலைபார்!,அதன்
ஓலம் சலிப்பதுண்டோ?,உயிர்
ஊற்றுச் சுரந்தது போல் மகிழ்வாய்!,தம்பி
காலப் புழுதியெல்லாம்,உன்றன்
கால்களில் பட்டுப் பறக்குதடா,சிறு
தோலைப் பொதிந்த உடல்,சுடர்
தோற்றும் உயிர்க்கொரு மாற்றஞ்செய்மோ,அட
நீலக் கடல்வெளி பார்!

நெஞ்சை அகல உழு! - அதன்
நினைவினை வாரியெங் கெங்கும் இறை,சிறு
குஞ்செனினும் உயிர்த்தூள்! - ஒளி
கூட்டிடும் பேரிறை நாட்டிய ஊர்,அது
துஞ்சுவ தோ இருளில்?,ஒரு
தூசுமென்றோ வானில் உலாவிவரும்,தம்பி
எஞ்சிடும் வாழ்க்கையிலே,உயிர்
ஏற்றமும் காண்! புது மாற்றமும் செய்!,அட
நெஞ்சை அகல உழு!

அறிவை ஆழப்படுத்து!,அஃது
ஆக்கிய சோறெனெ நாக்கில் படை! - உயிர்ச்
செறிவில் வேறென்ன பயன்? - நாற்றச்
சேற்றிலும் தாமரை விளைவதுண்டே! - பல
நெறிகளை முன் படைத்தாய்,அவை
நீள அகலத்தைப் பின் உடைத்தாய்! - தீய
வெறிகளில் மூழ்கினை காண்! - அந்த
வெற்று வெளிகளில் உற்றுனைப் பார்! - உன்றன்
அறிவை ஆழப் படுத்து!

தோளைக்குன் றாய் உயர்த்து!,பெருந்
தோல்விகண் டாலும், நீ கால் வளையேல்,ஒரு
வாளைச் சுழற்றும் விசை - தனில்
வையகம் தன்னையுன் கையகம்காண்!வெறும்
ஊளைத் தசையுடலம்,நல்
உப்பிட்டு வைக்கினும் தப்பிடுங் காண்!,எனில்
வேளைக்குக் காப்பதுவோ?,வெட்ட
வெளியினில் காலைவை! வானில் பற!, அட
தோளைக் குன்றாய் உயர்த்து!

-1971

## 35 உண்மை கடைப்பிடி ! உழைப்பில் உறுதி கொள் !

உன்னைச் சுற்றிலும்
உன்னைக் கெடுத்திடும்
உலகச் சூழல்கள்
ஒரு கோடி! - அவற்றில்
ஊன்றிடும் நினைவினை
உடனுடன் பிடுங்கியே
ஒளிர வேண்டும், நீ
மெரு கோடி!

கண்ணைக் கெடுத்திடும்
காட்சிகள் ஆயிரம்!
காதைக் கெடுத்திடும்
உரை நூறு! - மனப்
புண்ணைக் குடைந்திடும்
புரைக ளாம்; அவை
போக்கைத் தடுத்து,நீ
கரை யேறு!

நாக்கைத் தடுத்துவை!
நரம்பை ஒடுக்கிவை!
நல்லவர் கையொடு
கைபிணை! - ஒரு
தீக்கைத் தொடர்புனைத்
தீயில் தள்ளலாம்!
தீமை செய் யாதிரு;
மெய் துணை!

உண்மை கடைப்பிடி!
உழைப்பில் உறுதிகொள்!
ஒரு நாள் வரும், உனைக்
கரை யேற்றும்! - மனத்
திண்மைக்(கு) அறந்துணை!
தேர்ந்து முடிவுகொள்!
திசையெலாம் பணிந்து;நின்
உரை யாற்றும்!

-1971

## 36 அருமைச் சிறுவர்காள் !

அருமைச் சிறுவர்காள்!
அன்றாடம் உங்கள்
பெருமை பிறங்குமா
றொன்றுசெய்க! - பின்றைப்
பெருமைக்கும் ஏனைச்
சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்!

ஒன்றறிவீர்; தீயநினை
வோங்கின் ஒழுங்குகெடும்!
அன்றன்று தீமை
அகற்றுங்கள்! - பின்றைவரும்
நன்றிக்கு வித்தாகும்
நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்!

மழுக்கலுறும்; சிற்சிலகால்
மாயங்கட் கேங்கும்;
அழுக் கடையும்; காண் பொருள்மேல்
ஆசை கொள்ளும்; - உள்ளம்,
இழுக்கல் உடையுழி
ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்!

பழச்சொல்லும் பற்சிரிப்பும்
கொண்டு பழகி
அழச்சொல்லி விட்டகல்வார்
தாமகல்க! - என்றும்
அழச்சொல்லி அல்லது
இடித்து வழக்கறிய
வல்லார் நட் பாய்ந்து கொளல்!

'மன்பதையுள் என்றும்
மனக்கோட்டம் துன்பம்' - எனத்
தென்போ டெதையும்
தெளிந்து செய்க! - அன்பிடையும்
இன்பம் விழையான்;
இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்.

-1971

## 37 யாருக்காக, நீ ?

ஊருக்காகவோ,
உலகுக் காகவோ,
உலகில் வாழ்வதாய் எண்ணாதே! - பெருமை
பண்ணாதே! - அட,
யாருக்காகவும் வாழ்ந்திட வில்லை! - உன்
சீருக்காகவே பிறந்தாய்! - உயிர்ச்
சிறப்புக்காகவே வாழ்ந்தாய்!

நீருக்காகவோ,
நிலத்துக் காகவோ,
நெடுமரம் தோன்றியதென் றெண்ணாதே! - பிழை
பண்ணாதே! - அட,
வேருக்கு மில்லை; வித்துக்குமில்லை; - தன்
விளைவுசிறக்கவே தோன்றும்-பல்
வித்துகளை மண்ணில் ஊன்றும்!

உனக்காகத் தான்
நீ வந்து பிறந்தாய்!
உயிரொளி பெறுவதே அதன் நோக்கம்! - உள
உயர் வாக்கம்!- அட,
மனக்கோட்டை யெல்லாம் மண்ணோடு சிதறும்!- உயிர்
மாயாக் கோட்டை நல் எண்ணம்!-அதில்
மாசிலாதிருப்பது திண்ணம்!

தனக்கென நினைப்பதில்
பிறர்நலன் கெடாமல்
தவறின்றி வாழ்வதே உயர் வாழ்க்கை- பிறி(து)
உயிர் வீழ்க்கை- அட,
மனக்கசண் டெல்லாம் பொதுமையால் போகும்- உடல்
மாயினும் உயிர்நலம் பெருகும்?- உனை
மதித்து, நினைத்து நிலம் உருகும்!

-1972

## 38 குழந்தை... !

கன்னங் கரிய முடி!
பசும்பொன் நெற்றி!
கருக்கொள் இளம் புருவம்!
கிளிஞ்சிற் காது!
சின்னஞ் சிறிய விழி!
சிமிழின் மூக்கு!
சிரிப்பைக் கிழிக்கும் இதழ்!
சிறு பொக்கை வாய்!

பொன்னின் பொலிந்த முகம்!
பளிங்குக் கன்னம்!
புறாவின் மணிக்கழுத்து!
குருத்துத் தோள்கள்!
மின்னல் தெறித்த ஒளி!
கரைத்த சாந்தில்
வெண்ணெய் பிசைந்த உடல்!
குளிர்ந்த மேனி!

செக்கச் சிவந்த நிறம்!
செம்பொன் கைகள்!
செவ்வொளி மொக்குவிரல்!
உமி உகிர்கள்!
தக்குத்தை தாளக்கால்!
தளிர்செம் பாதம்!
தாமரைப்பூங் குளிர்மை மணம்
உடலம் எங்கும்!

பொக்கை வாய்ப் பூமணத்தை
மோந்து மோந்து,
பூச்செண்டு மேனியின்மேல்
முகத்தால் நீந்திச்
சொக்கும் உளம்! சொக்கும் உயிர்!
சுழலும் எண்ணம்!
சொல்லழியும்; நினைவழியும்!
சொந்தம் மாயும்!

-1972

## 39 என்றன் பாட்டு!

என்றன் பாட்டு நல்ல பாட்டு!
இவ்வுல கெல்லாம்
அதைப் படிக்கும்

என்றன் பாட்டு கரும்புப் பாட்டு!
இனிவரும் மாந்தம்
அதைக் கடிக்கும்!

என்றன் பாட்டே இனிய பாட்டு!
இயற்கை உலகம்
அதில் குலுங்கும்!

என்றன் பாட்டே எளிமைப் பாட்டு!
எல்லா உயிர்க்கும்
அது விளங்கும்!

என்றன் பாட்டு குழந்தைப் பாட்டு!
எல்லாக் குழந்தையும்
அதைப் பாடும்!

என்றன் பாட்டே இயற்கைப் பாட்டு!
இவ்வுல கெல்லாம்
சிலை யோடும்!

என்றன் பாட்டு பொதுமைப் பாட்டு!
எனக்கும் அதுதான்
உயர் வூட்டும்!

என்றன் பாட்டே உரிமைப் பாட்டு!
எல்லா நலனும்
அது கூட்டும்!

என்றன் பாட்டே நிலைக்கும் பாட்டு!
எல்லாப் பாட்டும்
உலகுடைமை!

என்றன் பாட்டே புதுமைப் பாட்டு!
எல்லாப் பாட்டும்
பொது வுடைமை!

-1972

## 40 தமிழத் தம்பி, நல்ல தம்பி !

தமிழத்தம்பி நல்லதம்பி
தமிழ் படிப்பானாம் - தூய
தமிழ் படிப்பானாம்!- முன்னைத்
தாழ்வு நீங்க, வாழ்வும் ஓங்கத்
தனைக் கொடுப்பானாம்- புரட்சி
தனைத் தொடுப்பானாம்!

தமிழத்தம்பி நல்லதம்பி
தமிழ் வளர்ப்பானாம்!- பண்பு
தனை வளர்ப்பானாம்!- உயர்
தந்தனத்தோம் பாட்டுப் பாடிக்
கலை வளர்ப்பானாம்!- நல்ல
கதை நடிப்பானாம்!

தமிழத்தம்பி நல்லதம்பி
தமிழ் புரப்பானாம்!- உள்ளம்
தனை மதிப்பானாம்!- இந்தத்
தரை முழுதும் சுற்றித் திரிந்து
புகழ் தொகுப்பானாம்!- நெஞ்சின்
புரை செகுப்பானாம்!

தமிழத்தம்பி நல்லதம்பி
குலம் விரும்பானாம்!- மக்கள்
உளம் விழைவானாம்!- சமயத்
தாழ்ச்சி நீக்கி மெய்ம்மைப் பொருளைத்
தனை நினைப்பானாம்- அறிவு
தர முனைவானாம்!

-1972

## 41 எங்கும், எதிலும் ஒழுங்கு உண்டு !

உண்ணும் வகையிலும் உறங்கும் முறையிலும்
ஒழுக்கம் உண்டு; உணர்ந்து கொள்!- தம்பி,
எண்ணும் நினைவிலும் இயற்றும் வினையிலும்
ஏற்றவை உண்டு! எண்ணிக் கொள்!

அமரும் நிலையிலும் எழூஉம் விரைவிலும்
அமைவுகள் உண்டு; அறிந்து கொள்!,தம்பி,
நிமிரும் பொழுதிலும் குனியும் பொழுதிலும்
நெறிகள் உண்டு; தெரிந்து கொள்!

உலவும் நடையிலும் உடுக்கும் உடையிலும்
ஒழுங்கு முறைகள் பலவுண்டு!- தம்பி,
குலவும் நட்பிலும் குழையும் சிரிப்பிலும்
குறைகள் நேர்வதும் மிகவுண்டு!

படிக்கும் நூலிலும் பாடும் இசையிலும்
பயிலும் ஒழுங்குகள் பலவாகும்!- நீர்
குடிக்கும் நிலையிலும் குளிக்கும் பொழுதிலும்
கொள்ளும் முறைகளும் சிலவாகும்!

உரைக்கும் சொல்லிலும் ஓய்வுப் பொழுதிலும்
ஒழுங்குகள் உண்டு! ஒதுக்காதே!- மடல்
வரையும் முறையிலும் வாங்கும் நிலையிலும்
வரைமுறை உண்டு! வழுக்காதே!

பார்க்கும் இடத்திலும் பழகும் வகையிலும்
பண்பொடு நடக்கப் பயின்றுகொள்!- தம்பி,
ஊர்க்குள், வீட்டினுள் உலகினுள்- நடக்கையில்
உயர்வாய்ப் பழகிட உணர்ந்து கொள்!

-1973

## 42 துணிந்து நில்; குனிந்து சாகாதே !

காடும் கரம்பும் உலகில் நிலவும்;
கலக்கம் உளத்தில் தோன்றும் வழக்கம்!
கேடும் துயரும் உறுதி விளைக்கும்;
கீழ்மைப் படாதே!,உன்னைக்
கெடுக்கும் நினைவும் நடுவில் முளைக்கும்;
கிறங்கி விடாதே!

மேடும் பள்ளமும் உலகில் எதிரும்;
மிரளும் மனமும்; தோன்றும் புதிரும்!
நாடும் நகரும் இடையில் உள்ளன;
நடுக்கம் கொள்ளாதே!- உன்
நலமும் வளமும் துணிவில் உள்ளன;
நசுங்கி விடாதே!

இடையில் ஆயிரம் தடைகள் நெருங்கும்;
இயற்கை அதுதான்; முயற்சிக் கொதுங்கும்!
படையில் நீயே ஒருவன் எனினும்
பதுங்கிக் கொள்ளாதே!- உன்
பாதம் நடக்கும் நடையில் வெற்றி!
பணிந்து விடாதே!

முள்ளும் கல்லும் நடையைத் தடுக்கும்;
முழக்கும் இடியும்; பெய்யும் மழையும்;
சொல்லும் இழிவும் உறுதி குலைக்கும்;
சுருண்டு விடாதே!- ஒளி
சுழற்றும் விழியில் அகலும் தடைகள்!
சோர்ந்து விடாதே!

உள்ளமும் புறமும் உண்மை சேர்க்க!
உரனும் துணிவும் மனத்தில் தேக்க!
கொள்ளும் கொள்கை தெளிவு கொள்க;
குலைந்து போகாதே!- உன்னைக்
கொல்லும் பொழுதும் வெல்லும் உறுதி;
குனிந்து சாகாதே!

-1974

## 43 அச்சுரை எல்லாம் அறிவுரையன்று!

உண்மையுஞ் சொல்வார்;
பொய்யையும் உரைப்பார்!
உரைத்தவை சரியென நினைக்காதே!
நன்மையும் இருக்கும்;
தீமையும் இருக்கும்!
நல்லவை செய்திட மலைக்காதே!

உண்மையும் நடுங்கும்;
பொய்யதும் ஓங்கும்!
உருவத்தில் சிறப்பினைப் பாராதே!
அண்மையும் கெடுக்கும்;
தொலைவதும் உதவும்!
ஆய்ந்துகொள்; பின்பழி கூறாதே!

எல்லோரும் சொல்வார்;
எழுதுவார்; யாவும்
ஏற்றவை என்றே எண்ணாதே!
நல்லவை இருக்கும்;
நலிந்தவை இருக்கும்;
நல்லதை மட்டும் தள்ளாதே!

அன்புடன் சொல்வார்;
அழும்படி சொல்வார்!
அனைத்தையும் உயர்வென ஏற்காதே!
முன்பவர் செயலையும்
முயற்சியும் கருதி
முடிவுசெய்; பிறர்உரை கேட்காதே!

அச்சுரை எல்லாம்
அறிவுரை அன்று;
அடிப்படை யின்றி நம்பாதே!
நச்சுரை உண்டு;
நயவுரை உண்டு;
நம்புமுன் நினை;பின் வெம்பாதே!

-1975

## 44 தோற்றம் வேறு; செயல் வேறு !

கசப்பும் இனிப்பும்
கலந்து கிடக்கும்;
கள்ளமும் உள்ளமும்
மலர்ந்து தோன்றும்;
பசப்பும் நயமும்
பார்த்துப் பழகு;
பதற்றப் படாதே!- சில
பகையும் நகைக்கும்;
நட்பும் கடுக்கும்;
பயன் மறவாதே!

உயர்வும் தாழ்வும்
உறழ்ந்து கிடக்கும்;
உண்மையும் பொய்யும்
ஒன்றாய்த் தெரியும்;
பயிரும் களையும்
பயனால் தெளிக;
பல்இளிக் காதே!- சில
பழத்தில் கசக்கும்!
காயில் இனிக்கும்;
பார்வை போதாதே!

அன்பும் வன்பும்
அளவிக் கிடக்கும்;
அறமும் மறமும்
குலவி மயக்கும்;
நன்மை தீமை
நாவில் தெரியா?
நம்பி விடாதே!- சில
நாயில் நரிகள்;
நரியில் நாய்கள்;
நன்றி மறவாதே!

-1975

## 45 நம்பிக்கை!

கணியன் ஒருவன் மரத்தடியில்
கற்கள், சோழி, கரும்பலகை,
துணியின் மூட்டை, மணிமாலை,
சுவடிக் கட்டு, பொத்தகங்கள்,
பணியின் விளம்பரச் சிறுபலகை,
படங்கள் ஆகிய இவற்றுடனே
அணியணி யாகத் திருநீறும்
அணிந்தே முடுக்காய் அமர்ந்திருந்தான்! 1

தெருவில் நடந்து கொண்டிருந்தேன்!
திகழும் நிழலுக் காங்கொதுங்கி,
வருவோர் போவோர் வேடிக்கை
வாய்ப்பாய் நோக்கிய வாறிருந்தேன்!
தெருவில் செல்வோர் சிற்சிலபேர்
திருட்டுகள், வழக்கு, திருமணங்கள்,
வருவாய் வாய்பென் றிவைபற்றி
வந்தே கணியம் கேட்டிருந்தார்! 2

வந்தோர்க் கெல்லாம் பாட்டாலும்
வாயுரை யாலும், கோள்நிலைகள்,
முந்திய செயல்கள், நடைவினைகள்,
முடிவில் நடக்கும் விளைவெல்லாம்
தந்திர மாக அவரவர்க்குத்
தக்க படியாய்ச் சொன்னதுடன்
மந்திரம் மாயம் எனச்சிலர்க்கும்
மறைவா யுரைத்துக் கொண்டிருந்தான் 3

அரைமணி நேரம் சென்றிருக்கும்!
அடுத்தே நகர்ந்திட நினைத்திருந்தேன்.
விரைவாய் ஒருவன் மிதிவண்டி
மேலிருந் திறங்கி அதைநிறுத்தி,
உரைமுடி யாமல் கேட்டிருந்த
ஓரிரு பேரைத் தாம்விலக்கி,
இரைந்தே கணியனைக் கண்டபடி
ஏறாய் மாறாய் பேசிநின்றான்! 4

"மடையா, உனைப்போய்க் கேட்டேனே!
மதிப்பாய் இப்பணி விட்டுவிடு.
அடையாத் துன்பம் நீயடைவாய்
அடிப்பேன் செருப்பால் இப்பொழுதே
கடையா வைத்திருக் கின்றாய், நீ
கழுதை!" என்றே பலகூறி,
நடையன் எடுத்தான் அடிப்பதற்கே!
நடுத்தெருக் கூட்டம் கூடியதே! 5

எட்டியே நான்நின் றிருந்ததனால்
என்னென் றறியக் கூட்டத்தைக்
கிட்டினேன்; உள்ளே தலைநீட்டிக்
கிடைக்கும் செய்தி கேட்டிருந்தேன்!
முட்டிய வாறாய்ச் சிற்சிலரும்
முன்னடிக் கொண்டே பற்பலரும்
எட்டியும் எக்கியும் பார்ப்பபோராய்
இருந்தார் சிலரும் பார்த்திருந்தேன்! 6

கூட்டத் திருந்தோர் இருமுகமாய்க்
குறைகள் நிறைகள் பேசிநின்றார்
வாட்டத் துடனே கிழக்கணியன்
வாய்பே சாமல் நின்றிருந்தான்!
நாட்டத் துடனே செய்தியினை
நறுக்குந் துணுக்கு மாய்ச்சிலர்பால்
கேட்டுக் கொண்டேன், தெளிவாக!
கிழவன் மேலே பிழையில்லை! 7

பத்துப் பதினொரு நாட்களின்முன்
பார்த்தது, கணியம், மிதிவண்டி!
ஒத்து வராமல் சண்டையிட்டே
ஓடிப் போனாள் அவன்மனைவி!
"எத்திசை போனாள்? வருவாளோ?
எத்தனை நாளில் வந்திடுவாள்?
ஒத்திருப் பாளா?" என்றெல்லாம்
ஒருநாள் கணியனைக் கேட்டானாம்! 8

அதற்குக் கணியன் பலவாறாய்
அலசிப் பார்த்தே, "உன்மனைவி
இதற்கு முன்பே ஒருவனிடம்
ஈடு பாடாய் இருந்திருந்தாள்;
அதற்கும் கோள்கள் கரணியமாம்!
அவனுடன் ஓடிப் போயிருப்பாள்!
எதற்கும் காவல் நிலையத்தில்
இதனைச் சொல்லி முறையிடுவாய்!" 9

-என்றே கூறித் "தென்திசையில்
இருக்கும் ஊரில் இருந்திடலாம்!
இன்றே போய்ப்பார்" என்றானாம்!
இவனும் தேடித் திரிந்தானாம்!
அன்றோர் நாளில் அவன்மனைவி
அன்னை யுடனே திரும்பினாளாம்!
சென்றவள் நேரே தாயிடந்தான்
சென்றிருந் தாளென் றறிந்தானாம்! 10

வந்தது சினமும் கணியனின்மேல்!
வாழ்க்கை தவறினள் என்றன்றோ
இந்தக் கணியன் உரைத்திருந்தான்!
"என்றன் மனைவி சண்டையிட்டே
சொந்தத் தாயின் வீடன்றோ
சொகுசாய்ச் சென்று மீண்டுள்ளாள்!
எந்தப் படியாய்ச் சொன்னாய், நீ"
என்றே கேட்டுக் கொண்டிருந்தான்! 11

அவனை மெதுவாய் என்பக்கம்
அழைத்துக் கேட்டேன், "அப்பாநீ
அவளை மணந்தே எத்தனையாண்
டாயிற்" றென்றேன், "பத்தாண்டாய்
அவளோ டிருந்து வாழ்கின்றேன்"
என்றான், அவனும் பெருமையுடன்!
"அவளோ டித்தனை யாண்டிருந்தாய்!
அவளை உனக்குத் தெரியாதோ?" 12

உன்னோ டித்தனை ஆண்டிருந்த
ஒருத்தியை நீயும் நம்பாமல்,
என்ன வகையும் நீயறியா
திருந்தான் இவன்மேல் நம்பிக்கை
என்ன முறையால் கொண்டாய்,நீ"
என்றே கேட்டேன்; வாயடங்கி
என்னைப் பார்த்தான்; நடந்தேன்,நான்!
இருந்தவர் தாமும் கலைந்தனரே! 13

**-1976**

## 46 மதப்பற்று !

அன்பர்கள் இருவர் ஓர்நாள்
அதிகாலை, வயற்பு றத்தில்,
இன்பமாய்ப் பேசிக் கொண்டே,
எதிரெதிர் சிறிது தள்ளி,
வன்புதர் அருக மர்ந்தே
வன்கடன் கழிக்க லுற்றார்!
பின்பவர் பேச்சில் தெய்வப்
பேச்செழ லாயிற் றங்கே! 1

இருவரில் ஒருவர் 'சைவர்'!
எதிர்ந்தவர் திருமால் அன்பர்!
திருமாலின் பத்தர் சொன்னார்;
'திருப்பதி போக வேண்டும்;
பெருமாளுக் கிறுக்க வேண்டிக்
கொண்டதைச் செய்ய வேண்டும்;
ஒருமாதம் இரண்டு மூன்றாய்
ஓராண்டு சென்ற" தென்றே! 2

எதிரினில் இருந்த *'சைவர்'*
இடுப்பினைக் குத்திக் கொண்டே,
"கதிர்அறு வடைக்குப் பின்னர்,
'கட்டாயம் பழனி வந்து,
சதுரக்கா வடியெ டுப்பேன்'
என்றுநான் வேண்டிக் கொண்டேன்
குதிரவே இல்லை நேரம்;
குடும்பத்தில் தொல்லை" என்றார். 3

நெருப்பவி யாத வண்ணம்
நீள்சுருட் டிழுத்த வாறே,
"திருப்பதி பார்த்துள் ளீரா?"
எனக்கேட்டார் திருமால் அன்பர்!
"திருப்பதி என்ன, ஐயா?
பழனியைச் சென்று பாரும்;
இருப்புப்பா தைமேல் வண்டி
இழுப்பதை...!" என்றார் *'சைவர்'*! 4

செருப்பினில் நரகல் பட்ட
எரிச்சலால் முணகிக் கொண்டே,
"விருப்பந்தான்; நேரமில்லை;
விடியுதா?" என்றே அந்தத்
திருப்பதி யன்பர் சொல்லித்
திரும்பினார், *'சைவர்'* பக்கம்!
நெருப்பினில் விழுந்தாற் போல
நெஞ்செல்லாம் எரிந்தார் அங்கே! 5

*'சைவர்'* தம் முன்னால் உள்ள
துளசியின் தழையைக் கொஞ்சம்
கைகளால் உருவித் தம்கால்
கழிவினைத் துடைக்கக் கண்டார்!
மெய்யெலாம் பதறி நிற்க,
மிடறு,வாய் துடிது டிக்க
"வெய்யெரி வாயில் வீழ்வீர்;
மீளவும் மாட்டீர்" என்றார் 6

.........................................................

(முடிவுறாப்பாடல்)

**1976**

## 47 உன்னை நம்பிக் கிடக்குது நாடு !

நம்பிக் கிடக்குது நாடு - தம்பி
நம்பிக் கிடக்குது நாடு-உன்னை
நம்பிக் கிடக்குது நாடு-பெரும்
நலத்தினைச் செய்திடு வாயென நாளும் (நம்பிக்)

கும்பிக் கிலாதொரு கூட்டம் - மேற்
கூரையில் லாமலே வாழ்வதும் எண்ணி
வெம்பிக் கிடந்திடும் நெஞ்சம்-இதை
வேரொடு சாய்த்திடப் போரிடு வாயென (நம்பிக்)

துப்பின்றி வாழ்ந்திடு வோர்கள் - கேட்கும்
துணிவின்றி நொந்துகண் ணீர்விடு வோர்கள்
உப்பின்றிக் கூழின்றிச் சாவார் - உனை
ஒப்படைத் தங்குப் புறப்புடுவாயென (நம்பிக்)

ஒவ்வொரு நாளும் நினைப்பாய்-நொடி
ஓய்வின்றி உடல்பொருள் ஆவியும் ஈவாய்!
கவ்விற் றடா,இருள் நாட்டை-செங்
கதிரெனத் தோன்றி ஒளிதரு வாயென (நம்பிக்)

உன்கல்வி உன்அறி வூற்று-உன்
உழைப்பும் முயற்சியும் வாழ்க்கையும் அன்னார்
புன்னிலை மாய்த்திடல் வேண்டும்-எனும்
புத்துணர் வோடுளம் ஒத்தெழு வாயென (நம்பிக்)

-1977

## 48 குறைகளும் குணங்களும்!

எல்லா நலன்களும் சிறக்கும் ஒருவற்கு
ஏதோ ஓரிரு குறைகள் இருக்கலாம்!
ஏதோ ஓரிரு குறைகளுக் காகவே
பொல்லான் அவனெனப் புகன்று விடாதே!
பொல்லான் அவனெனப் புகன்றிடும் உன்னிலும்
புன்மை உணர்வுகள் ஒருசில பூக்குமே!

கல்லா மாந்தருள் கல்வியால் சிறக்கும்
கவினுறு குணங்களுள் ஓரிரண் டிருக்கலாம்!
கவினுறு குணங்கள் ஓரிரண் டிருப்பினும்,
நல்லான் அவனென நவிலுக உடனே;
நல்லான் அவனென நவில நவிலவே
நன்மைக் குணம்பல அவனிடம் நண்ணுமே!

-1977

## 49 உயர்வும் தாழ்வும் !

கடலில் மிதந்தோம்;
தரையில் ஊர்ந்தோம்;
காற்றில் பறந்தோம்; என்றாலும்,
உடலில் பொறையும்
உளத்தில் நிறையும்
ஒருங்கே இழந்தோம்! உயர்வாமோ?

அழகில் மிளிர்ந்தோம்;
அறிவில் ஒளிர்ந்தோம்;
ஆய்வில் சிறந்தோம்; என்றாலும்
பழகில் பகையும்
பண்பில் புரையும்
பகட்டில் இழந்தோம்! பயனாமோ?
நகர்கள் அமைத்தோம்;
நாடுகள் கண்டோம்;
நாற்புறம் விரிந்தோம்! என்றாலும்,
அகவொளி இருண்டோம்!
அன்பில் தாழ்ந்தோம்!
அழிவில் வீழ்ந்தோம்! அறிவாமோ?

-1977

## 50 இளமை இழிவானால் வாழ்வு வீணாகும் !

பரட்டைத் தலையும்
பன்னிற ஆடையும்
பாதையில் திரிவதும் அறிவன்று!-வெறும்
வறட்டுப் பேச்சும்
வாய்வெடிச் சிரிப்பும்
வம்பர்க் கியற்கை; பண்பன்று!

தொங்கல் முடியும்
தொளதொள உடையும்
தொம்பர் நடையும் அழகன்று!-நலம்
மங்கும் படிக்கே
இராப்பகல் திரிவது
மாடுகள் இயல்பு; நமதன்று!

தெருவோ ரத்துத்
திண்ணையில் நடையில்
திரளாய்க் கூடிப் பேசுவதும்-அங்கு
வருவோர் போவோர்
வம்புக் கிழுத்து
வாயடி கையடி செய்குவதும்,

ஒருவா றேனும்
உருப்படி யாகா
உலுத்தர் செயல்கள்; இழிவென்க!-இளம்
பருவம், அறிவுப்
பயிர்விளை பருவம்!
பாழாய்ச் செய்தல், அழிவென்க!

இளைஞர் நலமே
எதிர்வரும் நலமாம்!
இன்றே நாளையின் வித்தாகும்!-அதன்
விளைவிழி வாயின்
வீணாம் வாழ்க்கை
வினையே இளமையின் முத்தாகும்!

-1977

## 51 அழகும் அருவருப்பும்!

அழகாய் உடுப்பதை
அளவில் குறைத்தால்
அருவருப் பாக
இருந்திடும்!-அது
தெருவில் யார்க்கும்
விருந்திடும்!-பிறர்
பழகும் முறையில்
பண்பைத் தவிர்த்தால்
பழுதே வந்து
நிறைந்திடும்-உளப்
பான்மை மிகவும்
குறைந்திடும்!

தொடைகள் தெரிய
உடைகள் உடுப்பது
தொந்தரை களையே
விளைத்திடும்!-பெருந்
துன்பம் கூட
முளைத்திடும்!-உயர்
நடையும் ஒழுங்கும்
நம்மைக் காக்கும்;
நாட்டைக் காக்கும்;
நலந்தரும்!-மன
வாட்டம் போக்கும்;
வளந்தரும்!

-1977

## 52 பொருந்தா ஆசையைப் புதைத்து, உடன் விலகு!

உனக்கும்,உன் நிலைக்கும்
உன்அறி வுக்கும்!
ஒத்து வராததை
நினைந்துளம் உருகி
மனக்கற்பனை யாய்
வானள வெண்ணி
மண்ணாய்ப் போகாதே!-தம்பி
மண்ணாய்ப் போகாதே!

நினக்குப் பொருந்தா
நினைவுகள் உன்னை
நிலைகுலைத் தழிக்கும்!
பழியினை நிறுத்தும்!
அனற்காடாம் ஆசை!
அதனிடை வீழ்ந்தே
அழிந்து போகாதே!-தம்பி
அழிந்து போகாதே!

பொருத்த மானதை
எண்ணிடப் பழகு!
பொருந்தா ஆசையைப்
புதைத்துடன் விலகு!
கருத்த மனத்தினால்
கற்பனை மாளிகை
கட்டி யழியாதே!-தம்பி
காற்றில் உலராதே!

இயன்றதை நினைக்கவும்
இயன்றதை அடையவும்
எண்ணுதல் தக்கதாம்!
இல்லெனில் இழிவாம்!
பயன்தரா நினைவைப்
பகல்இரா நினைந்து
பாழாய்ப் போகாதே!-தம்பி
பழியில் வேகாதே!

-1977

## 53 பதற்றம் கொள்ளாதே!

தொலைவில் இருக்கையில்
அழகாய்த் தெரிவது
நெருங்கிப் பார்க்கையில்
நெருடாய் இருக்கும்!
மலைவும் குலைவும்
மனத்தின் இயல்பு!
மயக்கம் கொள்ளாதே!-தம்பி
மாண்பை இழவாதே!

அழகெனப் பெறுவதோ
கட்புலன் அறிவு!
அன்பெனப் பெறுவதோ
மனப்புலன் தெரிவு!
பழகப் பழகவே
பயன்தெளி வாகும்!
பார்வை போதாதே!-தம்பி
பதற்றம் கொள்ளாதே!

பளபளப் புறுவதும்
பகட்டாய்த் தெரிவதும்
பயனில் குறையலாம்;
பண்பில் தாழலாம்!
வளவளப் பேச்சில்
வல்லமை விளங்குமோ?
வம்பில் இறங்காதே! - தம்பி
வாழ்வை இழக்காதே!

-1977

## 54 எதிர்ப்புக்கு இளைக்காதே!

எதிர்ப்பா ளர்கள்
எங்கும் இருப்பர்;
என்றும் இருப்பர்; இளைக்காதே!-பெரும்
புதிர் அது தம்பி!
புதுமை அன்று!
பொதுமைத் தொண்டில் களைக்காதே!

எதிர்மின் ஆற்றல்,
நேர்மின் ஆற்றல்
இரண்டும் உண்டே! அறிவாய்,நீ!-ஓர்
அதிர்வால் அன்றோ
அசைவே உண்டாம்!
ஆக்கம் உண்டாம்! தெளிவாய், நீ!

ஒருவன் உன்னை
எதிர்க்கும் போதே
ஊக்கந் தோன்றும்; உரந் தோன்றும்!-நல்
பெருமிதந் தோன்றும்;
அறிவுந் தோன்றும்!
பேச்சும் செயலும் மிகத் தோன்றும்!

எருவாய்க் கொள்வாய்,
எதிர்ப்பை எல்லாம்!
இயக்கம் யாவும் அதிர்வென்க!-உயிர்
கருவாய் உருவாய்த்
திருவாய்த் தோன்றல்
கருவணு இரண்டின் எதிர் வென்க!

உண்மையை என்றும்
பொய்ம்மை எதிர்க்கும்!
உயிர்ப்பில் ஒளிர்வது மெய்யாகும்!-மனத்
திண்மையே வாழ்க்கை!
தேற்றமே வீரம்!
தெளிவாய்! அழிவது பொய்யாகும்!

-1977

## 55 தனி நலத்தைத் தவிர்!

உள்ளத்திலே உண்மைஒளி
உதட்டினிலே கனிந்தமொழி
கள்ளமற்ற தொண்டுநலம்
- பாண்டியா - நம்
காலத்திற்குத் தேவையடா
- பாண்டியா!

அண்ணனையும் தம்பியையும்
அடிப்பறிக்கும் வேலையெல்லாம்
எண்ணுதற்கும் நெஞ்சுசுடும்
- பாண்டியா - நம்
இனத்தினையே கீழ்ப்புதைக்கும்
- பாண்டியா!

தப்பிருக்கும் தவறிருக்கும்
தாங்கிலன்றோ உறவிருக்கும்
எப்புடையும் எம்மருங்கும்
- பாண்டியா - அவை
இயற்கையடா மயலறுப்பாய்
- பாண்டியா!

உன்வயிற்றை உன்நலத்தை
ஒக்கநினைத் தே,இனத்தைப்
புன்செயலால் கூறுசெயல்
- பாண்டியா - நமைப்
புதைகுழிக்குள் தள்ளுமடா
- பாண்டியா!

சட்டிசுட்ட தெனக்குதித்து
நெருப்பினிலே சாய்ந்தகதை
எட்டியதோ கண்கவர்ச்சி
- பாண்டியா - இங்கு
இருப்பதன்மேல் அங்கிருக்கும்
- பாண்டியா!

-1977

## 56 வாழ்வியல் முப்பது!

புகழ்ச்சியின் மயக்கறு!
புன்மையை உதறு!
இகழ்ச்சியைத் தாங்கு;
எள்ளலை எடுத்தெறி,
நிகழ்ச்சியை வரிசைசெய்
நினைவை உறுதிசெய்!
மகிழ்ச்சியும் துயரமும்
மனத்தின் செயல்களே! 1

ஊக்கமும் முயற்சியும்
உண்மையும் நேர்மையும்
ஆக்க வினைகளும்
அடிப்படைக் கொள்கைகள்!
ஏக்கம் அகற்று!
ஏறுபோல் வினைசெய்
தாக்கும் இழிவுகள்
தாமே விலகிடும்! 2

இன்றைய நாள் நினை;
இனிவரும் நாள் நினை;
என்றும் புதியன், நீ!
யாவும் புதியன!
அன்றன்றும் புதுநாள்!
அனைத்தும் இனியன!
ஒன்று, கை போகின்
ஒன்றுன் கைவரும்! 3

உள்ளம் விழைவதை
அறிவினால் ஓர்ந்துபார்!
தள்ளத் தகுவன
உடனே தள்ளுவாய்!
தள்ளத் தகாதென்
றறிவு தேர்வதைக்
கொள்ள முயற்சிசெய்!
கொடு நினை வகற்று! 4

உணர்வாய் நினைப்பன
உன்னை உயர்த்தும்!
மயர்வாம் நினைவுகள்
அறிவையும் மயக்கும்!
துயர்வுறும் வினைக்குத்
துணிவுகொள் ளாதே!
அயர்வின்றி இயங்கு!
ஆக்கம் துணைவரும்! 5

ஒழுக்கமே உன்றனை
உயர்த்திடும் படிநிலை
இழுக்கம் இழுக்கு!
இழிவுறும் அதனால்!
பழக்கம் கொடியது!
பண்புபொன் மகுடம்!
இழக்கும் பொழுதுகட்(கு)
ஈட்டம் நினைந்துபார்! 6

ஒவ்வொரு நொடியும்
உனக்கென வாய்த்தது!
எவ்வொரு நொடியும்
இழத்தல்செய் யாதே!
ஒவ்வொரு நொடிக்கே
ஏங்கி யிருந்ததாய்
அவ்வொரு நொடியும்
அளாவிப் பயன்பெறு! 7

நேற்றெனல் வேறு!
இன்றெனல் வேறு!
நேற்றிருந் ததுபோல்
இன்றிருந் திடாதே!
நேற்றினும் இன்றுநீ
நெடிது வளர்ந்துளாய்!
நேற்றைய வளர்ச்சியுள்
நினைவொடுக் காதே! 8

நேற்றைய நினைவுகள்
இன்றைய செயல்கள்!
நேற்றைய அறிவோ!
இன்றறி யாமை!
நேற்றைய அடிக்குமேல்
நெட்டடி இன்றுவை!
நேற்றுநீ காற்றெனில்
நீள்விசும் பின்றுநீ 9

உன்றன் விழிகளை
உயர்த்துக வானில்!
உன்றன் செவிகளை
உலகெலாம் பரப்புக!
குன்றுபார்! கதிர்பார்!
கோடிவிண் மீன்பார்!
நின்றுபார்! நடந்துபார்!
நீ, சிறு உலகம்! 10

சிற்றுயிர் எறும்பும்
சுற்றுதல் காண், நீ!
மற்றுயிர் எல்லாம்
இயங்குதல் மதித்துணர்!
அற்றெனில் நீ, ஏன்
அமர்ந்திங் கிருப்பது?
கற்றுவா; எண்ணிவா;
காற்றில் நனைந்துவா! 11

மலைமுக டேறு!
மடுவினில் இறங்கு!
கலைகுவி சோலையுள்
காற்றாய் நுழைந்து போ!
அலைவீட் டுள்புகு!
ஆற்றினில் நீந்து!
புலைநினை வழிந்திட
இயற்கையுள் புதை,நீ! 12

உயிரை மலர்த்து;
உணர்வை அகல்செய்!
பயிர், நீ! கதிர், நீ!
பழம்பெரு வான், நீ!
துயர்கொளும் சிறிய
துகளிலை; நீ, ஓர்
உயிரொளிப் பிழம்பு;
உலக உடம்பு! 13

சிற்றிறை வன்,நீ!
சிந்தனை வெள்ளம்!
அற்றிடாப் பிறவி;
அறிவுக் கொழுந்து!
வற்றிடா ஊற்று;
வளர்பெரும் புடவி!
இற்றிடா நெற்று;
கோடிக் குமுகம்! 14

சிறுமையை எண்ணிச்
சிறுத்துப்போ காதே!
வெறுமையை நினைந்து
வெயர்த்தழி யாதே!
குறுமை நினைவுகள்
குறுமையாம் வாழ்க்கை!
நறுமை நினைவுகள்
நல்லொளிப் பிறவி! 15

உண்மை வலியது!
உள்ளமும் வலியது!
திண்மை தருவதும்
தேர்வதும் அதுதான்!
மண்மேல் அனைத்தும்
மடிந்துமட் குவன!
என்மேல் எண்ணிய
ஒருவனாய் இரு, நீ! 16

புன்மை சிறியது;
பொய்மையும் சிறியது!
புன்மேல் பனித்துளி
போலும் உடம்பதன்
மின்போல் வாழ்க்கையில்
மீந்துவ துயர்வே!
புன்மையும் புரையும்
பொக்கன; புதைவன! 17

தருக்குகொள் ளாதே!
தன்முனைப் பகற்று!
செருக்குச் சேற்றினில்
சிதைந்தவர் பலபேர்!
உருக்குலைத் திடும், அது;
உன்னையும் உம்மையும்!
திருக்குலைத் திடும், அது;
தீமையும் விளைக்கும்! 18

உலகுக் குரியனாய்
உன்னை உயர்த்திடு!
உலகுக் குரியராய்
உயர்த்து மாந்தரை!
கலகக் கொள்கையில்
கால்கோ ளாதே!
விலகப் பயில், நீ;
வீணுரை வீணரை! 19

மாந்த ஒளி, நீ!
மந்த விலங்கிலை!
ஏந்தல் எனநட!
இளைத்தும் தலைநிமிர்!
காந்தப் பார்வையால்
மக்களைக் கவர்ந்திடு!
சேந்து, அவர் நினைவை!
செம்மை நினைவு வார்! 20

அறிவொளி விளக்கால்
அவர் விளக் கேற்று!
செறிவுரை பகர்ந்திடு!
செழிக்க அன்புசெய்!
முறிவுரை பகரேல்!
முகவுரை கீழ்மை!
வெறியுணர் வடக்கு!
வீம்பறி யாமை! 21

உரையால் உரைபெறு!
உவகையால் ஒளிசேர்!
புரைசொல் இழுக்கு!
போலிமை வினைதவிர்!
திரையிட் டிராதே!
தீமையைத் துணிந்துகொல்!
வரையறு போக்கை;
வாழ்வைக் காதல் செய்! 22

கலைபயில்; எண் பயில்;
கவினிலக் கியம்பயில்!
சிலைபயில்; வண்ணச்
சித்திரம் எழுது!
அலைபயில் கலம்பயில்!
அளாவும் விண்பயில்!
உலை பயில்; உடல் பயில்;
உன்னை நீ, பயில்! 23

விளங்கிய செல்வம்
வினைபடு கருவி!
வளங்களைப் பகிர்ந்து கொள்!
வயல்விளை வறிவு!
உளங்கொள ஈத்துண்!
உவகையே ஈகை!
களங் கல் விக்கமை!
கனவிலும் கேள்விகொள்! 24

சிறக்கச் செய்திடு
சிறப்பூண் சிறிதுண்!
உறக்கம் மிகுதவிர்!
ஒய்வுளக் கிளர்ச்சி!
மறக்க மறப்பன!
மதிப்பன மதி; மகிழ்!
துறக்க, துறப்பன!
துய்ப்புயிர் வாழ்க்கை! 25

ஓம்புக நல்லுடல்;
உயிர்க்கது ஊர்தி!
சோம்பல் இறப்பு!
சுறுசுறுப் பியக்கம்!
தீம்பர் இணைதவிர்!
தேனினும் அளவுகொள்;
தேம்பல் கோழைமை;
திறலொடு துணிந்திடு! 26

நகைநட் பன்று;
நன்னட் பறிந்துதேர்!
பகைமுன் விலகு!
பார்வையிற் கூர்மைகொள்!
மிகைதவிர் எதிலும்!
மெப்புரை தப்பு!
புகைநெருப் பாகும்!
பொய்வளை விழையேல்! 27

பொழுதெழு முன்னெழு!
பொழுதொடு துயில்சேர்;
பழுதுறங் கின்மை!
பனிநீர் நிதங்குளி!
பொழுது பெறாதே!
தூய்மை உடையணி!
விழுதெனத் துணையிரு!
வீறுவிந் தடக்கம்! 28

பொருந்துணா விருந்து;
புறவுரை முதுபிணி!
அருந்தலும் அளவுசெய்!
ஆசை அடக்கியாள்!
திருந்துதல் வாழ்க்கை!
தெறுநோய் முன்தவிர்!
மருந்துணல் தீது!
மணிநீர் மருந்து! 29

பொதுமை உலகிது;
பொதுமை வாழ்விது;
பொதுமை உயிர்நலம்!
பொதுமையே இயக்கம்!
பொதுமைஉன் எண்ணம்;
பொதுமைஉன் வினைகள்!
பொதுமையாய் ஆக்கு, உனை!
புதுநலங் காண்பாய். 30

-1977

## 57 வாழ்க்கைத் திரிபுகள்!

அறிவின் பெருக்கால்
அன்பு நசுங்கி
ஆணவம் கிளைத்தது தம்பி!-வெறும்
பொறிகள் பெருக்கம்
புன்மையை விளைத்துப்
போலியை வளர்த்தது தம்பி!
நெறிகள் திறம்பின;
நேர்மை இறந்தது!
நெளிவுகள் சேர்ந்தன பண்பில்-உயர்
குறிகள் மாறின;
கொடுமை நிறைந்தது;
குலைவுகள் நேர்ந்தன அன்பில்!

உண்மை மறைந்தது;
ஒழுக்கம் சிதைந்தது;
உரிமை இழிந்தது வாழ்வில்!-வெறும்
வெண்மை உயர்ந்தது;
வெறுக்கை மிகுந்தது;
விழுந்தனர் மக்கள் தாழ்வில்!
திண்மை விளைந்தது;
திறமை குலைந்தது;
தேமா பழுத்தது பிஞ்சில்!-உயர்
பெண்மை திரிந்தது;
ஆண்மை பிழைத்தது;
பேய்மை நிறைந்தது நெஞ்சில்!

-1978

## 58 உழைப்பே வாழ்க்கை!

உழைப்பே அறிவு!
உழைப்பே செல்வம்!
உழைப்பே நலன்கள் தேக்கும்!
உழைப்பே உறக்கம்!
உழைப்பே இன்பம்!
உழைப்பே வாழ்வைத் தூக்கும்!

உழைப்பால் உயர்க!
உழைப்பால் உண்க!
உழைக்கா துண்போன் சிறியோன்!
மழைக்கா லத்தும்
வெயிற்கா லத்தும்
மலையா துழைப்போன் பெரியோன்!

- 1978

## 59 உயர்வைப் பின்பற்று!

உயர்வும் தாழ்வும்
உலகில் இருக்கும்;
உயர்வைப் பின்பற்று!-தாழ்(வு)
உணர்வை நீ, அகற்று!-அறி(வு)
ஓங்குக நூல் கற்று!-மன

அயர்வும் சோர்வும்
அச்சமும் இன்றி
ஆர்வத் துடன் வினைசெய்-நல்
ஆக்கங்கள் வரும்; இதுமெய்-உனை
அழிப்பவை மடி, சினம், பொய்!
பெயரும் புகழும்
பொருளும் கருதிப்
பிழையாய் நடக்காதே!-நெறி
பேணுதல் கடக்காதே;-புறம்
பேசுதல் தொடுக்காதே!-பெருந்

துயரம் வரினும்
தூற்றுதல் பெறினும்
தூய்மை இழக்காதே!-மனந்
தொய்ந்திடக் கொழுக்காதே!-கீழ்மைத்
தொழும்பில் வழுக்காதே!

-1978

## 60 ஏற்பும் தவிர்ப்பும்!

அடக்கமாயிரு; முடங்கி விடாதே!
ஆழமாய்நினை; அமைந்து விடாதே!
இடக்குகள் தவிர்; இடிந்து விடாதே!
எளிமையா யிரு; இழிவா யிராதே!

துருதுரு வென இரு; துடுக்கா யிராதே!
துள்ளித் திரிவாய்; துன்புசெய் யாதே!
எருதுபோலிரு; எக்களிப் புறாதே!
இனிமையாய்ப்பழகு; ஏமாறி விடாதே!

எல்லைப்படநில்; உரிமையிழ வாதே!
எதிர்நின்று பேசு; எதிரியா காதே!
சொல்லை அளந்து சொல்; சோர்ந்து பேசாதே!
சுறுசுறுப்பாயிரு; படபடப் புறாதே!

மகிழ்ச்சி யாயிரு; மனச்செருக் குறாதே!
மற்றவர் மதிப்பாய்; மனம் இழவாதே!
புகழ்ச்சி விரும்பு; புல்லியர் சொல்தவிர்!
போக்கினை உறுதிசெய்; புறம்போகாதே!

வினைசெய விரும்பு; வேக முறாதே!
வீம்பறை விலக்கு; வெறுப்புக் கொள்ளாதே!
நினைவது ஆய்ந்துதேர்; நிலைத்து விடாதே!
நேயரைப் பெருமை செய்; நினைவிழக் காதே!

ஒற்றுமை யாயிரு; உனையிழக் காதே!
உற்றவர்க் குதவு; உனைத்துற வாதே!
பெற்றவர் பேணு; பிழைசெய் யாதே!
பெருமை யாயிரு; பீற்றிக்கொ ளாதே!

அரசியல் உணர்ந்துகொள்; அறந்தவ றாதே!
ஆக்க வினைசெய்; இழந்து விடாதே!
வரிசை தெரிந்துசெய்; வழுக்கி விழாதே!
வரலாறு வாழ்க்கை; வறிதாய்ப் போகாதே!

-1980

## 61 ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு நூலகம்!

ஓய்வு வேளையில்
பிள்ளைகள் படித்திட
ஒவ்வொரு வீட்டிலும்
ஒவ்வொரு நூலகம்
உருவாய் அமைத்திடல் வேண்டும்-அதுதான்
உயர்வாம் அறிவினைத் தூண்டும்!

ஆய்வுரை நூல்கள்,
அறிவியல் நூல்கள்,
தோய்வுறு நெறிமுறை
துலக்கிடும் நூல்கள்,
தொன்மை அறம்புகல் நூல்கள்-அவைதாம்
தூய்மை வாழ்க்கையின் கால்கள்!

பாவியக் கதைகள்,
பயன்தரு உரைகள்,
ஓவியக் காட்சிகள்,
உலகறி கலைகள்,
ஒழுங்காய்ச் சேர்த்திடல் நன்மை-அவைதாம்
உள்ளொளி பெருக்கிடும்; உண்மை!

ஆவியை மலர்த்திய
அருளரும் அறிஞரும்
மேவிய வாழ்முறை
மிளிர்வர லாறு
மிகுதியும் படியுங்கள் பேணி-அவைதாம்
மேல் நமை உயர்த்திடும் ஏணி!

பச்சைப் புளுகுகள்,
பயனிலா நூல்கள்,
பாலியல் உணர்வுசெய்
பளபளப் பிதழ்கள்
நச்சென அறிவினை ஒழிக்கும்-மேலும்
நாட்குநாள் நம்மையே அழிக்கும்!

-1980

## 62 ஏமாறிப் போகாதீரே !

தனிநலத்தில் நாட்டமுற்றுத் தமிழினத்தின்
நோக்கமின்றிக் கட்சிகளின் தலைவ ரெல்லாம்
பனிநிலத்தில் மலத்திரளைக் குவிப்பதுபோல்
பசும்பச்சை இழிமொழிகள் பரக்கக் கூறிக்
கனிமரத்தில் வீற்றிருக்கக் கல்லெறிந்து
காயடிக்கும் கயமையினை என்ன சொல்வோம்!
இனிவுரத்த உணர்வுகொள்வீர் இளைஞர்களே!
இத்தகையோர்க் கேமாறிப் போகாதீரே!

மறுத்தொருவர்க் கொருவர்விடும் அறிக்கைகளும்
மனங்கூசும் இழிவுரையும் தமிழர் மாண்பை
அறுத்தெடுக்கும் வகையல்லால்-பகைவரெல்லாம்
அவைகூறி நகைக்கின்ற நிலையே யல்லால்-
நிறுத்தெடுக்கும் விளை வென்ன? கட்சிகளின்
நிலையறிவீர்! நெடுந்தமிழைப் பேணுதற்கே
சிறுத்தையெனப் பாய்ந்தெழுவீர்; இளைஞர்களே
இத்தகையோர்க் கேமாறிப் போகா தீரே!

-1980

## 63 இந்த உலகம் !

இந்த உலகம்
இயற்கை உலகம்!
-ஆனால் இன்றோ
செயற்கை உலகம்!
மந்தம் இன்றி
வினைபடு உலகம்!
-ஆனால் இன்றோ
புனைபடு உலகம்!

இந்த உலகம்
எழில்மிகு உலகம்!
-ஆனால் இன்றோ
தொழில் மிகு உலகம்!
சொந்த நலன்கள்
சூழ்ச்சிகள் உலகம்!
-எனவே இஃதொரு
தாழ்ச்சிகள் உலகம்!

இந்த உலகம்
ஏர்த்தொழில் உலகம்!
-ஆனால் இன்றோ
போர்த்தொழில் உலகம்
வந்தவர் எவரும்
வாழ்ந்திலா உலகம்!
-ஆயினும் ஆசையில்
தாழ்ந்திலா உலகம்!

1980

## 64 பொய்யா வாழ்க்கை அறவாழ்க்கை !

உண்பதும் உடுப்பதும்
உறங்குவ தும்,என
ஒவ்வொரு நாளும் கழிக்கின்றார்!-அவர்
உயிரின் சிறப்பைப் பழிக்கின்றார்!-தம்பி
மண்புது வாழ்க்கை
மக்கள் தோற்றம்
மனமும் அறிவும் துலங்கிடவே!-நாம்
மறைந்ததன் பின்னும் விளங்கிடவே!

விலங்கும் பறவையும்
விழுங்கும்; தூங்கும்!
வேறென் செய்யும்? இனம்பெருக்கும்!-பின்
வீழ்ந்தே அழியும்! நிலைமறக்கும்!-தம்பி
துலங்கும் அறிவும்
தூய்மையின் உளமும்
துறந்தால் நமக்கும் உயர்வென்ன? நாம்
தோன்றியே மறையும் பொருளென்ன?

நல்லுயர் கல்வியும்
நன்னெறி வாழ்வும்
நாம்கடைப் பிடிக்கும் ஒருநோக்கும்-நம்
வாழ்வை உயர்த்தும்; புகழ்தேக்கும்!-தம்பி
புல்லியர் வாழ்க்கை
புதைந்தழிந் தொழியும்!
பொய்யா வாழ்க்கை அறவாழ்க்கை!-அது
பொதுவுணர் வால்வரும் மறவாழ்க்கை!

-1984

## 65 புன்மையும் நன்மையும் !

ஆங்கே ஓர் அழுகல் கண்டால்
ஆயிரம் ஈக்கள் மொய்க்கும்!
தீங்கினைப் பலரும் சூழும்
திறத்தை அக் காட்சி காட்டும்!

பூவொன்று பூத்து நின்றால்
புதுத்தேனை விரும்பும் தேனீ,
நாவூன்றிக் குடித்து விட்டு
நயம்பாடிப் பறந்து போகும்!

நல்லதைப் பற்று தற்கு
நான்கைந்து பேரே சூழ்வார்!
அல்லதைப் பற்று தற்கோ
ஆயிரம் பேர்கள் மொய்ப்பார்!

பகட்டாலும் கவர்ச்சி யாலும்
பலபேர்கள் மயங்கிப் போவார்!
புகட்டுநல் லறிவை நாடும்
புதுமையைச் சிலரே ஏற்பார்!

புல்லுக்கோ எரு, நீர் விட்டுப்
போற்றுவார் எவரும் உண்டோ?
நெல்லுக்கே எரு, நீர் வார்ப்பார்!
எல்லையும் காவல் செய்வார்!

புன்மையும் பொய்யும் நன்கு
பொலிந்தாலும் எவரும் போற்றார்!
நன்மையும் மெய்யும் கொஞ்சம்
நலிந்தாலும் போற்றிக் காப்பார்!

-1984

66

## மூட்டுக்கு வலிவு செய் ! முதுகுக்கு நிமிர்வு தா !

கேட்டுக்கொள், தம்பி!
உன்முயல் வாலே
கிளர்ந்தெழ வேண்டும் நம்இனம்!
பாட்டுக்குத் தாளமாய்
உன் தொண்டி னாலே,
பயன்பெற வேண்டும் நம்மொழி!
நாட்டுக்குள் வேட்டை
நாய்களாய்த் தம்முடை
நலன்களே வளங்களே தேடுவார்!
காட்டுக்குள் புலியெனக்
களைப்பின்றி அலைகுவாய்!
கவனமாய்ப் பொதுநலம் கூட்டுவாய்!

ஏட்டுக்குள் உன்னைப்
புதைத்துக்கொள் ளாதே!
எழு, நட; உலகினை நேர் படி!
பூட்டுக்குத் திறவுபோல்
புதுமைக்கு வழிவிடு!
புன்மைக்குத் தீவைத்துக் கொளுத்துவாய்!
மூட்டுக்கு வலிவு செய்;
முதுகுக்கு நிமிர்வு தா;
முன்கையை எஃகுப் போல் முறுக்கிடு!
கேட்டுக்கு முன்னை நில்!
கிளர்ச்சிக்கு வித்திடு!
கீழ்மையும் கயமையும் பொசுக்குவாய்!

-1984

## 67 மக்களை உருவால் மயங்காதே !

நன்னிலை உணர்வுகள்
நசிந்தன தம்பி!
நலிவைக் கண்டே அஞ்சாதே!
என்னிலை வரினும்
இழப்புகள் உறினும்
இழிந்தவரைப்போய்க் கெஞ்சாதே!

உண்மையும் பொய்யும்
உறழ்ந்தன தம்பி!
உருவைக் கண்டு மருளாதே!
பெண்மையும் ஆண்மையும்
பிறழ்ந்தன தம்பி!
பேச்சைக் கண்டே வெருளாதே!

மானமும் நாணமும்
மறைந்தன தம்பி!
மக்களை உருவால் மயங்காதே!
கூனமும் குழைவும்
கொழுத்தன தம்பி!
கொடுமையை எதிர்க்கத் தயங்காதே!

-1984

## 68 எண்ணமும் செயலும் !

எண்ணங்கள் வலியன!
எண்ணிய வற்றுள்
திண்ணமாய்ச் சரியென
நினைத்ததை எழுதுக!

எழுதிய வற்றைப்
பலமுறை படிப்பாய்!
பழுதிலாக் கருத்தையே
பரப்பிட முயல்வாய்!

பரப்பிய கருத்துக்கு
மறுப்புகள் பலவரும்!
திருப்பி யவற்றைத்
தேர்வுசெய்! ஒன்றுதேர்!

தேர்ந்து தெளிந்த
கருத்துக்குச் செயல்படு!
நேர்ந்த செயலுக்கு
எதிர்ப்புகள் வரலாம்!

எதிர்ப்புகள், ஏளனம்,
இழிவுகள் கண்டு,
விதிர்விதிர்ப் புறாமல்
வேகமாய் வினைபடு!

ஊக்கமும் வலிமையும்
உள்ளத்தின் உரமும்
தாக்குறும் எத்தகை
எதிர்ப்பையும் தகர்க்குமே!

-1985

## 69 உடல்நலத்தைக் காவாதான், உயிர்நலத்தைக் காவாதான்!

உடல்நலத்தைக் காவாதான்,
உயிர்நலத்தைக் காவாதான்!
உயிரைச் சார்ந்த
உளவுணர்வும் அறிவுணர்வும்
ஒருங்கே காத்துத்
திடமுடனாய் இருப்பவனே
எச்செயலும் திறமையுடன்
செய்ய வல்லான்!
தீங்கின்றி மக்களுக்கும்
உழைக்க வல்லான்!

குடம்,ஒழுக்காய் இருப்பதனால்
ஊற்றுகின்ற நீர்நிலையாய்
இராத தைப்போல்,
குன்றினைப்போல் சேர்த்துவைத்த
அறிவும் வாழ்வும்,
முடமாகிப் போகுமன்றோ?
முழுப்பயனும் இல்லாமல்
முழுகும் அன்றோ?
மூவறமும் உடல்நலத்தில்
முகிழ்க்கும் அன்றோ?

-1985

## 70 தம்பி, உனக்கொன்று சொல்வேன் !

தம்பி, உனக்கொன்று சொல்வேன்!-இந்தத்
தமையனின் மொழி கேட்பாய்;
தமிழ் கற்க வேண்டும்!-எழும்
செம்புது வெள்ளம்,உன் உள்ளம்!-அது
சீறிடில் குழி,மேட்டைச்
சீர்செய்யத் தூண்டும்! -(தம்பி)

நம்மொழி, இனம்,நாடு தம்பி-ஒரு
நாளினில் விளங்கின,
நானிலம் போற்ற!-அட,
வெம்மொழி ஒன்று புகுந்தே-அதன்
வீறு குறைத்தது;
விழுந்ததவ் வேற்றம்! -(தம்பி)

பாரடா, இன்று,நீ தாழ்ந்தாய்!-இந்தப்
பாரினில் உள்ள
மொழிக்குலம் யாவும்-தமிழ்
வேரினில் தோன்றின வன்றோ!-அது
வீழ்ந்து கிடப்பதும்
இழிவதும் நன்றோ? -(தம்பி)

நம்புது முயற்சிகள் யாவும்-மீண்டும்
நற்றமிழ்க் கொற்றத்தை
நாட்டிடல் ஆகும்-தமிழ்த்
தம்பி, அதற்குன்னைப் போலத்-தம்மைத்
தருதற்கா யிரம்பேர்கள்
வேண்டும்இந் நாளே! -(தம்பி)

-1985

## 71 இடரும் உலகமிது!

கடைகள் பலவிருக்கும்;
கருத்தும் பலவிருக்கும்;
கையில் காசிருப்பார்
கண்களிலே

உடைகள் பலதெரியும்
உருவம் பலதெரியும்
உண்மை உணர்வதில்லை
உரைகளிலே!

நடைகள் பலவிருக்கும்
நாட்டம் சிலவிருக்கும்
நன்மை தேடுபவர்
செவிகளிலே,

குடையும் கவர்ச்சியுரை
கொள்கை விளம்பரங்கள்
கோடி கோடிவரும்
நிறங்களிலே!

உடலம் பருத்திருக்கும்!
உள்ளம் சிறுத்திருக்கும்!
உதிர்க்கும் சிரிப்பிருக்கும்
உதட்டினிலே!

மடலம் பெருத்திருக்கும்!
மடமைக் கருத்திருக்கும்!
மயக்கும் அறிவிருக்கும்,
பகட்டினிலே!

கடலும் அருகிருக்கும்
கதிரும் முளைத்திருக்கும்
கண்கள் இருண்டிருக்கும்
காட்சியிலே!

இடரும் உலகமிது!
எண்ணத் துலங்குவதும்
ஏற்றம் விளங்குவதும்
எளிதிலையே!

-1985

## 72 இலகிடும் இன்பங்கள் எத்தனை எத்தனை ?

கண்ணை விழித்தேன்;
காட்சி தெரிந்தது!
காட்சி தெரிந்ததும்
கருத்தும் புலர்ந்தது!
மண்ணும் விண்ணும்
மலைகளும் சோலையும்
மலைமேல் தவழ்ந்த
மாணிக்கப் பரிதியும்
தண்ணிய அருவியும்
தாவிய ஆறும்
தாவிய ஆற்றிடை
மேவிய ஓடமும்,
திண்ணிய நகரமும்
திரிந்தவான் பறவையும்
தெரிந்தன தெரிந்தன!
தெவிட்டாத இன்பமே!

கண்ணில் தெரிந்தஇக்
காட்சிகள் போலவே
காதுகள் கேட்டன
கணக்கிலா ஒலிகள்!
எண்ணிலா ஒலிகளில்
இசையும் இனிமையும்
இயற்கையோ டென்னை
இணைத்துப் பிணித்தன!
மண்ணிலும் விண்ணிலும்
மலிந்து கிடந்து நம்
மனத்தையும் அறிவையும்
மலர்த்தும் இயற்கையில்
நுண்ணிய பேரறி
வாற்றல்கள் எத்தனை?
போற்றிக் கொள்ளுக,
புலன்களால் அவற்றை!

மூக்கினை மணந்த
மணங்கள் எத்தனை!
மணங்களை எழுப்பும்
மலர்கள் எத்தனை?
நாக்கினைத் தழுவும்
சுவைகள் எத்தனை?
சுவைகளில் பொலிந்த
நலன்கள் எத்தனை?
தேக்கிய அறிவும்
திகழ்கின்ற இன்பமும்
திகழ்ந்த இன்பம்
தேய்கின்ற துன்பமும்
தாக்கிய உணர்வுகள்
தனித்தனி அறிவு!
தனித்தனி உணர்வையும்
தம்பியே, உணர்க!

உலகுஉன் னுடையது!
உற்ற இயற்கையும்
உற்ற இயற்கையால்
பெற்ற இன்பமும்
அலகிலா வகையன!
ஆர்வப் பார்வையால்-
அங்காந்த நெஞ்சால்-
அனைத்தையும் விழுங்குக!
இலகிடும் இன்பங்கள்
எத்தனை எத்தனை?
பித்தனைப் போல,நீ
பிரிந்துவா டாதே!
குலவிடு, அவற்றுடன்!
கூட்டுக உயிரை!
கொண்ட மகிழ்ச்சியைக்
கொடுக்கஅனை வர்க்குமே!

-1985

## 73 தொண்டு செய்ய வருபவர்க்கு இயற்கை வைக்கும் தேர்வு !

அலுவலகப் பணிகளுக்கே
    ஆட்களைநாம் தேர்வதுபோல்,
இலகுகின்ற இயற்கையுமே
    இவ்வுலக மக்களுக்கே,

உழைத்திடமுன் வருபவர்க்கே
    உற்றதுயர், இடர்களெலாம்
இழைத்து,அவர் தொண்டுகளின்
    ஏற்றங்கள் தேர்கிறது!

துன்பத்தில் துவளாமல்,
    தொல்லைகளில் சளைக்காமல்,
இன்பத்தில் மயங்காமல்,
    எவருளரோ, அவர்திறனை,

மக்களுக்குக் காட்டி,அவர்
    மதிநலமும் தொண்டுளமும்
தக்கவையே எனத்தேர்ந்து,
    தகுதிவரை செய்கிறது!

ஒக்கபடி உழைப்பவரை
    உலகமக்கள் தாமறிந்து,
மிக்கநலம் போற்றுதற்கும்
    மேன்மைநிலை இதுவன்றோ!

-1985

## 74 மாணவர் எவர் ?

உடைஉடுப் பதுவும்
    ஊர்சுற் றுவதும்
கடைத்தெருக் களிலே
    கைகளைக் கோர்த்து,
நடையில் மிடுக்கொடு
    நகைத்துத் திரிவதும்
மடயர்கள் ஆவர்!
    மாணவர் அல்லர்!

கண்டதைப் பேசிக்
    காலம் போக்கி
உண்டதை உரைத்தே
    உரக்கச் சிரித்துப்
பெண்டிரைச் சுற்றிப்
    பேயாய் அலைவோர்
மண்டுகள் ஆகலாம்;
    மாணவர் ஆகார்!

நுரைப்புநெய் யலைப்பி
    நொய்யக் கழுவிச்
சிரைப்பிலா வளர்முடி
    சிலிர்ப்பச் சீவித்
திரைப்படம், பூங்கா,
    தெருக்கடை நிறைப்பவர்
குரைப்புநாய்க் கூட்டமா?
    கொள்கை,மா ணவரா?

கருத்தொடு கற்பதும்,
    கற்ற கல்வியால்
வருத்தமுற் றறிவை
    வளர்த்துக் கொள்வதும்,
திருத்தமாய்ப் பேசித்
    திருந்த எழுதிப்
பொருத்தமாய் நடக்கும்
    புனிதரே மாணவர்!

-1985

## 75 பெண்டிர் பெருமை !

அறிவும் ஆற்றலும்
　　ஆண்களைப் போலவே
　　அனைத்துப் பெண்டிர்க்கும்
　　இயற்கை அளித்தது!
செறிவுற உயிர்களைப்
　　படைத்திடும் தாய்மையும்
　　சேய்களைப் புரந்திடும்
　　சிறப்பையும் தந்தது!

அன்னையும் அவர்தாம்!
　　அருந்துணை அவர்தாம்!
　　அறிவிலும் செயலிலும்
　　அமைச்சரும் அவர்தாம்!
முன்னையும் பின்னையும்
　　முழுவாழ் வுக்கும்
　　முதலும் இறுதியும்
　　முழுமையும் அவர்தாம்!

ஆக்கவும் அளிக்கவும்
　　அழிக்கவும் ஆன
　　அருந்திறம் மூன்றையும்
　　அன்னைக் குலத்திடம்
தேக்கிய இயற்கையின்
　　திறம்அறி யாமல்
　　தெய்வப் பெண்டிற்குத்
　　தீங்குசெய் யாதீர்!

-1986

## 76 பாட்டெழுதத் தெரிந்தால் போதாது தம்பி !

பாட்டெழுதத் தெரிந்தால்,போ
 தாது, தம்பி!
பயனுடைய பாட்டாக
 எழுதல் வேண்டும்!
பூட்டறுக்கும் பாட்டுக்குத்
 தேவை என்றால்,
பூப்பாட்டும் புனல்பாட்டும்
 யார்க்கு வேண்டும்?

நாட்டுக்கும் மக்களுக்கும்
 நலிவைப் போக்கும்
நல்லுரிமைப் போராட்டக்
 காலத் தில்போய்க்
கூட்டுக்கும் குயிலுக்கும்
 இலக்கி யங்கள்
குவிக்கின்ற பழக்கங்கள்
 உணர்வைத் தீய்க்கும்!

இயற்கைக்கும் வாழ்க்கைக்கும்
 இலக்கி யத்தை
எருவாக்கும் முயற்சியெலாம்
 தமிழர் வாழ்வைச்
செயற்கைக்கும் அடிமைக்கும்
 சமயத் திற்கும்
சீரழிக்கும் பகைமைக்கும்
 சாதி மைக்கும்

மயற்கைக்கும் போலிமைக்கும்
 கொண்டு சேர்த்த
மாக்கதைகள் பலகோடி!
 உரிமை மீட்கும்
புயற்கைக்(கு)இங்(கு) உணர்வேற்றி
 எரிம லைக்கே
புத்துயிரை ஊட்டுகின்ற
 பாட்டே வேண்டும்!

பாட்டெழுதிப் பொருள்திரட்டிப்
 புகழைச் சேர்க்கும்
பழங்கதைகள் இனிவேண்டாம்!
 இனத்தை மீட்க
வேட்டெழுப்பும் எழுத்தாலே
 அடிமை கொண்ட
விலங்கொடிக்கும் பாட்டன்றோ
 இன்று வேண்டும்!

ஏட்டெழுதும் இலக்கியத்தால்
 அறத்தால் எல்லாம்
ஏமாறிப் போனதல்லால்
 விளைவிங் கென்ன?
கூட்டுயிர்க்கும் ஏழையர்க்கு
 வாழ்வ ளிக்கும்
கொள்கைப்பாட் டன்றோ,ஓர்
 கோடி வேண்டும்!

-1986

## 77 பாய்ந்தெழுவீர் இளமையோரே !

உழுபவரும் உழைப்பவரும் ஒன்றிணைந்தால்
 ஊராள்வோர் நிலையென்னாகும்?
கொழுமுனைகள் கொடுவாளாய்க் கொல்லுலைகள்
 எரிதழலாய் உருமாறாவோ?
கழுவடைகள் அரசியலில்-கயமையர்கள்
 கலைத்துறையில்-புகுந்ததாலே
பழுதடையும் தமிழகத்தைப் புதுப்பிக்கப்
 பாய்ந்தெழுவீர் இளமையோரே!

-1986

## 78 கல்வி நலன்கள் !

உண்மை உணர்வது கல்வி! - நம்
உயிர்க்கொளி சேர்ப்பது கல்வி!
திண்மை உளத்தினை ஊக்கி - வரும்
தீமை தவிர்ப்பது கல்வி!

அச்சத்தைக் கொல்வது கல்வி - உள
ஆற்றலை வளர்ப்பது கல்வி!
மெச்சத் தகுந்தநல் வாழ்வை - இங்கு
மேம்படச் செய்வது கல்வி!

நன்மை நினைப்பது கல்வி - மக்கள்
நலத்தை விளைப்பது கல்வி!
புன்மை நினைவுகள் யாவும் - உள்
பொசுங்க எரிப்பது கல்வி!

இளமையிற் கற்பது கல்வி - உண்மை
இன்பந் தருவது கல்வி!
வளமைக்கு வளமையைச் சேர்த்து - நம்
வலிமை மிகுப்பது கல்வி!

முதுமை இலாதது கல்வி - வாழ்க்கை
முழுவதும் துய்ப்பது கல்வி!
பொதுமை உணர்வினைத் தந்து - நலம்
பொலிந்திடச் செய்வது கல்வி!

பொறுமை நிறைப்பது கல்வி - உளப்
பொறாமையைத் தீய்ப்பது கல்வி!
வறுமையும் பெருமையென் றெண்ணும் - மன
வளத்தை வளர்ப்பது கல்வி!

ஒழுக்கம் விளைப்பது கல்வி - நல்
உயர்வைக் கொடுப்பது கல்வி!
மழுக்கம் இலாதநல் லறிவை - இங்கு
மலர்ந்திடச் செய்வது கல்வி!

நேர்மை தருவது கல்வி - நம்மை
　　நிமிர்ந்திட வைப்பது கல்வி!
சீர்மை நடுநிலை யோடு - செயல்
சேர்ந்து செழிப்பது கல்வி!

இறைமை உணர்வது கல்வி - உயிர்க்
　　கேற்றம் கொடுப்பது கல்வி!
மறைபொருள் உண்மைகள் யாவும் - காண
　　மனக்கண் திறப்பது கல்வி!

உயிருக் குறுதுணை கல்வி - இவ்
　　வுடலின் வழித்துணை கல்வி!
பயிருக்கு நீரினைப் போல - அன்பைப்
　　பாய்ச்சி வளர்ப்பது கல்வி!

**-1986**

## 79 எண்ணிப் பாருங்கள் இளந்தலை முறையரே !

உண்ணும் போதிலே
உணவு விக்கியே
உயிரை இழப்பவர்
உலகினில் பலபேர்!
எண்ணி முடித்ததை
எடுத்துச் சொல்லுமுன்
இறந்த மக்களும்
எத்தனைக் கோடியோ?

உறங்கச் சென்றவர்
காலை எழுந்திலர்!
ஊர்க்குச் சென்றவர்
திரும்பி வந்திலர்!
இறங்கிக் கிணற்றிலே
வாளி எடுத்தவர்
ஏறி வருதற்குள்
மூழ்கி இறந்தனர்!

பள்ளி சென்றவன்
வீடு திரும்பிலன்!
பகலில் இருந்தவன்
இரவைப் பார்க்கிலன்!
பிள்ளை பெற்றவள்
பிணமாய் வருகிறாள்!
பேசி முடித்தவர்
மூச்சைப் பிரிகிறார்!

எத்தனை நோய்கள்?
இறப்பு நேர்ச்சிகள்!
எவர்க்கும் வாழ்க்கையில்
இறுதி உறுதியே!
செத்துத் தொலையவா
மக்களாய்த் தோன்றினோம்?
செய்ய வேண்டிய
சிறிதும் நினைக்கிலோம்!

நன்மை செய்திலோம்!
நலன்கள் விளைத்திலோம்!
நாளும் இருப்பதாய்
நினைந்து நலிகிறோம்!
புன்மைச் செயல்களே
போற்றிச் செய்கிறோம்!
'பொக்' கென ஒருநாள்
போயும் விடுகிறோம்!

மின்னல் வாழ்க்கையில்
மிதந்து களிப்பதா?
மேனி மினுக்கலும்
உண்ண மேய்வதும்
இன்னல் வாழ்க்கையின்
இலக்கணம் ஆகுமா?
எண்ணிப் பாருங்கள்
இளந்தலை முறையரே!

இருக்கும் மட்டிலும்
ஏற்றம் நினையுங்கள்!
இருந்து போனதை
எண்ணப் பண்ணுங்கள்!
செருக்கும் தருக்குமே
சிதைவைக் கொடுத்திடும்!
சிறப்பு வாழ்க்கையே
இறப்பை வென்றிடும்!

-1986

## 80 வாழ்க்கைப் புதிரை விளங்கிக் கொள்!

உலகம் எப்படி இருந்தாலும்
உன்னிலை தனிநிலை என்றறிவாய்!
இலகும் உயிர்கள் பலவற்றுள்
இங்குன் உயிரும் ஒன்றாகும்!

பழகும் உயிர்கள் பலவெனினும்
பகைக்கும் உயிர்கள் சிலவெனினும்
அழகும் அறிவும் கொண்டிடுமோர்
அன்புயிர் உனக்குத் துணையாகும்!

ஒவ்வோ ருயிர்க்கும் தனியுணர்வாம்!
ஒவ்வோ ருயிர்க்கும் தனியறிவாம்!
எவ்வோ ருயிர்,உன் உணர்(வு) அறிவுக்(கு)
ஏற்றதாம் அதுவே நட்பாகும்!

பொருந்திய உயிர்களைப் போற்றிக்கொள்!
பொருந்தா உயிர்களைத் தூற்றாதே!
வருந்துதல், மகிழ்தல் உன்விளைவே!
வாழ்க்கைப் புதிரை விளங்கிக்கொள்!

-1989

பொதுமை

## 81 உலக விளக்கம் !

**முன்னுரை.**

*கடுகென முளைத்துக் கல்லென வளர்ந்து*
*கடுமலை யெனப்பெரி தாகிப்*
*படுகுழி யிறக்கும் பற்பல பிழைகள்*
*பழிச்செயல் இவற்றினை நீக்கி*
*விடுகென மக்களை வேண்டியும், நெஞ்சில்*
*விரியுல குய்ந்திட, அன்பை*
*நடுகென வேண்டியும் நவின்றனன் இந்நூல்!*
*நாட்டினர் யாவர்க்கும் பொதுவே!* 1

**1. உலகு.**

*நீர்பொது; நிலம்பொது; நெடுவான் வெளிபொது;*
*ஞாயிறும் நிலவதும் பொதுவே;*
*ஊர்பொது; உயிர்பொது; உயிருடற் காகிடும்*
*உணவெனும் பல்வகை பொதுவே!*
*ஏர்பொது; இவற்றின் எவ்வகை விரிவும்*
*எல்லார்க் கும்,பொது பொதுவே!*
*பார்பொது; சீர்பொது; பல்வகைப் பொருள்பொது;*
*பகுத்தலும் வகுத்தலும் ஏனோ?* 2

**2. பிறப்பு.**

*பிறப்பால், பிறங்குடல் உறுப்பால், உணர்வால்*
*பெருவலி, திறனெனும் இவற்றால்*
*சிறப்பால் அறிவால் செயிர்ப்புயிர்ப் பிவற்றால்*
*செரிப்பரிப் பெனும்பிற வகையால்*
*இறப்பால் மக்களும் மாக்களும் புட்களும்*
*எனமூ வகையுயிர் உளவால்!*
*அறப்பால் அறியா தாயிரம் பிறப்பென*
*அரற்றலும் புரட்டலும் ஏனோ?* 3

**3. உறுப்பு.**

*உயிர்ப்பும் உணவும் உயிர்க்கெலாம் பொதுவே!*
*உறையுளும் உடையுமென் றிவையே*
*பயிர்ப்புள மாந்தர் பயில்தனிப் பொருளே!*
*பறவையும் மாக்களுந் துணையே!*
*பயிர்ப்பில மாக்கள் பறவைகள் இவையே*
*படுவிளை வுண்டிட, மாந்தர்*
*புயல்வயல் தம்மால் புலம்விளைத் துண்ணப்*
*பொதுத்தடை கூட்டிடல் மடமே!* 4

**4. உழைப்பு.**

விளைந்தன உண்ணுவ புட்களும் மாக்களும்!
விளைத்துயிர் புரக்குவர் மாந்தர்.
வளைந்துடல் வாடி வெயின்மழை நுழைந்து,
வளையா மக்களுக் கீந்து
கிளைந்துயிர் தழைக்கக் கருதிடும் உழுவோர்
கேடுறில் நிலங்கே டுறுமே!
களைந்தவர் துயரைக் காடுநா டாக்கக்
கருதா திருந்திடல் கேடே! 5

**5. உழவு.**

எவ்வகைத் தொழிற்கும் ஏர்கருப் பொருளே!
இறங்குவான் நீர்நிலங் காற்று
செவ்வெரி ஞாயிறு சேர்ந்தள வொன்றிச்
சினைத்தலர்ந் துறுபயன் விளைக்கும்
செவ்வகை யுழவே பல்லுயிர் முகிழ்ப்பு!
சீர்பெற வைத்தலு மஃதே!
இவ்வகைத் தொழிற்கே இடுகாப் பளியா
திருந்துயிர் வருந்துதல் இழிவே! 6

**6. பொருள்.**

விளைபொருள் விளையா வினைப்பொரு ளெனுமிரு
வகைப்பொரு ளாகுமிப் பொருளுள்
விளைபொருள் நாட்டம் விழைந்துள நாடே
வீழ்வுயிர் புரந்திடும் நாடாம்!
விளைபொருள் வளரும்! வினைப்பொருள் தளரும்!
விளைபொரு ளாம்வே ளாண்மை!
கிளையாம் பிறவே! கவினுல காள்வார்
கேடற விளைத்தலுந் தலையே! 7

**7. நாடு.**

வளர்ந்தது காடு! வளர்ப்பது நாடு!
வளம்பல சேர்ப்பதும் நாடே!
கிளர்ந்தது காடு! கிளைப்பது நாடு!
கேடறக் காப்பதும் நாடே!
தளர்ந்தது காடு! தளிர்ப்பது நாடு!
தாள்வினை கொள்வதும் நாடே!
அளந்தது காடே! அலர்வது நாடே!
அறியா ரறிவறி யாரே! 8

**8. அரசு.**

உலகப் பொதுமை காத்தலும் காத்தே
உயிர்பிறப் பொற்றுமை உணர்ந்தே
உலகத் துறுப்பினை ஓர்ந்துழைப் பறிந்தே
உழவெனும் பெருந்தொழில் வளர்த்தே
நிலவுயிர்ப் பொருளின் தீதுநன் றறிந்தே
நிலத்தினுள் நாடெனப் பெற்றே
வலவர், கற்றவர் வாய்ந்தறி வாய்ந்து
வையகங் காத்திட லரசே! 9

**9. மக்கள்.**

நாட்டைக் காத்திடும் நல்லர சவையை
நன்மையும் வன்மையுங் கருதிக்
கூட்டிட வல்லார் மக்களுள் கற்றார்!
கூடார் ஒதுங்கிடல் நன்றே!
ஈட்டமும் நாட்டமும் யாவர்க்கும் பொதுவே!
இல்லறங் காப்பவர் பெண்டிர்!
காட்டிடை விலங்காய் ஆண்பெண் உழைத்தல்
கருக்குலம் அழிவதன் வழியே! 10

**10. ஆடவர், பெண்டிர்.**

உடலால் உளத்தால் உரன்பெற் றிருப்போர்
ஒவ்வாகை முயல்பவர் ஆண்கள்.
திடமொடு நிற்பார்; திறன்வரை செய்து
தீமைகள் விலக்கிநன் றூக்கிக்
கடமையும் ஒழுங்கும் காப்பவர் பெண்டிர்!
காப்பவை போற்றலும் அவரே!
நடுவிதை ஆண்கள்! நன்னிலம் பெண்டிர்!
நானிலங் காக்கவல் லாரே! 11

**11. தாய்மை.**

ஒருயிர் இரண்டாய் உயர்தலே தாய்மை!
உயிர்தரும் உயிரே தாய்மை!
ஆருயிர் இணைந்தே அனைத்துடல் உவந்தே
ஆடவர்ப் பேணலுந் தாய்மை!
சீருயிர் அன்பின் சிறப்பிடந் தாய்மை!
சினத்தினைத் தாங்கிடந்தாய்மை!
பேருயர் ஆடவர்ப் பிணிக்குமோ ரன்புப்
பேற்றினைத் தாய்மைமென் போமே! 12

**12. பெண்டிர் வாழ்க்கை.**

தேடருஞ் செல்வம் ஆடவர் தேடத்
துணையிருந் தவரொடு துய்த்துப்
பீடுயர் அன்பொடும் அறத்தொடும் நெஞ்சைப்
பிணைத்துடல் பிணைத்துயிர் பிணைத்தே
ஈடறும் இன்பத் திருந்துயிர் புரந்தே
இறுதியி லிசைபடப் பிரிதல்
மாடுயர் கற்பின் மங்கையர்க் காகும்
மங்கல வாழ்வெனச் சொல்வாம்! 13

**13. ஆடவர் வாழ்க்கை.**

"தன்னைப் போற்றுந் தனியுயிர் மனைவி!
தன்னைப் பேணுலும் அவளே!
அன்னை அன்பினள்! அவளின் உரிமையள்!
ஆருயிர்க் குறுதுணை மருந்தே"-
என்னும் நினைவோ டிணைந்தவட் பிணைந்தே
இனிதீந் தல்லவை தாங்கி
மன்னும் அறத்தொடும் மறத்தொடும் அன்பை
மாந்தலும் ஏந்தலும் ஆணே! 14

**14. பொது வாழ்க்கை.**

காற்றொடு கலந்த கடிமணம் போலும்,
காரொடு மாமழை போலும்,
ஊற்றொடு கலந்த உறுசுவை போலும்
ஒளியோ டெழுநிறம் போலும்,
கூற்றொடு கலந்த குயின்குரல் போலும்
கூடிய ஆண்பெண் இருவர்
ஏற்றுயர் வொழுங்கோ டுயிர்பலப் புரந்தே
இல்லிருந் துய்வது வாழ்வே! 15

15. சிறப்பு வாழ்க்கை.

உண்டும் உண்ணக் கொடுத்தும் உயிர்க்கே
ஒருபழி மேவிடா வாழ்ந்தும்,
மண்டும் முயல்வொடு மாவுழைப் பெய்தி
மக்கட் கரும்பணி செய்தும்,
அண்டுந் துன்பிற் கசைவுறா நின்றும்
அரும்பே ரின்பினைப் பகிர்ந்தும்
தொண்டும் உயிரும் தோன்றிட வாழ்வார்!
தொல்லுல கெங்கணும் வாழ்வார்! 16

16. **ஒழுங்கு.**

அவரவர் போக்கி லறிவெனுந் துணையோ
டன்பெனுங் கைக்கோ லூன்றி,
தவறுகண் டஞ்சித், தண்ணுள மொன்றத்
தாழ்வுரை உயர்செயல் இயக்கி
எவரெவர் உயிர்க்கும் இன்னா விளையா
திலக்கினை எதிர்கொளுங் கணைபோல்
அவரவர் ஒழுகல் ஒழுங்கெனக் கூறி
அறநூல் சாற்றுதல் கண்டீர்! 17

17. **தூய்மை.**

தூய்மையின் தாய்மை வாய்மையே! அதனுள்
தோன்றிடும் பற்பல நினைவும்,
ஆயவை விளைக்குநல் அருஞ்சொல் லுரையும்
அதுநின் றெழும்புநல் வினையும்
ஏயுமச் செயலால் இயங்கிடு விளைவும்
இவற்றால் நிறையுமிவ் வுலகும்
வாய்மைக் குறுகள மாகுமிப் பாங்கே
வளியுல கொளிபெறும் வழியே! 18

18. **அறிவு.**

துரும்பினைக் கொண்டே தூண்பயன் காண்பார்,
தூண்மிடி துரும்பாய்க் கொள்வார்,
அரும்பினைக் கொய்யா தலர்தலை வேட்பார்,
அலர்ந்தது மதன்பயன் நுகர்வார்,
பெரும்பயன் நோக்கிப் பெறும்பயன் இழவார்,
பெறுவதுட் பெறற்குளம் நிறைவார்,
வரும்பிணி யுள்ளும் வாய்மைகை நெகிழார்,
வல்லறி வாளரென் போமே! 19

19. **அன்பு.**

பிறரழத் தாமழும் பேதமை அன்பு!
'பிறர்' முறை தகர்ந்ததே அன்பு!
உறவினும் பெரிதே! உலகினும் பரப்பே!
உயிர்பகுப் பிறந்ததே அன்பு;அஃ
தறமெனும் நறுஞ்செயற் கருந்தாய் ! அறமில்
ஆகாச் செயலுக் கெரிதீ!
மறமெனும் பெருஞ்செயற் குறுதுணை! அதுவே
மண்ணுல கியக்குமா வலியே! 20

**20. கல்வி.**

*கண்டார் அறிவைக் காண்பது கல்வி!*
*கற்பதி னிற்பது கல்வி!*
*அண்டார் அண்டியு மளிப்பது கல்வி!*
*அளித்திட வளர்வதுங் கல்வி!*
*உண்டார்க் குவகை ஊட்டுதல் கல்வி!*
*உய்யார்க் குறுதுணை கல்வி!*
*கொண்டார் இசைபெற வைப்பது கல்வி!*
*குனிதொழில் ஒழிப்பது மஃதே!* 21

**21. தொழில் முறைகள்.**

*உண்ணலுக் குதவுநற் றொழில்முதல் தொழிலே!*
*உடுத்தற் குறுதொழில் இரண்டே!*
*மண்ணுளே உறையுளை மடுத்தலும் மூன்றே!*
*மற்றவை துணையவை தமக்கே!*
*எண்ணரும் பொருளை, ஈந்துமுத் தொழிலும்*
*இடர்ப்பெறா திருத்தலும் இனிதே!*
*கண்ணெனு மிவற்றைக் காப்பதே அரசு!*
*காவாக் காலுயிர் கவல்மே!* 22

**22. காப்பு.**

*கல்லும் இரும்புங் காத்தன ஒருகால்!*
*காலாள் கரிபரிப் படையும்*
*வில்லும் வாளும் காத்தன ஒருகால்!*
*விரிகா னுயரெயில் அகழி*
*அல்லும் பகலும் காத்தன ஒருகால்!*
*அவையழிந் தினியெஞ் ஞான்றுஞ்*
*சொல்லுஞ் செயலுங் காப்பெனக் கொள்ளுஞ்*
*சிறுநா டுஞ்சிறப் புறுமே!* 23.

**23. நட்பு.**

*அன்பொடு கூடிய விருநெஞ் சறத்தோ*
*டழுந்துயர் நினைவதும் யாண்டும்*
*இன்பொடு விளைந்து விளைக்குமின் சொல்லும்*
*இழியா தொழுங்குயர் செயலும்*
*என்பொடு பிணைந்த இழிவிகழ் வாழ்வும்*
*இவைபுல் லியவீ ருயிரும்*
*துன்பினுங் கூடித் துலங்குதல் நட்பே!*
*தொடர்புண் டதற்கிலை பிரிவே!* 24

**24. பகை.**

*உள்ளப் புகையின் உயர்நிலை பகையே!*
*உயர்சால் பின்பகை பகையே!*
*உள்ளப் பகையின் உயர்நிலை அழிவே!*
*உறுபகை பகைத்திடு மொழுங்கே!*
*எள்ளப் படுதலு மிழிசேர் பகையே!*
*இன்சொற் பணிவதன் பகையே!*
*குள்ளப் பாங்கினார்க் குறுதுணை யஃதே!*
*கொள்வார் கொளப்படு வாரே!* 25

**25. தீமைக்கஞ்சல்.**

*நஞ்செனுந் தீமைக் கஞ்சிடான் நலிவான்;*
*நட்டார்க் கவன்தீங் கிறுப்பான்!*
*பஞ்செனத் தோன்றிப் படுதுயர் அழுத்தும்!*
*பருமுட் சேக்கையி னொக்கும்!*
*எஞ்ஞான் றைக்குந் தீமையில் நன்மை*
*எட்டுணை யலர்வது மிலதால்*
*அஞ்சார் அஞ்சுக; அஞ்சுக தீமைக்*
*கஞ்சுவார்க் கஞ்சுமின் நிலனே!* 26

**26. நன்மைக் கயராமை.**

*அறிவெனுங் கொழுவா லுளப்புல னுழுதே*
*அன்பெனும் நறுநீர்ப் பாய்ச்சிக்*
*குறியெனும் உளங்கொள் நல்விதை தேர்ந்து*
*குறிப்பெனும் பொழுதறிந் தூன்றி,*
*நெறியெனும் எருவிட் டின்சொலிற் காத்தே,*
*நெகிழ்வெனும் வளர்களை யகற்றிச்*
*செறிவுற விளைங்கால் சிறியர்புள் ளோட்டிச்*
*சிறப்புறல் நறுவிளை வென்பாம்!* 27

**27. முன்னறிவு.**

*புகையினும் பெருநெருப் பாகுமென் றறிக!*
*புனற்றுளி வெள்ளமென் றுணர்க!*
*பகையினுக் கடிப்படை சொல்திரி பென்க;*
*பயன்பெறப் பாடுவித் தென்க;*
*நகைமுகம் நட்பினுக் கடிநலந் தெளிக!*
*நறுவினை உயர்திரு உள்க;*
*திகைவறல் புலமையின் முதற்படி நினைக;*
*தீயுரை கெடற்கறி குறியே!* 28

**28. மெய்யறிவு.**

*பிறப்பதுங் கனல்பசி பீடித் தழுவதும்*
*பில்குபா லொருத்தியூட் டுவதும்,*
*பறப்பதும் உலகினில் பற்பல துயர்நலம்*
*படுவதும் பல்வகை யறிவு*
*சிறப்பதும், சிறக்கத் துறப்பதும், துறக்கச்*
*சிற்றுயிர் உவப்புற உடலம்*
*இறப்பதும் ஈங்கிவைக் கைம்பொருள் இருப்பதும்*
*இறையதும் அறிதல்மெய் யறிவே!* *29*

**29. உலக இறுதி.**

*தனிமை மாய்தலுந் தந்நில மகல்தலும்*
*தரைவாழ் மக்களொன் றாகி,*
*குனிமை யொழிதலுங் கோன்மை தவிர்தலும்,*
*கொள்ளுணர் வொன்றியுள் ளொன்றி*
*கனிமை நிறைதலுங் கடந்துபல் லுலகுங்*
*கண்டுபெண் ஆணுமுட் கலந்தே*
*இனிமை யெய்தலும் இறையுட் காண்டலும்*
*இவ்வுல கிறுதியென் றுரைப்பாம்!* *30*

**30. இறைமை.**

*ஒன்றே யொன்றாய் ஒளிர்ந்துள் விளர்ந்தே*
*ஒன்றினை ஒன்றாய் உயர்ந்தொவ்*
*வொன்றே யாகிய, ஒவ்வொன் றுள்ளும்*
*ஒன்றியுள் உதைத்திடு மொன்றாய்,*
*ஒன்றே ஒன்றினுள் ஒடுங்கியுள் ஒன்றி*
*ஒவ்வொன் றழித்து,ஒன் றாகி*
*ஒன்றாய் நிற்குமஃ தொன்றே ஒன்றை*
*ஒரிறை யென்றுள மொன்றீர்!* *31*

**-1952**

## 82 சாலையின் ஓரத்திலே !

சாலையின் ஓரத்திலே -ஓடுஞ்
சாக்கடை நாற்றம்என் மூக்கைத் துளைத்திட
காலைவி ரைந்துவைத்தேன் - இரு
கண்களி ழந்தவன் மண்ணிற் புரண்டனன்!
மாலைப் பொழுதெனவே - பெரும்
மக்கள் குழாம்இரு பக்கத்திலும், கடும்
வேலை முடிந்தவகை - என
வீடு திரும்பிய வாறிருந்தார்! - அந்தச்
சாலையின் ஓரத்திலே! 1

தொண்டை கிழியும்வகை - அந்த
நொள்ளையன், 'கஞ்சியும் இல்லைஇல்லை' என
மண்டை உடைத் தழுதான் - அவன்
மாளாத சொற்களைக் கேளாத வாறாக,
அண்டை நடப்போ ரெலாம் - உடல்
ஆட்டுவதும் பல்லைக் காட்டுவதும், எனக்
கண்டுங் காணாதவர் போல் - போய்க்
கொண்டிருந் தாரதைக் கண்டு நின்றேன்! - அந்தச்
சாலையின் ஓரத்திலே! 2

பட்டில் உடை உடுத்தி - இரு
பாவைய ரோடெழில் மேவிச் சிரிப்பதும்,
வட்டிக் கணக்கை எண்ணி - உள்ளம்
வாங்குவதும், உடல் வீங்குவதும், பணப்
பெட்டியின் திறவுக் கொத்தைத் - தொட்டுப்
பார்ப்பதுவும், இன்பம் சேர்ப்பதுவும், குடை
தட்டி நடப்பது மாய்ப் -பலர்
சென்றிருந்தார் அதை நின்றுகண்டேன்! - அந்தச்
சாலையின் ஓரத்திலே! 3

ஓடும் இயங்கி செல்லும் - இன்ப
ஊர்தி செல்லும், பல பேர்அங்குச் சென்றனர்.
ஏடு படித்த வரும் - சில
எத்தர்களும் பணப் பித்தர்களும், இந்த

நாடு திருத்து தற்கே - பல
நாட்டங்களை, மக்கள் கூட்டத்திலே சொல்லிப்
'பாடு படுங்க' ளென - நன்கு
பேசியரும் கைகள் வீசிச்சென்றார்! - அந்தச்
சாலையின் ஓரத்திலே! 4

உண்டி செரிப்பதற்கே - வழி
ஒன்றினை யெண்ணியே சென்றவரும், இளம்
பெண்டி ரெலா முடலைப் - பற்றிப்
பேசுவதும், எழில் வீசுவதும், புதுச்
செண்டு மலரணிந்து - குழற்
சீவி முடிந்ததை நீவிச்செல் வாரிதைக்
கண்டுளம் வெந்து நின்றேன் - அந்தக்
குருடனைச் சென்றாரில் ஒருவரும் காணோரே!
சாலையின் ஓரத்திலே! 5

கத்திப் புரண்டழுதான் - ஒரு
காசு கொடுப்பவர் யாருமில்லை; பலர்
செத்துக் கொண்டே யிருக்க - சிலர்
செல்வத்தினை, அதன் இன்பத்தினை என்றும்,
எத்தித் திருடுவதேன்? - இதை
ஏனென்று கேட்டிட, நானென்று நிற்பவர்
பத்தி லொருவ ருண்டோ? - எனப்
பார்த்திருந் தேன்;உளம் ஆர்த்துநின்றேன்!-அந்தச்
சாலையின் ஓரத்திலே! 6

-1956

## 83 வாழ்வும் தாழ்வும்!

விண்ணை அளந்திடும் வல்லவர் - தொலை
வெங்கதிர் தோற்ற முணர்ந்தவர் - இந்த
மண்ணை அளந்திடக் கற்றவர் - வான
மாவெளி ஊர்ந்திடும் மேதையர் - பொருள்
வண்ண மறிந்தவர் மக்களின் - உயிர்
மாய்தலை வெல்ல முயல்பவர் - என
எண்ணத் தொலைவிலர் தோன்றினும் - மன
ஏற்றத்தில் யாவரும் தாழ்கின்றார்! 1

ஊர்ந்தவர் வானில் பறக்கின்றார் - விலங்
கொத்தவர் நல்லுடை சேர்க்கின்றார் - மடஞ்
சேர்ந்தவர் யாவரும் கற்கின்றார் - பிணி
சோர்ந்தவர் நோயினை வெல்கின்றார் - பணி
தேர்ந்தவர் இவ்வுல குய்யவே - உயிர்த்
தேவைகள் காண்பவர் ஆயினும் - கடல்
ஆர்ந்த உலகினில் எங்கணும் - மக்கள்
அன்பிலும்; பண்பிலும் தாழ்கின்றார்! 2

சேற்றைக் குழப்பிக் குடில்களைப் - பண்டு
செய்துயிர் வாழ்ந்த வழியினர் - விண்
காற்றை வளைப்பவர் போலவே - பல
கட்டுகின் றார்மனை வாழவே! - சுனை
ஊற்றுகள் தேடிக் குடித்தவர் - குழல்
ஊன்றிநீ ரோட்டங் கொணர்கின்றார் - பல
மாற்றங்கள் காண்கின்றார் ஆயினும் - உள
மாண்பினில் யாவரும் தாழ்கின்றார்! 3

'அன்பின் விளைநிலம்' ஆருயிர் - தரும்
'ஆக்கம்' எனத்தகும் பெண்டிரும் - பெருந்
தென்புகள் கொண்டனர் போல்வராய் - உளத்
தாய்மையை, மென்மையை நீக்கியே - பல
வன்பணி யாற்றப் புகுந்தனர் - அன்பு
வாழ்வைத் துறந்தனர்! ஐயகோ! -உள
அன்பினி எங்ஙனம் வாழ்ந்திடும்? - மன
ஆற்றலில் யாவரும் தாழ்ந்திடின்! 4

வேற்றுல காக்கினும் ஆக்கலாம்! - வான
வெளியினை வீழ்த்தினும் வீழ்த்தலாம் - உயிர்க்
காற்றுக் குறையினும் ஊதலாம்! - கடற்
கொள்புனல் வற்றினும் ஊற்றலாம்! - மலர்
தோற்றத்தைச் செய்யினும் செய்யலாம்! - அதில்
தேனினைக் கூட்டிடல் ஆகுமோ? - அறி(வு)
ஆற்றல்மிகப் பெரு மாட்சியே - அன்
பாற்ற லிலாவிடில் வீழ்ச்சியே! 5

-1957

## 84 மதங்காப்பார் !

மாடெனக் கொழுத்து, மரமெனக் குந்தி
மக்களும் மனைவியும் இன்றி - நல்ல
மாண்புயர் வொழுங்கதும் குன்றி - மயிர்க்
காடெனச் சடைகள் களிறெனத் தொந்தி
கனிபால் நெய்வகை யோடு - நல்ல
காற்றமைந் துலவுமோர் வீடு - தனில்
வீடெனக் கூறி, விரிசடைக் கடவுள்
வியன்கதை நாள்தொறும் பேசி - நல்ல
வாழ்விலா மக்களை ஏசி - வெறுங்
கூடென உடலைக் கூறுவர் தமக்குக்
குருக்கள் எனும்பெயர் சூட்டி - பலர்

குவிந்தனர் மதந்தனைக் காட்டி!
கோடையில், மழையில், பனியினில் மூழ்கிக்,
கொடுங்கடல் புகுத்துயிர் வாடி - தங்
குடலிட உணவதைத் தேடி - பலர்
வாடையில், ஒருசிலர் கடவுளை, மதத்தை
வளர்த்ததில் தங்குடல் கழுவி - பல
வகையினில் இன்பத்தைத் தழுவி - பட்
டாடையில் போர்த்த அணியுடல் மறைத்தே
அறுசுவை உணவினை உண்டு - பல,
அணங்குகள் தம்நலம் கண்டு - மத
ஓடையில் நீந்தி உலகினில் வாழ்வார்
உழைத்திடும் மக்களை ஏய்ப்பார் - அவர்
உளத்தினை நாள்தொறும் மாய்ப்பார்!

உழைப்போர்க் கெல்லாம் ஒவ்வொரு மடமும்.
ஒவ்வொரு பீடமும் தந்து - பல
உணவதும், உடைகளும் தந்து - அவர்
அழைப்பார் ஆகில் அனைவரும் அவர்போல்
ஆயிரம் பூக்களைக் கொய்து - நாளும்
அறுமுறை பூசைகள் செய்து - நன்கு
பிழைப்பா ரன்றோ? பெரும்பேரின்பப்
பிறவுல கெய்துவ ரன்றோ? - இப்
பிறப்பினை அறுப்பா ரன்றோ? - இதை
உழைப்போ ரெல்லாம் உணருவ ராகில்
உயிர்பெறுமா மதம் இங்கு? - இதற்
குழைப்பது அவரவர் பங்கு!

-1957

## 85 பிறப்பொக்கும் !

பிள்ளை பிறந்தது; பிறக்கும் போதே
கொள்ளை அழகதன் கூடப் பிறந்தது!

உறுப்புகள் யாவும் அதனுடன் பிறந்தன.
கறுப்பு நிறமும் கூடவே பிறந்தது.

மற்றவர் பெற்ற மருத்துவ மனையில்தான்,
பெற்றெடுத் தாளதைப் பெற்ற பொற்றொடி!

“பிறந்தது ஆணா பெண்ணா” என்றனர்;
அரும்பெரும் மகிழ்வோ “டாணே” என்றாள்.

“அச்செலாம் உன்போல்” என்றனர்; அதன்பின்
உச்சி குளிர்ந்தாள்; உவகை வழிந்தது.

“பிறந்த குழந்தையின் பிறப்பென்ன” என்றனர்;
“பிறந்தது மாந்தப் பிறப்பே” என்றாள்.

“குழந்தையின் குலத்தைக் கேட்டோம்” என்றனர்;
“பழந்தமிழ்க் குல”மெனப் பாவை மொழிந்தாள்.

“அப்படி என்றால் அதுவென்ன ‘சாதி’?”-
இப்படிக் கேட்கவே எழுந்தாள் நங்கை;

“கண்ணொடு பிறந்தது; காதொடு பிறந்ததே
உண்ணும் வாயொடும் உடலொடும் பிறந்ததே;

நலத்தொடு பிறந்தது; நானறிய எந்தக்
குலத்தொடும் பிறக்கிலை; குணத்தொடும் பிறக்கிலை;

தூய்மை உடலொடும் தூய்மை அறிவொடும்
தூய்மை உளத்தொடும் தோன்றிய குழந்தைக்கு

ஏது ‘சாதி’? இழிவுயர் வெல்லாம்?
தீதிலாப் பிறப்பைத் தீப்பிறப் பாக்குகிறீர்!”

என்று மொழிந்தாள் ஏந்திழை;
நின்று கேட்டவர் நீட்டினர் நடையே!

-1958

86

## உள்ளத்தனைய துயர்வு !

பரிதி நடந்துசெலும் பாதையிலும் தண்ணின்
அரிதாம் நிலவொளியின் ஆட்சியிலும் நன்கமைந்து,
காலப் பிரிவாலும் காற்றாலும் சீர்பெற்ற
கோலத் தமிழகத்தைக் கோளநூல் வல்லார்கள்
பாராட்டிப் பேசுகின்றார் என்னும் பெருமையொடு,

சேரனென்னும் வீரன் செழுந்தமிழர் பாட்டனென்றும்,
சோழனென்னும் வேந்தனுக்குச்
சொந்தம்யா மென்றுரைத்தும்,
வாழும் பழமதுரை வாழ்ந்திருந்த பாண்டியராம்
வித்தில் விளைந்திருக்கும் வீரஞ்சேர் கூட்டமென்றும்,
கத்திப் பழங்கதைகள் கூறி வருவதல்லால்,
நம்மில் வளர்ந்துவரும் நச்சடிமைக் கீழ்க்குணத்தை
இம்மி யளவேனும் எண்ணி நாம் பார்த்ததில்லை!

வீரத் துயர்ந்திருந்த வேந்தரென்று பேசுகின்ற
சேரரொடு பாண்டியரும், சோழத் தமிழரசும்,
தம்முள் குலைவுற்றுத் தாழ்வெய்தி மாண்டதனை,
நம்முன் அறிந்திருந்தும் நல்லுறவு கொண்டதில்லை!

பண்டைப் பெருந்தமிழன் பான்மையினைக் கூறிடுங்கால்
அண்டை இருப்பவனை அன்பொழுகப் பார்த்ததில்லை!

பாரியென்றும், ஓரியென்றும் பைந்தமிழின் வள்ளலரைக்
கூறிடுவ தல்லால் குறுணையள வீந்ததில்லை!

பாவியங்கள் ஐந்தென்று பாடிக் களிப்பதல்லால்
பாவியஞ்சொல் நல்லுரையைக்
கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை!

கீரன் துணிவுபற்றிக் கூறிமகிழ் வேற்பதல்லால்
வீரத் துணிவில்லை; நெஞ்சில் வலிவில்லை!

சாதிப் பெருமடமும், சாத்திரமும், பன்னூலை
ஓதி விடுவதனால் ஓய்ந்துவிடப் போவதில்லை!

கீழென்றும், மேலென்றும் கொள்ளுதலால் இந்நாடு
பாழடைவ தல்லால் பயனடையப் போவதில்லை!

செல்வச் சிறப்பென்றும், ஏழ்மைச் சிறுமையென்றும்,
பல்வாறு கூறிப் பயனெதுவும் கண்டதில்லை!

கோளறிந்து திங்கள் குடியேறுங் காலத்தில்
வாளெறிந்து, வில்லேவி வாழ்ந்துவிடப் போவதில்லை.

அண்டத் திருவுலகை ஆய்வாளர் நாளும் போய்க்
கண்டறியும் காலத்தில் காலமொன்றும் செய்வதில்லை!

மெய்யில் அழுக்கேறி, நெஞ்சில் இருள்வைத்துக்
கைகூப்பிப் போற்றக் கடவுளருள்(!) சேர்வதில்லை,

தம்மைப்போ லோருயிரைத் தாழ்த்தி நடக்கையிலே,
செம்மையாய்ப் பண்டைச் சாத்திரங்கள் பேசுவதில்
நாணமில்லை! மக்களுள்ளே நல்லொழுங்கு தானுமில்லை!
மாணப் பெரும் பேச்சில் மக்களுயர் வேற்பதில்லை!

“எவ்வுயிரும் ஒருயிராய் எண்ணீர்! பெருமையுறுஞ்
செவ்வை ஒழுங்கேற்பீர்! சேர்ந்தொருங்கே வாழ்வீர்!
உயரன்பு கொள்வீர்! உறுந்தமிழ்நூல் கற்பீர்!
அயர்வின்றி எப்பணியும் ஆற்றி உயர்வடைவீர்!
நன்றல்ல நீக்குவீர்” என்று நவின்றொருவன்
ஒன்றினையும் கொள்ளா தொழிந்து விடின் நாமவனை
என்னென்று கொள்ளுவோம்? எள்ளி இகழோமா?
பொன்னென்றா கொள்ளுவோம்?
போவென்று தள்ளோமா?

உள்ளத் துயர்வில்லா ஓதுகல்வி கல்வியன்று;
வள்ளுவரும் உள்ளத்து வாய்மை உயர்வென்றார்!
வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

-1958

## 87 குச்சுக் குடிசையிலே !

ஆராரோ ஆரரிரோ, ஆராரோ ஆரரிரோ!
ஆரரிரோ ஆரரிரோ, ஆராரோ ஆராரோ!

பாராளும் அன்பே! பணிவே,நீ கண்ணுறங்கு;
சீராளும் வேந்தே! செதுக்காத பொற்சிலையே!

வாடாத பூவே! வயிறுவக்க வந்தவனே!
தேடாத செல்வமே! தேனுருவே கண்ணுறங்கு!

முத்தெடுத்துக் கோத்த முழுவயிரத் தொட்டிலில்லை;
பத்துத்திங்கள் சேர்த்துப் பணம்போட்ட தொட்டிலடா!

மேலே கிளிகொஞ்ச மின்னிழையார் ஆட்டுவதற்
கேலாத ஏழையடா! ஏந்தியுனைப் பெற்றவர்கள்!

மெத்தென்று பஞ்சுமெத்தை மேனிவருந் தாமலிட,
சொத்தறியாப் பஞ்சையடா! சீரே உனைப்பெற்றோர்!

ஏதுமில்லா ஏழையர்பால் ஏன்பிறந்தோம் என்றுனது
தீதில்லா நெஞ்சத்தில் தேனே நினைக்காதே!

நெய்மணக்கப் பால்காய்ச்சிச் சோற்றைப் பிசைந்தெடுத்தே
கைமணக்க ஊட்டும் குடும்பமில்லை உன்குடும்பம்!

பாற்சோறு மில்லையென்று பாவியவள் சொன்னவுடன்
வேறுபட்டுப் போனதென்ன வேந்தே,உன் பூமுகமும்?

வானத்தே பூத்துவரும் வெண்ணிலவை நீயென்றும்
காணும் படியிருக்கும் கூரையடா உன்குடிலும்!

ஏங்கிக் கிடக்கையிலே ஏதுமில்லா என்வயிறு
தாங்கிப் பிறந்தவனே! தேடரிய செல்வமே!

வாய்மணக்க என்றன் வயிறும் மணந்திடவே
சேயாகப் பிறந்திருக்கும் செல்வமே கண்ணுறங்கு!

புத்தகத்தை நீதூக்கிப் போகையிலும் நீகற்ற
வித்தாரப் பேச்சுகளை வீடுவந்து சொல்கையிலும்,

காது மணக்குமிரு கண்குளிரும்! செந்தமிழில்
ஓது கலைபயின்றால் உன்னாடு பூக்குமடா!

சாதி சமயமென்று சாத்திரங்கள் பேசியதை
மோதி முரித்தாலிம் முத்தமிழ்நா டேத்துமடா!

குச்சுக் குடிசையிலே கோவேநீ பூத்தாலும்
மச்சில் குடியேறி மானேநீ வாழ்ந்திடடா!

வேலையெனப் போயிருக்கும் வேந்தனே, உன்தகப்பன்
மாலை திரும்பிவந்து மார்மே லுனைப்போட்டுச்

சேரன் கதைபாடிச் சோழன் புகழ்கூறித்
தார்நெஞ்சன் பாண்டியனாம் தாயகத்தைக் காத்த

மறம்பாடிச் சொல்வார்! மரகதமே! வள்ளுவரின்
அறம்பாடிச் சொல்வார்! அழாமல் நீ கண்ணுறங்கு!

ஆண்ட தமிழ்மறவர் அச்சே நீ கண்ணுறங்கு!
நீண்ட கதை பாட நேரமில்லை கண்ணுறங்கு!

-1958

## 88 நாம் தமிழரல்லர் !

பள்ளென்போம்; பறையென்போம் நாட்டாரென்போம்!
பழிதன்னை யெண்ணாமல் வண்ணா ரென்போம்!
பிள்ளையென்போம்; முதலியென்போம்;
நாய்க்கர் என்போம்!
பிழைநாணா தருந்ததியர், படையா ளென்போம்!
எள்ளல்செய் திழிக்கின்றோம்; தாழ்விக் கின்றோம்!
எண்ணுங்கள்; நமைத் ‘தமிழர்’என்கின் றோமா?
குள்ளமனப் பான்மையிது தொலையு மட்டும்
கூசுங்கள்; நாணுங்கள்; தமிழ்நாட் டாரே!

-1959

## 89 நெறி காணீரே !

கல்லாலும் செம்பாலும் பண்ணிவைத்த
படிவத்தைக் ‘கடவுள்’ என்றே
நல்லாவின் பாலாலும் நெய்யாலும்
வழிபாடு நாளும் செய்தே
எல்லாரும் அவர்பெற்ற மாந்தரென்பீர்!
ஆனாலும் எண்ணற் றோரைச்
சொல்லாலும் மக்களெனச் சொல்லுகிலீர்;
தாழ்த்துகின்றீர்; நெறிகா ணீரே!

-1960

## 90 இருள் உலகம் !

*பொறியிலார் புல்லுரைக் கென்செவி யிளைத்தேன்;*
*பொய்யர்முன் மெய்யுரைத் திழிந்தேன்;*
*குறியிலார்க் கொருவழி கூறிநாத் தடிந்தேன்;*
*கொடியர்முன் பணிந்துளம் நொடிந்தேன்;*
*நெறியிலார் அழிவதை எண்ணிநெஞ் சொடிந்தேன்;*
*நீர்மையர் வறுமைகண் டழுதேன்!*
*அறிவிலார் மேன்மேல் உயர்வதை அறிந்தேன்;*
*அழலென உளங்கொதித் தேனே!* 1

*உயர்விலார் தொடர்பை உண்டுளங் கசந்தேன்!*
*உழைப்பவர் துயர்க்குயிர் துடித்தேன்.*
*மயர்விலார் சிறப்பற மடிவதைக் கண்டேன்!*
*மாண்பிலார் பிழைக்கநெஞ் செரிந்தேன்!*
*அயர்விலார் இழிநிலை அடைவதை நினைந்தேன்!*
*அன்பிலார் இன்மொழி இகழ்ந்தேன்.*
*வெயர்விலார் நிழல்படுத் துறங்கநெஞ் சழன்றேன்!*
*வெறுவெளி துயில்வர்கண் டேனே!* 2

*பெட்பிலா மகளிரைப் பார்த்துளம் வெயர்த்தேன்!*
*பெண்டிர்தம் துயர்க்குளம் நைந்தேன்.*
*நட்பிலா நெஞ்சினர் நட்பினுக் கொடிந்தேன்!*
*நண்பருக் கலைந்துகால் கடுத்தேன்!*
*உட்புகா நெஞ்சினர் உறவுகண் டுமிழ்ந்தேன்!*
*ஊர்விழுங் குவர்க்குளம் உடைந்தேன்!*
*கட்புகா தீவினைக் கயவருக் கொளிந்தேன்!*
*காதலில் இழிவுகண் டேனே!* 3

*பொருட்பெற வாயிரம் பொய்ப்பரைக் கண்டேன்!*
*பொருள்மக ளிர்க்குளம் புகைந்தேன்!*
*இருட்புகு கோயிலின் இழிசெயற் குலைந்தேன்;*
*ஏதுமி லார்க்குநெஞ் சவிழ்ந்தேன்!*
*அருட்புகு நெஞ்சரென் றார்ப்பரை வியந்தேன்;*
*அழுக்கறு வார்க்குடல் பொடிந்தேன்.*
*மருட்புகு கல்வியர் மயல்சீர்க் குயிர்த்தேன்.*
*மானமி லார்க்கஞ் சினனே!* 4

பணிவினார் தம்மிடைப் பகைவரைப் பார்த்தேன்!
பசியிலார் ஊண்பெறக் கொதித்தேன்!
பிணியினார்க் கிரங்கிலாப் பித்தர்கண் டடுத்தேன்!
பிணியிலார் மருந்துணச் சினந்தேன்!
துணிவினார் நெஞ்சினுட் டுணுக்குகண் டிழித்தேன்!
துயரிலார்க் கிடுதல்கண் டகன்றேன்.
வணிகனார் கைவாய் வரும்படிக் கயர்ந்தேன்.
வல்லிருள் உலகுகண் டேனே! 5

-1961

## 91 அறுவடை செய்கிறார்கள் !

அறுவடை செய்கிறார்கள்! - இங்கே
அறுவடை செய்கிறார்கள்!

திருவடை யாமலே திண்ணையில் வீதியில்
தெருவோரச் சாய்க்கடை புழக்கடை நடுவினில்
எருவடை குழிகளில் ஈக்களாய், புழுக்களாய்
இறக்காமல் மொய்க்கின்ற ஏழ்மையைச் சொல்லியே,
அறுவடை செய்கிறார்கள் - இங்கே
அறுவடை செய்கிறார்கள்!

மாருக்குத் துணியின்றி வாடிடும் பெண்டிர்!
மானத்தைக் காவாத வெறுமேனித் தோல்கள்!-
பேருக்கு உழைப்பதாய்ப் பேசியே தங்கள்
பிழைப்புக்கு வழிதேடும் பெரும்பெருந் தலைகள்!
அறுவடை செய்கிறார்கள் - இங்கே
அறுவடை செய்கிறார்கள்!

ஊருக்கே இராப்பகல் உழைப்பதாய்ச் சொல்லி
உண்மைக்குப் பூட்டிட்டே உயர்மாடி கட்டித்
தூருக்குத் தோண்டியாய் உதவுவோம் என்றே
தொண்டைக்கு மருந்திட்டு மாநாடு கூட்டி,
அறுவடை செய்கிறார்கள் - இங்கே
அறுவடை செய்கிறார்கள்!

கந்தைக்கு மாற்றில்லை! கடுக்கின்ற வயிறு!
காற்றுக்குத் தடையில்லை; கருஞ்சுவர்க் குடிசை!
மந்தைக்கு நிகரான மக்கட்செல் வங்கள்!
மற்று, அவர் பெயர்சொல்லிக் கொழுக்கின்ற நாய்கள்,
அறுவடை செய்கிறார்கள்! - இங்கே
அறுவடை செய்கிறார்கள்!

கட்சிகள் தலைவர்கள் பெயர்சொல்லிச் சொல்லிக்
கண்ணீரும் இருசொட்டு வழிவதாய்த் துடைத்து,
மெச்சிடும் திட்டங்கள் பலதீட்டி னாலும்
மீளாத ஏழ்மைக்கு மெப்பாகப் பேசி,
அறுவடை செய்கிறார்கள் - இங்கே
அறுவடை செய்கிறார்கள்!

உழைப்பாளர் தொழிலாளர்க் குழைக்கின்றோம் என்றே
ஒருகோடித் தலைவர்கள் கத்தினார் நன்றே!
பிழைப்பவர் அவர்களா, இவர்களா? - கண்டோம்!
பீற்றலும் கந்தலும் அற்றதா? பேச்சில்;
அறுவடை செய்கிறார்கள்! - இங்கே
அறுவடை செய்கிறார்கள்!

-1967

## 92 பணப்பதுக்கல் பறிமுதல் செய்க !

அடிக்கின்ற கொள்ளையரை - பணம் பதுக்கும்
முதலைகளை அழித்தி டாமல்,
துடிக்கின்ற ஏழைகளின் துயரத்தைக்
கண்ணீரைத் துடைப்போம் என்னும்
நடிக்கின்ற நடிப்பெதற்கு? நயமான
பேச்செதற்கு? நடுக்கு எதற்கு?
பிடிக்கின்ற பிடியினிலே பணப்பதுக்கல்
பறித்தொருமை பேணு வீரே!

-1967

## 93 புதுமை இலக்கியம் புனைக இளைஞனே !

இலக்கியஞ் செய்க! இலக்கியஞ் செய்க!
இளைய தமிழனே! இலக்கியஞ் செய்க!
கலக்குறும் மூடக் களஞ்சியம் எல்லாம்
விலக்கியே புதுமை விளைவித் திடுக!

புராணக் குப்பைகள் தமிழில் புகுந்தன;
இராத பொய்ம்மைகள் எழுந்தன தமிழில்!
மடமைக் கதைகளால் மக்கள் இழிந்தனர்;
கடமை மறந்தனர்; கயமை மிகுந்தது!
துலக்கமற் றிருக்கும் அவர்துயர் துடைக்கும்
இலக்கியஞ் செய்க, இளைய தமிழனே!

‘பிரமன்’ என்பவன் பெயர்த்தெழு தியதிது;
‘அரன்’தன் மனைவிக்கு அறிவித் ததுவிது;
‘நாரத’ முனிவன் நவின்றது, இந்நூல்!
‘பாரதம்’ பாடிய வியாசனின் கருத்திது!
வால்மீகி எழுதிய வடமொழிக் கதையினை
நூலாய்ப் புளுகிய கம்பனின் நூற்பிது.
- எனப்பல வாறாய் எழுந்த நூலெலாம்
மனத்தையுங் கெடுத்து அறிவையும் மாய்த்தே
ஒருசிலர் வாழவும் மிகப்பலர் வீழவும்-
நெருநலும், இன்றும் நாளையும் நின்று
மக்கள் குலத்தினை மட்கிடச் செய்வன!

தக்கவே அவற்றைத் தரைமட்ட மாக்கி
எந்தமிழ் மக்கள் எழுச்சிபெற் றுய்ந்திடச்
செந்தமிழ் இலக்கியஞ் செய்க இளைஞனே!

கொடுமை சான்ற குலப்பிரி வினைகளை-
கெடுமை புகட்டும் சமயக் கீழ்மையை-
செல்வச் செருக்கினைச் செந்தமிழ்ச் சொற்களால்
கல்லி யெறிந்திடும் இலக்கியங் கழறுக!

வாழ்க்கை பொதுவெனும் வாழ்த்தினைப் பாடி
வீழ்க்கை யுற்றவர் விலாவலி வேறவும்,
நொடிந்தவர் குருதி நுரைத்துப் பொங்கவும்,
இடிந்தவர் வாழ்க்கை எழுச்சிபெற் றுய்யவும்,
புதுமை இலக்கியம் புனைக இளைஞனே!
பொதுமை இலக்கியம் பூக்கட்டும் இன்றே!

**-1970**

## 94 படிக்கின்றோம்; பேசுகின்றோம்; செய்கின்றோமா ?

'ஒன்றே குலம்' - என
உரக்கப் படிக்கின்றோம்!
மன்றினில் மேடையில்
வான்பட முழக்குவோம்!
என்றைக் காகிலும்
எவ்விடத் தாகிலும்
நின்(று) அதன் பொருளை
நினைத்திருப் போமா?
படிப்ப தெதற்குத் தம்பி? - கடைப்
பிடிப்பதற்கா? பீற்றுவதற்கா?

‘ஒருவனே இறைவன்’ - என்
றுரைப்பது நாம்தாம்!
உருவமோ, பெயரோ
ஒருகோடி இருக்கும்!
தெருவெலாம் கோயில்கள்;
திருவிழா, பலவகை!
ஒருநொடி யாகிலும்
உணர்ந்திருப் போமா?
படிப்ப தெதற்குத் தம்பி - கடைப்
பிடிப்ப தற்கா? பீற்றுவ தற்கா?

‘யாவரும் ஒரு நிறை’-
இனிக்க உரைக்கிறோம்!
‘ஏவலன் செல்வன்’-என்
றிருப்பதை மறைக்கிறோம்!
கூவி, இரந்து
குலைபவர் உழைப்போர்;
மூவேளை உண்டு
மூடர் கொழுப்பதா?
படிப்ப தெதற்குத்தம்பி? - கடைப்
பிடிப்ப தற்கா? பீற்றுவ தற்கா?

‘எல்லாரும் இந்நாட்டு
மன்னர்’ - என்கிறோம்.
பொல்லாப் பிழையுரை!
பொன்போன்ற மண்ணுரை!
கல்லாரும் கயவரும்
கள்ளரும் மன்னரா?
கல்வியும் ஒழுங்கும்,
கயமையும் - ஒன்றா?
படிப்ப தெதற்குத் தம்பி - கடைப்
பிடிப்ப தற்கா? பீற்றுவ தற்கா?

-1970

## 95 மாந்த உருவமே !

தெருத்தெரு வாக, வீடுவீ டாக,
ஒருவேளைச் சோற்றுக்கு இரந்து திரிகின்ற
உருவமும் மாந்த உருவமே! - அந்த
உருவமும் மாந்த உருவமே!

மெய்யும் நம்போல்; மேனியும் நம்போல்;
கைகால் உண்டு; கண்கா துண்டு;
அழுக்கிருந் தாலும் அழகும் இருக்கும்;
ஒழுக்கமும் இருக்கும்; உயர்வும் இருக்கும்;
இருப்பினும் நம்போல் வாழ்க்கை இல்லையே!
உருவமும் மாந்த உருவமே! - அந்த
உருவமும் மாந்த உருவமே!

உருக்குலைந் திட்ட உருவம்! ஒளியிலாது
ஒட்டி உலர்ந்த கன்னம்! திரிபோல்
கட்டித் திரண்டு காய்ந்த தலைமயிர்!
குழிந்த கண்கள்! கரும்பினில் சாறு
பிழிந்த சக்கையே கைகளும் கால்களும்!
வாடிய மாம்பழத் தோலின் மீதில்
ஓடிய சுருக்கம் உடம்பெலாந் தோய்ந்த
உருவமும் மாந்த உருவமே - அந்த
உருவமும் மாந்த உருவமே!

மொச்சை நாற்றம் வீசிடும் அழுக்குடை!
கொச்சைப் பேச்சு! கூனிய முதுகு!
தளர்ந்த தோள்கள்! தள்ளாடும் மென்னடை!
கிளர்ந்த தீப்பசி; கெஞ்சிய வாழ்க்கை!
பெருமையே இல்லாச் சருகுகள்! - ஆயினும்
உருவமும் மாந்த உருவமே - அந்த
உருவமும் மாந்த உருவமே!

வெட்ட வெளியிலோ, வீதி விளிம்பிலோ
கொட்டும் மழையிலோ, கொளுத்தும் வெயிலிலோ,
சாய்க்கடை யோடு சாய்க்கடை யாக-
நாய்க ளோடு நாய்க ளாக-
கொட்டிய இலைகளைக் குடைந்த வாறாய்
வாய்க்கும் வயிற்றுக்கும் போராடிச் சாகும்
உருவமும் மாந்த உருவமே! - அந்த
உருவமும் மாந்த உருவமே!

வானை அளாவக் கட்டிய வளமனை!
நீணிலம் அளக்கும் நெடிய ஊர்திகள்!
நிலவுக்குத் தாவும் அளவுக்கு அறிவியல்;
நாகரிக வாழ்க்கை; ஆரவா ரங்கள்!
விழாக்கள்; விருந்துகள்; உழாத விளைவுகள்!
செல்வக் கொழிப்பு! ஆயினும் ஒருபுறம்
இல்லாமை என்னும் இழிந்த பாழ்நிலை!
அந்த நிலையினில் அமிழ்ந்து சாகும்
உருவமும் மாந்த உருவமே! - அந்த
உருவமும் மாந்த உருவமே!

புழுப்பிறப் பல்லர்; புழுவினும் தாழ்ந்த
இழுக்குடை வாழ்வில் இன்னுஞ் சாவதா?
விலங்குகள் அல்லர்; விலங்கினும் தாழ்ந்த
நலமிலா வாழ்வில் நலிவுற் றிறப்பதா?
நாய்போல் இருப்பின் நாய்களும் உதவும்;
பன்றிபோல் இருப்பின் பன்றியும் உதவும்!
நன்றி யுணர்விலா நம்மவர் நடுவில்
குன்றி ஒடுங்கிக் குலைந்து சாகின்ற
உருவமும் மாந்த உருவமே! - அந்த
உருவமும் மாந்த உருவமே!

-1970

## 96 ஏழைக்கு ஏழை இரங்குவதுண்டா?

ஓடம் விடுகிறாய்! ஓடக் காரனே!
மாடம் அன்று,உன் வீடு;மண் குடிசை!
ஏந்தல் இல்லை,நீ; ஏழைக் குடிமகன்.
காந்தும் பசியினால் காய்ந்ததுன் வயிறு.
நெளித்து நீட்டி ஓடம் வலித்தபின்
புளித்த கூழுக்கு அலைகின்றாய்; அறிவேன்!
கருக்கும் வெயிலில் கருகிய துன்உடல்;
உருக்குலைந் திருக்கும் உனையொன்று கேட்பேன்;
பெறுவ தொன்றும் இன்றி,நின் பிழைப்பிடை
ஒருநா ளாகிலும் ஒருநடை யாகிலும்
உன்னினும் ஏழை ஒருவனை, உளமிரங்கி
அன்போ டக்கரை சேர்த்ததும்
உண்டோ இல்லையோ? ஓடக்காரனே!

செருப்புத் தைக்கும் சிறுதொழில் தோழனே!
வெறுப்புறு வாழ்க்கையில் வீழ்ந்து கிடக்கிறாய்
எருமைத் தோலை,நின் இருதோள் தூக்கிப்
பெருமை குன்றிடப் பேச்சும் இன்றிச்
சாக்காட்டு வாழ்க்கை வாழ்கின்றாய்; அறிவேன்!
ஈக்காட்டில் உன்குடில்; இழிவான பள்ளம்!
மலக்கூடை சுமக்குநின் மனைவியும் நீயும்
நிலக்கோள மாந்தர்க்கு நித்தமும் செய்யும்
தொண்டுக்கு வானமே தூசாய்ப் போகும்!
உண்மையோ இல்லையோ? - உனையொன்று கேட்பேன்:
பெறுவ தொன்றும் இன்றி,நின் பிழைப்பிடை
ஒருநா ளாகிலும் ஒருபொழு தாகிலும்
உன்னினும் ஏழை ஒருவன் செருப்புக்கு
அன்போடு ஆணியொன் றறைந்ததும்
உண்டோ இல்லையோ? சிறுதொழில் தோழனே!

உழவு செய்கிறாய், உழவுக் காரனே!
முழவுகொல் அரசின் முழக்கமும் ஒடுக்கமும்
உன்கை எடுப்பிலும் படுப்பிலும் உருள்வது!
பெருமைதான்; என்னினும் நின்பிழைப் பெளிமையே!
பருத்தி விளைக்கிறாய்; பஞ்சுநின் ஆடை!
நெல்லைக் கொழிக்கிறாய்; நினக்கோ பழங்கூழ்!
கண்மழை பொழிந்து, கைக்கொண்டு உழுது
மண்ணெலாம் பொன்னாய் மலர்த்துகின் றாய்,நீ!

உலகம் புரக்கின்ற உனையொன்று கேட்பேன்:
பெறுவ தொன்றும் இன்றி,நின் பிழைப்பிடை
ஒருநா ளாகிலும் ஒருவேளை யாகிலும்
உன்னினும் ஏழை ஒருவனுக்கு உளமுவந்து
அன்போடு உண்ணக் கொடுத்ததும்
உண்டோ இல்லையோ? உழவுக் காரனே!

உடை,நெய் வோனே! உடை,நெய் வோனே!
கொடையாளன் அல்லன்,நீ; உழைக்கும் குடிமகன்!
பஞ்சிழை நூற்றுக் கஞ்சி தோய்த்துப்
பாவினி லேற்றிப் பகலும் இரவும்
அற்ற இழை முடிந்தே, அறாஇழை பின்னி,
உற்றவுடை நெய்தே, ஊர்க்குஉடுக் கின்றாய்!
உண்ணவும் இன்றி உடுக்கவும் இன்றி,வே
றெண்ணமும் இன்றி இளைத்தனை; அறிகுவேன்!
பட்டுடை நெய்து பணக்காரர்க் கீவாய்;
வட்டுடை யின்றி,உன் வளைமக்கள் வாடுவர்.
உழைக்கும் பெருமகன் உனையொன்று கேட்பேன்;
பெறுவதொன்றும் இன்றி நின் பிழைப்பிடை
ஒருநா ளாகிலும் ஒருமடி யாகிலும்
உன்னினும் ஏழை ஒருவன் உடுத்திட
அன்போ(டு) ஒருமுழம் அளித்ததும்
உண்டோ இல்லையோ? உடைநெய் வோனே!

மீன்வலை யோனே! மீன்வலை யோனே!
வான்தொடு கடல்நீர் வலைபட வீசியும்,
கட்டு மரத்தொடு கட்டுண் டிருந்தும்,
அலையும் படகோ டாடி யிருந்தும்
புயலொடும், வெயிலொடும் போரிட்டு வென்றும்,
ஆழிக் களத்தே அறுவடை சாய்க்கும்
உன்றன் வாழ்வோ உழைப்பினில் பெருங்கடல்!
வென்று நீ வரும்வரை நின்று,நிலை யிருந்து,உன்
அன்றில் மகிழ்வொடு கூடை வாங்கிய
ஒப்பிலா விளைவோ ஒருமலை யிருக்கும்!
உப்புடற் காரனே! உனையொன்று கேட்பேன்.
பெறுவ தொன்றும் இன்றி,நின் பிழைப்பிடை
ஒருநா ளாகிலும் ஒருவலைக் காகிலும்
உன்னினும் ஏழை ஒருவற்கு மீன்கறி
அன்போடு எடுத்துக் கொடுத்ததும்
உண்டோ இல்லையோ? மீன்வலை யோனே!

-1970

## 97 புரட்சிதான் எல்லை !

என்ன எழுதினும்
என்ன பேசினும்
ஏழைக் கொருபயன்
சேர்ந்ததா? - அவன்
எரியும் சாப்பசி
தீர்ந்ததா? - செம்
பொன்னை உருக்கினோம்:
புதுமை பெருக்கினோம்;
பொதுமை மலர்ந்ததா?
இல்லையே? - பெரும்
புரட்சிதான் அதன் எல்லையே!

தென்னை காய்த்தது;
மாவும் பழுத்தது;
தெண்ணீர் வயல் பயிர்
சாய்த்தது! - நல்ல
தேட்டமும் நாள்தொறும்
வாய்த்தது - இனுஞ்
சின்னஞ் சிறியவன்
பென்னம் பெரியனால்
சீரழி யும்நிலை
தொடர்ந்ததே - மனச்
செருக்குடன் கொடுந்துயர் படர்ந்ததே.

மண்மிக விளையினும்
மழைமிகப் பொழியினும்
மாற்றங்கள் கோடி
நிகழினும் - பலர்
மக்கள் தலைவராய்ப்
புகழினும் - புதுப்
பண்முழக் கெழுந்ததா?
பழமை கழன்றதா?
பசிப்பிணி தீர்ந்ததா?
இல்லையே! - மேலும்
பணிவதும் குனிவதும் தொல்லையே.

சட்டங்கள் தீட்டினோம்;
திட்டங்கள் காட்டினோம்;
சரிசமம் எனும் நிலை
வாய்ந்ததா? - பழஞ்
சாத்திரச் சகதியும்
காய்ந்ததா? - பணக்
கொட்டங்கள் எத்தனை?
கொள்கைகள் எத்தனை?
கூச்சலிட்டோம்; பயன்
இல்லையே; - ஒரு
கொடிய புரட்சிதான் எல்லையே!

-1970

## 98 நாட்டை மலர்த்திட நடையிடு தம்பி !

மலர்க்கூடை தூக்கிப் போவாள் ஒருத்தி;
மலக்கூடை தூக்கி வாழ்வாள் ஒருத்தி!
இலையெனில் ஒருத்தி இழிவைச் சுமப்பதா?
இந்நிலை ஒழிந்திடல் எந்தநாள் தம்பி?

இழுத்துச் செல்லும் வண்டியில் ஒருவன்
ஏறிப் போவான்; இழுப்பான் ஒருவன்!
புழுத்த குமுகாயப் புரையினை மண்ணில்
புதைத்திடல் என்றோ? புகலுவாய் தம்பி!

காலையி லிருந்து மாலை வரைக்கும்
கழுத்துநரம் பொடியக் கருகுவான் ஒருவன்;
வேலையொன் றின்றி விலாவரை உண்ணும்
வீணரை வீழ்த்துநாள் எந்தநாள் தம்பி?

உலகம் உண்டிட உழுவான் ஒருவன்;
உண்டு,ஊர் சுற்றி உறங்குவான் ஒருவன்!
புலையுங் கொடுமையும் புரைமிகப் புழுக்கும்
புன்மை வழக்கினைப் பொசுக்குவாய் தம்பி!

பசியால் வாடிடும் பாட்டாளி ஒருவன்;
பசித்திட மருந்துணும் பழிமகன் ஒருவன்!
நசியா நிலையினை நசுக்குவ தென்றோ?
நாட்டை மலர்த்திட நடையிடு தம்பி!

மண்ணையுங் கல்லையும் மனத்தையும் வருத்தி
மாட மாளிகை எழுப்புவான் ஒருவன்
திண்ணையு மின்றித் தெருவில் வாழ்வதா?
தேன்,பால் பழமுண்டு வீணர் திரிவதா?

நெய்யுந் தொழில்செய் நெசவாளித் தோழன்
நீட்டிப் படுக்கக் கந்தையும் இல்லாப்
பொய்யும் புலையும் மலிந்திடும் போக்கின்
பூண்டை யறுக்குநாள் எந்தநாள் தம்பி!

நடந்து நடந்து, நலிவதா ஒருவன்?
நலமிகு ஊர்தியில் நயப்பதா ஒருவன்?
கடந்தது போர்செயுங் காலமும் வந்தது;
களிறே புறப்படு; ஆற்றுக கடமையே! -1970

## 99 பதவி எதற்கு? உதவி செய்யவா? ஊரை உறிஞ்சவா?

படித்துத் தேறிப்
பட்டம் பெறுகிறோம்;
துடித்தலைந் தொரு தொழில்
துழாவிப் பிடிக்கின்றோம்;
அடித்துப் பிடித்தே
அதிகாரஞ் செய்கிறோம்;
கடித்து விழுகிறோம்;
கையூட்டு வாங்குவோம்;
பதவி எதற்குத் தம்பி - மக்களுக்
குதவி செய்யவா? - ஊரை உறிஞ்சவா?

மருத்துவம் படிக்கிறோம்;
மனவியல் தேர்கிறோம்;
தெருத்தொறும் ஊர்தொறும்
தீராத நோய்களால்
வருத்த முறுகின்ற
மக்களை வாட்டியே
பருத்த கைகளால்
பணத்தைப் பறிக்கிறோம்!
பதவி எதற்குத் தம்பி? - மக்களுக்
குதவி செய்யவா? ஊரை உறிஞ்சவா?

கட்சி அமைக்கிறோம்;
கழகம் சமைக்கிறோம்;
மெச்சுந் தலைவராய்ச்
செயலராய்ப் பொருளராய்
உச்சி குளிர்ந்திட
ஊர்வலம் வருகிறோம்!
எச்செய லாகிலும்
ஏழைக் குதவுமா?
பதவி எதற்குத் தம்பி - மக்களுக்
குதவி செய்யவா? ஊரை உறிஞ்சவா?

மேடை அதிர்ந்திட
மின்விளக் கொளியிலே
கூடை கூடையாய்க்
கூப்பாடு போடுவோம்!
ஓடியும் கெஞ்சியும்
ஒப்போலை பெற்றபின்
நாடிய அமைச்சராய்
நாமே வாழ்கிறோம்!
பதவி எதற்குத் தம்பி - மக்களுக்
குதவி செய்யவா? ஊரை உறிஞ்சவா?

-1970

## 100 பொதுமை உலகம் புதுக்குக இளைஞனே!

அன்றைய வாழ்வில் அமைதி இருந்தது!
நன்றே செய்யும் நாட்டம் இருந்தது!
மெய்சொலல் உயர்வெனும் மேன்மை இருந்தது;
பொய்சொலல் தீதெனும் போக்கு வாழ்ந்தது,
அறியாமை இருந்தது; எனினும் கல்வி
நெறியே பெரிதென மக்கள் நினைத்தனர்;
வறுமை இருந்தது; எனினும் வாழ்க்கை
வெறுமை என்னும் நினைவால், விளைந்ததைப்
பங்கிட்டு உண்ணும் பழக்கம் இருந்தது!
'ஈ'யென் றிரப்பதை இழிவாய் எண்ணினர்;
'கொள்'எனக் கொடுப்பதை உயர்வாய்க் கொண்டனர்!
கலைகள் இருந்தன; கயமைகள் இல்லை;
கொலையுங் களவும் இருந்தன வாயினும்
அறமுறை, நடுநிலை - அவற்றைக் குறைத்தன.
வாணிகம் இருந்தது; வாய்மையும் இருந்ததால்
தூணெனத் துரும்பை அளக்கும் வழக்கிலை!
நறுஞ்செயல் யாவும் மிகுத்துநம் தமிழகம்
அறஞ்செய் உலகமாய் அன்றைக் கிருந்தது.

இப்படி இருந்த இனியநம் நாட்டில்
செப்படி வேலைகள் சிறிது சிறிதாய்
மிகுந்த வந்தன! மேற்கிலும் வடக்கிலும்
புகுந்தனர் மாந்தப் புல்லியர் ஒருசிலர்!
வந்தவர் தாமும் வாழ விரும்பினர்!

'மந்திரம்' என்றனர்; 'மாயம்'' என்றனர்;
தந்திரம் பலவும் செய்து தமிழரைக்
குலம்பல வாக்கினர்; புதுநெறி கூறினர்;
வலக்கா ரத்தால் வாழ முனைந்தனர்!
'சாதி' புகுந்தது; மிகுந்தது, சழக்கு!

‘வேதியர்’ என்றும், சூத்திரர்’ என்றும்
உயர்வும் இழிவும் பலப்பல உரைத்தனர்!
மயர்வற அவற்றை ‘மறை’என எழுதினர்.
‘மறைகள்’ சொன்னதால் ‘மறையோர்’ ஆயினர்!
‘வேதம்’ உரைத்ததால் ‘வேதியர்’ ஆயினர்!
கதைத்த பொய்களைக் கதைகள் ஆக்கினர்.
புதுப்புதுப் புளுகுகள் ‘புராணங்கள்’ ஆயின.
அமிழ்ந்தனர் அனைவரும்; அவற்றுள் மயங்கினர்!
தமிழர் உயர்வு வரவரத் தாழ்ந்தது.

இனம்பிள வுண்டதால் ஒற்றுமை இழந்தனர்.
மனமயக் குற்றதால் மானம் இழந்தனர்,
வெள்ளைத் தோலுக்கு அடிமையாய் விழுந்தனர்.
சள்ளைகள் மிகுந்தன; சண்டைகள் எழுந்தன!
சேரனைச் சோழனும், சோழனை மாறனும்
ஓராது போர்செய்து ஒழித்துக் கட்டினர்!

அறந்தலை உலகில் மறந்தலை நின்றது!
சிறந்த தமிழர் சிதைந்துவே றாயினர்.
தமிழன் குடுமியைத் தமிழனே உலுக்கினான்;
தமிழன் முதுகில் தமிழனே குத்தினான்!
‘மறையோர்’ அவற்றை ‘மறைந்து’ செய்தனர்.

‘வேதியர்’ அதுவே ‘வேதம்!’ என்றனர்.
அன்று தொடங்கி அடிமுதல் இழிந்தே
இன்றைய உலகம் ஏமாற்று உலகமாய்
மிளிர்ந்தது தம்பி! - மேனி எல்லாம்
குளிர்ந்ததா? இல்லை; கொதிப்புற் றதடா!
என்ன நினைக்கிறாய்? - எதிர்கால உலகை
இன்னும் இழித்திட எண்ணுகின் றாயா?
அல்லது உயர்த்திட ஆர்வமுற் றாயா?
சொல்; உலகு உனக்குச் சொந்தந் தம்பி!

சாதிக் குப்பையைச் சாம்ப லாக்கு;
பாதியை அறிவுப் பயிருக்கு உரமிடு!
மீதியை ஒற்றுமை மேன்மைக்கு உரமிடு!
இனமும் ஒன்றுதான்; இறையும் ஒன்றுதான்!

மனமும் ஒன்றுதான்; மக்களும் ஒருவரே!
இறைபல இருந்ததால் மதம்பல விருந்தன.
மதம்பல விருந்ததால் குலம்பல வெழுந்தன;
குலம்பல வெழுந்ததால் கொடுமைகள் நிறைந்தன;
உலகம் எல்லாம் ஒருகுலம் என்னும்
உயர்ந்த கொள்கைக்கு உரமிட்டு வளர்க்க!
அயர்வின்றி உழைக்க! ஆக்கம் உறுதி
உழைப்பிலார் சேர்த்த உடைமையை உலுக்குக!
உழைப்போர் இழந்த உடைமையை மீட்க!

வயிறு காயும் வறுமையைக் கொல்க!
உயிருவந் தூட்டும் உழவரைப் பேணுக!
பொதுமை உலகம் புதுக்கிடும்
புதுமை நினைவொடு புறப்படு இளைஞனே!

**-1970**

## 101 பொதுமை உலகம் !

ஒருதாய் நிலம்! ஒருதாய் மொழி!
உருவம், நிறம் ஒன்றே! - வாழ்
வுரிமை தனி அன்றே! - எனிற்
கருதாய் உடன் பிறந்தோர் பலர்
கண்ணீர் விடல் நன்றோ? - அவர்
கவலை யறல் என்றோ!

உருகாய் மனம்; உணராய் நிலை;
உழைப்போர் துயர் ஒருநாள் - கரை
உடைத்தே வெளி வருநாள் - புயல்
உருவாய் வரும்; பெறுவார் பலன்!
உண்மை இதை உணர்வாய்! - பொது
வுடைமை மனம் புணர்வாய்!

மனைகள் பல வெடுப்பார், தெரு
மண்ணில் புரள் வதுவோ? - உளம்
மறுகிக்குலை வதுவோ? - நாம்

புனைதற்குடை தருவார், வெறும்
புழுவாய் உருள் வதுவோ? - உடல்
புழுதி படி வதுவோ?

பணியும் மழை வெயிலும் குளிர்
பாரா துழைத் திடுவார் - பயிர்
பலவும் விளைத் திடுவார் - இங்
கினியும் பசித் துயரால், உயிர்
இழத்தல் தொடர் கதையோ? - சிலர்
இறுமாந் திடல் நிலையோ?

உலகம் பொது; உழைப்பும் பொது;
உரிமை பொது வைப்போம்! - அதன்
உடைமை நலந் துய்ப்போம் - மிகச்
சிலரால் பலர் நலியும் நிலை
சிதைப்போம்; துயர் புதைப்போம் - பொதுச்
சீர்மை நலம் விதைப்போம்!

-1970

## 102 ஆர்ப்பாட்ட உலகம் !

ஆர்ப்பாட்ட உலகமடா - தம்பி
ஆர்ப்பாட்ட உலகமடா; -இது
ஆர்ப்பாட்ட உலகமடா!

போர்ப் பாட்டும் புகழ்ப்பாட்டும்
பொய்ப்பாட்டு மே,நிறைந்த
ஊர்ப்பாட்டுக் கென்றென்றும்
உழைப்போருக் குதவாத (ஆர்ப்பாட்ட)

மண்ணென்றும் மனையென்றும்
மதிப்பான வாழ்வென்றும்
பெண்ணென்றும் மிகப்பேசிப்
பேயாட்டம் போடுகின்ற (ஆர்ப்பாட்ட)

அருளென்றும் அன்பென்றும்
அறமென்றும் வெளிப்பேசிப்
பொருளொன்றே குறிக்கோளாய்ப்
புனைவிட்டுத் திரிகின்ற (ஆர்ப்பாட்ட)
அடிக்கின்ற பணங்காசில்
அரைக்காசுக் கறஞ்செய்து
குடிக்கின்ற குடம்பாலில்
குவளைப்பால் கொடைவார்க்கும் (ஆர்ப்பாட்ட)

புலைகோடி செய்தேனும்
பொருள்கோடி தொகுத்தோர்கள்
கலைகோடி உருச்செய்து
கடவுட்குத் தேர்செய்யும் (ஆர்ப்பாட்ட)

படுக்கப்பூ மெத்தையிட்டு
பன்னீரில் உடல் கழுவி
உடுக்கப்பட் டுடைகேட்கும்
உன்மத்தர் நிறைந்தவெறும் (ஆர்ப்பாட்ட)

**-1971**

## 103 தப்பித் தவறியே மாந்தனாய்ப் பிறந்தவன் !

தப்பித் தவறியே மாந்தனாய்ப் பிறந்தவன்
ஒப்புக்கு வாழ்கிறான் உலகில் - கொஞ்சம்
உப்புக்கு விடிவில்லை வாழ்வில் - அவன்
வாழ்வில் - வெறும்
மெப்புக்குப் பேசியே
மேலுக்குப் பூசியே
தப்புக்குப் பூட்டிடுவீர்கள்- ‘சரி
தான்’-என நாட்டிடுவீர்கள்!

காலுக்குச் செருப்பின்றிக் கையிலோர் காசின்றி
மேலுக்குத் துணியின்றி வாழ்வான் - உடல்
தோலுக்குக் காப்பின்றி நோவான் - நொந்து
சாவான் - ஆவின்

பாலுக்குத் தேன் விட்டுப்
பருப்புக்கு நெய் விட்டுக்
காலுக்கு மெத்தைகேட் பீர்கள் - அவன்
கதையினைச் சொத்தையென் பீர்கள்!
படுக்கைக்குப் பாயின்றி, பதுங்கவும் குடிலின்றிக்
கடுக்கின்ற வயிற்றுக்குக் கஞ்சி - கொஞ்சம்
கொடுக்கவே புகழ்ந்துமைக் கெஞ்சி - மிக,
அஞ்சி - குளிர்
நடுக்கிடக் கைபோர்த்து
முடக்கிடும் மெய்சேர்த்து
ஒடுக்கிய வாறுயிர் தீய்ப்பான் - தெரு
ஓரங்களில் உயிர் சாய்ப்பான்!

வினைவிதைத் தானென்றும் விளைவிது தானென்றும்
புனைகதை பற்பல சொல்வீர்! - உயிர்
போனாலும் போகட்டும் என்பீர் - தெற்றித்
தின்பீர் - உம்
மனைமாடு பெரிதென்று
மக்களே உயிரென்று
மனைவிக்குப் பட்டெடுப் பீர்கள்! - அவன்
மண்டை, கல் விட்டுடைப் பீர்கள்!

வாட்டமுற் றிருப்பவர் வாழ்க்கையில் நொந்தவர்
கூட்டமெல் லாம்,ஒன்று சேரும் - நம்
ஈட்டமெல் லாம் எண்ண நேரும் - இந்தப்
பாரும் - அதன்
ஊட்ட மும் பொதுவாக்கி
உழைப் பையும் பொதுவாக்கித்
தேட்ட மெல் லாம்வகுத் தீயும் - அந்தத்
தீமைக ளும்அடி சாயும்!

-1971

## 104 கேட்கின்றான்; கொடு !

நல்லவனோ, இல்லை
பொல்லா தவனோ,
நாணம் விட்டே, உனை இரக்கின்றான் - மானந்
துறக்கின்றான் - தம்பி
'இல்லை'யென் னாதே;
'தொல்லை'யென் னாதே!
இருப்பதில் ஒரு துளி எடுத்துக்கொடு - இது
சரி;இது தவறெனும் ஆய்வை விடு!

குருடோ நொண்டியோ,
கூனோ கிழமோ,
கூசிடாமல் உனைக் கேட்கின்றான் - வாழ
வேட்கின்றான் - தம்பி
திருடனென் னாதே;
தீயனென் னாதே!
தேய்ந்திடா(து); இருப்பதில் சிறிதுகொடு - இது
தீது;இது சரி -எனும் ஆய்வை விடு!

நோயனோ பேயனோ
நோஞ்சானோ தடியனோ
நூறுபேர் நடுவில்கை யேந்துகின்றான் - உயிர்
காந்துகின்றான் - தம்பி
"போய் வா" என்பதும்
புகலு(ம்)உன் அறிவதும்
புன்மையென் றறிகுவாய்! கொடை பெரிது-இது
பொய்;இது மெய்-எனும் எடை சிறிது!

பொய்யனோ மெய்யனோ
போலியோ காலியோ
போக்கின்றி வந்துகை நீட்டுகின்றான்-பல்லைக்
காட்டுகின்றான்-தம்பி
வெய்ய உரைப்பதும்
வேண்டி மறைப்பதும்
விரும்பத் தகாதன; கொடை விரும்பு-பல
வீண்செல வில்இது சிறுதுரும்பு!

-1971

## 105 எதிர்காலந்தனைச் சமைப்பாய் !

பித்தனென் பார் சிலர்;
பேயனென் பார் சிலர்;
பிதற்றுவோன் என்றுரைப்பார்!-பெரும்
எத்தனென் பார்; சிலர்
ஏய்ப்பனென் பார்;உனை
எள்ளல்செய் தே,நகைப்பார்!-தூய
புத்தம் புதுவுணர் வால் அவர் போக்கினைப்
பூழ்க்கையென் றே,தவிர்ப்பாய்!-தம்பி
நித்தமும் இத்தரை
மக்கள் நிமிர்ந்திட
நேர்மைகொண் டே, வுழைப்பாய்!

குறைகளும் கூறுவார்;
குற்றங்கள் சாற்றுவார்;
கோடித் துயர்கொடுப்பார்-தலை
மறைவாகப் பேசுவார்;
மனம் நோக ஏசுவார்;
மக்கள்முன் பல வீசுவார்!-நெஞ்சப்
பொறையோடு நீ யவர்
புரையான போக்கினைப்
புறந்தள்ளி மேலேறுவாய்!-தம்பி
நிறைவான கருத்தினை
நெகிழ்வின்றிக் கூறுவாய்!
நிலையான பயன்விளைப் பாய்!

துணைவரு வார் சிலர்;
தோள்தரு வார் சிலர்;
துவண்டுளம் இடைநெகிழ்வார்!-வினைக்(கு)
அணைபோடு வார் சிலர்;
அகம்வேகு வார் சிலர்;
அடிவீழக் குழிவெட்டு வார்!-எய்த
கணைபோலும் பார்வையால்
கவண்போலும் சொல்லினால்
கலங்காமல் வினைசெய்குவாய்!-தம்பி
இணையற்ற தொண்டுசெய்!
ஏறுபோல் பீடுகொள்!
எதிர்காலந் தனைச் சமைப்பாய்!

-1971

## 106 பொதுமை உலகம் வரல் வேண்டும் !

"யார்தான் எப்படிப் போனா லென்?என்
ஏர்தான் நிலத்தை உழல் வேண்டும்-என்
பேர்தான் ஊன்றி எழல் வேண்டும்;என்
வேர்தான் உலகம் தொழல் வேண்டும்"-என்
போர்தாம் பெருகிப் படர்ந்தார், தம்பி!
பொதுமை உலகம் வரல் வேண்டும்-ஒரு
புதுமை விளைவு பெறல் வேண்டும்!

"என்றன் மனைவி மக்கள் தாமே
என்றும் நலமாய் இருந்திடுக-பிறர்
தின்றால் என்ன? தேய்ந்தால் என்ன?
திசைகள் தோறும் திரிந்தென்ன?"-இவ்
வொன்றே குறியாய் உழல்வார், தம்பி!
உழைப்போர் உலகம் வரல் வேண்டும்!-ஒவ்
வொருவர் நலமும் பெறல் வேண்டும்!

"என்வீ டொன்றே இப்பெருந் தெருவில்
எடுப்பாய் நின்றே விளங்கிடுக!-பிறன்
தன்வீ டெல்லாந் தரையாய்ப் போக;
தரையும் வெடித்துக் குழிவிழுக!"-என்
றின்னே நினைப்பார் பெருகினர், தம்பி!
இனிதோர் உலகம் வரல் வேண்டும்-இங்
கெவரும் சமமாம்-எனல் வேண்டும்.

"பெய்யும் மழையென் வயலிற் பெய்க;
பிணிகள் இன்றி நான் வாழ்க;-என்
கையும் காலும் தூண்போல்-ஆகுக;
கடவு ளே,துணை துணை" யென்று-தான்
உய்யும் வழியே நினைப்பார், தம்பி
ஒருமை உலகம் வரல் வேண்டும்-பிறர்
உளர் எனும் நினைவும் பெறல் வேண்டும்.

-1971

## 107 தெய்வமும் உண்மைகொல்!

உலகும் பொறுக்குமோ! உலகும் பொறுக்குமோ!
நிலத்துளி ஆளுமோர் நெஞ்சச் செருக்குடன்
யாகியா கான்-எனும் மாகய வாளி
கூகையும் குருவியும் போல், பொது மக்களைச்
சுட்டுப் பொசுக்கியும் சூறை யாடியும்,
மொட்டையும் பூவையும்
பிஞ்சையும் சிதைத்தல் போல்,
கட்டிளங் கன்னியர் கற்பைக் குடித்தும்,
குழவிகள் இளையவர்
குருதியை உறிஞ்சியும்,
கிழவரும் அறிஞரும் எனப்பாராமல்,
கோடிக் கோடியாய்க் கூட்டங் கூட்டமாய்
ஓடிப் பிடித்தும் உயிரொடு கொளுத்தியும்,
வேட்டம் ஆடிடும் வெறிமையும் பேய்மையும்
காட்டுத் தீயினுங்
கடுமையாய்க் கொடுமையாய்
வீறிடக் கண்டும், வெடித்து விழுங்காமல்,
உலகும் பொறுக்குமோ! உலகும் பொறுக்குமோ!

அரசும் இருக்குமோ! அரசும் இருக்குமோ!
கரிசெலாம் சேர்ந்துரு வாயஓர் களிமகன்
மனம்போன வாறெல்லாம் மக்களைத்-தம்முடை
இனமென்றும் உயிரென்றும்
எண்ணாது, இராப்பகல்,
என்றும் இலாதுபோல்-இனியும் இராதுபோல்
கொன்று குவிக்குமோர் கொலையிற் கொடுஞ் செயல்-
கண்ட பின்னரும், காதுகள் புண்படக்
கேட்ட பின்னரும் கிளர்ச்சியுற் றெழாமல்-
'நில்லடா' எனுமோர் வல்லொலி கொடாமல்
கல்லென இருந்து, காணியாள் கின்ற,பே-
ரரசும் இருக்குமோ! அரசும் இருக்குமோ!

மக்களும் இருப்பரோ! மக்களும் இருப்பரோ!
பொக்கெலாம் இணைந்துரு வானஓர் புல்லியன்
அரசுத் தலைவனென் றமைந்(து)-ஒரு சிறுநிலத்(து)

உரிமை கொண்டதால், உலகுடை யவன்போல்
ஆடுங் கோழியும் அறுத்தெறி வானாய்ப்
பீடும் பெருமையும் பெற்ற மக்களைச்
சிதைத்திடுங் கொடுமைக்குச் சிறிதா கிலும்-உளம்
பதைத்தி டாமலே, பதைப்பினுந் துடித்தெழா(து)
ஒக்கலுந் தாமுமாய், உண்டு களித்திடும்
மக்களும் இருப்பரோ! மக்களும் இருப்பரோ!

அறிஞரும் உளர்கொல்! அறிஞரும் உளர்கொல்!
வெறியெலாம் அமைந்துரு வான,ஓர் வெங்கணான்
ஆட்சியைக் கைப்பறித் தாள்திறன் அற்றதால்
மீட்சி பெறவிழைந் தெழுந்த மேன்மையோன்
**முசிபுர் இரகுமான்**-எனுந்தலை முதல்வனை
நசித்திடச் செய்திடும்
வெறியினால், நாட்டினைப்
பொட்டல் நிலமெனப் பொசுக்கியும், மக்களை
நட்ட நடுத்தெரு
நாய்களைப் போலவே
பட்டப் பகலினில், படைகளை ஏவிச்
சுட்டுத் தள்ளியும்,
வெட்டிப் புதைத்தும்
மதங் கொண்டிருக்கையில்-
மண்ணுக்கும் விண்ணுக்கும்
மிதந்திட விழைந்து மேலும் மேலும்
அறிவியல் நாட்டமுற் றாய்வு நடத்திடும்
அறிஞரும் உளர்கொல்! அறிஞரும் உளர்கொல்!

அறமும் உண்டுகொல்! அறமும் உண்டுகொல்!
மறமும் கொடுமையும்
மருவிப் பிறந்த, ஓர்
பட்டி யரம்பன், இப் பாரெலாம் நடுங்கிட-
தட்டிக் கேட்க, ஓர் தகுவோன் இன்மையால்,
புலைமையும் கொலைமையும்
பொய்ம்மையும் தாம்பயில்
கலைகள் எனத்தன் கைத்திறங் காட்டல்போல்
கீழ்வங் காளத்துக் கேண்மையோர் தம்முயிர்
ஆழ்வெங் கடலுளே ஆழ்த்துவா னாயினான்!

அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாமெனும்
உரையிற் பராவிடும் உண்மைத் தமிழர் தம்
அறமும் உண்டுகொல்! அறமும் உண்டுகொல்!

தெய்வமும் உண்மை கொல்! தெய்வமும் உண்மை கொல்!
செய்தவத் தோர்தாம் செப்பிய மாத்திறன்-
மெய்யறி வோருளம் மொய்த்திடு பேரிறை-
கையற் றார்தமைக் காத்திடுங் கடிகா-
செய்வினைக் குறுதுணை
செயும்பே ராற்றல்-
இடர்ப்படு வார்தமை எற்றும்,ஏ மப்புணை-
சுடரொளி-அருட் கடல்-
சூழ்ந்த பரம் பொருள்-
பொய்ம் மையும் புன்மையும் போழ்க்குமென் றுரைத்த
தெய்வமும் உண்மைகொல்!
தெய்வமும் உண்மைகொல்!

-1971

## 108 ஊரைத் திருத்துமுன்... !

ஊரைத் திருத்துமுன், உலகைத் திருத்துமுன்
உன்னைத் திருத்தடா தமிழா-நீ
உன்னைத் திருத்தடா தமிழா!

பாரைத் திருத்திடல் நல்ல முயற்சியே!
பாட்டனும் பூட்டனும் செய்த பயிற்சியே!
யாரைத் திருத்தினர்; யாது வளர்ச்சியே?
யாங்கணும் யாங்கணும் வாழ்க்கை தளர்ச்சியே! (ஊரைத்)

வேரைத் திருத்துதல் பயனளித் திடலாம்!
வினையத் திருத்திடும் முயற்சியோ கடலாம்!
கூரை திருத்தினால் நிற்குமோ சுவரே?
குழியைத் திருத்தாமல் இருப்பது தவறே! (ஊரைத்)

உலகைத் திருத்திட வலம்வரு கின்றாய்!
உன்னைத் திருத்தெனில் உள்ளம்நோ கின்றாய்!
அலகிலா முயற்சிகள் அறங்கள், சட்டங்கள்
ஆரைத் திருத்தின? பணயம்கட் டுங்கள்! (ஊரைத்)

ஆயிரம் ஆண்டுக்கு முன்னும் இருந்தனர்;
அம்மண மாகவே உண்டு திரிந்தனர்;
ஏயின திருத்தங்கள் என்னென்ன கண்டாய்?
எழிலுடை! தலைமயிர்! மற்றென்ன விண்டாய்? (ஊரைத்)

வெள்ளுடை மேனியில் புரள்வதோ நேர்மை?
விரிமயிர் வாரி முடித்தலோ சீர்மை?
உள்ளத்துள் கள்ளமும் கரவும் கிடப்பதா?
ஊரினை ஏமாற்றி, மறைந்தே நடப்பதா? (ஊரைத்)

பொதுமையைக் காணாத உளம்என்ன உளமோ?
பூசலை விளைத்திடும் வளம்என்ன வளமோ?
புதுமைஎன் றுரைப்பது செல்வர்க்குச் செழிப்பு!
போக்கற்ற ஏழையர்க் கேதுஅதால் விழிப்பு? (ஊரைத்)

மன்றங்கள் எத்தனை? எத்தனைக் கோயில்?
மடிபவர் எத்தனைப் பேர் தீமை நோயில்?
இன்றைக்கும் நேற்றைக்கும் வேற்றுமை யாது?
இழிவினை, அழகினால் மூடல்அன் றேது? (ஊரைத்)

கல்வியும் செல்வமும் ஓங்குதல் மேலோ?
கணக்கிலா இழிவுகள் குவிதல்எப் பாலோ?
சொல்,வினை உளத்தோடு பொருந்துதல் வாழ்வே!
சொக்கட்டான் காய்போல் உருளுதல் தாழ்வே! (ஊரைத்)

-1972

109

## ஒரு வாய்ச்சொல் கேளீர் !

வான முழுதும் அளக்கச் சென்றீர்-மற
வானவரீர்! ஒரு வாய்ச்சொல் கேளீர்-உடற்
கூனலுற்ற உழைப் பாளரினம்-உய்யக்
கூர்த்த வழியொன்றை இங்குச் செய்வீர்!-பின்னர்
கோள்களை ஆண்டிட அங்குச் செல்வீர்!

கோள்களை ஞாயிற்றை ஆய்வதனால்-ஒரு
கூலிமகன் பசி நீங்கலுண்டோ?-அட,
நீள்விளை யாடல்கள் செய்திடலாம்-வாழும்
நிலத்தை முழுதும் முன்நினைப்பீர்;-வானை
நீட்டி அளப்பதைப் பின்நினைப்பீர்!

அறிவியல் ஆய்கலை செய்வதெல்லாம்-உல(கு)
ஆண்டிடும் மாந்தர் நிலைப்பதற்கே!-ஒரு
நெறியினில் அறிவு நிலைக்கிலையேல்-உயிர்
நேர்ச்சியிலே ஒரு வீழ்ச்சியுண்டாம்!-வாழ்க்கை
நிலையினிலே ஒரு தாழ்ச்சியுண்டாம்!

பாரை நடுங்கிடச் செய்திடுவீர்-நிலப்
போர்வெறியீர்! ஒரு வாய்ச்சொல் கேளீர்-பல
பேரை உயர்த்திடும் பாட்டாளிகள்-வாழ்வைப்
பேணிடும் எண்ணம் உமக்கிலையோ?-கொலை
பெய்திடும் உங்கட்(கு) உயிர்நிலையோ?

வீடுகள் இன்றிக் குளிர் மழையில்-வெட்ட
வெளியினில் மாந்தர்கள் வாழ்க்கையிலே-பெரும்
நாடு நகர்களைத் தூள்கள் செய்வீர்-பயிர்
நண்ணும் வயல்களைப் பாலை செய்வீர்-இந்த
நாற்றிசையும் சென்(று) உயிர்கள் கொய்வீர்!

போரில் அழித்திடும் செல்வத்தினால்-ஒரு
புத்தம் புதுஉல காக்கிலென்ன?-உயிர்
வேரில் புதுப்புனல் வார்ப்பதனால்-இன்ப
வீழ்ச்சியைத் தூக்கி நிறுத்தோமா?-துன்பம்
விளைக்கும் மடமை திருத்தோமா?

வாழும் உயிர்களைக் காத்திடலாம்-இந்த
வையத்தில் நல்வளம் சேர்த்திடலாம்-நித்தம்
தாழும் ஏழைகட்குத் தோள்கொடுத்தே-உயிர்
தாங்கும் உழவரைத் தாங்கிடலாம்!-இன்பம்
தழைத்திடவே உயர்ந்த தோங்கிடலாம்!

-1972

## 110 ஏழையின் நிலைமை மாறியதுண்டா ?

புதிய புதிய அரசுகள் வந்தன!
புதிய புதிய கொடிகள் பறந்தன!
திட்டங்கள் பற்பல தீட்டிக் குவிந்தன;
சட்டங்கள் பற்பல செய்து சாய்ந்தன;
அமைச்சர்கள் மாறி மாறி அமர்ந்தனர்!
சமைப்போம் பொதுமை எனவே சாற்றினர்!
இருந்தும் என்ன? ஏழையின் நிலைமை
மருந்துக் காகிலும் மாறிய துண்டா?

அணிகளும் மணிகளும் புதிதாய் ஆயின;
துணிகளில் வண்ணமும் எண்ணமும் மாறின;
மனைகள் புதிது புதிதாய் எழுந்தன;
மாடிகள் உயர்ந்தன? அளாவின வானை;
உணவுப் பண்டமோ ஒருநூறு வகைகள்!
ஊட்டச் சாரங்கள் குளிகையாய் உலாவின!
மயங்கு பொருள்களில் மக்களும் மயங்கினர்!
இயங்கிகள் பலவகை! எழிலும் புதுமையும்
வீட்டிலும் நாட்டிலும் விளைந்தவை கோடி!
ஏட்டிலும் எழுத்திலும் எண்ணிலும் அடங்கா!
இருந்தும் என்ன?-ஏழையின் நிலைமை
மருந்துக் காகிலும் மாறிய துண்டா?

ஊருக்கு ஊர்பல உண்டுறை விடுதிகள்!
நேருக்கு நேராய் நிலவறை ஆட்டம்!
தொழிற்கூ டங்களின் தொகைகள் கணக்கில!
எழிற்கூ டங்களின் எண்ணிக்கை மிகுதி!
இப்படி உலகம் இமைக்கிமை-நாட்குநாள்
செப்படி திறம்போல் மாறிச் செல்கையில்
ஏழையர் வாழ்க்கை எப்படித் தெரியுமா?
வாழை யடியில் வாழை வளர்ச்சிதான்!

கொடிகள் மாறின; குடிசைகள் பழம்படி!
குடிசைக் கூரைமேல் நைந்த ஓலைகள்,
பிய்ந்த பாய்கள், சணற்பைக் கிழிசல்கள்,
கரிநெய் பூசிய கருநிறத் தாள்கள்!

நரிப்புழை போலக் குடிசையின் நுழைமுகம்!
புதைகுழி போலக் குடிசையின் உட்புறம்!
கதைப்பட நடிக நடிகையர், விலங்குகள்,
உரிமை முழக்கிய உலகத் தலைவர்கள்
பெருமை பேசிடும் கட்சிப் பெம்மான்கள்-
வெட்டுப் படங்களை ஒட்டிய சுவர்கள்!

தட்டு முட்டுகள்! கந்தை கழிசல்கள்!
சப்பை சுவடுகள்! சதவல் சகதிகள்;
குப்பை கூளங்கள்! குண்டுகள் குழிகள்!
குக்கல் கோழிகள்! குடும்பொடு பன்றிகள்!
அடிகள், உதைகள், அவிழ்ந்த பேச்சுகள்,
குடி,கூத் தாட்டம், குத்து வெட்டுகள்!

- இப்படி இங்கோர் உலகம் இருப்பதை
முப்படியாக முன்னேறிச் செல்லும்
நாக ரிகந்தோய் உலகம் நம்புமா?
வேகமும் புதுமையும் விளைப்போர் விளக்குக!

-1972

## 111 ஒருநாள் வரத்தான் போகிறது !

ஓங்கிக் கட்டிய உயர்ந்த மாளிகை!
உலாவக் கட்டிய மேற்புற மாடிகள்!
தூங்கக் கட்டிய தனிநிலை அறைகள்;
தொங்கு மாடங்கள்; ஊஞ்சல் தூலிகை!
தாங்கிய விளக்குகள்! பலகணித் திரைகள்!
தரையெலாம் விரிப்புகள்! பல்வண்ண ஓவம்!
பாங்காய் இவற்றுளே குபுகுபு குபு-வெனப்
பாட்டாளி மக்கள் புகுகின்றார் பாருங்கள்!
ஓங்கிய செல்வரே, உணருங்கள்! அப்படி
ஒருநாள் வரத்தான் போகிறது-இவ்
வுலகம் பொதுவென ஆகிறது! 1

பூவகை வகையாய் மலர்ந்த பூங்கா;
புதுபுதுப் பழவகை; காய்கறி விளைச்சல்!
தூவுநீர் வாவிகள்; செதுக்கிய சிலைகள்;
தொலையாப் புல்வெளி; பரந்த தோட்டம்!
தாவுமான் குட்டிகள்; ஊடாடு மயில்கள்!
தங்கி வாழ்வரோ இரண்டொரு பேர்கள்!
மேவும்-இவற்றுளே திபுதிபு திபு-வென
மெலிகின்ற ஏழைகள் புகுகின்றார் பாருங்கள்!
ஓ!ஓ! செல்வரே, எண்ணுங்கள்! அப்படி
ஒருநாள் வரத்தான் போகிறது-இவ்
வுலகம் பொதுவென ஆகிறது! 2

இழைப்பாய் இழைத்துப் பூசிய சுவர்களை
எழுப்பிக் கொடுத்து மாளிகை சமைத்திட
உழைப்பாய் உழைத்தவர்-பிறந்த மேனியர்-
உறங்குவர் பாதையில்! உங்கட்கு அடடா,
அழைப்புக் கெடுபிடி ஆயிரம் ஆட்கள்!
ஆட்ட மயில்களைப் போல்பல பெண்டிர்!
அழைப்பின்றி, இவற்றுளே திமுதிமு திமு-வென
அங்காந்த மக்கள் புகுகின்றார் பாருங்கள்!
உழைப்பிலாச் செல்வரே, ஓருங்கள்! அப்படி
ஒருநாள் வரத்தான் போகிறது-இவ்
வுலகம் பொதுவென ஆகிறது! 3

தின்று தின்று தெவிட்டுநெய் உணவு;
தீரப் பிழிந்த தீம்பழச் சாறு;
அன்றை அன்றை புதியபட் டாடை;
ஆடிக் களித்திடக் கலைக்களி யாட்டம்;
சென்றுலா மீண்டிட மெத்தென் ஊர்திகள்!
செருக்குச் சிரிப்புகள்; எக்காளப் பேச்சு;
நன்றுநன் றிவற்றுளே திடுதிடு திடு-வென
நலிகின்ற ஏழைகள் புகுகின்றார் பாருங்கள்!
ஒன்றாத செல்வரே, நினையுங்கள்! அப்படி
ஒருநாள் வரத்தான் போகிறது-இவ்
வுலகம் பொதுவென ஆகிறது! 4

-1972

## 112 அன்றைய நாள் வருமோ ?

நட்ட நடுத்தெருவில்-தம்பி
நால்வர் நடக்கையிலே-நல்ல
வெட்ட வெளிச்சத்திலே-பெரும்
வீரர் எதிரினிலே-கடை
கெட்ட இழிசெயல்கள்-கொடுங்
கீழ்மை இருள்வினைகள்-பழி
சொட்ட நடக்குதடா-வெளிச்
சொல்ல முடிவதில்லை!-பார்,
நட்ட நடுத்தெருவில்! 1

பட்டப் பகலினிலே-இப்
பாழ்மை நடக்கையிலே-இங்கு
நட்ட நடுஇரவில்-தம்பி
நால்வரில் லாப்பொழுதில்-முன்
திட்டமிட் டேபலர்செய்-பெருந்
தீமையைக் கேட்பவர்யார்?-பலர்
கொட்டங்கள் என்னசொல்வேன்?-இழி
கூத்தைஎவ் வாறுரைப்பேன்?-அட
பட்டப் பகலினிலே! 2

பொட்டல் பெருங்காடே-முள்
போர்த்த புதர்நிலமே!-நிலை
கெட்ட தமிழ்நாடே!-வெறுங்
கீழ்மை மணல்மேடே!-உனைத்
திட்டி நெரிப்பதற்கும்-அறத்
தீய்த்துப் பொசுக்குதற்கும்-மனம்
எட்டிஎட் டிப்பாயும்-தமிழ்
ஏக்கந் தடுத்துவிடும்!-ஓ! 3
பொட்டல் பெருங்காடே!

செங்கட் புலிபாயும்-மருள்
சேர்ந்த பெருங்காடும்-பெருங்
கங்குல் நிறைந்திருக்கும்-மலைக்
கற்புழை நீள்முழைஞ்சும்-வளம்

பொங்கும் பசுஞ்சோலை-எனப்
பூரிக்கச் செய்கையிலே-பழி
தங்கும் தமிழ்நிலமே!-உனைத்
தாழ எண்ணும் உளமே!-ஓ
தண்டமிழ்த் தாய்நிலமே! 4

எண்ணப் பசுஞ்சுவடும்-அட
எண்ணத் தொலைவிலதாம்-பல
வண்ணப் பெரும்புகழும்-அக
வாழ்வும் புற மறமும்-என்
கண்ணிலே நீருகுக்கும்-பழங்
காட்சிக் குளந்துயி லும்!-இன்று
புண்ணில்வே லிட்டதைப் போல்-இழி
போக்கிற் குளம்வெதும்பும்!-ஓ
புன்மைத் தமிழ்நிலமே! 5

அன்றைய நாள்வருமோ!-தமிழ்
ஆண்டிடுமோ மீண்டும்?-அட
இன்றைய புன்மையெல்லாம்-நிலை
இற்றிற்றுச் செத்திடுமோ?-உயிர்க்
கன்றுக்குப் பாலருந்தி-அகக்
காட்சிக்கு மீட்சிதரும்-எனை
வென்ற தமிழ்க்குயிலே-செயல்
வீழ்ந்த தமிழ் மறமே-சொல்
அன்றைய நாள் வருமோ? 6

-1972

## 113 வாழ்நாள் சிறியது; வாழ்க்கையோ பெரிது !

என்றும் நினைத்திரு;
இந்நிலம் பெரிது!
குன்றமும் வானும்
கோடி ஆண்டுகள்
நின்று நிலைப்பன!
நீயோ அழிபவன்!
என்றும் இருப்பதாய்
இறுமாந்து விடாதே! 1

ஒருநாள் நம்முடல்
உலகினில் அழியும்!
திருநாள் போலத்
திரிந்த வாழ்வெலாம்
இருளுள் மூழ்கும்;
இல்லாமற் போவோம்!
அருமை உறவினர்
அழ அழ அழிவோம்! 2

பிறப்பனஎல்லாம்
பின்னொரு நாளில்
இறப்பதும் உறுதி!
இதுவே இயற்கை!
மறப்பிலா இந்நிலை
மனத்தினுள் இறுத்திச்
சிறப்புற எண்ணவும்
செய்யவும் முனைக! 3

உன்புது வாழ்வை
உவப்புடன் நடத்து!
அன்பும் அறமுமே
அனைத்தினும் உயர்வாம்!
இன்பம் வருகையில்
எக்களிப் புறாதே!
துன்புற நேரினும்
துவண்டு விடாதே! 4

ஒருநலம் பெறுகையில்
உலக நலம் நினை!
வருநலம் யாவும்
வகுத்துண்டு வாழ்வாய்!
பெருநிலம், விளைவுகள்,
பிறவெலாம் பொதுவே!
மருவிலா உள்ளமும்
வாழ்வுமே மகிழ்ச்சி! 5

வாழ்நாள் சிறியது;
வாழ்க்கையோ பெரிது!
வீழ்நாள் வரினும்
வீழாது நற்செயல்!
தாழ்வும் உயர்வும்
தம்தம் செயல்களே!
சூழ்வன மீறிச்
சுடர்வன செய்வாய்! 6

-1973

## 114 ஏழையை உயர்த்திடப் பாடுவாய் !

ஏடெடுக் கின்றாய்; தூவலை யெடுத்தாய்!
எந்தப் பாடலை எழுதிட நினைத்தாய்?
காடுடுக் கின்றவோர் இன்னிள வேனிலின்
காட்சியை யா? நறுங் கார்தரு மாட்சியா?
கோடுடுக் கின்றபூந் துணரின தழகையா?
கூடிடப் பாடிடுங் குயில்களின் இசையையா?
ஓடெடுக் கின்றஓர் ஏழையைப்-பாவல,
உயர்த்து கின்றநற் பாடலைப் பாடுவாய்! 1

ஊரெலாம் உறங்கையில் உன்விழி உறங்கா
துயிர்க்குங் கற்பனை உலுக்கிட எழுந்தாய்!
யாரெலாம் நினைந்து பாடிட முனைந்தாய்?
யாழையும் மயிலையும் பழித்தவள் அழகையா?
பாரெலாந் திரிந்துன் நினைவுப் பறவையும்
பார்த்து மகிழ்ந்திடும் எழிலையா வரைந்தாய்?
நீரிலாப் பயிரெனும் ஏழையைப்-பாவல,
நிமிர்த்தி உயர்த்திடும் பாடலைப் பாடுவாய்! 2

கருக்கொளும் கற்பனை உலகினிற் புகுந்து
காதலுங் கன்னியும் பாடிட விழைந்தாய்!
திருக்கொளும் காட்சியை நினைவுப் பசிக்கே
தீனியாய் எண்ணிநின் தூவலை எடுத்தாய்!
உருக்கொளும் மாந்தரிற் பற்பல கோடி
உணவும் உடைகளும் கூரையும் இன்றித்
தெருக்களிற் புரளும் மக்களைப் - பாவல,
தேற்றி உயர்த்திடும் பாடலைப் பாடுவாய்! 3

இலக்கணப் புலமையால் மொழிமழை பொழிந்தே
இலக்கியம் பாடிட ஏடெடுக் கின்றாய்!
துலக்கிய காட்சிகள் ஆயிரங் கோடி
தூவல் மையினால் படம்பிடிக் கின்றாய்!
புலக்கவின் கொண்டவை அவையெனப் பேசியே
புகழ்ந்துரை யாடிடப் போற்றிடச் செய்வாய்!
கலக்குறும் வறுமை மாந்தரைப்-பாவல,
கவின்கொள உயர்த்திடும் பாடலைப் பாடுவாய்! 4

காலமும் வானையும் கதிரையும் நிலவையும்
காற்றையும் மலைதரும் ஊற்றையும் கண்டு,
கோலமும் காட்சியும் உன்மனக் கூர்மையால்
கொண்ட விளக்கமும் பற்பல விண்டாய்!
ஞாலமும் நாளையும் நாளையும் பாடி
நலிவினும் மெலிவிலும் தப்பிய துண்டா?
ஓலமும் நீருமாய் உழல்வரைப்-பாவல,
உயர்த்தி மலர்த்திடும் பாடலைப் பாடுவாய்! 5

விண்ணையும் மண்ணையும் உலாவரப் போந்தாய்!
வீட்டையும் நாட்டையும் விளைத்திட மறந்தாய்!
எண்ணரும் புதுமையால் செயல்பல செய்தாய்!
ஏழ்மையை விரட்டிட என்பயன் கண்டாய்?
திண்ணருஞ் சொல்லையும் பொருளையும் திணித்துத்
தினவுறும் மனத்தினை அமைவுறச் செய்வாய்!
உண்ணரும் பசியினால் நலிவரைப்-பாவல,
ஊக்கி உயர்த்திடும் பாடலைப் பாடுவாய்! 6

-1974

## 115 மறந்துவிடாதே !

உன்றன் குடும்பம், உன்றன் வாழ்க்கை,
உன்றன் நலன்கள், உன்றன் வளங்கள்-
என்று மட்டும் நீ ஒதுங்கி
இருந்து விடாதே!-நீ
இறந்த பின்னும் உலகம் இருக்கும்
மறந்து விடாதே!

உனக்கு மட்டும் நீ உழைத்தால்
உலகம் உன்னை நினைக்குமா?
தனக்கு மட்டும் வாழ்ந்து செத்த
தனியன் வாழ்வை மதிக்குமா?

சொந்தம் பேசிச் சொந்தம் வாழ,
சொத்து நிலங்கள் மனைகள் சேர்க்க
இந்த மட்டும் வாழ்ந்து போக
எண்ணி விடாதே!-நீ
இருந்து சென்ற கதையை மறக்கப்
பண்ணி விடாதே!

உனக்கு மட்டும் நீ உழைத்தால்
உலகம் உன்னை நினைக்குமா?
தனக்கு மட்டும் வாழ்ந்து செத்த
தனியன் வாழ்வை மதிக்குமா?

அன்னை நிலமும் அன்னை மொழியும்
அனைத்து மக்களும் வாழ நினைக்கும்
உன்னை உலகம் மறப்பதில்லை;
ஒதுங்கி விடாதே!-நீ
உழைக்கும் உழைப்பில் உலகம் செழிக்கும்
பதுங்கி விடாதே!

உனக்கு மட்டும் நீ உழைத்தால்
உலகம் உன்னை நினைக்குமா?
தனக்கு மட்டும் வாழ்ந்து செத்த
தனியன் வாழ்வை மதிக்குமா?

-1974

## 116 வறுமை ஒழிந்ததா ? செயலில் காட்டுவோம் !

எண்ணருங் கோடிப் புதுமைகள் செய்தார்;
இலக்கியம் பற்பல கோடி வரைந்தார்!
விண்ணெழுந் தளாவிக் கோள்களை யளந்தார்;
வேற்றுல கங்களைக் காணத் துடித்தார்!
பண்ணெழுந் திசைத்துத் தாளங்கள் சேரப்
பற்பல கலைகளில் ஆடித் திளைத்தார்!
மண்ணெழுந் துயிர்த்தே ஏழையாய் மாளும்
மாந்தனும் உயர்ந்திட யாதுசெய் தாரே? 1

வானுயர் மாளிகை, கோபுர வாயில்,
வளாகப் பொழில்மனை, குளிநீர்க் குளங்கள்
கானல் அறைகள், கடற்கரைச் சோலை,
கண்ணைக் கருத்தை மயக்கிடுங் காட்சி,
தேனவிழ் பூங்கா, திரைப்படக் கூத்தெனத்
தேடா நலன்கள் ஆயிரஞ்செய்தார்;
ஊனிலா உடம்பில் எலும்புகள் தைக்க
உலாவிடும் மக்களுக் கென்னசெய் தாரே? 2

முத்தும் பவழமும் யாத்தபொன் னகைகள்;
முகத்திலும் கழுத்திலும் நறுமணப் பொடிகள்!
புத்தம் புதியவாய்ப் பொலிந்திடும் உடைகள்,
போய்வரும் ஊர்திகள்-யாவையும் செய்தார்;
தொத்தும் குழந்தைகள்-தோலுரு வங்களைத்
தூக்கிய தாய்களா கூடுக ளா-வெனச்
செத்தும் பிழைத்தும் வாழலும் இன்றிச்
சீரழி கின்றவர்க் கேதுசெய் தாரே? 3

சட்டமும் திட்டமும் பற்பல செய்தார்;
சாலைகள் சோலைகள் ஆலைகள் செய்தார்!
கட்டிய அணைகளால் நீரையும் வளைத்தார்;
கழனிகள் ஆயிரம் விளைந்திடச் செய்தார்!
கிட்டிய பற்களும் கிடத்திய உடலுமாய்க்
கீழ்மைத் தெருவில் குளிரினில் தூங்கி,
ஒட்டிய வயிற்றோ டுலாவரு கின்ற
உயிர்வாழ் கூடுகள் வாழஎன் செய்தார்? 4

பாலிலும் தேனிலும் பழச்சுளை கலந்து
பனிக்குழை யிட்டுப் பசியிலா தருந்திக்
காலிலும் கையிலும் மண்படா துலவும்
கயமை மாந்தர் கைதொழற் கென்று,
மாலையும் சிவனையும் தேரினில் ஏற்றி
மத்தளங் கொட்டி விழாப்பல செய்தார்!
சேலையும் வேட்டியும் வானமாய் நிற்கும்
சில்லறை உயிர்கள் வாழஎன் செய்தார்? 5

திருப்பதி பழனி குருவா யூரெனத்
திரைப்பட நடிகரும் நடிகையும் வாங்கும்
கருப்பண உண்டியல் கொட்டி யளக்கும்
கணக்கிலாக் கோயில்கள் பற்பல வெடுத்தே,
உருப்பசி அரம்பையர் மேனகை என்ன
உலாவரும் பெண்டிரைக் குலாவிடச் செய்தார்!
தெருப்படி யோரம் இராப்பகல் வீழ்ந்து
தீப்பசி தின்றிடும் அவர்க்கெது செய்தார்? 6

கணக்கிலாக் கட்சியும் தலைவரும் தோன்றிக்
காலையும் மாலையும் கூக்குர லிட்டார்!
பணக்குவை மாலைகள் பொன்னிழை ஆடை
பளபளத் திடவும் உலாப்பல வந்தார்!
உணக்கிடுங் கருவா டாய்த்தெரு வோரம்
உலர்ந்திடும் வயிறுகள் வாய்களும் காயப்
பிணக்குவி யல்போல் புழுதியிற் புரளும்
பீற்றல் உடைகளுக் கென்னலம் செய்தார்? 7

பொத்தகங் கோடி எழுதிக் குவித்தோம்;
புன்மைக் காட்சிகள் படங்களாய் எடுத்தோம்!
மெத்தவும் நாடகம், திரைப்படம், மேடை,
மேன்மை வானொலி யாவிலும் “வறுமை
செத்தது; வளமை செழித்த” தென் றேபல
சிந்துகள் இசைத்தோம்; கதைகளும் வடித்தோம்!
கத்தலில் காட்சிகள் மறைவது மில்லை;
கைகளால் செய்து காட்டுவோம் வாரீர்! 8

-1975

## 117 உலகுக்கு உழைப்பவரே, என் உண்மைத் தெய்வம்!

ஒருதுணை யின்றி,
உறுபொரு ளின்றி,
உலகினுக் குழைப்பவர் எவரோ-ஓர்
உண்மை வினையினர் எவரோ-அவர்
ஊரெது வெனினும்,
பேரெது வெனினும்
உறவினர் அவரே எமக்கு!-அவர்
ஒளிதரும் அருங்சுடர் விளக்கு!

தனிநலம் இன்றித்
தளர்வெதும் இன்றித்
தமிழ்மொழிக் குழைப்பவர் எவரோ-அதைத்
தாயென மதிப்பவர் எவரோ-அவர்
தகுதிஎன் னெனினும்
தரம்எது வெனினும்
தம்பியும் அண்ணனும் அவரே!-அவர்
தங்கிட நான்ஒரு சுவரே!

தூக்கமும் இன்றித்
துயர்உணர் வின்றித்
தொண்டராய் அலைபவர் எவரோ-மனந்
துவளா உரத்தினர் எவரோ-அவர்
தொடர்பிலர் எனினும்
தொலைவினர் எனினும்
தோள்களில் சுமந்திட வருவேன்!-அவர்
தூங்கவும் என்மடி தருவேன்!

மனைவியை மறந்து,
மக்களைத் துறந்து,
மன்பதைக் குழைப்பவர் எவரோ-தமிழ்
மக்களைக் காப்பவர் எவரோ-அவர்
மதித்திலர் எனினும்
மகிழ்ந்திலர் எனினும்
மலர்களை அவர்அடிக் கிடுவேன்!-அவர்
மனம்நினைந் திராப்பகல் தொழுவேன்!

-1975

## 118 உழைப்பை அவமதிக்கும் செயல்!

உழைப்பதிகம் காண்கின்ற முன்னேற்ற நாடுகளில்
பருவமழை உதவா விட்டால்,
தழைப்பதிகம் காண்கின்றார் அறிவியலால்! விளைவங்கே
முப்பொழுதும் தளிர்க்கச் செய்வார்!
பிழைப்பதிகம் இல்லாத வறுமைமிகும் இந்நாட்டில்
புனிதமெனும் பெருமை பேசி
மழைப்பதிகம் பாடுகின்றார்! மந்திரத்தை ஓதுகின்றார்!
உழைப்பைஅவ மதிக்கின் றாரே!

குடுமியெலாம் ஒன்றிணைந்து நீர்புகுந்து குளத்தவளை
போல்வேதக் கூச்ச லிட்டால்,
கிடுகிடென மழைபொழியும் எனநினைத்து வான்நோக்கும்
முழுமூடக் கீழ்மை யோரே,
அடுமழைதான் பொழிந்தாலும்
விளைந்தாலும் செல்வர்களால்
ஏழையர்க்கிங் காவ தென்ன?
'படுமின்'என இயற்கையதே
நெறிபிறழ்ந்த நும்போக்கை
மழைகரந்து பழித்தல் கண்டீர்!

-1975

## 119 பொதுமை வரட்டும்!

ஓங்கட்டும் கைகள்;
ஒலிக்கட்டும் வன் முழக்கம்;
நீங்கட்டும் அடிமை நிலை,
இந்நிலத்திலே! - இனி
நிலைக்கட்டும் பொதுவுணர்வு
நம் உளத்திலே!

நடக்கட்டும் கால்கள்;
நடுங்கட்டும் ஆட்சியினர்;
வடக்கெட்டும் முழக்கங்கள்
வலிமை வரட்டும்!-இனி
வரையட்டும் புதுக்கொள்கை;
வாழ்க்கை தரட்டும்!

கேட்கட்டும் உரிமைஒலி;
கிளரட்டும் வல்லுணர்வு;
ஏற்கட்டும் சூளுரைகள்;
இளைஞர் எழட்டும்! - இனி
எழுதட்டும் பொதுவுரிமை;
எழுச்சி பெறட்டும்!

திரளட்டும் மக்கள்குலம்;
தெளியட்டும் கொள்கை நலம்;
மிரளட்டும் ஆளவந்தார்;
மீட்சி தரட்டும்! - இனி,
மேலுமில்லை; கீழுமில்லை;
பொதுமை வரட்டும்!

-1979

## 120 உலகம்வாழ் தொழிலாளர் ஒன்றுபடும் நன்னாள் !

### எடுப்பு

உலகம்வாழ் தொழிலாளர்
ஒன்றுபடும் நன்னாள்!
இலகுபெரு மேநாள்!
எல்லார்க்கும் பொன்னாள்! (உலகம் வாழ்)

### தொடுப்பு

விலகிற்று வல்லடிமை!
விளங்கியதே ஒருமை!
வெற்றிபெறத் தொடங்கியதே
உழைப்பாளர் உரிமை! (உலகம் வாழ்)

### முடிப்பு

வெயர்வைக்கடல் பொங்கிற்று!
வெடித்ததடா புரட்சி!
வீழ்ந்ததடா மாய்ந்ததடா
முதலாளர் திரட்சி!
அயர்வென்ப தில்லையினி;
ஆர்த்தது,மு ழக்கம்!
அகன்றபெரும் உலகம்,இனி
உழைப்பாளர் பக்கம்! (உலகம் வாழ்)

பாடுபடும் கைகளெல்லாம்
இணைந்தன,காண் ஒன்றாய்!
பாட்டாளர் உழைப்பெல்லாம்
விளைந்தன,நெல் குன்றாய்!
மேடுபள்ளம் தூர்ந்ததினி!
வெளுத்ததடா சாயம்!
மேலோங்கி வளர்ந்தது காண்
பொதுமைக்குமு காயம்! (உலகம் வாழ்)

அடிமைத்தீ அவிந்ததடா!
முதலாளர் ஆட்சி
அகன்றதடா; எழுந்ததடா
தொழிலாளர் மாட்சி!
குடிமைநலம் சிறந்ததுகாண்!
உழைப்பாளர் கூட்டம்
கூடினகாண்! பாடினகாண்!
குவிந்ததடா ஈட்டம்! (உலகம்
வாழ்)

நீல்வானம் செங்கதிரால்
சிவந்தது,பார் எங்கும்!
நிலமெல்லாம் தொழிலாளர்
புரட்சிஇனிப் பொங்கும்!
மேல்கீழாம் வேற்றுமைகள்
அகன்றன பார்! இன்பமும்,
மேம்பட்டு வளர்ந்ததடா!
இல்லையினித் துன்பம்! (உலகம்
வாழ்)

**-1983**

## 121 இன்றை உலகம் புரட்சி உலகம்!

இன்றை உலகம் புரட்சி உலகம்!
    எழுக விடிவை நோக்கியே!
குன்றை இடிக்கும் ஆற்றல் மறவர்
    கொள்கைக் கொடியைத் தூக்கியே!

இன்றை இளைஞர் புதுமை வீரர்!
    எழுக துயிலை நீக்கியே!
ஒன்றை நினைக, உரிமை வெல்க,
    உணர்வை நெஞ்சில் தேக்கியே!

நீண்ட நெடிய அடிமைத் தன்மை
    நிலவும் நிலையைப் போக்கவே,
மூண்ட உரிமைக் கனலை உணர்க!
    முனைக, விளைவை ஊக்கவே!

வாட்டும் வறுமை, ஆட்சிக் கொடுமை,
    வாழ்க்கை நலிவில் நடப்பதோ?
கேட்டும் பார்த்தும் கிளர்ச்சி யின்றிக்
    கீழ்மை யுற்றுக் கிடப்பதோ?

பொங்கும் வளமை! பொலிக பொதுமை!
    பூக்கும் உரிமை விரைவிலே!
எங்கும் புதுமை! எவரும் சமன்மை!
    எதுவும் இல்லை மறைவிலே!

-1984

## 122 மக்களின் வெள்ளம் கடலெனத் திரள்கவே !

பொய்யர்கள் புளுகர்கள் பொல்லாக் கயவர்கள்
பொழுதெலாம் தந்நலம் கருதும் பேயர்கள்
மெய்யர்கள் போலவே உலாவரு கின்றனர்;
மேலுக் குழைப்பதாய் உரையளக் கின்றனர்!
வெய்ய உழைப்பினில் மேனித் தசைகளை
விளர்ந்துள நாடி நரம்புமண் டிலங்களை
நெய்யாய் உருக்கி உழைக்கும் மக்களோ
நித்தமும் செத்துப் புதைகின்றார் நாட்டிலே!

பிழைக்கவும் வழியிலை; பேசவும் பொழுதிலை!
பின்னும் இருப்பதால் யார்க்கும் பயனிலை!
உழைக்கும் மக்களும் உழவரும் தொழிலரும்
ஒன்றிணைந் தெழுந்திடில் உண்மை சாகுமோ?
அழைக்கும் விடுதலை ஆர்ப்பரிப் பெழுந்தது!
அனைவரும் ஒன்றெனும் நாளும் கிளர்ந்தது!
மழைக்கும் வெயிற்கும் மலைத்தது போதும்!
மக்களின் வெள்ளம் கடலெனத் திரள்கவே!

-1985

## 123 படித்தவர் யாருக்கும் வெட்கமில்லை !

ஓங்கிய செல்வரின்
குழந்தைகள் ஒருபுறம்
ஓடுவர் ஆடுவர்
பந்தடித்தே!

தேங்கிய வறுமையால்
ஏழையர் குழந்தைதாம்
தேடுவர் வாடுவர்
திரிந்தலைந்தே!

இலங்கு பறவைகள்
எழில்சேர் மலர்களுள்
ஏழைகள் உண்டோ
இயம்பிடுவீர்!

விலங்குகள் வாழ்வில்
விண்ணுயர் மரங்களில்
செல்வரும் உண்டோ
விளக்கிடுவீர்!

அறிவுடை இனமென
அளக்கிறோம் பெரிதாய்!
ஐயகோ, இங்குதான்
அவலநிலை!

வறியவர் ஒருபுறம்!
வளமையர் ஒருபுறம்!
வாழ்க்கையோ பலருக்கு
வெறுமைநிலை!

அரசியல் என்கிறோம்!
பொருளியல் என்கிறோம்!
ஆருக்கு வேண்டுமிங்(கு)
அவையெல்லாம்!

உரைகள் பெருகின!
உழைப்புகள் பெருகின!
ஊரைச் சுரண்டுவோர்
                    பெருகினரே!

கல்விகள் கற்கிறோம்!
கலைகள் பயில்கிறோம்!
கவலைகள் தீர்ந்திடக்
                    காணவில்லை!

செல்வங்கள் குவிந்தன!
சிறப்புகள் வளர்ந்தன!
சிறுமைகள் தொலைந்திட
                    வழியுமில்லை!

பாட்டாளி தாழ்கிறான்!
பணக்காரன் வாழ்கிறான்!
படித்தவர் யாருக்கும்
                    வெட்கமில்லை!

ஏட்டிலே எழுதுவோர்
எழுந்து போராடினால்
இருநிலை மாய்ந்திடும்
                    ஐயமில்லை

-1986

## 124 புரட்சி செய், தம்பி, கனல் போல !

மின்னலாய் மின்னு!
இடியாக இடி!
மேலேறு தம்பி மேலேறு!
இன்னலாய் வாழும்
ஏழையர்க் கெல்லாம்
எப்போது விடிவது? வழிகூறு!

புயலாகச் சீறு!
பொழுதாகக் காய்ச்சு!
புரட்சி செய் தம்பி, கனல்போல!
வயலாக விளைந்தாலும்
வாய்க்காது, உழவர்க்கு!
வழிபறிப் பாரைத் தீய், அனல்போல!

-1986

## 125 இயற்கை அன்னையின் ஈகை !

அன்னை இயற்கை
அளப்பரும் ஆற்றலை
உன்னுள் தந்து, நல்
உடலையும் தந்தே,

நீ, உல வுதற்கொரு
நிலமும் தந்து,
ஈவும், இரக்கமும்,
இனியஅன் புணர்வும்,

உள்ளத்து விதைத்தே
உணரவும் விளங்கவும்
ஒள்ளிய அறிவையும்
உனக்குத் தந்தது!

அரிய பொருள்களை
ஆக்கம் கருதி
உரிய முறைகளில்
ஊக்குவிக் காமல்,

கோணலாய் மாணலாய்க்
குப்பையில் இடல்போல்
வீணாய்ப் பண்ணியே
வீழ்வதும் சரியோ?

எண்ணிப் பார்ப்பாய்!
எண்ணிப் பார்ப்பாய்!
மண்ணில் நிலைபெற
எண்ணிப் பார்ப்பாய்!

-1987

## 126 ஆடுக ஊஞ்சல் !

வானவெளிப் பரப்பினிலே
வளையவரும் உலகம்!
வளையவரும் உலகத்தில்
வாழ்ந்திருக்கும் உயிர்கள்!
வாழ்ந்திருக்கும் உயிர்களிலே
வளர்ந்த உயிர் மக்கள்!
வளர்ந்த உயிர் மக்களிலே
வந்து பிறந் தோம், நாம்!
வந்துயிர்த்த பெருமையெண்ணி ஆடுக ஊஞ்சல்!
வானவெளிக் காற்றினிலே ஆடுக ஊஞ்சல்!

பேரறிவின் உயிர்க்குலத்தில்
பிறந்துவிட்டோம் நாமும்!
பிறந்துவிட்ட பெருமையொன்றே
பேசிடப் போ தாது!
பேசிடத்தான் வேண்டுமெனில்
பெரும் புகழும் வேண்டும்!
பெரும் புகழைப் பெறுவதென்னில்
பெருஞ்செயலும் செய்வோம்!
பெருஞ்செயலைச் செய்யவெண்ணி ஆடுக ஊஞ்சல்!
பேரண்ட வீதியிலே ஆடுக ஊஞ்சல்!

-1987

## 127 அறம், பொருள், இன்பம் !

ஒவ்வொரு நொடியும்
　　உன்னையே, நம்பு!
ஒவ்வோர் அடியும்
　　உறுதியாய் எடுத்துவை!
எவ்வோர் அசைவும்,
　　எண்ணியே இயங்கு!
செவ்வையாய் எண்ணினால்
　　செயல்கள் செவ்வையாம்!

வயிற்றுத் தசையினை
　　வளர்த்திடும் நோக்கில்
பயிற்றிக் கொள்வது
　　பழிப்புறும் வாழ்க்கை!
முயற்றி உன்றன்
　　முழுத்திறம் காட்டி
வியற்றகு மாறு
　　விளங்குக தம்பி!

அரசுப் பதவியை
　　அண்டிப் பிழைத்திட
உரசித் திரிந்தே
　　உதவிகேட் காதே!
முரசதிர் வதுபோல்
　　அறிவினை முழக்கு!
சரசர வென்றே
　　சடுதிமுன் னேறுவாய்!

உடலும் அறிவும்
　　உள்ளமும் என்றும்
திடமுடன் ஒளிபெற
　　தேர்ந்த பயிற்சிசெய்!
கெடவிடில் உடன்அவை
　　கீழ்மையை நாடும்!
மடமையே மேல், அவை,
　　மாண்புஇழத் தற்கே!

நோயினால் உடல்கெடும்;
    நூலிலா(து) அறி(வு) அழிம்!
வாயினால் உளம்கெடும்!
    வாழ்க்கையே அவைதாம்!
ஏயுநல் இன்பமும்
    எதிர்வரும் பொருளும்
ஆயுநல் அறமும்
    அவையெனப் போற்றுவோம்!

-1987

## 128 ஊர் மக்கள் நலன் கருது !

ஊர்மக்கள் நலன் கருதி
    உண்மைக்குத் துணை நின்று,
நேர்மைக்குக் குரல்கொடுப்பாய், தம்பி -பொது
    நிகழ்ச்சிக்குத் தோள்தருவாய், தம்பி!

எந்தவொரு தீச்செயலும்
    எவர்செய்த போதினிலும்
முந்திநின்று நீ, கடிவாய், தம்பி! -மக்கள்
    முன்னேற்றம் கருதிடுவாய், தம்பி!

எதுநடந்த நிலையினிலும்
    எனக்கென்ன என்றிராமல்,
அதன்நன்மை, தீமையினை நன்றாய் -நீ
    ஆய்ந்தறிந்து கூறிடுவாய், தம்பி!

அரசினரே செய்திடினும்,
    அதிகாரி உதவிடினும்,
தரமிலதைத் தவறுகளைத் தம்பி -நீ
    தட்டிக்கேட்கப் பழகிடுவாய்த் தம்பி!

பொதுநன்மைக் குழைக்கையிலே
    புதுக்கருத்தை உரைக்கையிலே,
புதிய இடர், துன்பம் வந்தால், தம்பி -அவை
    புன்மையென ஒதுக்கிடுவாய், தம்பி.

-1987

## 129 கண்ணீர் வாழ்வில் கரையும் குழந்தைகள் !

*பெண்ணாய்ப் பிறந்தால்,*
*குழந்தை முதலே,*
*பெருஞ்சுமை தாங்கிட வேண்டுமோ?*
*புண்ணாய் உடம்பும்*
*உள்ளமும் புழுங்கப்*
*புழுவாய் நெளிந்திடல் ஞாயமோ?*
*மண்ணாய்ப் போகும்*
*பிறவியுள் பெண்ணே*
*மற்றவர்க் கென்றே வாழ்பவள்!*
*கண்ணாய்க் கருத்தாய்க்*
*காப்பதற் கென்றே*
*காதலில் தாய்மையில் ஆழ்பவள்!*

*பெண்ணிலும் ஏழைப்*
*பிறவியாய்ப் பிறந்தால்*
*பிறந்தது முதலே துன்பந்தான்!*
*எண்ணிலாப் பெண்கள்*
*இந்திய நாட்டில்*
*ஏழையர் எனவே துயரந்தான்!*
*கண்ணீர் வாழ்வில்*
*கரைந்து போவதே*
*கணக்கிலாக் குழந்தைகள் வாழ்வாகும்!*
*உண்ணீர் இன்றி*
*உடுக்கையும் இன்றி*
*உழல்கிறார்! அதுமிகத் தாழ்வாகும்!*

-1988

## 130 சுற்றுச்சூழலை வெற்றி கொள்வாய் !

சுற்றுச் சூழலை வெற்றி கொள்பவர்
சிந்தனை மிக்கவர்; துணிந்தவர்! -தம்
வெற்றுணர் வாலே அதற்கே அஞ்சுவார்
வெற்றியை அடையார்; பணிந்தவர்!

ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு வகையால்
உலகின் இயற்கை இருப்பதில்லை! -அது
வெவ்வே றாகப் பொதுவென அமையும்!
வேடிக்கை காட்டும்; வெறுப்பதில்லை!

நமக்கோர் உணர்வும் நமக்கோர் அறிவும்
நாட்டமும் இருக்கும்! மயங்காதே! - அதில்
உமக்கெது விருப்பம் உமக்கென்ன போக்கென்(று)
உற்றுணர்ந்(து) இயங்குவாய்! தயங்காதே!

அனைவர்க்கும் ஆனவை அனைத்தும் உள்ளன!
அவரவர் தேவையே உருவாக்கம்! -நம்
வினைத்திறம் மனத்திறம் சூழ்வுத் திறங்களால்
விளைவித் திடுவதே அறிவூக்கம்!

-1988

## 131 பொருளை விரும்பிப் புன்மை செய்யாதே !

நடைமுறை உலகம் எவ்வா றிருப்பினும்
நல்லன வற்றையே கடைப்பிடி.
முடைநாற் றத்தை எவருமே விரும்பார்!
முல்லையை விரும்பார் எவரே?

பொய்யும் பொறாமையும் நெஞ்சைநஞ் சாக்கும்!
புன்மையை உளத்தினில் வளர்க்கும்!
மெய்யும் அன்புமே உளத்தைமேம் படுத்தும்!
மேன்மைக் குணங்களை விதைக்கும்!

நல்லவை என்றும் நலத்தையே கொடுக்கும்!
நன்மையே அவற்றால் விளையும்!
அல்லவை என்றும் துன்பமே அளிக்கும்!
அழிவையும் இழிவையும் சேர்க்கும்!

பொருளினை விரும்பிப் புன்மைசெய் யாதே!
பொய்தரும் பொருள் பொய் யாகும்!
இருளினை விரும்பி ஒளி வெறுப் பாரோ?
என்றுமே மெய்ம்மையே மெய்யாம்!

-1988

## 132 வாழ்க்கைக் கூறுகள் !

பொருளியலால் முன்னேறப்
பாடுபடல் பிழையன்று;
பொருளியலே வாழ்க்கை யன்று!

இருள்தீர்க்கும் நல்லறிவும்
எண்ணத்தூய் மைச்செயலும்
எப்பொழுதும் வாழ்வில் வேண்டும்!

மருள்சேர்க்கும் உளந்தவிர்த்து
மடிசேர்க்கும் வளம்ஒதுக்கி
மாளாத உழைப்பும் வேண்டும்!

அருள்உளமும் ஒளியறிவும்
ஆக்கஞ்சேர் நற்பண்பும்
அமைந்ததே வாழ்க்கை ஆகும்!

-1989

## 133 பொலிந்திடும் பொதுமையே !

சாதியை விட்டொழி;
    சமையத்தைப் புறக்கணி!
ஓதி உணர்ந்த
    உணர்வினால் மெய்யுணர்!

அனைத்து நிலையினும்
    பிறவி எடுத்துள
அனைத்துமாந் தரையும்
    அன்பினால் ஒன்றென!

எண்ணும் உணர்வினை
    இனியேனும் வளர்த்து வா!
உண்ணலும் உடுத்தலும்
    உறையுளும் பொதுவே!

உடைமையைச் சமன்செய்!
    ‘உளன்’ எனும் ‘இலன்’ எனும்
நடைமுறை நிலைகளை
    நடு நின்று மாற்று!

வையம் புதுமைசெய்!
    வருந்தடைகள் உடை!
பொய்யைத் தகர்த்தெறி!
    பொலிந்திடும் பொதுமையே!

-1989

## 134 பொதுவுடைமை !

ஒற்றுமை என்பதோ
உளத்தால் இணைவது!
உடல்கள் திரள்வதோ ஒரு கூட்டம்!
வெற்றுரை முழக்கால்
வேற்றுமை போம் - எனல்
வேடிக்கைக் கனவு நடப்பதில்லை!

அன்புணர் வால்தான்
அகலும் வேற்றுமை!
அதுவும் பொருளால் பிளவுபடும்!
இன்பமும் துன்பமும்
மக்களைப் பிரிக்கும்!
எனவே சமநிலை வலிவுபெறும்!

உழைப்பில் லாமல்
உணவில் லாமல்-
ஒருவரும் இருத்தல் கூடாது!
பிழைப்பெல் லார்க்கும்
பொதுவென இருந்தால்
பிழையே எதனிலும் நேராது!

அனைவர்க்கும் உழைப்பு;
அனைவர்க்கும் உணவு;
அனைவர்க்கும் பொதுவாம் வாழ்வுடைமை!
அனைவர்க்கும் ஓய்வு:
அனைவர்க்கும் மகிழ்வு;
அவையே மார்க்சியப் பொதுவுடைமை!

-1989

## 135 மக்களைச் சமம் – எனச் செய்வோம் !

பிறப்பினால் மக்களை நால்வகை வருணமாய்ப்
பிரிப்பதும், அவர்களை மேலும்
சிறப்பிலாப் பலநூறு சாதியாய்ப் பகுப்பதும்
சிந்தித்துப் பார், தம்பி, இழிவே!
உறுப்புகள் எல்லாம் ஒன்றுபோல் உள்ளன!
உணர்வதும் அறிவதும் பொதுவே!
மறுப்பிதற் குண்டோ? வேற்றுமை உண்டோ?
மக்களைச் சமம்எனச் செய்வோம்!

இறையவன் என்றோர் உணர்வினைக் கொண்டே
எத்தனைப் பிரிவுகள் மதங்கள்!
மறைவென்ன தம்பி! மறுப்பென்ன தம்பி!
மதங்களால் எத்தனைச் சண்டை?
நிறைவுற மக்களின் நலன்கள் கருதிடும்
நிலைதான் அரசியல் என்றால்,
குறைவறக் கட்சிகள் பற்பல வேண்டுமோ?
கொள்கையென்(று) ஒன்றுபோ தாதோ?

மக்களைச் சுரண்டியே பிழைக்குமோர் கூட்டம்!
மற்றவர் ஏழைகள் ஆமோ?
தக்கவா றெல்லா உடைமையும் பொதுவெனத்
தகுதிசெய் தால்அது தீதோ?
மிக்கவே நலன்களை ஒருவனே நுகர்வதும்
மிகுதியோர் சாவதும் நன்றோ?
ஒக்கவே அனைவரும் உண்பதும் உடுப்பதும்
உறைவதும் சமம்எனச் செய்வோம்!

-1990

## 136 தம்பி ! உனக்கொரு செய்தி சொல்வேன் !

தம்பி! உனக்கொரு
செய்தி சொல்வேன் - தமிழ்த்
தாயைக் குறித்தொரு
கொள்கை சொல்வேன்!
வெம்பி வதங்கியே
வாடுகின்றாள்! -அவள்
வீரரை எங்கணும்
தேடுகின்றாள்! (1)

தனக்கென ஆட்சித்
தகுதியில்லை -அவன்
தாளைப் பிடித்தார்க்கும்
மீட்சியில்லை!
மினுக்கும் கவர்ச்சியும்
மிக்குடைய -பல
மிடுக்கு மொழிகளால்
சாம்புகின்றாள்! (2)

இந்திக்கும் ஆங்கில
மொழியினுக்கும் -தமிழ்
இளைஞர் தருகின்ற
மதிப்பினைப்போல்
சிந்திக்கும் ஆற்றலைத்
தாம் மிகுக்கும் -நம்மின்
செந்தமிழ்த் தாய்க்குத்
தருவதில்லை! (3)

இந்த நினைவினால்
வாடுகின்றாள்! -உளம்
ஏங்கியே நம்துணை
நாடுகின்றாள்!
வந்துநம் அணியினில்
சேர்ந்துகொள்வீர் -தமிழ்
வாழ்கவே வாழ்கென
ஆர்ந்து செல்வீர்! (4)

**-1990**

## 137 சிந்தித்துப் பார்ப்பீர்களே !

சிந்தித்துப் பார்ப்பீர்களே!-எதிலும்
சிறந்தவற்றை ஏற்பீர்களே!-நன்றாய்ச்
சிந்தித்துப் பார்ப்பீர்களே!

முந்திச்செய் தார்என்ப தாலோ-ஒன்றை
மூத்தோர்எல் லாரும்செய் தார்என்ப தாலோ,
வந்திட்ட பழக்கமிது வென்றோ- எங்கள்
வழிவழி வழக்கமிது வென்றோ எண் ணாமல் (சிந்தித்துப்)

பழைமையிது பெருமையிது வென்றோ-எங்கள்
பாட்டனார் சொன்னதிது செய்ததிது வென்றோ
பிழையான கருத்துகளை எல்லாம்-எண்ணிப்
பாராமல் ஓராமல் செய்வதற்கு முன்னம் (சிந்தித்துப்)

புதுமையிது கவர்ச்சியிது வென்றோ-மேற்குப்
புறநாட்டார் கீழ்நாட்டார் புகழ்ந்ததிது வென்றோ
கதுமெனவே உணர்வுகொள் ளாமல்-முழுக்
கவனமாய் அமைதியாய் அறிவுடனே எதையும் (சிந்தித்துப்)

-1990

## 138 எல்லா நிலையிலும் உயர்வடை !

ஆரவார அரசியல் நிலைகள்;
ஆடம்பரப் போலிமை வாழ்க்கை;
ஈரமிலாத மக்கள் மனநிலை;
எடுத்தெறிந்து பேசும் பேச்சுகள்;

பொய்,புரட் டான வாணிகம்;
பூசல்கள் நிறைந்த உறவுகள்;
கையூட்டுக் கல்வி! ஆட்சிகள்;
கயமை நிறைந்த கலைகள்;

இவைதாம் இன்றைய உலகம்!
 இருப்பினும் சோர்வடை யாதே!
எவை உயர் வானவை எண்ணிவா!
 எல்லா நிலையிலும் உயர்வடை!

கரடுமுரு டான மலையிலும்
 காவளம் கனிவளம் காணலாம்!
திருடரும் மாந்தரே! என்னினும்
 மாந்தர் அனைவரும் திருடரா?

-1990

## 139

## மடிவதோ இன்னமும்? உரிமை முழக்கடா!

அறிவுறு நலன்களும் தேவை யில்லை-தம்பி
 அன்பதும் தேவை யில்லை!
செறிவுறு பண்புகள் தேவை யில்லை-நல்ல
 சிந்தனை தேவை யில்லை!
நறுவுணர் வெல்லாமும் அடிமைப் படிகளே!-நாளும்
 நாளுமே உனைக்கீழ் இறக்கும்!
பெறுவது தமிழருக்(கு) உரிமை ஒன்றே!-அதைப்
 பெறும் போதே அவைதாமும் சிறக்கும்!

அடிமைக்கோ அறிவென்ப தெதிரிக்கு ஆக்கம்-தம்பி
 அன்பாக நடப்பதும் தேக்கம்!
மிடிமையர்க் கெதற்குப்பண் பாடுகள் எல்லாம்?-தம்பி
 மேலும் மேலும் அவை தாக்கம்!
விடிவதற் குள்ளே, நீ எழுந்திடல் வேண்டும்!-தம்பி
 விடியலுன் துயரினைப் போக்கும்!
மடிவதோ இன்னமும்? உரிமை முழக்கடா!-இனி
 வருங்காலம் உனதுதான் நோக்கம்!

-1991

## 140 விண்வரை புகழ்கொள் !

நீ, விரும் பாமல், உன்
பிறவி நிகழ்ந்தது!
நீ, விரும் பாமல், உன்
இறுதியும் நிகழும்!

இடையில் உன் வாழ்க்கை!
எவரும் மதிக்கவும்,
கடைசி வரை உனைக்
கருதவும் நிலை பெறு!

வியன் பிறர் கொள்ளவும்
விரும்பவும் நடந்து கொள்!
பயனுடை வாழ்வாய்ப்
பண்ணிக் கொள்க, நீ!

உனக்கு வாழ் வதினும்
உலகுக்கு நீ, வாழ்!
மனக்குறை வின்றி
மக்கட்குத் தொண்டு செய்!

உன் அறிவு பெரியது!
உள்ளமும் இனியது!
வன்மையது உடலும்!
அவற்றை வாழ வை!

காண்பவை அனைத்தும்
கனவென்று நீ, நினை!
வீண்பகை யின்றி
வெறுப்பின்றி நீ, இரு!

உன் மொழிக்கு நீ, உழை!
உழை, உன் இனத்துக்கு!
தின்பதும் உடுப்பதும்
திரிவதும் வாழ்வு இலை!

தலைவனாய் நீ வளர்!
தறுதலை ஆகாதே!
விலையிலை உனக்கு!
விண்வரை புகழ்கொள்!

-1991

## 141 எவற்றினிலும் நேற்றைவிட இன்றுயர்தல் வாழ்க்கை !

ஓடுநடை, பரபரப்பு,
ஓலங்கள், இரைச்சல்,
தேடுபொருள் நோக்கம்-என்றே
திரிந்தலைதல் வாழ்வா?

அன்புசெய்தல், அறிவுபெறல்,
ஆழ்ந்து அகலக் கற்றல்,
தின்பதிலும் முறை ஒழுகல்,
தெளிவுபெறல்-வாழ்க்கை!

எண்ணியெண்ணிச் செயப்பழகல்,
இயற்கையிலே தோய்தல்,
பண்ணுவதில் செப்பநுட்பம்
பயன்கருதல்-வாழ்க்கை!

பெற்றநலம் பிறர்க்காக்கல்,
பிறர்நலத்துக் குழைத்தல்,
கற்றவற்றை மற்றவர்க்கும்
கனிந்துதரல்-வாழ்க்கை!

தவற்றினிலும் திருத்தமுறல்,
தாழ்ச்சியின்றி நிற்றல்,
எவற்றினிலும் நேற்றைவிட
இன்றுயர்தல்-வாழ்க்கை!

-1992

## 142 நிலை என நிறுத்துவாய் உனை !

*மதம் ஒரு புறம்உனைப்*
*பற்றி யிழுக்கும்; மடமை தரும்!*
*நிதம் உனைச் சாதிப்*
*பிறவியும் நின்றே நினைவூட்டும்!*
*பதவிகள் பணங்கள்*
*பளிச்சிடும் அரசியல் பழகவரும்!*
*எதெதற்கு நீ, உனை*
*இழப்பது? தம்பி,நன்(கு) எண்ணிடுவாய்!*

*கலை,காமக் கனவுகள்*
*உன்மனம் கலைக்கும்; கால்இழுக்கும்!*
*வலைகள் அவை! உனை*
*வயப்பட வைக்கும்; வாழ்வழிக்கும்!*
*விலைமதிப் பற்றதுன்*
*வாழ்க்கை! விலங்கில்லை; பறவையில்லை!*
*நிலையென நிறுத்துவாய்,*
*உனை! நல் அறிவினால், நெடுந்தொண்டால்!*

**-1992**

## 143 நெருப்பு உழைப்பு அல்லவோ சிறப்புகள் நிகழ்த்தும் !

இருப்பதில் குறைசொல்ல
    எல்லார்க்கும் தெரியும்!
விருப்பமில் லாததை
    வெறுப்பதும் இயல்பே!
உருப்படி யாய்எதும்
    உருவாக்கல் கடினம்!
நெருப்புழைப் பல்லவோ
    சிறப்புகள் நிகழ்த்தும்!

உண்மையும் உறுதியும்
    ஒழுக்கமும் உழைப்பும்
திண்மையும் நேர்மையும்
    தெளிவுளமும் அன்றோ
அண்மையும் சேய்மையும்
    ஆக்கங்கள் செய்யும்!
பெண்மையர் ஆண்மையர்
    பிரிவின்றிச் செய்க!

-1992

## 144 தன்னலம் கருதாத தம்பி, நீ !

எங்குமே எதிலுமே எவருமே இழிஞராய்
இருக்கின்றார் எனில், உளம் சோராதே!-எதும்
தங்கமாய் இருந்திடில் தனிமதிப் பதற்குண்டோ?
தனியன், நீ! பிறர் நிலை பாராதே!

உண்பதில் உடுப்பதில் உடலின்பம் துய்ப்பதில்
உலகினர் யாவரும் ஒன்றுதான்!-உன்
கண்பொது, வாய்பொது, செவிபொது-எனநலம்
கருதினால் உனக்கது நன்றுதான்!

உன்நலன் பொதுநலன்; உன்நடை புதுநடை;
உன்பயன் யாவர்க்கும்-என்றுசொல்-ஒரு
தன்னலம் கருதாத தம்பி, நீ என்பதே
தகுதிசேர் உரையென நின்று சொல்!

-1992

## 145 துணிவு, ஊக்கம், கடமைதாம் நிலைப்பன !

பொய்யான செயல்கள்,
புளுகிடும் உரைகள்
பொருளுக்கே அலைந்திடும் நெஞ்சுகள்,

மெய்யேதும் இல்லாத
மேனி மினுக்குகள்,
மேன்மையாம் இவையெனப் பேச்சுகள்,

வெய்யவாம் கொடுமைகள்
மேன்மேலும் வளர்ந்தன!
மேலோட்ட வாழ்க்கையே போதுமாம்!

தொய்யவும் வேண்டா;
துவளவும் வேண்டா;
துணிவு, ஊக்கம், கடமைதாம் நிலைப்பன!

-1992

## 146 ஊக்கத்தைக் கைவிடாதே !

குறை சொல்ல ஆயிரம்
　　பேர் வருவார் - ஒரு
　　கோலை நடமாட்டார்!-சென்று
மறைவினில் ஆயிரம்
　　சொள்ளை சொல்வார்-செய்ய
　　மனங் கொண் டிடவும் மாட்டார்!

ஆக்கிப் படைப்பதில்
　　சுவை தேறுவார் - ஒன்றை
　　ஆக்க வரமாட்டார்! - உழைத்துத்
தேக்கிய விளைவுக்குக்
　　கணக்குக் கேட்பார் - பங்கு
　　கேட்கவும் கூச மாட்டார்!

இவ்வாறு பற்பலர்
　　இருந்திடுவார் - தம்பி
　　எண்ணி வருந்தாதே! - உனக்கு
ஒவ்வாத பேர்களை
　　ஒதுக்கிச் செய்வாய் - தம்பி
　　ஊக்கத்தைக் கைவிடாதே!

-1992

## 147 கவர்ச்சிக் கலைகளால் நாடு வீழ்ந்திடும் !

கவர்ச்சிக் கலைகளில்
மனம் மொய்த்துக் கிடக்கும்
கணக்கிலா இளைஞரைப்
பார்க்கிறோம்! - உளம்
வேர்க்கிறோம்! - வெறும்
சுவர்ச்சித் திரங்களை
அடித்தடித் தொட்டுவார்
சுரண்டல் திரைப்படக்
காரர்கள் - கொலை - காரர்கள்!

பள்ளிக் குழந்தைகள்,
கல்லூரி இளைஞர்கள்,
பாவையர், முதுமையர்
எவருமே - நெறி
தவறவே - பகற்
கொள்ளை யடி த்திடும்
கூட்டமே திரைப்படக்
கொலைஞர்கள், கலைஞர்கள்
என்பவர்- மூளை - தின்பவர்!

இளைஞர்கள் இளைஞைகள்
இல்லற மகளிரும்
எச்சரிக் கையுடன்
இருக்கவும் - அரசை
நெருக்கவும்! - நல்ல
விளைவுகள் இலாவிடில்
வீழ்ந்திடும் பண்புகள்;
வீழ்ந்திடும் பெருமைகள்!
வீழ்ந்திடும் நாடும் ஆழவே!

-1993

## 148 வெற்றி எதிர் வருமே !

மயக்கு கின்ற கவர்ச்சி கண்டு
மனம் மயங் காதே! - உலகம்
வியக்கும் அரிய செயலைச் செய்ய
உளம் தயங் காதே!

ஊக்கம் தளர்த்தும் ஆசைக் குன்றன்
உணர்வி ழக்காதே! - மக்கள்
ஊக்கம் கொள்ளும் செயலைச் செய்ய
அறிவி ழக்காதே!

தோல்வி கண்டு தூற்றல் கண்டு
துவண்டு போகாதே! - இடையில்
நால்வ கையாய் வரும்து ணைகள்;
நலிந்து சாகாதே!

உண்மை, ஒழுக்கம், ஊக்கம், முயற்சி,
உறுபயன் தருமே! - மனத்தில்
திண்மை வேண்டும்; நேர்மை வேண்டும்;
வெற்றி எதிர் வருமே!

-1993

## 149 எதிர்பார்க்காதே ! ஏமாற மாட்டாய் !

எதிர் பார்க் காதே!
ஏமாற மாட்டாய்!
புதிராய் இராதே!
பொத்தக மாய்இரு!
அதிரப் பே சாதே!
அமைவாய்ப் பேசு!
முதிர முதிர
முனிவை அடக்கு!

அன்புக்கு அன்புசெய்!
அறிவைப் புகழ்ந்துரை!
தென்பொடு நில்;நட!
தெளிவொடு பேசு;செய்!
வன்பொடு செயல்தவிர்!
வாய்மையே வெல்லும்!
துன்பினில் சோர்வுஏன்?
தோள்களை நிமிர்த்து!

கனிவொடு பேசு!
கல்,இறக் கும்வரை!
தனிமையும் பழகு!
தவ உளம் வளம்தரும்!
இனிமையும் அளவுகாண்!
இருளிலும் விழித்திரு!
குனிதொழில் இழிதரும்!
கொள்கை நிலைத்திரு!

-1994

## 150 வாழ்வுக்கு நோக்கம் தேவை !

‘நோக்கம்’எனஒன்(று) இல்லாது போனால்,
வாழ்க்கை நொய்ந்தே போகும்! - நம்
உள்ளம் நொடிந்தே சாகும்!
ஊக்கம் குறையும்: உழைப்பும் சலிக்கும்;
உலகில் எதுவும் புளிக்கும்! - நம்
உறவுகள் பார்த்தே இளிக்கும்!

ஆக்கம் குறையும்; அறிவும் மயங்கும்!
அல்லல் படையொடு ஊன்றும்! - பிறர்
அன்பும் கசப்பாய்த் தோன்றும்!
தாக்கம் வந்தே உடலை வருத்தும்!
தவிப்பும் நெஞ்சினை இறுக்கும் - நமைத்
தற்கொலை செய்திடச் சறுக்கும்!

பணத்தை ஈட்டுதல் நோக்கம் ஆகாது;
பதுக்கவும் பெருக்கவும் தூண்டும்! - பல
பயன்களுக் கதில்வழி வேண்டும்!
குணத்தால் சிறப்பதும் வாழ்வில் போதாது;
குடிநலம் பெறல்அதில் இல்லை; - பல
கொடுமைகள் எதிர்வரின் தொல்லை!

பொதுநல உணர்வே உயர்வான நோக்கம்;
புதுப்புது விளைவுக்கும் ஊக்கம்! - கொடும்
போரிலா உலகுக்கும் ஆக்கம்!
எதுஉயர்(வு) எதுஇழி(வு) என்றெண்ணிச் செய்க!
இனிவரும் மக்கட்குப் புதுமை! - மக்கள்
எல்லார்க்கும் எல்லாமே பொதுமை!

-1994

## 151 எண்ணிப் பார்க்க வேண்டும் ! – தம்பி எதற்கும் துணிய வேண்டும் !

எண்ணிப் பார்க்க வேண்டும்! - தம்பி
எதற்கும் துணிய வேண்டும்!
பன்னிப் பன்னிச் சொல்லும் - கருத்தின்
பயனை உணர வேண்டும்! - அதனைப்
பரப்பும் முயற்சி வேண்டும்!

மொழியைப் பேண வேண்டும் - நம்தாய்
மொழியைப் போற்ற வேண்டும்!
வழியைத் தேர வேண்டும் - தமிழை
வாழ வைக்க வேண்டும்! - அதனின்
வளத்தைப் பெருக்க வேண்டும்!

இழிவைப் போக்க வேண்டும் - தமிழர்க்(கு)
ஏற்றம் விளைக்க வேண்டும்!
அழிவைத் தடுக்க வேண்டும்! - தமிழர்
அரசை நிறுவ வேண்டும் - தமிழ்
ஆட்சி அமைக்க வேண்டும்!

பொருளைப் பெருக்க வேண்டும் - இங்கு
பொதுமை மலர்த்த வேண்டும்!
இருளை விரட்ட வேண்டும் - அதனை
எண்ணிச் செய்தல் வேண்டும் - மக்கள்
எவர்க்கும் வாழ்க்கை வேண்டும்!

-1994

இயக்கம்

## 152 உலகத் தமிழினம் ஒன்றெனத் திரண்டது !

உரிமைகள் எழுந்தன!
கொள்கைகள் முழங்கின!
ஊமைக் கனவுகள் மழுங்கின! - நில
வுருண்டையில் வளமைகள் விளைந்தன!
நரிமைகள் ஒடுங்கின!
நாய்மைகள் நடுங்கின!
நம்நிலம் புதுமையால் மலர்ந்தது! - பொது
நலமிகும் உயிர்க்குலம் கிளர்ந்தது!

எண்ணங்கள் இணைந்தன!
எழுச்சிகள் முனைந்தன!
ஏழைகள் உழவர்கள் கூடினர்! - பெரும்
ஏய்ப்பரை - மேய்ப்பரைச் சாடினர்!
பண்ணெலாம் உரிமைகள்!
பாட்டெலாம் விடுதலை!
பாட்டாளிக் கைகளின் எழுச்சிகள்! - பார்
பாராளும் முதலைகள் வீழ்ச்சிகள்!

உலகத் தமிழினம்
ஒன்றெனத் திரண்டது!
உரமிகு கொள்கையை அமைத்தது! - அதற்
குயிரெனும் செயல்முறை சமைத்தது!
கலகக் கொள்கைகள்
கலகலத் துதிர்ந்தன!
கவின்மிகு தமிழ்நிலம் மகிழ்ந்தது! - அக்
காட்சியில் உலகெலாம் ஒளிர்ந்தது!

-1981

## 153 வலிய ஓர் இயக்கம் செய்வோம் – அதன் வளர்ச்சிக்குக் கைகொடுப்போம்!

வாருங்கள் தமிழர்களே!
வாழ்வைச் சமைத்திட,
தாழ்வை அகற்றிட,
வழி ஒன்று கண்டிடுவோம்! - நம்
இழிவுகள் போக்கிடுவோம்!

வாருங்கள் அறிஞர்களே! - நம்
வண்தமிழ் காத்திட,
செந்தமிழ் போற்றிட,
வகையினை ஆய்ந்திடுவோம்! - அதை
வையம் பரப்பிடுவோம்!

வாருங்கள் தோழர்களே! - கொடும்
வறுமை இலாதொரு
பொதுமை அமைப்பினை
வடித்திட நாம் இணைவோம்! - புதுக்
குடித்தனம் நாம் அமைப்போம்!

வாருங்கள் இளைஞர்களே! - நல்ல
வாய்மையும் நேர்மையும்
தூய்மையும் அரசியல்
வரம்பொன்று கூவிடுவோம்! - அதைத்
திறங்கொண்டு கட்டமைப்போம்!

வாருங்கள் தாய்க்குலத்தீர்! - தீய
வன்மையும் கொடுமையும்
புன்மையும் அற்றொரு
வளமை இனம் படைப்போம்! - அதற்
கிளமை மனம் கொடுப்போம்!

வாருங்கள் கலைஞர்களே! - இழி
வழுக்கலும் இழுக்கலும்
அழுக்கும் இலாமலே
வளர்கலை நாம் சமைப்போம்! - பண்பு
வளமைக்குத் துணையிருப்போம்!

வாருங்கள் நண்பர்களே! - உங்கள்
வாழ்த்தினைக் கூறுங்கள்!
வல்லமை தாருங்கள்!
வலிய ஓர் இயக்கம் செய்வோம்! - அதன்
வளர்ச்சிக்குக் கைகொடுப்போம்! -1981

## 154 இணைபவர்கள் இணையட்டும்!

பேசியவர் எல்லாரும் பேசிக்கொண்
டிருக்கட்டும்; பின்பு நம்போய்
ஏசியவர்கள் எல்லாரும் ஏசிக்கொண்
டிருக்கட்டும்; இறுமாப் பாய்க்கை
வீசியவர் எல்லாரும் வீசிக்கொண்
டிருக்கட்டும்; வினைகள் செய்வோம்!
பாசியகன் றிவ்வினத்தின் பளிங்குநீர்
தெளிவிப்போம்! பங்கேற் பீரே!

முகந்திருப்பிக் கொள்பவர்கள் முணுமுணுப்புச்
செய்யட்டும்; முரண்பா டுற்றே
அகந்திருப்பிக் கொள்பவர்கள் அண்ணாந்து
விம்மட்டும்; அகல்நி லத்தை
நுகந்தூக்கித் தோள்வலிக்க உழுதுபயிர்
விளைத்திடுவோம்! நோகா தங்கே
உகந்துண்ண வருவோர்க்கே உவந்தளிப்போம்!
உழைப்பளிக்க உதவு வீரே!

தூங்குபவர் தூங்கட்டும்; துலங்குபவர்
துலங்கட்டும்; தொளைகள் எண்ணி
வீங்குபவர் வீங்கட்டும்; விக்குபவர்
விக்கட்டும்; விளைவைக் கண்டே
ஏங்குபவர் ஏங்கட்டும்; எந்தமிழர்
நலங்காண இருகை ஏந்தித்
தாங்குபவர் தாங்கட்டும்! தயங்க, இனி
நேரமில்லை; தாவு வீரே!

இருப்பவர்கள் இருக்கட்டும்; இணைபவர்கள்
இணையட்டும்; இன்றும் நேற்றும்
தெருப்படியில் அமர்ந்தபடி படிப்படியாய்
நமையளந்து தேறிப் பார்த்தே,
உருப்படியாய் ஒருபடியும் அளக்காதார்
உட்கார்ந்தே வான்பார்க் கட்டும்!
நெருப்படியும் குளப்படியும் நீள்வினையார்க்
கொருபடியென் றிணைவீர் வந்தே!

நெடுங்காலம் உழைத்திட்டோம்! நின்றவரார்?
படுத்தவரார்? நிலையா வாழ்க்கை?
அடுங்காலம் வந்திடுமுன் பெருங்கொள்கை
சிறுமுயற்சி - ஆற்றல் வேண்டும்!
கெடுங்காலம் பற்றியவர் கீழ்நினைப்பர்;
நாமவரைக் கிளற வேண்டா!
நடுங்காத நாவினராய் நலஞ்செய்வோம்,
மொழி, இனத்தை - நாட்டைக் காத்தே!

1981

## 155 உலகத் தமிழினம் ஒன்று படுக்கும் கழக முன்னேற்றம் காண்குறுவோமே!

அன்னைத் **தமிழ்மொழி** அழகும் **தூய்மையும்**
முன்னைப் பழம்பெரு மொய்ம்பும் எய்துதல்!

உழைப்பவர், அறிஞர், உயர்ந்தோர், தாழ்ந்தோர்,
இழைத்த சாதிகள், மதங்கள் - எனும் பல
தெரிநிலை வேற்றுமைத் தீங்குகள் அற்ற
சரிநிகர் என்னும் சமநிலைக் **குமுகம்!**

இழிவும் பூசலும் ஏமாற்றும் இலதாய்ப்
பழிவரின் விலகிடும் **பண்பமை** அரசியல்!

இயற்கைப் பொருள்களும் இயற்றல் பொருள்களும்
மயற்கை யின்றி, மக்கள் அனைவரும்
தேர்தலின் அமைத்த திறவோர் அரசினைச்
சார்தலின் அல்லது தனியவர் சாராது,
பொதுமை உரிமை, பொதுமை உழைப்பெனும்
புதுமை நோக்கிய **பொருளியல்** கொள்கை!

மனமும் அறிவும் வாழ்க்கையும் மாண்புறும்
இனநலன் கெடாத இனியநற் **கலைகள்!**

பழந்தமிழ் மரபும் பரந்தநல் லெண்ணமும்
இழந்தசீர் ஒழுக்கமும் எங்கணும் பரப்பி
மாந்தவியல் சிறக்க மற்றவர் மரபில்
ஏய்ந்தவை தழுவும் இனிய**பண் பாடு!**

அறுவகைத் துறையினும் அன்றன்று துலங்கும்
**அறிவியல்** தழுவிய செறிவியல் **போக்கு!**
-என்றிவ் வெழுநிலைக் கொள்கைகள் ஏந்தி
அன்றைத் தமிழினம் அனைத்து நாட்டினும்

வாழ்முறை தேறி வழங்குநலம் கோரித்
தாழ்வுநிலை போக்கித் தக்கநிலை ஊக்கி,
உலகத் தமிழினம் ஒன்று படுக்கும்
கழக முன்னேற்றம் காண்குறு வோமே!

_1981

## 156 வந்து பொருந்துக !

உண்மையர் நேர்மையர் ஊக்க உழைப்பினர்
திண்மையர் ஒழுங்கினர் தீந்தமிழ் நெஞ்சினர்
அண்மையர் சேய்மையர் ஆக்கம் கருதுவர்
ஒண்மையர் யாவரும் உடன்வந் திணைகவே!

தொண்டு கருதிடும் தூய உளத்தினர்
மண்டு காதலால் மணித்தமிழ் பேணுநர்
விண்டு விளக்கிடும் வீறுகொள் அறிவினர்
கண்டு தொடங்கிடும் கழகத் திணைகவே!

பொதுமை பேணிடும் பூந்தமிழ் நெஞ்சினர்
புதுமை வேண்டிடும் பொய்யறு காட்சியர்
முதுமை இளமையர் முரிபடாக் கொள்கையர்
இதுமெய் அணியென எண்ணி இணைகவே!

வாழ்வழி வையத்து வாழும் நினைவினர்
சூழ்வழி சூழ்ந்துளம் சுழிபடா நோக்கினர்
பாழ்வழி பலகண்டு பதைக்கும் உயிரினர்
வீழ்வழி ஈதென் விரைந்துவந் திணைகவே!

துளியொடுந் துளியெனத் தோளொடுந் தோளென
ஒளியொடும் ஒளியென உயிர்ப்பொடும் உயிர்ப்பென
வளியொடும் வளியென வார்ந்த வலிவென
தெளிவொடுந் துணிவொடும் தேர்ந்துவந் திணைகவே!
நந்தமிழ் காக்கவும் நம்மினம் மீட்கவும்
செந்தமிழ் நாட்டினைச் சீருறப் பேணவும்
முந்து தமிழின் முன்னேற்றக் கழகத்து
வந்து பொருந்துக! வாய்மையின் உழைக்கவே!

-1981

## 157 உலகப் பேரியக்கம் இங்கே உருவாதல் காண்பீர் !

உயர்ந்தபணி தொடங்கிடுவோம்! உயிர்முயற்சி செய்வோம்!
ஒப்பற்ற தமிழினத்தை ஓரணிசெய் துய்வோம்!
அயர்ந்தஇனம், தளர்ந்தமனம், அடிமைநிலை நீக்கி,
ஆக்கவழி நடப்பதெனில் அருஞ்செயலும் அன்றோ!
பெயர்ந்தநிலம் யாதெனினும் பெறுநிலையென் னெனினும்
பெருந்தமிழால் ஒன்றிணைவோம்! பெருமைபெற வாழ்வோம்!
மயர்ந்தமனம், தயங்குநிலை, மாசுதவழ் எண்ணம்
மாய்ந்தொழிந்து போகட்டும்! மறுமலர்ச்சி திண்ணம்!

பேரன்பு கொண்டவரே! பெரியோரே! எம்மைப்
பெற்றதமிழ்த் தாய்மாரே! பெறாதஉடன் பிறப்பீர்!
ஈரந்தோய் நெஞ்சினராய் இறைஞ்சுகின்றோம், உம்மை!
இன்றிணைதல் இல்லையெனில் என்றுமினி இல்லை.
சாரம்போய் மணமும்போய்ச் சக்கையராய் நிற்போம்!
'சகுனி'குணம் போகவில்லை; சழக்ககல வில்லை!
காரம்போய்ப் பயனென்ன? கடைநிலைக்குத் தாழ்ந்தோம்!
காத்திடுவீர் இனநலத்தைக் காலத்தால் இன்றே!

நாளுக்கொரு கட்சியினில் நாம்நழுவி வாழ்ந்தோம்!
நலன்துளியும் விளையவில்லை; நடுக்கடலில் வீழ்ந்தோம்!
ஆளுக்கொரு பாத்திகட்டி அதில்விளைவு செய்தோம்!
அரைவிளைவு கால்விளைவே! அளந்ததெலாம் சோர்வே!
சூளுக்கொரு குறைவில்லை; சுழற்றுகிறோம் பேச்சை!
சொன்னதென்ன? சொல்வதென்ன? யாரளந்து சொல்வார்?
தோளுக்கொரு துணைதேடித் துணைதேடிச் சோர்ந்தோம்!
தொட்டபணி விட்டபணி! தோல்விகளே எச்சம்!

சேரன்பேர் சோழன்பேர் பாண்டியன்பேர் சிலம்பிச்
செருக்குரையும் நெருப்புரையும் செய்தனதான் என்ன?
நேரம்போய் எண்ணுவதில் நீள்பயனும் உண்டோ?
நெடுங்காலம் கடத்திவிட்டோம்! நிலைத்தவிளை வென்ன?
வீரம்பொய், அன்பும்பொய், விருந்தும்பொய், நம்மின்
வென்றவர லாறும்பொய், விளைவும்பொய் - என்றால்
ஓரம்போய் நில்லுங்கள்! ஒதுங்குங்கள்! நாளை
உலகப்பே ரியக்கமிங்கே உருவாதல் காண்பீர்!

–1981

## 158 தமிழின ஒன்றிணைப்புப் பாடல்.

*ஒன்றிணைக! ஒன்றிணைக!*
*உலகத் தமிழினம் ஒன்றிணைக!*

*மன்றிருந்த தமிழ் மனத்தினால் இணைக!*
*மற்றதன் பண்பாடு கலைகளால் இணைக!*
*நின்றறம் பயில்திருக் குறளினால் இணைக!*
*நீண்ட நெடும்புகழ் மரபினால் இணைக! (ஒன்றிணைக!)*

*வென்ற தமிழ்மறம் விளங்கிட இணைக!*
*வீறுடன் திகழ்ந்த,அந் நினைவினால் இணைக!*
*சென்றுல கெங்கணும் பரவிவாழ்ந் திடினும்*
*செந்தமிழ் மறவாத நெஞ்சினால் இணைக! (ஒன்றிணைக!)*

*இன்றினி திணைக! ஏற்றமோ டிணைக!*
*எண்திசை நாட்டினும் இருப்பவர் இணைக!*
*நன்றென இணைக! நாடிவந் திணைக!*
*நாமினி ஒன்றெனும் நாட்டத்தோ டிணைக! (ஒன்றிணைக!)*

**-1981**

## 159 அதுதான் எனக்குத் திருநாள்!

(எடுப்பு)

அதுதான் எனக்குத் திருநாள்!
அதுவன்றிப் பிற யாவும் மனம்நோகும் வெறுநாள்!
(அதுதான்)

(தொடுப்பு)

எதுநாளில் தமிழர்கள் வாழ்வுரிமை கொண்டோராய்
எந்தமிழ்த்தேன் மொழிபேணி, இனம்பேணி இருப்பாரோ
(அதுதான்)

(முடிப்பு)

புதுஆடை நெய்ப்பொங்கல் பண்ணியம் பலகாரம்
பூமாலை நறும்படையல் இவற்றிலென்ன சாரம்?
சிதையாமல் தமிழ்மானம் இனமானம் பேணும்
செழிப்புற்ற மறுமலர்ச்சி இருவிழிகள் காணும்
(அதுதான்)

உலகெங்கும் சிதர்ந்தோடி உயிர்நைந்து வாடும்
உவப்பில்லா நிலைமாறிச் செந்தமிழர் கூடும்
நிலமெங்கள் நிலமென்ற தன்னுரிமை யோடும்
நிகழ்த்துகின்ற விழவன்றோ மகிழ்ச்சிப்பண்பாடும்
(அதுதான்)

அறவியலைச் சாராத அறிவியல்முன் னேற்றம்
ஆருக்குப் பயன்நல்கும்? வெறும் பொய்ம்மைத் தோற்றம்!
திறமிலராய்க் கரவுளமும் காரறிவும் கொண்டே
தித்திரிப்பாய் வாழும்நிலை ஒழிந்திடுநாள் என்றோ!
(அதுதான்)

காதிரைச்சல் தூளிபடும் ஒலிபெருக்கிக் கத்தல்,
கலைக்கூத்தர் அரித்தெடுக்கும் மனத்தில்விழும் பொத்தல்,
ஊதிரைச்சல் வண்டியுலா - இவைஇல்லாப் பெருநாள்
உளம்அமைதி கொள்ளும்படி வாய்த்திடுமே ஒருநாள்!
(அதுதான்)

புதைசாணிப் புழுக்களென நெளிகின்ற ஏழை
பொய்வாழ்க்கை நீங்கி நலம் மேலேறும் நாளை
எதிர்நோக்கிக் கிடக்கின்றேன்; எழுச்சிநிலை வந்தே
எல்லாமிங் கெல்லார்க்கும் என்றிடும்நாள் என்றோ!

(அதுதான்)

**1982**

## 160 மன்னிய கொள்கை ஏழும் மலர்க இத் தமிழ்ஞாலத்தே!

மின்னிய தமிழும், சாதி
மதமிலா இனமும், வாய்மை
முன்னிய அரசும், மக்கள்
முரண்படா உடைமைப் பேறும்,

நன்னறு கலையும், பண்பும்
நல்லறி வியலும் என்றிம்
மன்னிய கொள்கை ஏழும்
மலர்கவித் தமிழ்ஞா லத்தே!

**-1982**

## 161 கொடி ஏற்றுவோம் ! நிலை மாற்றுவோம் !

உலகத் தமிழின முன்னேற்றம் - என
உரைக்கும் கொடி,இது! - ஏற்றுவோம்! -நம்
ஒருமை உணர்வினைப் போற்றுவோம்!
வினை ஆற்றுவோம்! நிலை மாற்றுவோம்!

விலகியே இருந்தோம், வேறுபட்டுத் தயங்கி!
வீழ்ச்சிகள் அடைந்தோம் கூறுபட்டுத் தியங்கி!
மலைவுகள் கொண்டோம் மாறுபட்டு மயங்கி!
மற்றுய்வோம் இனிமேல் ஒன்றுபட்டே இயங்கி! (உலகத்)

ஆளுக்கோர் கொள்கை! ஆயிரம் போக்குகள்!
அடடா,ஓ! நமக்குள் எத்தனைத் தாக்குகள்!
வாளுக்குக் கூர்மையாய் வாய்ந்த, நம் நாக்குகள்!
வாருங்கள், இனியில்லை வழிமாறும் போக்குகள்! (உலகத்)

முயற்சிக்கும் புரட்சிக்கும் முழுநிறச் சிவப்பு!
முடிவினில் சமமெனும் உள்வட்டம் வெளுப்பு!
அயர்ச்சிக்கும் மயற்சிக்கும் இனியில்லை, வேலை!
அனைத்துலகத் தமிழினமும் ஒன்றாம்,இந் நாளை! (உலகத்)

அரசியல் மலர்ச்சிதான் அனைவரின் நோக்கம்!
ஆனாலும் தமிழர்க்குள் ஏனிந்த தாக்கம்?
உரசிடும் கரவுகள் களவுகள் ஒக்கம்!
உருப்பட வேண்டாமா? ஓரின ஆக்கம்? (உலகத்)

கருத்துகள் விளரலாம், கிளைகளைப் போல!
காணுவோம் ஒற்றுமை அடிமரம் போல!
பெருத்தஓர் வீழ்ச்சி, பிளவுக ளாலே!
பிறப்பிலே ஓரினம் தமிழர்,இந் நாளே! (உலகத்)

சாதிப் பிளவுகள் இனத்தையே சாய்த்தன!
சாய்க்கடை மதங்களும் போட்டியிட் டேய்த்தன!
மோதிப் பார்ப்பனப் பூசல்கள் மாய்ந்தன!
முழுமையாய் இழக்குமுன் மாற்றங்கள் வாய்த்தன! (உலகத்)

வாருங்கள், தமிழரே! ஒன்றென ஆர்ப்போம்!
வழிவழி யாய்நமை அழித்தவை தூர்ப்போம்!
சேருங்கள் ஓரணி! எண்ணங்கள் வார்ப்போம்!
சிற்சிறி தேனுமிங் குள்ளொளி சேர்ப்போம்! (உலகத்)

-1981

## 162 ஓங்கிப் பெருகுக உ.த.மு.க.!

உலகத் தமிழின முன்
னேற்றக் கழகம்
இலகத் தரைநெடுகல்
எங்கும் - அலகற்(று)

ஓங்கு கிளைபல்கி
ஒன்றுபல நூறாகித்
தேங்கு நலம்பெருகத்
தேர்ந்து!

-1982

## 163 உ.த.மு.க. உண்மைக் கழகம்!

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்
உண்மைக் கழகம் பாருங்கள்! - இதில்
உறுப்பினராகச் சேருங்கள்! - அதற்கு
உங்கள் துணையைத் தாருங்கள்! - அதன்
உழைப்பை எவர்க்கும் கூறுங்கள்!
கூறுங்கள்! கூறுங்கள்!

நிலவும் சாதி மதங்களை எல்லாம்
நில்லா தறவே தொலைப்பது! - அது
நின்று விளங்கும் செந்தமிழ் - மொழியை
நிலத்தில் எங்கும் விளைப்பது! - அது
நேர்மைத் தொண்டில் தழைப்பது!
தழைப்பது! தழைப்பது!

அரசியல் பூசல் இழிவுக ளெல்லாம்
அறவே தவிர்க்க முயல்வது - உண்மை
அறத்தை என்றும் பயில்வது! - உயர்
ஆளுமை நெறியோ டியல்வது! - முறை
யற்றவர் சீய்க்கும் புயல்அது!
புயல்அது! புயல்அது!

கரவாய்க் களவாய் ஏழையைச் சுரண்டும்
கயவரை அழிக்கும் வாளாகும்! - அவர்
கயமைகள் இதன்முன் தூளாகும்! - ஏழைக்
கனவுகட் குரிமைத் தாளாகும்! - அவர்
கடமைகட் குழைக்கும் ஆளாகும்!
ஆளாகும்! ஆளாகும்!

இயற்கை வளங்கள் விளைவுகள் எல்லாம்
எவர்க்கும் பொதுமை எனக்கூறும்! - இதற்
கெழுதுக சட்டம் எனக்கோரும்! - மக்கட்
கெல்லா நலன்களும் மிகச்சேரும்! - எனவே
இணைத்துக் கொள்வீர் உடன்வாரும்!
உடன்வாரும்! உடன்வாரும்!

மயற்கை செய்யும் கழிசடை, காம
மலிவுக் கலைகளைக் கட்டழிக்கும்! - அவை
மனங்கொள் வாரைச் சுட்டெரிக்கும்! - தமிழ்
மானமி லாரை விட்டொழிக்கும்! - இன
மலர்ச்சிக் கென்றே நெட்டுயிர்க்கும்.
நெட்டுயிர்க்கும்! நெட்டுயிர்க்கும்!

-1982

## 164 உ.த.மு. கழகம் நிலைக்க !

தூய்தமிழ் ஓங்குக!
தொலைக, மதம், சாதி!
ஏயும் அரசியல்
இழிவுகள் அகல்க!
பொருந்துக தமிழியப்
பொதுமைப் பொருளியல்!
திருந்துக கலைகள்!
திகழ்க,பண் பாடு!
அறிவியல் நோக்கொடு
வாழ்க்கை அமைக!
நெறியிவை கொண்ட
கழகம் நிலைக்கவே!

-1982

## 165 தொண்டர்க்கு ஒன்றுரைப்பேன் !

தொண்டுசெய்ய முன்வந்த
தூணவர்க்கிங் கொன்றுரைப்பேன்;
துவளா நெஞ்சம்,
மண்டுதுயர் யாவினுக்கும்
மழுங்கலிலாச் செந்துணிவு,
மயங்கா உள்ளம்,

கொண்டகொள்கை தனில்நெகிழ்ச்சி
கொள்ளாத வன்பிடிப்பு,
குலையாப் போக்கு,
பெண்டுபிள்ளை உறவினர்மேல்
பெரும்பிடிப்பு வையாமை-
பேணு வீரே!

'ஏற்றநறுந் தலைமைக்கே
எள்ளளவும் எதிராமை,
எக்க ருத்தும்
போற்றுநிலை உண்டாயின்
புகழ்ந்தேற்கும் நல்லமனம்,
புகன்ற ஒன்று

தோற்றநிலை பெறுமாயின்
உவந்தேற்கும் பெருந்தன்மை,
பிறர்க ருத்தில்
மாற்றுநிலை உளதாயின்
மனங்கொள்ள மறுத்துரைக்கும்
மாண்பும் வேண்டும்!

தொடக்கத்தில் விறுவிறுப்பும்,
படிப்படியாய் விளர்விளர்ப்பும்,
தொய்வும் வேண்டா!
படக்கத்திப் போராட்டப்
படபடப்பும் துடிதுடிப்பும்
பயனே இல்லை!

இடக்கற்ற அமைந்தவுரை
எள்ளலில்லா நறும்பேச்சோ
டெதிரி கட்கும்
அடக்கத்தைக் கற்பிக்கும்
பண்புநடை, அயர்வின்மை-
அனைத்தும் வேண்டும்!

-1986

## 166 தொண்டுக்கு இலக்கணம்!

அறிவின் பன் எனும்
'விவேகா னந்தர்'
அருமை யாய்,ஒரு
கருத்தைச் சொல்கிறார்!
செறிவுற மக்கட்கோர்
கொள்கை கூறுவோர்
செவிகொள வேண்டிய
கருத்து, அது; சிந்திப்பீர்!

புதியதோர் கொள்கையை
மக்கட்குப் புகல்வரைப்
போலிகள் முன்வந்தே
ஏளனப் படுத்துவர்!
அதையும் மீறியே
அவர்கள் இயங்கினால்
அரம்பர்கள் இழிவுசெய்(து)
அவர்களை வருத்துவர்!

இழிவையும் கடந்து, அவர்
இயங்கினால், மறுபடி
இழிஞர்கள் அவர்களை
எதிர்த்திடத் தொடங்குவார்!
பழியெலாம் தாங்கிநற்
பாதையில் மேற்செலின்
பகைவரும் அவர்களை
ஏற்றுப் பணிகுவார்!

ஆகவே மக்களுக்(கு)
ஆக்கம் கருதுவோர்
அடுத்தடுத் தேவரும்
எதிர்ப்புகள் அறிந்து, பின்
சாகவே நேரினும்
கொண்ட கொள்கையைச்
சலித்தோ வெறுத்தோ
கைவிடல் சால்பிலை!

ஏளனம், இழிவுகள்
    எதிர்ப்புகள் - இவைதமை
    எதிர்கொண்டு தாண்டினால்
    இறுதியில் யாவரும்
தோள்மேல் தாங்கியே
    ஏற்றுத் தொழுவது
    தொண்டுக் கிலக்கணம்!
    தோல்வியிங் கில்லையே!

-1988



ஊரைத் திருத்துமுன், உலகைத் திருத்துமுன்
உன்னைத் திருத்தடா தமிழா—நீ
உன்னைத் திருத்தடா தமிழா!

பாரைத் திருத்திடல் நல்ல முயற்சியே!
பாட்டனும் பூட்டனும் செய்த பயிற்சியே!
யாரைத் திருத்தினர்; யாது வளர்ச்சியே?
யாங்கணும் யாங்கணும் வாழ்க்கை தளர்ச்சியே!

வேரைத் திருத்துதல் பயனளித் திடலாம்!
வினையத் திருத்திடும் முயற்சியோ கடலாம்!
கூரை திருத்தினால் நிற்குமோ சுவரே?
குழியைத் திருத்தாமல் இருப்பது தவறே!

உலகைத் திருத்திட வலம்வரு கின்றாய்!
உன்னைத் திருத்தெனில் உள்ளம்நோ கின்றாய்!
அலகிலா முயற்சிகள் அறங்கள், சட்டங்கள்
ஆரைத் திருத்தின? பணயம்கட் டுங்கள்!

ஆயிரம் ஆண்டுக்கு முன்னும் இருந்தனர்;
அம்மண மாகவே உண்டு திரிந்தனர்;
ஏயின திருத்தங்கள் என்னென்ன கண்டாய்?
எழிலுடை! தலைமயிர்! மற்றென்ன விண்டாய்?

வெள்ளுடை மேனியில் புரள்வதோ நேர்மை?
விரிமயிர் வாரி முடித்தலோ சீர்மை?
உள்ளத்துள் கள்ளமும் கரவும் கிடப்பதா?
ஊரினை ஏமாற்றி, மறைந்தே நடப்பதா?

பொதுமையைக் காணாத உளம்என்ன உளமோ?
பூசலை விளைத்திடும் வளம்என்ன வளமோ?
புதுமைஎன் றுரைப்பது செல்வர்க்குச் செழிப்பு!
போக்கற்ற ஏழையர்க் கேதுஅதால் விழிப்பு?

மன்றங்கள் எத்தனை? எத்தனைக் கோயில்?
மடிபவர் எத்தனைப் பேர் தீமை நோயில்?
இன்றைக்கும் நேற்றைக்கும் வேற்றுமை யாது?
இழிவினை, அழகினால் மூடல்அன் றேது?

கல்வியும் செல்வமும் ஓங்குதல் மேலோ?
கணக்கிலா இழிவுகள் குவிதல்எப் பாலோ?
சொல்,வினை உளத்தோடு பொருந்துதல் வாழ்வே!
சொக்கட்டான் காய்போல் உருளுதல் தாழ்வே!